29/4

T.N.C.A. Debates

Official Report

Vol—19 NO—1

25th March 1986

D
V211,31 N86
N86.19.1;1
136456

D
V211,31 N86
N86-17.131
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நூலகம் சென்னை-600 009. 136456

உள்ளடக்கம்.

25—3 1986.


| | பக்கங்கள். |
|---|---|
| (i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் Personnel of the Government of Tamil Nadu | i—vi |
| (ii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் | vii—viii |
| (iii தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பெயர்ப் பட்டியல் | ix—xvi |
| 1. வினாக்கள்-விடைகள். | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள். | 1—37 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள். | 37—66 |
| 2. கவன ஈர்ப்பு: | |
| கோவை மாவட்டத்திலுள்ள வார்ப்பட பட்டறைகளுக்குத் தேனிரும்பு வழங்குதல் | 67—75 |
| 3. அறிக்கைகள் அளித்தல்: | |
| (அ) பொதுக் கணக்குக் குழு | 76 |
| (ஆ) பொது நிறுவனங்கள் குழு | 76 |
| 4. அரசினர் சட்ட முன்வடிவு: | |
| ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986 | 77—78 |
| 5. வரவு-செலவுத் திட்டம், 1986-87—பொது விவாதம் (தொடர்ச்சி) | 78—185 |
| திரு. எஸ். இராசாராமன். | 78—92 |
| திரு. மா. சின்னராசு. | 94—108 |
| திரு. ச. குமாரகுருபராமநாதன். | 108—114 |
| திரு. கி. அன்பழகன். | 114—122 |
| திரு. எ. எஸ். எ. ஆறுமுகம். | 122—136 |
| டாக்டர் த. முகமது சலீம். | 136—140 |
| திரு. பெ. செங்கோட்டையன். | 140—149 |
| திரு. ஏ. பாலுச்சாமி. | 149—153 |
| திரு. எஸ். டேனியல்ராஜ். | 153—157 |
| திரு. கு. தமிழரசன். | 157—167 |
| திரு. பொ. உத்திராபதி. | 167—175 |
| திரு. ஜி. கே. பிரான்சிஸ். | 176—179 |
| திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம். | 179—184 |
| 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள், | 185—186 |

# தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

## தமிழ்நாடு ஆளுநர்

திரு. சுந்தர்லால் குரானா.

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. **மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : (முதலமைச்சர்)**—இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், காவல், இலஞ்ச ஒழிப்பு.

2. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (நிதியமைச்சர்)**—நிதி, வருவாய், பொது நிர்வாகம், சட்டமன்றம், தேர்தல்கள், புள்ளி விவரங்கள், இளைஞர் அணி மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. **மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (மின் துறை அமைச்சர்)**—மின்சாரம், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுது பொருள் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

4. **மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)**—தொழிலாளர், கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. **மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்)**—செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், பொது, மாவட்ட வருவாய் அதிகாரிகள், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா, மது அருந்த அனுமதி வழங்கல், திட்டம், தொல்பொருள் இயல், மற்றும் பயண இசைவுச் சீட்டு.

6. **மாண்புமிகு திரு. க. இராசாராம் : (தொழில் துறை அமைச்சர்)**—பெருந்தொழில்கள், சுரங்கம் மற்றும் கனிவளம், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்.

7. **மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (உள்ளாட்சித் துறை அமைச்சர்)**—நகராட்சிகள், ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை.

8. **மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (கல்வி அமைச்சர்)**—கல்வி, ஆட்சிமொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு.

9. **மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (வேளாண்மைத் துறை அமைச்சர்)**—வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண் பொறியியல், வேளாண் பணி கூட்டுறவுச் சங்கங்கள், குடிநீர் வழங்கு மற்றும் கழிவு நீரகற்று வாரியம்.

10. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (சட்ட அமைச்சர்)—சட்டம், நீதி மன்றங்கள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்பட) மற்றும் சர்க்கரைப்பாகு கழிவு.

11. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை, சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப் படுத்தல்.

12. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள்.

13. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (உணவு அமைச்சர்)—உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

14. மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : (ஆயத்துறை மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்)—மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக) ஆயத்துறை, கைத்தறி மற்றும் நெசவாலைகள்.

15. மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : (சத்துணவு அமைச்சர்)—சத்துணவு.

16. மாண்புமிகு திரு. தா. வீராசாமி: (வணிக வரித்துறை அமைச்சர்)—வணிக வரிகள்.

17. மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : (வீட்டு வசதித்துறை அமைச்சர்)—வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்று வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

18. மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராம, குடிசை, சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.

19. மாண்புமிகு திரு. த. இராமசாமி : (மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர்)—வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்.

20. மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : (ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்)—ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.



21. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : (பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்)—பிற்பட்டோர் நலம் மற்றும் மீன் வளம்.

22. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (சமூக நலத்துறை அமைச்சர்)—மகளிர் குழந்தைகள் உள்ளிட்ட சமூக நலம், பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம்.

23. மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : (கதர்த்துறை அமைச்சர்)—கதர், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

24. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (பொதுப் பணித்துறை அமைச்சர்)—பொதுப்பணித்துறை, சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ஃப்.

25. மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : (கூட்டுறவுத்துறை அமைச்சர்)—கூட்டுறவு.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU

Thiru SUNDAR LAL KHURANA 2914

*Members of the Council of Ministers.*

1. The Hon. Dr. M. G. RAMACHANDRAN (Chief Minister): Indian Administrative Service and other All India Services, Police, Prevention of Corruption.

2. The Hon. Dr. V. R. NEDUNCHEZHIAN (Minister for Finance): Finance, Revenue, General Administration, Legislature, Elections, Statistics, Youth Service Corps and Ex-Servicemen.

3. The Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Electricity): Electricity, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing and Government Press.

4. The Hon. Thiru K. A. KRISHNASAMY (Minister for Labour): Labour, Animal Husbandry, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. The Hon. Thiru R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments): Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Public, District Revenue Officers, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest, Cinchona and Grant of Liquor Permits, Planning, Archaeology and Passports.

6. The Hon. Thiru K. RAJARAM (Minister for Industries): Large Scale Industries, Mines and Minerals, Electronics, Science and Technology.

7. The Hon. Thiru P. U. SHANMUGAM (Minister for Local Administration): Municipal Administraiton, Panchayats, Panchayat Unions, Community Development and Rural Indebtedness.

8. The Hon. Thiru C. ARANGANAYAGAM (Minister for Education): Education, Official Language, Tamil Development and Culture.

9. The Hon. Dr. K. KALIMUTHU (Minister for Agriculture): Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering, Agro-Service Co-operative Societies, Water Supply and Drainage Board.

10. The Hon. Thiru C. PONNAIYAN (Minister for Law): Law, Courts, Prisons, Deputy Collectors, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending, Legislation on Chits and Molasses.

11. The Hon. Dr. H. V. HANDE (Minister for Health): Health and Environmental Pollution Control.

12. The Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport): Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways.

13. The Hon. Thiru S. THIRUNAVUKKARASU (Minister for Food): Food, Price Control and Census.

14. The Hon. Thiru V. V. SWAMINATHAN (Minister for Excise and Handlooms): Prohibition excluding grant of Liquor Permits, Excise, Handlooms and Textiles.

15. The Hon. Thiru R. SOUNDARARAJAN (Minister for Nutritious Meals): Nutritious Meals.

16. The Hon. Thiru T. VEERASAMY (Minister for Commercial Taxes): Commercial Taxes.

17. The Hon. Thiru N. NALLUSAMY (Minister for Housing): Housing, Slum Clearance Board, Town Planning and Accommodation Control.

18. The Hon. Thiru ANOOR P. G. JAGADEESAN (Minister for Rural Industries): Rural Industries including Village Cottage and Small Industries.

19. The Hon. Thiru T. RAMASAMY (Minister for Rehabilitation and Employment): Employment and Training, Indians Overseas, Refugees and Evacuees.

20. The Hon. Thiru A. ARUNACHALAM (Minister for Adi-Dravidar Welfare): Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

21. The Hon. Thiru M. R. GOVENDAN (Minister for Backward Classes): Backward Classes and Fisheries.

22. The Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare): Social Welfare including Women and Children Welfare, Beggers Home, Orphanages and Correctional Administration.

23. The Hon. Thirumathi VIJAYALAKSHMI PALANISAMY (Minister for Khadi): Khadi, Bhoodan and Gramdhan.

24. The Hon. Thiru Y. S. M. YUSUF (Minister for Public Works): Public Works Department, Irrigation including Minor Irrigation and Wakf.

25. The Hon. Thiru K. K. S. S. R. RAMACHANDRAN (Minister for Co-operation): Co-operation.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

**பேரவைத் தலைவர்.**

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

**பேரவைத் துணைத் தலைவர்.**

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்.

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.**

1. திரு. மா. சின்னராசு.
2. திரு. செ. செம்மலை.
3. திரு. சைதை சா. துரைசாமி.
4. திரு. டி. ஆர். வேங்கடரமணன்.
5. திரு. பொன் முத்துராமலிங்கம்.

**சட்டமன்ற பேரவைச் செயலாளர்.**

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

**இணைச் செயலாளர்.**

திரு. பி. எம். பத்மநாபன் நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.

**துணைச் செயலாளர்கள்.**

திரு. வெ. சீதாராமன், பி.காம்., பி.ஜி.எல்.

திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.

**குழு அலுவலர்கள்.**

திரு. சா. சீனிவாசன், பி.எஸ்.சி.

திரு. கு. ஆ. சீனிவாசன், பி.ஏ.

### சார்புச் செயலாளர்கள்.

திரு. ப. பாலகிருஷ்ணன், பி. காம்.
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ.
திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி.எல்.
திரு. வ. சா. ஜான், பி.ஏ.
திரு. கா. செ. சுந்தரராஜன், பி.ஏ., பி.எல்.
திரு. டி. சாலமன் ஜெயபால், பி.எஸ்.சி., பி.எல்.
திரு. மா. கு. ஜோசப், பி.ஏ.

### எஸ்டேட் அலுவலர்கள்.

திரு. கேசவராம், பி.ஏ.
திரு. டி. ஜேகப் ஆர்தர், பி.ஏ., பி.எல்.

### பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்.

திரு. கோ. வெங்கட்டராமன்.

### தலைமை நிருபர்.

திரு. வை. இராமச்சந்திரன், எம்.ஏ., எல்.எல்.பி.

### துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், எம்.ஏ. (தமிழ்).



### தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் | தொகுதியின் பேயர். |
|---|---|
| 1. அண்ணாதாசன், திரு. எம். | திருவரம்பூர் |
| 2. அப்துல் சமத், திரு. ஆ. கா. அ. | திருவல்லிக்கேணி |
| 3. அப்துல் மஜீத், திரு. எச். | வாணியம்பாடி |
| 4. அரங்கநாயகம், திரு. செ. | தொண்டமுத்தூர் |
| 5. அரிக்குமார், திரு. இரா. | பொணமல்லூர் |
| 6. அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ. வ.) |
| 7. அருணாசலம், திரு. எ. | வாகூர் (செ. வ.) |
| 8. அன்பழகன், திரு. க. | பார்க் டவுன் |
| 9. அன்பழகன், திரு. கே. | ஓமலூர் |
| 10. அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 11. அன்பழகன், திரு. பொ. | இளையான்குடி |
| 12. ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 13. ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி, திரு. | ஆண்டிமடம் |
| 14. ஆபிரகாம், திரு. ம. | ஆலந்தூர் |
| 15. ஆறுமுகம், திரு. அ. | வந்தவாசி |
| 16. ஆறுமுகம், திரு. எச். ஜி. | பென்னாகரம் |
| 17. ஆறுமுகம், திரு. ஆர். எஸ். | ஓட்டபிடாரம் (செ. வ.) |
| 18. ஆறுமுகம், திரு. எ. எஸ். ஏ., | விருதுநகர் |
| 19. ஆறுமுகம், திரு. செ. | மதுராந்தகம் |
| 20. ஆறுமுகம், திரு. மு. | சேலம்-2 |
| 21. ஆனந்த கிருஷ்ணா, திரு. ஜி. | பூந்தமல்லி |
| 22. ஆனந்தன், திரு. மு. | உளுந்தூர்பேட்டை |
| 23. இரகுபதி, திரு. கோ. | காட்பாடி |
| 24. இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 25. இரத்தினவேலு, திரு. சே. | முசிறி |
| 26. இராசமாணிக்கம், திரு. ஆர். | அரூர் (செ. வ.) |
| 27. இராசமாணிக்கம், திரு. எல். | தாம்பரம் |
| 28. இராசரத்தினம், திரு. எப். எம். | கொளச்சல் |
| 29. இராசரத்தினம், திரு. எம். | விழுப்புரம் |
| 30. இராசாங்கம், திரு. மு. | திருவிடைமருதூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| 31. இராசாம்பாள், திருமதி. தா. | தலைவாசல் (செ. வ.) |
| 32. இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 33. இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம் |
| 34. இராசு, திரு. வி. கே. | அரக்கோணம் (செ. வ.) |
| 35. இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி |
| 36. இராமச்சந்திரன், டாக்டர் எம். ஜி. | ஆண்டிப்பட்டி |
| 37. இராமச்சந்திரன், திரு. கே. எஸ். எம். | போடிநாயக்கனூர் |
| 38. இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 39. இராமச்சந்திரன், திரு. ச. | பன்ருட்டி |
| 40. இராமச்சந்திரன், திரு. சோ. மா. | அண்ணா நகர் |
| 41. இராமச்சந்திரன், திரு. ப. ந. | பட்டுக்கோட்டை |
| 42. இராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 43. இராமசாமி, திரு. த. | இராமாதபுரம் |
| 44. இராமநாதன், திரு. மு. | கோயம்புத்தூர் மேற்கு |
| 45. இராமலிங்கம், டாக்டர் கே. பி. | ராசிபுரம் |
| 46. இளங்கோவன், திரு. ஈ. வே. கி. ச. | சத்தியமங்கலம் |
| 47. ஈஸ்வரன், திரு. ஆர். | வாசுதேவநல்லூர் (செ. வ.) |
| 48. உச்சி, திரு. கே. | திருத்துறைப்பூண்டி (செ. வ.) |
| 49. உத்திராபதி, திரு. பொ. | கூடலூர் |
| 50. எத்திராசன், திரு. கி. | அச்சரப்பாக்கம் (செ. வ.) |
| 51. கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 52. கதிர்வேலு, திரு. மா. | ராணிப்பேட்டை |
| 53. கந்தசாமி, திரு. கா. வே. | கிணத்துக்கடவு |
| 54. கந்தசாமி, திரு. பி. | பொங்கலூர் |
| 55. நல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 56. கலிதீர்த்தான், திரு. சோ. | சங்கராபுரம் |
| 57. காளிமுத்து டாக்டர். கா. | மதுரை கிழக்கு |
| 58. கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம் விளக்கு |
| 59. கிருஷ்ணசாமி, திரு. வி. இரா. | அணைக்கட்டு |
| 60. கிருஷ்ணமூர்த்தி, திரு. கி. | கும்பகோணம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| 61. கிருஷ்ணராஜு, திரு. ஜி. | சேலம்-1 |
| 62. குப்புசாமி, திரு. கே. | ஒட்டன்சத்திரம் |
| 63. குப்புசாமி, திரு. வே. | செய்யாறு |
| 64. குமரகுருபராமநாதன், திரு. ச. | விளாத்திகுளம் |
| 65. குமரி அனந்தன், திரு. | ராதாபுரம் |
| 66. குமாரதாஸ், டாக்டர் ஜே. | கிள்ளியூர் |
| 67. கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கைமான் (செ.வ.) |
| 68. கோவிந்தசாமி, திரு. ஆர். | குடியாத்தம் |
| 69. கோவிந்தசாமி, திரு. ச. | எடப்பாடி |
| 70. கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 71. சங்கரலிங்கம், திரு. ச. | சங்கரநாயனார் கோவில் (செ. வ.) |
| 72. சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 73. சண்முகம், திரு. என். | சோளிங்கர் |
| 74. சண்முகம், திரு. ப. உ. | மேல் மலையனூர் |
| 75. சண்முகையா பாண்டியன், திரு. எம். | ஆலங்குளம் |
| 76. சந்திரசேகரன், திரு. ஆ. | சோழவந்தான் |
| 77. சந்திரசேகர், திரு. மு. | முகையூர் |
| 78. சம்சுல் ஆலம், திரு. வி. எஸ். டி. | பாளையங்கோட்டை |
| 79. சமரசம், டாக்டர் கே. | காவேரிப்பட்டினம் |
| 80. சரோஜா, திருமதி இரா. | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 81. சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் (செ.வ.) |
| 82. சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 83. சிந்தன், திரு. வி. பி. | வில்லிவாக்கம் |
| 84. சிவக்குமார், திரு. ஆர். | சமயநல்லூர் (செ.வ.) |
| 85. சிவக்குமார், திரு. எம். | கூனூர் (செ.வ.) |
| 86. சிவஞானம், திரு. ந. | திருவோணம் |
| 87. சிவப்பிரகாசம், திரு. சீ. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 88. சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம் |
| 89. சிவராஜ், திரு. சு. | சிறிவந்தியம் |
| 90. சின்னக்குழந்தை, திரு. மு. | ஆரணி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| 91. சின்னச்சாமி, திரு. ரா. | தர்மபுரி |
| 92. சின்னசாமி, திரு. வே. கு. | பவானிசாகர் |
| 93. சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 94. சின்னராசு, திரு. மா. | மேட்டுப்பாளையம் |
| 95. சுந்தரதாஸ், திரு. மா. | விளவன்கோடு |
| 96. சுப்பராயன், திரு. கு. | திருப்பூர் |
| 97. சுப்பிரமணிய ஆதித்தன், திரு. எஸ். ஆர். | திருச்செந்தூர் |
| 98. சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 99. சுப்பிரமணியன், திரு. வீ. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 100. சுப்புராயர், திரு. சி. | கம்பம் |
| 101. சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 102. செங்காளியப்பன், திரு. ஆர். | சிங்காநல்லூர் |
| 103. செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டிபாளையம் |
| 104. செங்கோட்டையன், திரு. பெ. | கபிலர்மலை |
| 105. செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 106. செல்லமுத்து, திரு. எம். | திருவாரூர் (செ.வ.) |
| 107. செல்லப்பா, திரு. வி. கோ. | கடலூர் |
| 108. செல்வராசன், திரு. அ. | துறைமுகம் |
| 109. சேகர், திரு. கே. பி. கே. | பொன்னேரி (செ.வ.) |
| 110. சைதை துரைசாமி, திரு. சா. | சைதாப்பேட்டை |
| 111. சொர்ணலிங்கம், திரு. கா. | திருவாடனை |
| 112. சோலைராசு, திரு. க. | மருங்காபுரி |
| 113. சௌந்திரராஜன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம் |
| 114. சௌரிராஜன், டாக்டர் கே. | தியாகராயநகர் |
| 115. ஞானசுந்தரம், திரு. சா. | மன்னார்குடி |
| 116. டேனியல்ராஜ், திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம் |
| 117. தங்கமணி, திரு. மு. | மாயூரம் |
| 118. தங்கமணி, திரு. கே. எம். | திண்டிவனம் |
| 119. தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 120. தங்கராசு, திரு. செ. | மங்களூர் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| 121. தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ |
| 122. தங்கவேலு, திரு. வி. | வால்பாறை (செ.வ.) |
| 123. தமிழ்மணி, திரு. | திருப்போரூர் (செ.வ.) |
| 124. தமிழரசன், திரு. கு. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 125. தனபால், திரு. ப. | சங்கரி (செ.வ.) |
| 126. தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| 127. தியாகராசன், திரு. ஆர். | விருத்தாசலம் |
| 128. திருஞானம், திரு. பி. ஆர். | ஏற்காடு (ஆ.வா.) |
| 129. திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 130. திருமலைசாமிக் கவுண்டர், திரு. க. | உடுமலைப்பேட்டை |
| 131. தீர்த்தகிரி கவுண்டர், திரு. டி. | மொரப்பூர் |
| 132. தீர்த்தராமன், திரு. ப. | பாலக்கோடு |
| 133. துரை அன்பரசன், திரு. | நெல்லிக்குப்பம் |
| 134. துரை கிருஷ்ணமூர்த்தி, திரு. | தஞ்சாவூர் |
| 135. துரை கோவிந்தராசன், திரு. | திருவையாறு |
| 136. துரைராசு, திரு. எஸ். பி. | காரைக்குடி |
| 137. துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோயில் |
| 138. தெய்வநாயகம், திரு. எ. | மதுரை சென்ட்ரல் |
| 139. தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 140. நடராசன், திரு. ஆ. | பேரூர் |
| 141. நரசிம்ம பல்லவன், திரு. க. | உத்திரமேரூர் |
| 142. நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 143. நல்லமுத்து, டாக்டர் க. | பெரம்பலூர் (செ.வ.) |
| 144. நல்லுசாமி, திரு. என். | திருச்சிராப்பள்ளி-2 |
| 145. நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர் |
| 146. நாராயணன், திரு. எஸ். | திருநெல்வேலி |
| 147. நாராயணன், திரு. பு. கோ. | பவானி |
| 148. நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | ஆத்தூர் |
| 149. பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 150. பரமசிவம், திரு. பா. ந. | பல்லடம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| 151. பரிதி இளம்வழுதி, திரு. | பெரம்பூர் |
| 152. பழனி, திரு. த. | ஆற்காடு |
| 153. பழனிச்சாமி, திரு. கா. செ. | காங்கேயம் |
| 134. பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர் |
| 155. பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 156. பாண்டுரங்கன், திரு. மு. | கலசபாக்கம் |
| 157. பாப்பா சுப்பிரமணியன், திரு. | குத்தாலம் |
| 158. பாரதி, திரு. ஜி. கே. ஜெ. | திருவொற்றியூர் |
| 159. பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ.வ.) |
| 160. பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி |
| 161. பாலகிருஷ்ணன், திரு. வி. | சிவகாசி |
| 162. பாலச்சந்திரன், திரு. வை. | பத்மநாபபுரம் |
| 163. பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ.வ.) |
| 164. பாலசுப்பிரமணியன், திரு. எஸ். | அம்பாசமுத்திரம் |
| 165. பாலசுப்பிரமணியன், திரு. வேடசந்தூர், வி. பி. | வேடசந்தூர் |
| 166. பாலன், திரு. சு. | எழும்பூர் |
| 167. பாலாஜி, திரு. கே. | காஞ்சிபுரம் |
| 168. பாலுச்சாமி, திரு. ஏ. | பரமக்குடி (செ.வ.) |
| 169. பாலுசாமி, திரு. அ. | திலக்கோட்டை (செ.வ.) |
| 170. பிச்சை, திரு. மு. | அருப்புக்கோட்டை |
| 171. பிரணவநாதன், திரு. அ. | கடலாடி |
| 172. பிரேம்குமார், திரு. ஆ. | திண்டுக்கல் |
| 173. புருசோத்தமன், திரு. எஸ். | அரியலூர் |
| 174. புஷ்பராசு, திரு. த. | திருமயம் |
| 175. பெரியசாமி, திரு. அ. | தாராபுரம் (செ.வ.) |
| 176. பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம் |
| 177. பெருமாள், திரு. தெ. | கடையநல்லூர் |
| 178. பெருமாள் பிள்ளை, திரு. கோ. | கன்னியாகுமரி |
| 179. பொன் முத்துராமலிங்கம், திரு. | மதுரை (மேற்கு) |
| 180. பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | பழனி (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| 181. பொன்னுசாமி, டாக்டர் அ. | பெருந்துறை |
| 182. பொன்னுரங்கம், திரு. ப. | ராயபுரம் |
| 183. பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 184. மணவாளன், திரு. எஸ். பி. | திருப்பத்தூர் |
| 185. மணிமாறன், திரு. மா. | நன்னிலம் (செ.வ.) |
| 186. மலர்மன்னன், திரு. அ. | திருச்சிராப்பள்ளி-1 |
| 187. மனோகரன், திரு. வ. | புரசைவாக்கம் |
| 188. மனோகரன், திரு. தி. நா. கோ. அ. | திருநாவலூர் |
| 189. மாசிலாமணி, டாக்டர் ந. | ஜெயங்கொண்டான் |
| 190. மாதவன், திரு. செ. | திருப்பத்தூர் |
| 191. மாதையன், திரு. யு. பி. | அந்தியூர் (செ.வ.) |
| 192. மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ.வ.) |
| 193. மாரிமுத்து, திரு. மு. | திருப்பரங்குன்றம் |
| 194. மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம் |
| 195. முகம்மது கனி, திரு. ஜே. | புதுக்கோட்டை |
| 196. முகம்மது சலீம், டாக்டர் த. | பெரியகுளம் |
| 197. முசிறிபுத்தன், திரு. பி. | குளித்தலை |
| 198. முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 199. முத்துராமலிங்கம், திரு. பி. கே. எம். | உசிலம்பட்டி |
| 200. முத்துவேல், திரு. கே. | முதுகுளத்தூர் |
| 201. முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 202. முருகானந்தம், திரு. டி. என். | செஞ்சி |
| 203. முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 204. யசோதா, திருமதி டி. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 205. ரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம் |
| 206. ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 207. ரவீந்திரன், திரு. ஏ. எஸ். | திருவண்ணாமலை |
| 208. ராமஜெயம், திரு. ம. நா. | வானூர் (செ.வ.) |
| 209. ராமன், திரு. கி. | ராஜபாளையம் (செ.வ.) |
| 210. ராஜாபாபு, திரு. ஜெ. | போளூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
| --- | --- |
| 211. ரெங்கசாமி, திரு. ஆர். | கோவில்பட்டி |
| 212. ரெத்தினராஜ், திரு. எஸ். | நாகர்கோவில் |
| 213. லட்சுமி, திருமதி பி. | அவினாசி (செ. வ.) |
| 214. வடிவேல், திரு. து. | கரூர் |
| 215. வளர்மதி, திருமதி பா. | மயிலாப்பூர் |
| 216. விஜயபாலன், திரு. என். | பூம்புகார் |
| 217. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி | வீரபாண்டி |
| 218. விராணம்பலம், திரு. க. வெ. | மேலூர் |
| 219. வீரய்யன், திரு. கோ. | நாகப்பட்டினம் |
| 220. வீராசாமி, திரு. தா. | ஒரத்தநாடு |
| 221. வெங்கடரெட்டி, திரு. டி. | ஓசூர் |
| 222. வெங்கடாசலம், திரு. அ. | ஆலங்குடி |
| 223. வெங்கடாசலம், திரு. கி. | லால்குடி |
| 224. வெங்கடாசலம், திரு. டி. எம். | பரகூர் |
| 225. வேங்கடரமணன், திரு. டி. ஆர். | தென்காசி |
| 226. வேணுகோபால், திரு. எஸ். | டாக்டர் ராதா கிருஷ்ண நகர் |
| 227. வேணுகோபால், திரு. கே. வி. | தல்லி |
| 228. வேலு, திரு. கூடலூர் இ. வி. | தண்டராம்பட்டு |
| 229. ஜகதீசன், திரு. ஆனூர் பு. கோ. | செங்கல்பட்டு |
| 230. ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குநேரி |
| 231. ஜெகதீசன், திரு. சு. | அரவக் குறிச்சி |
| 232. ஜெயச்சந்திரன், திரு. சா. | காட்டுமன்னார் கோவில் (செ. வ.) |
| 233. ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டாறு |
| 235. பிரான்சிஸ் திரு. ஜி. கே. | நியமன உறுப்பினர் |

**போவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.**

| | |
| --- | --- |
| 1. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் | அமைச்சர் |
| 2. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே | அமைச்சர் |
| 3. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் | அமைச்சர் |
| 4. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி | தலைமை வழக்கறிஞர். |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1986, மார்ச் 25, செவ்வாய்க்கிழமை

பங்குனி 11, குரோதன—திருவள்ளுவர் ஆண்டு 2017.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது."

காட்டில் ஓடும் முயலை நோக்கிக் குறி தவறாமல் எய்த அம்பை ஏந்துதலைவிட, வெட்டவெளியில் நின்ற யானைமேல் எறிந்து தவறிய வேலை ஏந்துதல் சிறந்தது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

### திருக்கோவிலூரில் துணை மின் நிலையம்.

258—(*வினா எண். 4037) திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருக்கோவிலூர் நகரில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) அது எப்போது முதல் செயல்பட துவங்கும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) நிலம் கையகப்படுத்தப்பட்டு உச்ச அழுத்த மின்பாதை போட நில அளவைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஆ) 1986–87 ஆம் ஆண்டு துவக்கத்தில் செயல்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. சு. சிவராஜ்:** தலைவர் அவர்களே, இந்தத் அனை மின் நிலையத்திற்கு சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன்பே நிலம் வாங்கப்பட்டு இன்றுவரையில் எந்தவிதமான பணியும் அங்கே மேற்கொள்ளப்படாமல் இருக்கிறது. அந்தப் பகுதி மக்களின் மின்சாரத் தேவையை பூர்த்தி செய்கிற வகையில் இந்த வேலையை விரைவில் முடித்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, விழுப்புரம்—திருக்கோவிலூர் லைன் சர்வே முடிந்து விட்டது. 1986 ஆம் ஆண்டு இறுதியிலோ அல்லது 1987 ஆம் ஆண்டு துவக்கத்திலோ இந்தத் துனை மின் நிலையம் செயல்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. சு. சிவராஜ்:** தலைவர் அவர்களே, இந்தத் துணை மின் நிலையம் எவ்வளவு திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இந்தத் துணை மின் நிலையத்தின் திட்ட மதிப்பீடு 114 லட்சத்து 62 ஆயிரம் ரூபாய் ஆகும்.

**திரு. சோ. கலிதீர்த்தான்:** தலைவர் அவர்களே, இதுபோன்ற துணை மின் நிலையங்களை அமைக்காத காரணத்தால் எங்களுடைய சங்கராபுரம் போன்ற பகுதிகளில் மின்சார வரத்து குறைந்து அதனால் செய்யும் பணிகள் தடைப்பட்டு பொது மக்கள் மிகவும் அவதிக்குள்ளாகிறார்கள். ஆகவே இந்த நிலைமையை மாற்ற இதுபோன்ற துணை மின் நிலையங்கள் எந்தெந்த பகுதியில் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை.



### கொல்லிமலையில் 20 K.V. மின் உற்பத்தி நிலையம்.

259—(*வினா எண். 4695) **திரு. சீ. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சேலம் மாவட்டம் கொல்லிமலையில் 20 K.V. மின் உற்பத்தி நிலையம் ஆரம்பிக்கும் திட்டத்தின் ஆய்வுப் பணி எந்த நிலையில் உள்ளது?

(ஆ) விரைவாக ஆரம்பிக்க அரசு மேற்கொண்ட முயற்சிகள் யாவை?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) மற்றும் (ஆ) இத்திட்டத்திற்கான ஆய்வுப் பணிகளை மின் வாரியம் மேற்கொண்டு வருகிறது. இதற்காக அணை கட்டுவதற்கான இடத்தில் இந்திய புவியியல் துறை சில மாறுதல்களை தெரிவித்துள்ளதால் இது குறித்து மின் வாரியம் தீவிர பரிசீலனை செய்து வருகிறது.

**திரு. சீ. சிவப்பிரகாசம்:** தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகளை எவ்வளவு காலத்திற்குள் முடிக்க அரசு எண்ணியுள்ளது? இந்த மின் உற்பத்தி நிலையம் எவ்வளவு மதிப்பீட்டில் நிறுவப்படவுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, ஆய்வுப் பணிகள் இன்னும் நடந்து கொண்டிருக்கிறது. சுற்றுப்புற சூழ்நிலை மற்றும் சுகாதாரத் துறையின் அனுமதி கேட்கப்பட்டிருக்கிறது. அதைப் போல வனத் துறையின் அனுமதி கேட்கப்பட்டிருக்கிறது. இன்னும் அதற்கான அனுமதிகள் கிடைக்கவில்லை. இதற்காகும் செலவு 17 கோடி ரூபாய் ஆகும்.

### தொழிலாளர்களுக்கு கிராஜுவிட்டி நிதி.

260—(*வினா எண். 4169) **திரு. கு. ரமணி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தொழிலாளர்களுக்கு கிராஜுவிட்டி நிதி ஒன்றை ஏற்படுத்த மத்திய அரசு தீர்மானித்துள்ளது மாநில அரசின் கவனத்துக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** (அ) பணிக் கொடை நிதி ஒன்றினை அமைப்பதற்காக 1972 ஆம் ஆண்டு பணிக் கொடை வழங்கல் சட்டத்தை திருத்தி அமைக்கும் செயற் குறிப்பின் மீது தங்களது பரிந்துரைகளை அனுப்பும்படி அனைத்து மாநில அரசுகளையும் மத்திய அரசு 1984 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் கேட்டுக் கொண்டது.

(ஆ) இந்த அரசு அச்செயற்குறிப்பை ஆராய்ந்து அதனை ஏற்க முடிவு செய்து, அச்சட்டத்தினை அவ்வாறே திருத்தி அமைக்கும்படி மத்திய அரசை 1985 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் கேட்டுக் கொண்டுள்ளது. இச்செயற்குறிப்பு தற்பொழுது மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, இந்தப் பணிக் கொடை என்பது தொழிலாளர்கள் செய்துள்ள சர்விசிற்கு அந்தந்த கம்பெனி நிர்வாகங்களினால் கொடுக்கப்பட்டு வரும்படியான ஒரு கொடை அது. அதை அரசாங்கமே சட்டப்படி கொண்டு வருவது நல்லதுதான். அதைத் தவறு என்று சொல்லவில்லை. ஆனால் இந்தச் சட்டத்தில் அதற்கான நிதியை அரசாங்கம் திரட்டுவதற்கு எப்படி வழி செய்யப் போகிறது? அரசாங்கம் ஏதாவது நிதியைப் போடுவார்களா? அல்லது சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்த கம்பெனியினுடைய பணத்திலே, பண்டிலேயிருந்து அதற்குப் பணம் சேர்க்கப்படுகிறதா? எப்படி அந்த நிலை என்பதை அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாகங்களும் அதே நேரத்தில் அங்கேயிருக்கிற தொழிலாளர்களும் இரண்டு பேர்களும் சேர்ந்து உருவாக்குகின்ற நிதிதான் இது. இதற்கு இன்றைக்கு சேதாரம் ஏற்படுகிறது. தடை ஏற்படுகிறது. நிர்வாகம் உரிய நேரத்திலே, தொழிலாளர்கள் ஓய்வு பெறுகிற நேரத்திலே அதைக் கொடுக்க மறுக்கிறார்கள் என்பதைப் பாதுகாத்து கொடுப்பதற்காகத்தான் இந்த நடவடிக்கையை அரசு கொண்டு வருகிறது.



**திரு. கு. ரமணி:** பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இருந்த சந்தேகம் இப்போது அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலிலிருந்து அது ஊர்ஜிதம் ஆகிறது. தொழிலாளர்கள், தங்களுடைய கிராஜுவிட்டிக்காக எப்போதும் பணம் கொடுத்தது கிடையாது. கம்பெனிக்கு லாபத்தைத்தான் அவர்கள் சம்பாதித்துக் கொடுத்தார்கள். அதிலிருந்து அவர்கள் சர்விசுக்கு அந்தப் பணம் கொடுக்கப்படுகிறது. இன்றைக்கு தொழிலாளர்களுக்கு எப்படி பிராவிடன்ட் பண்ட்-க்கு பணத்தைப் பிடிக்கிறார்களோ, அதேமாதிரி இந்தக் கொடைக்கும் அவர்களிடமிருந்து பணத்தை பிடிப்பது என்பது எப்படி சரியாக இருக்கும். இந்தக் கொள்கையை நமது அரசு ஏற்றுக்கொள்கிறதா? என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** தலைவர் அவர்களே, நான் சொன்னதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு வகையில் புரிந்து கொண்டார்கள் என்று கருதுகிறேன். இவர்களுக்காக நிர்வாகம் போடுகிற பணத்தை இன்றைக்கு பெறாமல் இருக்கிறார்கள். அதற்காகத்தான் இந்தப் பாதுகாப்பு.

**திரு. ஆர். செங்காளியப்பன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் 30 ஆண்டுக் காலம், 40 ஆண்டுக் காலம் என்று வேலை செய்து ஓய்வு பெறுகின்ற நேரத்திலே தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய கிராஜுவிட்டியானது முறையாக கிடைக்கவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, மத்திய அரசுக்கு அனுப்பி இருக்கிறோம் அது பரிசீலனையில் இருக்கிறது என்று கூறினார்கள். எனவே அதற்கு உடனடியாக மீண்டும் ரிமைன்டர் என்ற முறையில் கடிதம் அனுப்பி, இந்தப் பிரச்சனையைத் துரிதப்படுத்தி, உடனடியாக பணிக் கொடையை கொடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** தலைவர் அவர்களே, நிச்சயம் எடுக்கும்.

**திரு. கு. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இதுவரையில் பணியிலிருந்து ஓய்வு பெற்ற தொழிலாளர்கள் எத்தனை பேர்களுக்கு இன்னமும் நிர்வாகம் பணிக் கொடை வழங்காமல் இருக்கிறது. ஓய்வு பெற்ற அன்றே பணிக் கொடை வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை

மேற்கொள்ளாத நிர்வாகங்கள் மீது அரசாங்கம் பிராசிக்யூட் (prosecute) பண்ணுகிற முறையில் நடவடிக்கைகளை எதிர்காலத்தில் எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கும் பொருத்தம் இல்லை. எனினும் தனிக் கேள்வி போட்டால் எத்தனை பேர்களுக்கு நிர்வாகங்கள் இதுவரையில் பணிக் கொடை வழங்கவில்லை என்பதையும், அவர்கள் மீது என்ன நடவடிக்கையை அரசாங்கம் எடுத்திருக்கிறது என்பதையும் உரிய வகையில் கொடுக்க முடியும்.

**திரு. மா. சின்னராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டு இருக்கிற அந்த கிராஜுவிட்டி ஆக்ட்டில் இத்தனை நாட்களுக்கு மேல் பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு இந்த கிராஜுவிட்டி வழங்கப்படும் என்று ஏதாவது வரையறுத்து இருக்கிறார்களா? அப்படி இல்லை என்றால் தமிழ்நாடு அரசு காஷுவலாக குறைந்த நாட்கள் பணியில் இருந்தாலும் அவர்கள் கிராஜுவிட்டிக்குத் தகுதி உடையவர்கள் என்கிற பரிந்துரையைச் செய்யுமா? என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு நம்மிடத்திலே சில பரிந்துரைகளைக் கேட்டார்கள். குறிப்பாக இந்தச் சட்டம் 1972 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. கடந்த 15, 16 ஆண்டுக் காலமாக நடைமுறையில் பல சிக்கல்கள், பல சிரமங்கள் தொழிலாளர்களுக்கு உருவாகி இருக்கின்றன என்று கருதி தமிழக அரசு பல பரிந்துரைகளை, ஏறத்தாழ 9 பரிந்துரைகளை மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி இருக்கிறது. குறிப்பாக சிறு நிறுவனங்களுக்கு இந்தச் சட்டத்தை நீடிக்க வேண்டும்.

'Extension of coverage to small establishments'.

இன்றைக்கு இந்த வசதி சிறு நிறுவனங்களுக்கு இல்லை. இரண்டாவது, சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள ஊதிய விகிதத்தை நீக்குவது. இன்றையதினம் 1,250 என்று கருதுகிறேன். 1,600 வரையிலும் அதனுடைய நன்மைகள் எல்லாம் கிடைக்க வேண்டும் என்று நாம் பரிந்துரைகளைச் செய்திருக்கிறோம்.



அதைப்போல பணிக்கொடை வழங்குவதற்கு அதிகபட்ச உச்சவரம்பு நிர்ணயிக்க வேண்டும் என்றும், இன்றைக்கு மத்திய அரசாங்கத்தைக் கேட்டு இருக்கிறோம். இனி ஒரு இடர்ப்பாடு, கன்டினியூவ்ஸ் சர்விஸ், அதாவது எத்தனை நாட்களுக்கு வேலை செய்திருக்கிறார்கள், அல்லது ஒரு 10 ஆண்டுகள், 15 ஆண்டுக் காலம் இருந்த பின் அவர்கள் திடீரென்று ஒரு காரணத்தினாலே வேலையிலிருந்து நீக்கப்பட்டால், எல்லாப் பயன்களையும் இழக்கின்ற ஒரு பாதகமான சூழ்நிலை இருக்கிறது, அதைப் போக்குவதற்கு கன்டினியூவஸ் சர்வீஸ், என்ற அதைத் திருத்தி தொழிலாளர்களுக்கு லாபகரமாக அதை ஆக்க வேண்டும் என்ற வகையில் இன்றைக்கு கன்டினியுவஸ் சர்விஸ் பற்றி ஒரு திருத்தத்தை தெளிவான விளக்கத்தை, தொழிலாளர்களுக்கு பயன்படுகிற வகையில் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம்.

அதைப்போல, வயது வராதவர்களுக்கு அளிக்கக்கூடிய பணிக் கொடையை முதலீடு செய்து, 'Investment gratuity in respect of minors' சில நேரங்களில் தொழிலாளர்கள் இறந்துவிடுகிறார்கள், அவர்களுடைய மைனர் சில்ட்ரன்ஸ் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுப்பதா, வேண்டாமா? எந்த மைனருக்குக் கொடுப்பது என்பதிலே இன்றைக்கு அனாமலி, ஆம்பிகுட்டி இருக்கிறது. அதனைப் போக்க வேண்டும் என்று நாங்கள் இன்றைக்கு மத்திய அரசாங்கத்தை கேட்டிருக்கிறோம். அதேபோல் 'Bar on payment of gratuity under any other act or rule' மற்ற எந்தச் சட்டம் அல்லது விதிகளின் கீழ் அளிக்கப்படும் பணிக் கொடைக்கு தடை செய்வது. இன்றைக்கு 3, 4 பணிக் கொடைகள் சட்ட ரீதியாக கொடுக்கப்படுகிறது. அதிலே இன்றைக்கு குழப்பங்கள் முரண்பாடுகள் இருக்கின்றன.

(முற்பகல் 9.10)

அதிலே ஒரு தெளிவை உண்டாக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அதைப்போலவே பணிக்கொடை விதி அமைப்பது:

Setting up of gratuity fund for payment of gratuity

ஏற்கனவே நான் மாண்புமிகு ரமணி அவர்களுடைய கேள்விக்கு அதற்கான விளக்கத்தை அளித்திருக்கிறேன். அடுத்து

[1986 மார்ச் 25

சட்டத்திலே விளக்கப்பட்டுள்ள 'குடும்பத்தைப் பற்றிய' விளக்கம் மாற்றி அமைப்பது. இதற்கு ஃபேமிலி என்றால் என்ன என்பதிலே ஒரு தடுமாற்றம் இருக்கிறது; குழப்பம் இருக்கிறது. அதிலும் ஒரு விளக்கம் வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். ஆகவே இந்த 3 வகையில் இந்த சட்டத்திலே ஒரு குறை இருக்கிறது. இரண்பாடு இருக்கிறது. அனாமலி இருக்கிறது. இதையெல்லாம் போக்கி இந்தத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம்.

திரு. வி. பி. சிந்தன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்கு நன்றி, என்னென்ன ஆலோசனைகள், பரிந்துரைகள் மத்திய அரசுக்கு அனுப்பி இருக்கிறது என்பதைப் பொறுத்த வரையில். ஆனால் 15 நாட்களுக்கு மட்டும்தான் கிராஜுவட்டி வழங்கப்பட வேண்டுமென்ற அந்த நிபந்தனைகளைத் திருத்தியமைக்க வேண்டும். தளர்த்த வேண்டும் என்கிற ஆலோசனை எதுவும் வழங்கியது உண்டா? அதைப்போல இப்போது பிராவிடண்ட் பண்ட் தொழிலாளர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. மாதாமாதம் அவர்களுடைய சம்பளத்திலிருந்து பிடிக்கப்படுகிறது. அதேமுறையில் கிராஜுவட்டி அப்படி பிடிக்கப்படுவது இல்லையென்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று எண்ணுகிறேன். கிராஜுவட்டியும் அவ்வாறே பிடிக்கப்பட வேண்டுமென்று மத்திய அரசு முயற்சி எடுக்கிறது. அந்த முயற்சியை தமிழக அரசு எதிர்க்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நிச்சயமாக எதிர்க்காது, எதிர்க்காது, எதிர்க்காது. அதை அமல்படுத்தச் சொல்லித்தான் நாங்கள் வழங்கியிருக்கிறோம் என்பதனை சொல்லிக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, 15 நாட்களுக்கு என்ற அந்த விதியை மாற்றி அதிக நாட்களுக்கு கொடுக்கப்படுமா என்று கேட்கிறார்கள். அதை பரிசீலனை செய்து உரிய நேரத்தில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஆர். செங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கிராஜுவட்டியை தொழிலாளி வேலையை விட்டுப்போகும்போது கேட்டால், மேனேஜ்மெண்ட் தருவது



1986 மார்ச் 25]

இல்லை. பின்பு லேபர் கமிஷனர் முன்பு கேஸ் போடுகிறார்கள். அந்த கேஸ்கள் முடிவதற்கு பல ஆண்டுகள் ஆகின்றன. அவைகளை முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய பிரியப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடுக்கும்.

**வெள்ளலூர் பேரூராட்சியில் கால்நடை மருத்துவமனை.**

261—(*வினா எண். 4353) திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம் வெள்ளலூர் பேரூராட்சி பகுதியில் கால்நடை மருந்துவமனை துவங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை ஊராட்சி ஒன்றியம், வெள்ளலூர் பேரூராட்சிப் பகுதியில் கால்நடை மருத்துவமனை துவங்க பிரேரணை எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுக்கரை ஒன்றியத்திலே உள்ள வெள்ளலூர் பேரூராட்சி பகுதிக்கு கால்நடை மருத்துவமனை வேண்டுமென்று, ஏற்கனவே இதுபற்றி அரசின் கவனத்துக்கு பஞ்சாயத்தாரால் தெரிவிக்கப்பட்டது என்று சொல்லப்பட்டது. இருப்பினும் அமைச்சர் அவர்கள் அதுபற்றி ஆலோசனை இல்லை என்பதுபோல பதில் சொன்னார்கள். கால்நடை நாட்டினுடைய பெரிய செல்வத்திலே ஒரு செல்வம். நம்முடைய அரசாங்கம் குஜராத்திலே உள்ள 'ஆனந்த்' ஐப் போல் கால்நடைகளை பாதுகாப்பதற்கு நடமாடும் ஆஸ்பத்திரி என்கிற முறையில்—மொபைல் சர்வீஸ் என்கிற முறையிலே—அப்படியாவது பாதிக்கப்படக்கூடிய கால்நடைகளுக்கு உடனடியாக மருத்துவ சிகிச்சை கிடைக்கவும், செயற்கைமுறையிலே கருத்தரிப்பு

[1986 மார்ச் 25

ஆகிய காரியங்களுக்கு உதவவும் அரசு இதுபற்றி ஆராய்ந்து உடனடியாக கால்நடை மருத்துவமனை அமைக்கின்ற உத்தேசம் இல்லையென்றாலும், நடமாடும் மருத்துவ மனைகளை அமைத்து கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கின்ற உத்தேசம் இருக்கிறதா, அதுபற்றி அரசு ஆராயுமா என்பது பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மூலக்கேள்விக்கு நான் பதில் சொல்கிறபோது வெள்ளஊர் பேரூராட்சி பகுதியிலே கால்நடை மருத்துவமனை துவங்குகிற கருத்துரு இல்லையென்று சொன்னேனே தவிர, இன்றைக்கு மதுக்கரை ஊராட்சி ஒன்றியத்திற்குப் பக்கத்திலே, மாண்புமிகு இராமநாதன் அவர்களுக்குத் தெரியும், எட்டிமடை, மதுக்கரை ஆகிய இரண்டு பகுதிகளிலே மருத்துவமனை இருக்கிறது. ஆகவே அருகிலேயே இருக்கிறது என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து, இந்த பதிலில் வெள்ளஊர் பேரூராட்சி பகுதியில் துவங்குவதற்கு அரசிடம் கருத்துரு இல்லை என்று சொன்னேன். அது சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் இன்றைக்கு தீர்மானம் போட்டு அரசுக்கு அனுப்புவார்களானால் அதற்கு அவசியம் என்று கருதப்பட்டால் தேவையான விவரங்கள் இருக்குமானால் நிச்சயமாக அரசு துவங்கும்.

**திரு. ஆர். செங்காளியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளஊர் ஏரியாவில் அதன் பக்கத்தில் மருத்துவமனை இல்லை. ஆகவே அது விவசாயிகள் நிறைந்த பெரிய பகுதியாக இருக்கிறது. அங்கே கிராமங்கள் நிறைய இருக்கின்றன. அடிக்கடி அவர்கள் நீண்ட தூரம் மாடுகளை பிடித்துச் சென்று அங்கு வைத்தியம் செய்ய வேண்டிய நிலையில் இருந்து கொண்டு இருக்கிறார்கள். ஆக வெள்ளஊர் ஒன்றியத்திலோ, மதுக்கரை ஒன்றியத்திலோ அப்படிப்பட்ட ஒரு கால்நடை மருத்துவ மனையை வைத்தால் விவசாயிகளுக்கு வசதியாக இருக்கும் என்று கருதுகிறார்கள். ஆக அதற்கு உடனடியாக ஏற்பாடுகளை அரசு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.



1986 மார்ச் 25]

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமநாதன் அவர்களுக்கு கூறியது போல் அந்த வெள்ளஊர் பகுதிக்கு இது தேவை என்பதை அங்கே இருக்கின்ற பஞ்சாயத்து யூனியன் தீர்மானம் போட்டு அரசுக்கு அனுப்புவார்களானால் நிச்சயமாக பரிசீலனைச் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### மேச்சேரி ஆட்டு ஆராய்ச்சி பண்ணை, பொட்டநேரி

262—(*வினா எண். 5127) திரு. செ. செம்மலை : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் பொட்டநேரியில் உள்ள மேச்சேரி ஆட்டு ஆராய்ச்சி பண்ணையை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சிப் பண்ணையைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தினுடைய ஆட்சிக்கு உட்பட்ட ஆராய்ச்சிப் பண்ணை இது. தவறுதலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலில் சேர்க்கப்பட்டு இருக்கிறது என்று கருதுகிறேன். இருந்தாலும் இந்த மேச்சேரி ஆடுகளைப் பொறுத்தவரையில், சிறந்த ஆடுகள், என்று பெயர் பெற்ற மைசூரில் உள்ள மாண்டியா ஆடுகளை விட இவைகள் தரத்தில் உயர்ந்தவை, இதனுடைய இறைச்சி இதனுடைய தோல் மிகவும் தரத்தில் உயர்ந்தவை என்ற அந்த காரணத்தால் இந்த ஆடுகளின் தோலை, இறைச்சியை ஏற்றுமதி செய்வதால் மேலும் அதிகமான அளவுக்கு அன்னிய செலாவணியை ஈட்டுவதற்கு நல்ல வாய்ப்பாக இருக்கிறது. எனவே அந்த வகையில் இந்த மாதிரி அன்னிய செலாவணியை ஈட்டித் தருகின்ற வகையிலும் விவசாயிகளின் பொருளாதாரத்தை உயர்த்துகிற வகையிலும் இது நல்ல ஒரு தரமான ஆடாக இருப்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

ஏற்றுமதியைக் கருத்தில் கொண்டு இந்த ஆடுகளின் அபிவிருத்தியை அதிகப்படுத்த நடவடிக்கை எடுப்பார்களா என நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் இந்தப் பகுதியில் இதை விரிவுபடுத்துவதற்கான அந்தக் கருத்துரு அரசிடம் இல்லை என்று சொன்னேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினருடைய அந்த உணர்வுகளை எல்லாம் மையமாக வைத்துக்கொண்டு மேலும் நடவடிக்கை எடுக்க அரசு முயலும்.

**பழனி திருக்கோயில் தண்டபாணி உருவச்சிலை.**

263--(* வினா எண். 2087) **திரு. மு. இராமநாதன் :** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி திருக்கோயில் நவபாசாண தண்டபாணி உருவச் சிலை நீர் வழிபாடு செய்ய முடியாத நிலையில் இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** (அ) மற்றும் (ஆ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசாமி திருக்கோயிலின் மூலவர் திருமேனி தேய்மானம் அடைந்து வருவதைக் கருத்தினில் கொண்டு ஆறுகால பூசை மற்றும் அதற்குரிய அபிஷேகங்கள் மட்டும் மூலவருக்கு செய்யப்பட்டு வருகிறது. மூலவர் திருமேனியைப் பாதுகாக்கும் நிமித்தமாக, தங்கக் கவசம், கனமான நகைகள் ஆகியவற்றை அணிவிப்பதும், உபயதாரர்களின் அபிஷேகங்களும் தவிர்க்கப்பட்டிருக்கின்றன.

**திரு. மு. இராமநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனியம்பதியில் இருக்கின்ற தண்டாயுதபாணி சாமியினுடைய திரு. உருவமானது பிற ஆலயங்களில் உள்ள திரு உருவங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டது என்று சொல்லுகிறார்கள். அது 18 சித்தர்களில் ஒரு சித்தரான போகர்



என்பவரால் நவபாசாணத்தால் உருவாக்கப்பட்ட சிலை என்றும் சொல்லப்படுகிறது. அந்த சிலைக்கு பல ஆண்டு காலமாக நெய் அபிஷேகம், தயிர் அபிஷேகம், பால் அபிஷேகம், இளநீர் அபிஷேகம், எண்ணெய் அபிஷேகம், பஞ்சாமிர்த அபிஷேகம் போன்ற அபிஷேகங்களும், நீர் வழிபாடும் நடைபெற்று வந்து இருக்கின்றன. ஆனால் கடந்த 2 ஆண்டுகளாக இந்த சிலை ஊனம் உற்ற காரணத்தால் சிலையினுடைய பின்புறப் பகுதி காது பகுதி, தோள்பட்டைப் பகுதி ஆகியவை ஊனம் உற்ற காரணத்தால் அனைத்து அபிஷேகமும், நீர் வழிபாடும் நிறுத்தப்பட்டு இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. மேலும் பக்தர்கள் விருப்பப்படி உரிய கட்டணத்தைக் கட்டினால் சிலைக்கு தொடர்ந்து நீர் வழிபாடும் அல்லது அவர்கள் விரும்புகிற தயிர், பால், இளநீர் போன்றவைகளால் வழிபாடும் நடத்தப்படக்கூடிய நிலை இருந்து வந்தது. அவைகள் இப்போது நின்று போய் இருப்பதற்கு அரசு என்ன காரணம் என்று ஆராய்ந்ததா ? அதுபற்றி வேறு ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.20)

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இராமநாதன் தெரிவித்த செய்தியில் ஒரு பகுதி சரியானது. ஒரு பகுதி தவறான அடிப்படையில் தரப்பட்டிருக்கிறது. இந்த ஆலயத்தில் இருக்கிற மூலவர் திருமேனி ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு போகர் என்ற சித்தராலே அமைக்கப்பட்டது என்கிற குறிப்பு நமக்குக் கிடைத்திருக்கிறது. ஆனால் அந்தத் திருமேனி எதிலே செய்யப்பட்டிருக்கிறது என்பதில் சர்ச்சைகள் இருக்கின்றன. அது கல்லால் செய்யப்பட்ட திருமேனி அல்ல என்பது எல்லோருக்கும் தெளிவாகப் புரிந்திருக்கிறது. ஆனால் நவபாஷாணத்தினால் செய்யப்பட்டிருக்கிறது என்ற கருத்து நாட்டிலே நீண்டகாலமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது அந்தத் திருமேனிக்குச் சிதைவு ஏற்பட்டிருக்கிறது என்ற கருத்து ஏதோ இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். அது தவறான தகவல். 40 ஆண்டுகளுக்கு முன்பே அந்தத் திருமேனியில் சிதைவு ஏற்பட்டிருக்கிறது என்பதை அங்கே இருக்கிற மிராசு அர்ச்சகர்கள் 3—5—1945-லே அதிகாரிகளுக்கும், நிர்வாகத்திற்கும்

தெரிவித்திருக்கிறார்கள். தொடர்ந்து தெரிவித்துக் கொண்டும் வருகிறார்கள். என்ன காரணத்தினாலோ அதைத் தடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. அதைத் தொடர்ந்து அவர்கள் தெரிவித்துக் கொண்டு, மீண்டும் மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தது போல், 6 கால பூஜை மாத்திரமல்ல, நம்முடைய பக்தர்களின் வேண்டுதல்களின்படி தருகிற அபிஷேகப் பொருள்களை ஏற்றுக்கொண்டு செய்கிற காரணத்தால். ஒரு நாளைக்கு 10-லிருந்து 20 அபிஷேகங்கள் வரையிலும், திருவிழாக் காலங்களில் 30-லிருந்து 120 அபிஷேகங்களும் நடைபெற்று வந்தன. சமீப காலத்தில் சாதாரண நாட்களில் 50-ம், திருவிழாக் காலங்களில் 500 வரையிலும் அபிஷேகங்கள் நடைபெறுகின்றன. அதைத் தொடர்ந்து அனுமதிக்கக் கூடாது என்று மிராசு அர்ச்சகர்கள் தெரிவித்த காரணத்தினால், 1982 ஆம் ஆண்டில் அரசு கடுமையாக நடவடிக்கைகள் எடுக்கவில்லையென்றால், விபரீதமாகிப் போய் விடும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அதைப் பற்றி தீவிரமாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள்.

அதுகுறித்து, உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில், தமிழகத்தில் ஆன்றோர்கள், சான்றோர்கள், ஆன்மீகத் துறையில் வல்லுநர்கள், பெரியோர்கள் 40 பேரைக் கொண்ட குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவினுடைய பரிந்துரைகளை ஏற்று, உடனடியாகச் சில நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதோடு, 40 ஆண்டுகளுக்கு முன்பு மிராசு அர்ச்சகர்கள் தெரிவித்த கருத்தையொட்டி, பக்தர்கள் தருகின்ற அபிஷேகப் பொருட்களைக் கொண்டு நடத்த வேண்டாம், ஆலயத்தின் சார்பில் நடத்தப்படுகிற 6 கால பூஜை அபிஷேகத்தை மாத்திரம் நடத்தலாம் என்கிற நடைமுறை அமல் படுத்தப்பட்டு வருகிறது. ஆகவே இன்றைக்கு முறைப்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகள் அந்தக் குழுவினுடைய அறிக்கையில் சொல்லப் பட்டிருக்கிறது. அதைப்பற்றி அரசு விரைவிலே முடிவு எடுத்து, நடவடிக்கைகள் மேற்கொள்ளும். இந்தக் குழு தெரிவித்த கருத்துக்களிலும் கூட, இது நவபாஷாணத்தினால் செய்யப் பட்டதா என்பதை உறுதி செய்ய முடியவில்லை. இதைத் தொட்டு ஆய்வு செய்யமுடியவில்லை. அதிலிருந்து ஒரு





பகுதியை சோதனை செய்ய முடிவதில்லை. அந்த வழக்கம் நடைமுறையில் இல்லை. அங்கே இருக்கின்ற நம்முடைய ஆகம விதிகளும் இடம் தரவில்லை. ஆகவே மூலவரை மாற்றவும் கூடாது. மாற்றவும் முடியாது. ஆகவே இருக்கின்ற மூலவரை பாதுகாத்துவைத்துக்கொண்டு, உற்சவருக்கு மட்டும் நம்முடைய அபிஷேகங்களை நடத்தலாம் என்று அந்தக் குழு தெரிவித்திருக் கிறது. அதுதான் கடந்த இரண்டு ஆண்டுகளாக நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் இங்கே குறிப்பிட்டதுபோல், ஆகம முறையும், அல்லது ஏற்கனவே இருக்கிற சில நிபந்தனைகளும் தான் நேரடியாக பழனி தண்டாயுதபாணி திருவுருவச் சிலைக்கு இயல்பான தன்மைக்கு, மாறான முறையில் இந்தச் சிதைவு ஏற் பட்டிருக்கிறது என்பதை அமைச்சரவர்களோ, அல்லது வேறு யாரோ கண்டறிய முடியாத சிக்கல் இருக்கிறது. நமக்குக் கிடைத்திருக்கிற தகவல்படி கருவறைக்குச் சென்று பூஜை செய்ய வாய்ப்பு ஏற்பட்டவர்கள் மட்டுமே அங்கே சென்று வழிபடக் கூடிய, நிலைமை இருக்கிறது. சாமியினுடைய பின்புறப் பகுதி சுரண்டி எடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. அமைச்சர் அவர்கள் ஒருமுறை அறிக்கையில் கூட குறிப்பிட்டார்கள். (மணியடிக்கப் பெற்றது). ஆகவே நான் அமைச்சர் அவர்களை தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புவது, ஆகம முறைப்படி அல்லது பக்தர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டு அக்குழு இதுபற்றி ஆராய்ந்து அரசுக்கு ஒரு குறிப்பு தந்திருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் நேரில் சென்று அல்லது அமைச்சரவையில் இருக்கிற யாராவது இரண்டு அமைச்சர்கள் உடன் சென்று உண்மையான நிலை என்ன என்பதை அறிந்து அதைத் தடுக்க வழி ஏதாவது செய்ய முறை ஏதாவது உண்டா? ஆலயங்களில் ஆபரணங்கள் திருட்டுப் போனால் கூட (மணி அடிக்கப்பட்டது.) . . . .

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமநாதன் அவர்கள் பழனி மூலவருக்கு நாம் என்ன செய்ய வேண்டும், என்ன பாதுகாப்பை ஏற்படுத்த வேண்டும் என்கிற கருத்தைப் பெறுவதைவிட ஏதோ ஒரு குறை நடந்து

விட்டதாக எண்ணி அதை வெளிப்படுத்த வேண்டும் என்கிற உணர்வோடு அவர்கள் ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்கிறார்கள் என்று நான் எண்ணுகிறேன். ஏனென்றால், அங்கே நாம் போய் அதை எடுத்து தொட்டுப் பார்த்து அல்லது சிலைப் பகுதியை எடுத்து சோதித்துப் பார்க்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பது நீண்ட காலமாக இந்த நாட்டில் தெரிந்திருக்கிற ஒரு உண்மை. அதனாலே 45-ம் ஆண்டிலே அந்த மிராசு அர்ச்சகர்கள் அந்தக் குறைபாடுகளை எடுத்துக் காட்டியதற்குப் பிறகும் கடந்த 40 ஆண்டுகளாக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட முடியாத ஒரு சூழ்நிலை அங்கிருந்து கொண்டிருக்கிறது. இந்த அரசு புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையை ஏற்றுக்கொண்ட பிறகுதான் இந்த அளவிற்காவது துணிந்து அதற்குள்ளே போய் பரிசோதிக்க வேண்டும். அதை எப்படியாவது பாதுகாக்க வேண்டும் என்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தருகிற ஒரு தகவலில், சுரண்டப்பட்டுவிட்டதாமே என்று தெரிவித்தார்கள். அந்த மிராசு அர்ச்சகர்கள் தந்திருக்கிற குறிப்புகளிலிருந்து பின்பகுதி முழுவதும் அப்படிச் சுரண்டப்பட்டதாக தகவலே இல்லை, அது சரியான தகவலும் இல்லை. எங்கோ ஒரு இடம் அல்லது இரண்டு இடங்களில் பள்ளங்கள் இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இடது கை இடுப்பிலே இருக்கிற இடத்தில் அந்த இடுப்புக்கும் கைக்கும் இடையே இடைவெளி ஏற்பட்டிருக்கிறது, இது மிராசு அர்ச்சகர்கள் தெரிவிக்கிற கருத்து.

இன்றைக்கல்ல, நாற்பது ஆண்டுகளாகவே அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிற கருத்து. அதில் சந்தனக்காப்பு சாத்தி காலையில் அதைச் சுரண்டி எடுத்துக் கொடுக்கிற வழக்கத்தை நீண்ட காலமாகவே அந்த ஆலயத்தில் வைத்திருக்கிறார்கள். இந்த மனிதனுக்கு இருக்கிற சுரண்டல் உணர்வு, ஆசை, அதை அதிகமாக சுரண்ட வைத்திருக்கிறது. யார் சுரண்டினார்கள், எப்போது சுரண்டினார்கள் என்பதற்கு தகவல் இல்லை. ஆக, சுரண்டுகிறவர்கள் எங்கேயும் இருக்கிறார்கள் என்பது தெரிகிறது. ஆக கொஞ்சம் அதிகமாகவே சுரண்டி கொஞ்சம் பள்ளத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதை உணர முடிகிறது. ஆகவே வேறு எந்த அபாயமும் வந்துவிடவில்லை. அது கல்லால் ஆக்கப்பட்ட சிலை அல்ல என்ற



காரணத்தாலும் ஏதோ வேறு கலவையால் உருவாக்கப்பட்ட சிலை என்று தெரிகிற காரணத்தாலும் இந்தக் குறைபாடுகள் நடந்திருக்கின்றன. எப்படியும் அதைத் தடுத்தாக வேண்டும். தடுப்பதற்கான முயற்சிகளும் நாற்பது ஆண்டுக் காலமாக எடுக்கவில்லை, புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் தான் எடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது குழுவும் அந்த மூலவரை மாற்றக்கூடாது என்று தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவேதான் உற்சவருக்கு அந்த அபிஷேகங்கள் நடைபெற்று வருகின்றன. புகழ்பெற்ற திருப்பதிக் கோயிலில் கூட மூலவருக்கு எந்த அபிஷேகங்களும் நடத்தப்படுவதில்லை. அந்த முறையில்தான் இந்தப் பழனியிலும் அங்கு ஆலயத்தின் சார்பில் நடைபெறுகிற அபிஷேகங்கள் நடைபெறுகின்றன. அதையும் வேண்டுமானால் குறைக்கலாம் என்று கூட குழு தெரிவித்திருக்கிறது. மிகுந்த எச்சரிக்கையோடு கோடிக்கணக்கான மக்களின் நம்பிக்கைக்கு பாதகம் வராத வகையில் அந்த உணர்வில் அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்)** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிலை பற்றி ஆய்ந்து அரசுக்குச் சொல்வதற்கு ஒரு குழு அமைத்திருக்கிற விவரங்களைப் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த நவபாசாணச் சிலையை உருவாக்கிய போகர் என்ற சித்தர் இதுபோன்ற இன்னொரு சிலையையும் உருவாக்கி அது அந்தப் பழனி மலையில் இருக்கிறது என்ற பேச்சு அந்தப் பகுதி பெரியவர்களிடையே இருந்து வருகிறது. அந்த விவரங்களைப் பற்றியும் குழு ஏதாவது ஆய்வு நடத்தியதா என்ற விவரத்தையும் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-30)

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிலை அல்ல, ஒன்பது சிலைகள் உருவாக்கப்பட்டிருப்பதாக ஒரு நம்பிக்கை இருக்கிறது.. ஒரு செய்தியும் சொல்லப்படுகிறது. இன்னும் குறிப்பாக மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் சொல்வதைப் போன்று ஒரு சிலை இந்த மூலவரின் அடியில் இருக்கிறது என்ற தகவலும்

தெரிவிக்கப்படுகிறது. அது, தகவலாக செய்தியாக இருக்கிறதே தவிர இதை ஆய்ந்து கண்டுபிடிப்பதற்கான வாய்ப்புகள் இல்லை. எங்கேயாவது அப்படிக் கிடைக்கிற சூழ்நிலை வருமானால் அதையும் எடுக்கலாம் என்ற முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. ஆனால், இப்போதுள்ள மூலவரின் அடியிலேயும் சிலை இருக்கிறது என்கிறபோது, நாம் அதை எடுத்துப் பார்க்க முடியாது. அம்முயற்சியிலே ஈடுபட முடியாது. ஆகவே, அப்படி ஒரு கருத்து இருக்கிறது. ஒரு சிலை அல்ல, ஒன்பது சிலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகள் அங்கே பல இடங்களில் இருக்கின்றன என்ற கருத்தும் பரவலாக இருக்கிறது. ஆனால் ஆதாரங்கள் இல்லை.

### கோயில் சிலைகளை கண்காணிக்க விழிப்புக் குழுக்கள்.

264—(* வினா எண். 4818) திரு. க. சோலைராசு: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயில் சிலைகளை கண்காணிக்க விழிப்பு கமிட்டி ஏதேனும் ஏற்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த எந்த மாவட்டத்தில் உள்ளது?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** (அ) ஆம்.

(ஆ) புதுக்கோட்டை, தென்னாற்காடு, செங்கற்பட்டு, திருநெல்வேலி, சேலம், தர்மபுரி, காமராஜர், கன்னியாகுமரி, பசும்பொன் முத்துராமலிங்கம், சென்னை, மதுரை மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் விழிப்புக் குழு அமைக்கப் பட்டுள்ளது. மற்ற மாவட்டங்களில் கூடிய விரைவில் குழு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### புதிய சர்க்கரை ஆலைகள்.

265—(* வினா எண். 4004) திரு. கே. ஆர். கணபதி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் பகுதியில் சர்க்கரை ஆலை துவக்க சாத்திய கூறுகள் உள்ள குறிப்பு மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றி அரசு எடுத்த முடிவு என்ன?



**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) ஆம்.

(ஆ) ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சர்க்கரைத் தொழிலுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை பயன்படுத்தி விட்டதால், தனியார் துறையில் எவரேனும் சர்க்கரை ஆலை துவங்க முன்வந்தால் அவர்கள் திட்டத்தை ஆதரிக்கலாம் என முடிவு எடுக்கப்பட்டது.

266—(* வினா எண். 4410) திரு. தெ. பெருமாள்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

கடையநல்லூர் தொகுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம் ஏதுவும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) ஆம்.

267—(* வினா எண். 6020) திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீபெரும்புதூரில் சர்க்கரை ஆலை தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**திரு. கே. ஆர். கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் தாலுகா, காட்டுமன்னார்கோயில் பகுதியில் சர்க்கரை ஆலை அமைக்கலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய குறிப்பு எப்போது வரப்பட்டது என்பதையும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே அதைத் தொடங்குவதற்குப் பணமில்லை என்றும், தனியார்கள் முன்வந்தால் அதைத் துவக்கலாம் என்றும் சொன்னார்கள். ஆனால், அது கூட்டுறவுத் துறையிலே துவக்கப்படுமா என்பதையும், மீண்டும் இதை மறுபரிசீலனை செய்து அறிவிப்பார்களா என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சிதம்பரம் பகுதியிலே சர்க்கரை ஆலை 6 ஆவது ஐந்தாண்டுத்

திட்ட காலத்திலே துவக்கலாம் என்று தெரிவித்தார்கள். ஆனால், 7 ஆவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே சர்க்கரை தொழிலுக்கென ரூ. 7.10 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதிலே இரண்டு சர்க்கரை ஆலைகள் அமைக்க இயலும். ஆகவேதான், தனியார் துறையிலிருந்து சிதம்பரம் பகுதியில் சர்க்கரை ஆலையைத் துவக்க முன்வந்தால், அவர்களை ஊக்குவிக்கலாம் என்று அரசு முடிவெடுத்திருக்கிறது.

**திரு. கே. ஆர். கணபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கு சிதம்பரம் தாலுகாவிலே சர்க்கரை ஆலையைத் துவக்கலாம் என்று பரிந்துரை செய்யப் பட்டிருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கு 30 சர்க்கரை ஆலைகள் துவக்க திட்டமிடப்பட்டு, அதை அனுப்பியிருக்கிறோம். சிதம்பரம் தாலுகா, சேத்தியாதோப்பில் தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையம் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலையைத் துவக்க விண்ணப்பம் அனுப்பியிருக்கிறது.

**திரு. தெ. பெருமாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் பின்தங்கிய பகுதியான கடையநல்லூரில் சர்க்கரை ஆலை அமைக்கக் கூடிய காலத்திலே, அதற்குப் பக்கத்திலுள்ள வாசுதேவநல்லூரில், தென்காசி, கடையநல்லூர் ஆகிய பகுதிகளில் கரும்பு அதிகமாக இருப்பதினால், ஒரு சர்க்கரை ஆலையை அமைத்துத் தரும்படி அமைச்சர் அவர்களைக் கேட்டோம். ஆனால் அவர்கள் 6 ஆவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைந்து விட்டதால், வேறு யாராவது தனியார்கள் முன்வந்தால், அதற்கு அனுமதி தருகிறேன் என்று சொன்னார்கள். கூட்டுறவுத் துறையில் ஆரம்பிக்க அனுமதி தருவார்களா? அதே சமயத்தில், கடையநல்லூரில் சர்க்கரை ஆலை அமைக்க அரசு ஏதாவது திட்டம் வகுத்துத் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி பகுதியில் தென்காசியில் ஒரு சர்க்கரை ஆலை அமைப்பதற்கு விண்ணப்பம் போடப் பட்டிருக்கிறது. அது மாநில அரசின் பரிசிலனையில் இருக்கிறது.



**திரு. ஜி. கே. ஜெ. பாரதி :** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைநாயகர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு மிக்க ஸ்ரீபெரும்புதூரில் அத்வைதம் வளர்த்த ஸ்ரீராமானுஜர் பிறந்த இடமாக விளங்கும் அந்த சிறப்புமிக்க இடத்திலே ஒரு சர்க்கரை ஆலை துவக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடத்திற்கு நிறையப் பெருமை ஏற்கெனவே இருக்கிறது. ஆகவே புதிய பெருமை தேவையில்லை. (சிரிப்பு).

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்திலே 30-க்கும் மேற்பட்ட சர்க்கரை ஆலைகளைத் துவக்குவதற்கு மைய அரசுக்கு விண்ணப்பம் செய்திருப்பதாகச் சொன்னார்கள். 30 சர்க்கரை ஆலைகளைத் துவக்கி செயல்படுகிற அளவுக்கு தமிழகத்திலே கரும்பு உற்பத்தி இருக்கிறதா? இப்போது இருக்கிற சர்க்கரை ஆலைகளுக்கே தமிழகத்திலே உற்பத்தியாகிற கரும்பு போதாத காரணத்தினால் வெளி மாநிலங்களிலிருந்து கரும்பு வாங்கிக் கொண்டிருக்கிற நிலை இருப்பது உண்மையா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 30 ஆலைகளுக்குத் தேவையான கரும்பை உற்பத்தி செய்வதற்கு 3 லட்சம் ஏக்கர் தேவைப்படுகிறது. அந்த அளவுக்கு கரும்பு உற்பத்தியாகிறது. இப்போது எந்த ஆலையும் வெளி மாநிலத்திலிருந்து கரும்பு வாங்குவதில்லை, ஒரு பகுதியிலே உள்ள ஆலையிலிருந்து மற்ற பகுதியிலே உள்ள ஆலைக்குத்தான் கரும்பு போகிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் பொன்னி சர்க்கரை ஆலைக்கு புகளூர் அல்லது தஞ்சைப் பகுதியிலே உள்ள பகுதியிலிருந்து கரும்பு எடுத்துச் செல்கிறார்கள். கரும்பு அங்கே அரவைக்குத் தேவைப்படுகிறது. இப்படி ஒரு ஆலைப் பகுதியிலிருந்து இன்னொரு ஆலைப் பகுதிக்குத்தான் எடுத்துச் செல்கிறார்களே தவிர, வெளி மாநிலங்களிலிருந்து வருவதில்லை.

**திரு. செ. ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, தமிழகத்திலே வரும் ஆண்டுகளிலே 30 சர்க்கரை ஆலைகள் வருவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எங்கள் செங்கற்பட்டு பகுதியிலே இரண்டே ஆலைகள் தான் இருக்கின்றன. அங்கே கரும்பு ஆட முடியாமல் மற்ற ஆலைகளுக்குப் போய்க் கொண்டிருக்கிறது. ஆகவே காஞ்சிபுரத்தை மையமாகக் கொண்டு இன்னொரு சர்க்கரை ஆலையை அந்தப் பகுதியிலே துவக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் படாளம் ஆலையைப் பற்றிச் சொல்கிறார் என்று கருதுகிறேன். படாளம் சர்க்கரை ஆலையில் அரவைக்குப் போதுமான கரும்பு இருக்கிறது. (குறுக்கீடு) 30 சர்க்கரை ஆலைகளுக்காக அனுப்பி இருக்கிற விண்ணப்பங்களை மைய அரசு இன்னும் அனுமதிக்கவில்லை. மைய அரசு சர்க்கரைக் கொள்கையை வகுத்து இன்னும் தெரிவிக்கவில்லை. அது வந்தபிறகு தான் சர்க்கரை ஆலைகளை அமைப்பது பற்றி முடிவு எடுக்க முடியும்.

**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலைகளுக்கு உரிமங்கள் வழங்குகின்ற உரிமையை மாநிலங்களுக்கே கொடுக்க வேண்டுமென்று நம்முடைய அரசு மைய அரசை வற்புறுத்தியிருக்கிறதா? அப்படியானால் அந்தக் கருத்துக்கு மைய அரசு என்ன பதிலைச் சொல்லிக்கொண்டு வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் சொல்லி தலைவர் அவர்களே, நான் அந்தக் கருத்தை யிருக்கிறேன். இன்னும் மத்திய அரசிடமிருந்து எந்தவிதமான பதிலும் வரவில்லை.

**டாக்டர் கே. சமரசம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தனியார்கள் சர்க்கரை ஆலை துவக்க எத்தனை பேர்கள் விண்ணப்பித்து இருக்கிறார்கள்? எங்கெங்கே அவைகளை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் அங்கீகரித்து இருக்கிறது என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெங்கே என்கின்ற விவரத்தைக் குறித்துத் தனிக் கேள்வி போட்டால் விவரம் கொடுக்கலாம். பல பேர்கள் விண்ணப்பித்து இருக்கிறார்கள். விண்ணப்பங்களை மைய அரசிற்கு நாம் பரிந்து செய்திருக்கிறோம். மத்திய அரசு அனுமதி வழங்கிய பிறகுதான் எந்த எந்த இடங்கள் என்பதை நாம் தெரிவிக்க முடியும்.

**மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு சுயாட்சி முறை.**

268—(*வினா எண். 865) **மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளுக்கு சுயாட்சி உரிமை தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இல்லை.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மேல்நிலைப் பள்ளிகளுக்கும் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் தன்னாட்சி வழங்குகிற செயற்குறிப்பு இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே கல்லூரிகளுக்கு நாம் தன்னாட்சி வழங்கிய அடிப்படையில் பல கல்லூரிகள் அதன் காரணமாகப் பலன் பெற்றுள்ளன என்று கல்வியாளர்கள் சொல்கிறார்கள். ஆகவே அதைக் கருத்திலே கொண்டு உயர்நிலைப் பள்ளிகளுக்கும் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் அந்தக் கல்லூரிகள் பலன்களைப் பெறுகின்ற வகையிலே தன்னாட்சி வழங்குவதற்கு அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிற தன்னாட்சி உரிமை போன்று உயர்நிலைப் பள்ளிகளுக்கும் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் தருகிற செயற்குறிப்பு பரிசீலனையில் இருக்கிறதா என்ற கேள்வியின் அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள்.

பள்ளிகளுக்கும் அந்தத் தன்னாட்சி உரிமையைத் தருவது என்பது நல்ல யோசனைதான். ஒரு முற்போக்கான யோசனைதான். இதைத் திட்டக் குழுவின் உப குழு ஒன்று அதனுடைய ஆலோசனையாகக் கூடச் சொல்லியிருக்கிறார்கள். இதுபற்றியெல்லாம் நாம் எதிர்காலத்திலே யோசித்துத் தக்க முடிவெடுக்கலாம்.

(முற்பகல் 9-40)

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்குத் தன்னாட்சி வழங்காவிட்டாலும்கூட, அதிக அதிகாரமாவது வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதிக அதிகாரம் என்றால் என்ன அதிகாரம் என்ற ஒரு தெளிவு இல்லை. போதுமான அதிகாரம் தரப்பட்டு இருக்கிறது. இங்கே தன்னாட்சி உரிமை என்பது, அதிகாரம் என்பது கல்வி சம்பந்தப்பட்ட அகாடெமிக் ஃப்ரீடெம்.

**சென்னை சட்டக் கல்லூரி.**

269—(*வினா எண். 2992) **திரு. எஸ். இராசாராமன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள சட்டக் கல்லூரியை வேறொரு இடத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்குரிய காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) ஆம்.

(ஆ) இந்திய உச்சநீதி மன்றத்தின் ஒரு பிரிவினை தமிழ் நாட்டில் அமைக்கும் கருத்துரு, மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. அப்பிரிவை, சென்னையில் அமைப்பதெனத் தீர்மானித்தால், சட்டக் கல்லூரியைத் தற்போதைய இடத்திலிருந்து மாற்றப்பட வேண்டிய கருத்துரு பரிசீலிக்கப்படும்.





**திரு. எஸ். இராசாராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர்நீதிமன்ற வளாகத்திலேயே சட்டக் கல்லூரி இயங்கி வருவதால் மாணவர்கள் பயிற்சி பெறுவதற்கான வசதி உள்ளது. ஆதலால் மாற்றம் தேவை இல்லை என்பதையும், அந்த இடத்திலேயே போதுமான அளவிற்கு அதிகமான இடவசதி இருப்பதால் புதிதாகத் துவங்க இருக்கின்ற கல்லூரியையும் அங்கேயே துவக்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உச்ச நீதிமன்றத்தினுடைய ஒரு பிரிவு அங்கே வந்தால் அதற்குப்பிறகு அங்கேயே கல்லூரி இயங்குவதற்கான சூழ்நிலை நிச்சயமாக இருக்காது. ஆகவே, வேறொரு இடத்திலே தான் கல்லூரியை அமைக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

**திரு. எஸ். இராசாராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இயக்குநர் அலுவலகம் சட்டக் கல்லூரி வளாகத்திலேயே சில ஆண்டுகளுக்கு முன்பு இயங்கிக்கொண்டு வந்தது. இப்பொழுது அது நந்தனம் என்ற இடத்திற்கு மாற்றப்பட்டு இருக்கிறது. அது தேவைதானா? பழைய இடத்தில் இருந்த இயக்குநர் அலுவலகம் பூட்டப்பட்டு இருக்கின்றபொழுது புதிதாக நந்தனத்தில் வாடகைக்குக் கட்டிடத்தை எடுத்து நடத்த வேண்டியது அவசியம்தானா, என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயக்குநர் அதே இடத்திலே இருந்தால் கல்லூரித் தலைவருக்கு இருக்கின்ற முழுமையான மரியாதை அங்கே இருக்காது.

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை சட்டக் கல்லூரியில் கடந்த இரண்டு ஆண்டுகளாக எம். எல். வகுப்புக்கு மாணவர்களைச் சேர்ப்பதில்லை என்று தெரிகிறது. அது உண்மையா? இருப்பின் என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

[1986 மார்ச் 25

**திரு. பி. எம். தங்கவேல்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர்நீதி மன்றத்தின் பிரிவு மதுரைக்குச் செல்வதாக இருந்தது. ஆனால் மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கேயே வைத்துக் கொள்வதாகவும், அதற்காகத்தான் சட்டக் கல்லூரி வேறு இடத்திற்கு மாற்றப்பட வேண்டுமென்றும் சொல்கிறார்கள். ஹைகோர்ட்டின் பிரிவு மதுரைக்குச் செல்ல இருக்கிறதா அல்லது சென்னையிலேயே இருக்கப் போகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உயர்நீதி மன்றத்தின் பிரிவைப்பற்றி நான் சொல்லவில்லை. உச்சநீதி மன்றத்தின்—சுப்ரீம் கோர்ட்டின்—டெல்லியிலே உள்ள உச்சநீதி மன்றத்தின் ஒரு பிரிவு சென்னைக்கு வரும்பொழுது அவர்களுக்கு நாம் இந்த இடத்தைத் தர வேண்டுமென்று சொல்லியிருப்பதால் நாம் இங்கேயிருக்கின்ற சட்டக் கல்லூரியை வெளியே கொண்டு போகிறோம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சட்டக் கல்லூரியில் ஐந்தாண்டு கோர்ஸில் படிக்கும் மாணவர்களுக்குப் போதுமான அளவிற்கு டெக்ஸ்ட் புக்ஸ் இல்லையென்றும், சிலபஸ் கூட கடைசி இரண்டு வருட காலத்திற்கு இன்னும் தயாரிக்கப்படவில்லை என்றும், போதுமான ஆசிரியர்கள் இல்லை என்றும் சொல்லப்படுகிறதே, இதனால் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் அவல நிலையை மாற்றுவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? இல்லையென்றால் உடனடியாக நடவடிக்கை எடுத்து அந்த நிலையில் மாறுதல் ஏற்படுத்த முயற்சி எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்கள் பிரச்சினைபற்றி நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருக்கிறோம். இருந்தாலும், இப்படிப்பட்ட கேள்விகளைத் தனியாகக் கேட்டால் விவரமாகப் பதில் சொல்லலாம்.



1986 மார்ச் 25]

## சென்னையில் உள்விளையாட்டு அரங்கம்.

**270 (*வினா எண் 3978) திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைப்பந்து, கூடைப்பந்து போன்ற விளையாட்டுகளை அகில உலக அளவிலும் தேசிய அளவிலும் நடத்துவதற்கு ஏற்ற அளவில் சென்னை மாநகரில் உள்விளையாட்டு அரங்கம் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அத்தகைய உள்விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) அரசு அறியும்.

(ஆ) சென்னை ஒய். எம். சி. ஏ. உடற்பயிற்சி கல்லூரி வளாகத்தில் உள்விளையாட்டரங்கம் கட்டுவது தொடர்பாக அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும் தமிழ்நாடு கூடைப் பந்தாட்டக் கழகம் தமது சொந்தப் பொறுப்பில் ரூ. 103.44 இலட்சம் மதிப்பீட்டில் விளையாட்டு வளாகம் கட்ட மைய அரசின் 1985-86 ஆண்டிற்கான நிதியுதவி வேண்டி அனுப்பப்பட்ட விண்ணப்பம் மைய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

**திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டப்படுகின்ற அந்த இன்டோர் ஸ்டேடியம் கல்கத்தாவிலுள்ள நேத்தாஜி ஸ்டேடியம் போலிருக்குமா? டெல்லியிலுள்ள இந்திரா காந்தி ஸ்டேடியம் போன்ற அளவில் இருக்குமா? அங்கு என்ன என்ன விளையாட்டுகள் விளையாட வசதி செய்து தரப்படும்? அது எந்த அளவில் இருக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, சுமார் 3,000 பேர்கள் அமர்ந்து பார்க்கக்கூடிய அளவிலே ஒரு உள் விளையாட்டரங்கத்தை அந்த இடத்திலே கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. அங்கே என்ன என்ன விளையாட்டுகளை நாம் நடத்த முடியுமோ, அந்த அந்த விளையாட்டுகளை நாம் நடத்தலாம்.

[1986 மார்ச் 25

### வத்தலக்குண்டு அரசு மருத்துவமனை.

**271 (* வினா எண் 3867) திரு. அ. பாலுசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—**

(அ) நிலக்கோட்டை தொகுதி வத்தலக்குண்டு நகரில் உள்ள அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. அ. பாலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்த எடுப்பிலே இல்லையென்று சொல்லிவிட்டார்கள். ஆகையினால், அந்தப் பகுதி மிகவும் பரிதாபத்திற்குரிய பகுதி. வத்தலக்குண்டுக்கு அருகில் உள்ள கொடைக்கானல், பண்ணைக்காடு போன்ற மலைப் பகுதிகளில் வெடி விபத்துக்கள் ஏற்பட்டால், வத்தலக்குண்டு நகர அரசு மருத்துவமனைக்கு எடுத்து வந்து, அங்கே போதுமான படுக்கை வசதிகளும் போதுமான மருந்துகளும் இல்லாத காரணத்தால் அவர்களை மதுரைக்கு, அல்லது திண்டுக்கல்லுக்கு எடுத்துச் செல்கின்ற வழியில், உயிருக்கு ஆபத்து ஏற்படுகின்ற சூழ்நிலை உருவாகின்றது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மக்களின் நலன் கருதி, வத்தலக்குண்டு மருத்துவ மனையை விரிவுபடுத்த ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனையைப் பொறுத்தவரையில் 24 படுக்கைகள் இருக்கின்றன. சராசரியாக, ஒரு நாளைக்கு 30 உள்நோயாளிகள் அனுமதிக்கப்படுகிறார்கள். 6 நோயாளிகள் படுக்கையில்லாமலிருக்கிற அளவிற்கு, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன மாதிரி, அங்கே நெரிசல் இருக்கிறது. புறநோயாளிகள் என்ற வகையில் சராசரியாக ஒரு நாளைக்கு, 430 நோயாளிகள் வைத்தியத்திற்காக வருகிறார்கள், மாண்புமிகு



1986 மார்ச் 25]

உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய கருத்தினை மனதிலே வைத்துக் கொண்டு, நிச்சயமாக, அதை விஸ்தரிக்கக் கூடிய நிலைமையை ஆராய்ந்து, பார்ட்-2 ஸ்கீமில் சேர்க்க முடியுமா என்று பார்க்கிறோம்.

**திரு. அ. பாலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மருத்துவ மனையை விரிவுபடுத்துவதற்கு அங்குள்ள நெரிசலைப் பற்றி சொன்னார்கள். மேற்படி மருத்துவமனைக்குப் பக்கத்தில் கோல்டன் சிலிலி கிளப் என்று தனிப்பட்டவர்கள் அங்கு வைத்து நடத்துகிறார்கள். அந்த கிளப் வைத்து நடத்துகிற காரணத்தால், அந்தப் பகுதியில் இந்த மருத்துவமனையை விரிவுபடுத்துவதற்கு முடியவில்லையென்று பல ஆண்டுகளாக அமைச்சர் அவர்களுக்கு மனுக்கள் கொடுத்துள்ளார்கள். ஆகவே, அரசு அதை கையகப் படுத்தி, மேற்படி வத்தலக்குண்டு மருத்துவமனையை விரிவுபடுத்த அமைச்சர் அவர்கள் துரிதப்படுத்துவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த கோல்டன் சிலிலி கிளப்பைப் பொறுத்தவரையிலும் சட்ட ரீதியாக நாம் ஏற்க முடியுமா என்று பார்த்து சட்டத்தில் இடம் இருக்குமானால் அதை எடுத்துக் கொள்வதற்கு உடனடியாக ஏற்பாடு செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### துறையூர் அரசு மருத்துவமனை.

**272 (* வினா எண் 3979)—திருமதி இரா. சரோஜா: மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—**

உப்பிலியாபுரம் தொகுதி துறையூர் அரசு மருத்துவ மனையில் பிரசவ விடுதி கட்ட தனி நபர் (சீத்தாலட்சுமி பொன்னுசாமி) ஒரு லட்சம் நன்கொடை கொடுக்க முன்வந்தும் பிரசவ வார்டு கட்ட தாமதம் ஆகக் காரணம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** நன்கொடையாளர் ஒரு லட்சம் கொடுக்க இயலாது என்று கூறியதால் பிரசவ வார்டு கட்டவில்லை.

**திருமதி இரா. சரோஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீத்தாலட்சுமி பொன்னுச்சாமி என்பவர் கொடுக்க மறுத்துவிட்டார் என அமைச்சர் கூறுகிறார். இருந்தாலும் பரவாயில்லை, துறையூர் அரசு மருத்துவமனைக்குப் பிரசவ வார்டு அவசியம் என்பதைக் கருதி, அரசு அதனைக் கட்டித் தர முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ரூ. 1 இலட்சம் பொறுத்தவரையிலே அவர்கள் முதலிலே கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்தார்கள். அரசாங்கம் இறுதியாக ஆணை பிறப்பித்து, அவரைப் போய் பார்த்ததிலே, இப்பொழுது முடியாது, பல சிக்கல்கள் இருக்கின்றன என்று சொல்லிவிட்டார்கள். ஆனாலும், மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டுவிட்ட காரணத்தாலே, அங்கே மதிப்பிட்டுப் பார்க்கிற நேரத்திலே, ரூ. 1.50 இலட்சம் வந்தது. அந்தப் பணத்தைச் செலவழித்து, நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய மாதிரி, பிரசவ வார்டு கட்ட ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9.50)

**திருமதி இரா. சரோஜா:** தலைவரவர்களே, அந்த பிரசவ வார்டைக் கட்ட இந்த ஆண்டே மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தலைவரவர்களே, வெகு விரைவிலே அதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

**சாலையோரங்களில் முதலுதவிப் பிரிவுகள்.**

273 (* வினா எண் 449) — **டாக்டர் ந. மாசிலாமணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சாலை விபத்துக்களுக்கு முதலுதவி அளிக்கும் வகையில் Road side First Aid Hospital துவங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** இல்லை.





**டாக்டர் ந. மாசிலாமணி:** தலைவரவர்களே, வளர்ந்து வருகின்ற இந்த நாட்டிலே போக்குவரத்து அதிகமாக இருக்கிறது. அதைப்போன்று ஒவ்வொரு ஆண்டும் சாலை விபத்துக்களும் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன என்று போக்குவரத்துத் துறையில் கணக்கு கொடுக்கிறார்கள். இதை எல்லாம் மனதிலே வைத்து, இந்தப் பிரச்சனையைத் தீர்க்கின்ற வகையில், தமிழ் நாட்டில் நல்ல முறையில் போக்குவரத்துத் துறை வளர்ந்து வருகின்ற அதே ரேஷியோவில் போக்குவரத்து நெரிசல் காரணமாக விபத்துக்களும் உயர்ந்து கொண்டே வருவதால், இதை ஒரு நல்ல ஆலோசனையாக ஏற்று, இப்போது இல்லை என்றாலும் மறு பரிசீலனை செய்யப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்தத் திட்டம்தான் இல்லை என்று சொன்னேன். அதாவது 'ரோடு சைடு ஃபர்ஸ்ட் எயடு ஹாஸ்பிட்டல்' இல்லை என்று சொன்னேன். ஆனால் இப்போது 'ஆக்சிடென்ட் எமர்ஜென்ஸி சர்வீஸ்' என்ற புதிய பணி ஒன்றைத் தமிழ்நாட்டில் கடந்த மூன்றாண்டுகளாகச் செய்து கொண்டிருக்கிறோம். அகில இந்தியாவிலேயே தமிழ்நாட்டைத் தவிர வேறு எங்கும் இந்த சர்வீஸ் இல்லை. நம்முடைய மாநிலத்தில் இது செயல்படும் விதத்தைப் பல மாநிலங்களிலிருந்து வந்து பார்த்துச் செல்கிறார்கள். இந்தத் திட்டத்தின் அடிப்படையிலே

Each Accident Emergency Ward has 10 beds, blood bank, X-ray unit and necessary supporting staff.

இதற்காக இரண்டு ஆம்புலன்ஸ் வேன்களுக்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். இப்போது 12 மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளிலும் 22 தாலுகா தலைமை மருத்துவமனைகளிலும் இந்தத் திட்டத்திற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். இதற்காக இதுவரையில் ஏறத்தாழ 8 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக் கிறது.

**டாக்டர் ந. மாசிலாமணி:** தலைவரவர்களே, சாலை விபத்துக் களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கின்ற வகையில் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும் தாலுகா தலைமை மருத்துவமனைகளிலும் இருக்கிற வசதிகளை நான் நன்கு அறிவேன். இருந்தாலும் எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலுசாமி அவர்கள் குறிப்பிட்டதைப் போல

விபத்துக்குள்ளானவர்களைக் குறிப்பிட்ட மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும்போது வழியிலேயே இறந்து விடுகின்ற சூழ்நிலை இருக்கிறது. காரணம் மருத்துவமனை வெகு தூரத்தில் இருப்பதுதான். விபத்து நடந்த இடத்திற்கு அருகிலே மருத்துவமனை இருந்தால் உடனடியாகச் சிகிச்சை அளித்து விபத்துக்குள்ளானவரைக் காப்பாற்ற வாய்ப்பு இருக்கும். அதனால்தான் இந்த வினா கேட்கப்பட்டது. ஆகவே, சாலை ஓரங்களில் மருத்துவமனைகளை அமைக்க தற்போது வாய்ப்பு இல்லாவிட்டாலும் விபத்துக்குள்ளானவர்களுக்கு முதலுதவி செய்கின்ற வகையில் முதலுதவி மருத்துவமனைகளை அமைக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தலைவரவர்களே, இந்த ஆக்சிடன்ட் எமர்ஜன்சி சர்வீசைப் பொறுத்தவரையில், இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிற ஆம்புலன்ஸ் வேன் என்ன செய்ய வேண்டுமென்றால், தொலைபேசி மூலம் செய்தி தெரிவிக்கப்பட்டவுடன் அந்த இடத்திற்குச் செல்ல வேண்டும். அமெரிக்காவில் இந்த முறை நன்கு செயல்படுகிறது. ஒரு இடத்தில் விபத்து ஏற்பட்டவுடன் தொலைபேசி மூலம் செய்தி தெரிவிக்கப்படுகிறது. உடனே அந்த இடத்திற்கு ஆம்புலன்ஸ் வேன் வந்துவிடும். ஆம்புலன்ஸ் வேன் வந்தவுடன் விபத்துக்குள்ளானவரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதற்கு முன் முதலுதவி, மற்ற சிகிச்சைகள் அளிப்பதற்குப் பயிற்சி பெற்றவர்கள் அந்த சிகிச்சையைச் செய்துவிடுவார்கள். அந்தமாதிரியான சிகிச்சை அளிப்பதற்கு நாம் முதலில் ஏற்பாடு செய்ய வேண்டும்; அதைச் செய்திருக்கிறோம். அதைச் சரியான முறையில் செய்துவிட்டால் நல்ல பலன் கிடைக்கும். சாலை ஓரத்தில் சிறு சிறு மருந்தகங்களை ஏற்படுத்த வேண்டுமென்றால் அதற்குக் கூடுதல் ஸ்டாஃப் போட வேண்டும். ஆகவே, இப்போது இருக்கிற சூழ்நிலையில் ஸ்டேட் ஹைவேய்ஸ் (மாநில நெடுஞ்சாலை), நேஷனல் ஹைவேய்ஸ் (தேசீய நெடுஞ்சாலை) பகுதிகள் அதிகமாக இருக்கின்ற இடங்களில், விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்ற இடங்களில், 'ஸ்டிராடிஜிக் பாயின்ட்ஸ்' என்று சொல்லப்படுகின்ற இடங்களில் இருக்கின்ற, நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி, 12 தலைமை மருத்துவ மனைகளிலும் 22 தாலுகா தலைமை மருத்துவ மனைகளிலும் இந்தச் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்திருக்கிறோம்.





### திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலை.

**274 (*வினா எண் 4146) திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன்:** மாண்புமிகு ஆயத் தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலையின் விரிவாக்கத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** (அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன்:** தலைவரவர்களே, திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலை தமிழ் நாட்டிலே மிகச் சிறப்பாக இலாபத்தை ஈட்டுகிற ஒரு நூற்பாலை. ஆகவே அந்த நூற்பாலையின் விரிவாக்கம் ஒன்றை குலசேகரப்பட்டினத்தில் ஆரம்பிப்பதாக ஏற்கெனவே ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னால் சொல்லப்பட்டது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் துறையைக் கலந்து, திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலையின் கிளை ஒன்றை குலசேகரப்பட்டினத்தில் அமைக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலையின் கிளை ஒன்றினை ஏற்படுத்துவது புதிய ஆலையாகுமா அல்லது இருக்கிற ஆலையின் பகுதியாகக் கருதப்படுமா என்பது பற்றி மத்திய அரசுடன் கடிதப் போக்குவரத்து நடத்தி வருகிறோம். பதில் கிடைத்தவுடன் இதுபற்றி மறுபரிசிலனை செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### திங்களூர் விசைத்தறி தொழிற்கூடம்.

**275 (*வினா எண் 4200) டாக்டர் அ. பொன்னுசாமி:** மாண்புமிகு ஆயத் தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறைத் தொகுதியிலுள்ள திங்களூரில் கட்டப் பட்டு வரும் விசைத்தறித் தொழில் கூடத்தின் மதிப்பீடு என்ன?

(ஆ) எப்போது கட்டி முடிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** (அ) திங்களூரில் கட்டப்பட்டு வரும் விசைத்தறி தொழிற்கூடத்தின் திட்ட மதிப்பீடு ரூ. 27 இலட்சம் ஆகும்.

(ஆ) விசைத்தறிக்கூட கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. சில இடர்ப்பாடுகள் காரணமாக பணி தடைப்பட்டது. மேலும், நிறுவப்படவிருக்கும் விசைத் தறிகள் உரிமத்தின் காலம் 31—3—1985 உடன் முடிவடைந்துவிட்டதால், அவ்வுரிமத்தின் செல்லத்தக்க காலத்தை 31—5—1986 வரை நீட்டித்துத் தரும்படி மத்திய அரசிடம் கேட்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் அனுமதி கிடைக்கப் பெற்றவுடன் திங்களூரில் விசைத்தறிக் கூடத்தைத் துவக்க எல்லா நடவடிக்கைகளும் துரிதமாக எடுக்கப்படும்.

**கோபிச்செட்டிபாளையத்தில் சிறு தொழில் மையம்.**

**276 (*வினா எண் 1355) திரு. கு. அ. செங்கோட்டையன் :** மாண்புமிகு ஊரகத் தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் கோபிச்செட்டிபாளையத்தில் சிறு தொழில் மையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் :** (அ) பெரியார் மாவட்டம் கோபிச்செட்டிபாளையத்தில் சிறு தொழில் மையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திருச்சியில் செயற்கை வைரத் தொழில் பயிற்சி நிலையம்.**

**277 (*வினா எண் 5150) திருவாளர்கள் அ. மலர்மன்னன் மற்றும் இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சியில் செயற்கை வைரத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் கைவினைஞர்களுக்கென ஒரு பயிற்சி நிலையம் அமைக்க அரசு செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?





**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் :** கைவினைஞர்களுக்குப் பயிற்சியளிக்க சூரத்திலுள்ள இந்திய வைர நிறுவனத்தின் கிளையாக ஒரு பயிற்சி நிலையத்தைத் திருச்சிராப்பள்ளியில் நிறுவிடுமாறு மத்திய அரசிடம் கேட்கப் பட்டுள்ளது. இது மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. அ. மலர்மன்னன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சூரத்தில் இருக்கிற அந்தப் பயிற்சி நிலையத்தைப்போல திருச்சியிலே அமைப்பதற்கான ஒரு செயற்குறிப்பு பற்றி மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டதாகச் சொல்கிறார்கள். இந்தச் செயற்கை வைரத் தொழில் சூரத்தை விட திருச்சி மாநகரத்தில்தான் மிகவும் சிறப்பாகவும் சீரோடும் விளங்கி வருகிறது. இன்றைய தினம் அது நலிந்ததற்குக் காரணமே அதன் மீது போடப்பட்ட வரிதான். அவ்வாறு போடப்பட்ட வரியின் காரணமாக இன்றையதினம் அந்தத் தொழில் நசிந்துகொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் தொழிலாளர்களை எல்லாம் ஊக்குவிக்கின்ற வகையிலும், அந்தத் தொழிலுக்கு உதவுகின்ற வகையிலும் அதாவது பெல்ஜியம் கட்டிங் போல் செய்வதற்குரிய வசதிகளையும், வாய்ப்புகளையும் ஏற்படுத்துவதன் மூலம் அந்தத் தொழிலை ஊக்குவிக்கின்ற வகையிலே ஏதாவது புதிய திட்டங்கள் இந்த அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல் சூரத்தைவிட தமிழகத்தில் திருச்சி நகரத்திலும், அதைச் சுற்றியுள்ள இடங்களிலும், சுமார் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கைவினைஞர்கள் இந்தச் செயற்கை வைரத்தை அறுப்பதிலும் பட்டை தீட்டுவதிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் போதிய பயிற்சி கிடைப்பதில்லை. சூரத்திற்கு அனுப்பி அங்கு பயிற்சி தர வேண்டுமென்றால் ஏராளமாகச் செலவாகிறது. ஆகவே சூரத்திலே இருந்து சம்பந்தப்பட்ட வல்லுநர்களை அழைத்து வந்து இங்கேயே ஒரு பயிற்சி நிலையத்தை நிறுவி அதன்மூலமாக அனைவருக்கும் சிறந்த பயிற்சி அளிக்கவேண்டும் என்பது தமிழக அரசின் எண்ணம். அதன் காரணமாகத்தான் சூரத்திலுள்ள இந்திய வைர

நிறுவனத்தின் கிளையாக திருச்சியிலே ஒரு நிறுவனத்தை நிறுவ வேண்டுமென்று அரசு விரும்பி, அதற்கான முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறது.

மேலும் பயிற்சி நிலையம் நிறுவ ஏறக்குறைய 23.62 இலட்சம் செலவில் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. தொடராச் செலவினம் 17.64 இலட்சம் செலவிடுவதற்கும் அரசு தயாராக இருக்கிறது. தொடர் செலவினமாக 5.98 இலட்சம் செலவிடவும் நாம் தயாராக இருக்கிறோம்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயற்கை வைரத்தைப் பட்டை தீட்டுவதைப் பொறுத்த வரையில் பயிற்சி பெற்ற வெளிநாட்டு நிபுணர்கள் இருக்கிறார்கள். எனவே வெளிநாட்டிலுள்ளவர்கள் விரும்புகின்ற வகையில் அந்த ஃபேஷனுக்குத் தக்கபடி செயற்கை வைரத்தைத் தயாரிக்கின்ற வகையில் வெளிநாட்டு நிபுணர்களைக் கொண்டுவந்து பயிற்சி தருவதற்கு அரசு முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10.00)

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூரத்திலே மிகச் சிறந்த கைவினைஞர்களும் நல்ல தகுதி உள்ள திறமை படைத்த ஆற்றல் உள்ளவர்களும் இருக்கிற காரணத்தால், சூரத்திலே இருந்து கொண்டு வந்து பயிற்சி அளித்தாலே போதும் என்று அரசு கருதுகிறது.

**திரு. எச். ஜி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் செயற்கை வைரங்கள் தமிழ்நாட்டிலே எங்கெங்கு கிடைக்கின்றன, எந்தெந்த மாவட்டங்களில் கிடைக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பம்பாயிலும் சூரத்திலும் ஏராளமான செயற்கை வைரக் கற்கள் பட்டைத் தீட்டப்படுகின்ற நிலையில் இருக்கின்றன. அங்கே பம்பாயில் கூலி உயர்ந்து கொண்டே போவதால் தமிழகத்திலே இருக்கும் வைரங்களைத் தான் வட நாட்டிலே இருப்பவர்கள் அதிகமாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே வட மாநிலங்கள் அனைத்திற்கும் இங்கிருந்து செயற்கை வைரங்கள் அனுப்பப்படுகின்றன



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உடுக்குறியிட்ட வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

1—

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

### உரிமம் வழங்கப்பெற்ற சாராயக் கடைகள்.

வினா 274—**திரு. மா. மணிமாறன்:** மாண்புமிகு ஆயத் தீர்வை கைத்தறி மற்றும் நெசவாளை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா---

(அ) 1984—85-ல் தமிழ்நாட்டில் ஏலம் விடப்பட்ட சாராயக் கடைகளின் எண்ணிக்கை என்ன ?

(ஆ) அவைகளில் உரிமம் பெற்ற சாராயக் கடைகள் எத்தனை ?

**விடை—**

(அ) 1984-85-ல் தமிழ்நாட்டில் 6,772 சாராயக் கடைகள் ஏலமிடப்பட்டன.

(ஆ) அவைகளில், 6,414 சாரயக் கடைகளுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளன.

2—

### உசிலம்பட்டி-ஏழுமலை சாலையில் பாலங்கள் கட்டும் பணி.

வினா 378—**திரு. இரா. முத்தையா:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் உசிலம்பட்டி ஏழுமலை சாலையில் பல பாலங்கள் கட்ட வேண்டியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ), இச்சாலையில் எட்டு இடங்களில், தேவையான நீரவழிப் பாதைக்குரிய சிறு குழாய் பாலங்களும், 5 இடங்களில் கடின தளங்களும் அமைக்க வேண்டும். இப் பணிகளுக்கு உத்தேசமாக ரூ. 2.63 இலட்சம் தேவைப்படும். இப்பணிகள் இதுவரை அரசின் ஒப்புதல் பெற்ற திட்டமெதிலும் இடம் பெறவில்லை. வரும் ஆண்டுகளில் அரசின் நிதி நிலைமை மற்றும் பணி முன்னுரிமை ஆகியவற்றைப் பொறுத்து மாநில சாலைகள் திட்டத்தில் மாவட்டப் பெருஞ் சாலைகள் பிரிவின்கீழ் மேற்கொள்வது பற்றி பரிசீலிக்கப்படும்.

3—

**தமிழில் பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு உதவித் தொகை**

வினா 703—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழில் பட்டப் படிப்பு பயிலும் மாணவர்களுக்கு 1983-84, 1984-85 ஆம் ஆண்டுகளில் எத்தனை மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்கப்பட்டது, மாவட்ட வாரியாக?

(ஆ) அத் தொகையை உயர்த்திக் கொடுக்க அரசு முன் வருமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை@ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

4—

**கோட்டை மாரியம்மன் கோவில் அருகில் பொது விளையாட்டரங்கம்.**

வினா 874—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்), திரு. ஆ. பிரேம் குமார்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் நகரில் அருள்மிகு கோட்டை மாரியம்மன் கோவில் அருகில் பொது விளையாட்டு மைதானம் அமைக்கும் பணி காலதாமதம் ஆகக் காரணம் என்ன?

---

@ 187—188-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



விடை—

திண்டுக்கல்லில் அருள்மிகு கோட்டை மாரியம்மன் கோவில் அருகில் உள்ள விடம் விளையாட்டரங்கம் கட்ட தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்த இடத்தில் விளையாட்டரங்கம் கட்டுவதை எதிர்த்து ஐயப்ப பக்தர்கள் சங்கம் திண்டுக்கல் மாவட்ட முன்சீப் கோர்ட்டின் தடையுத்தரவு பெற்றிருப்பதால் இங்கு விளையாட்டு அரங்கம் கட்டும் பணி கால தாமதப்படுகிறது.

5—

**புதூர் ஊராட்சி வெள்ளாற்றுப் பாலம்.**

வினா 1444—திருவாளர்கள் ஜே. ஹேமச்சந்திரன், மற்றும் எம். செல்லமுத்து: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் ஊராட்சி ஒன்றியம், புதூர் ஊராட்சி வெள்ளையாற்றில் உள்ள பழுதடைந்துள்ள பாலத்தை அகற்றி புதிய பாலம் அமைத்தல் குறித்து அரசுக்கு ஏதேனும் கோரிக்கை மனு வந்துள்ளதா?

(ஆ) ஆமெனில், அரசு அதன் மீது மேற்கொண்ட நடவடிக்கை யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

6—

**அம்பலமூலா—வட்டக்கொல்லி சாலைப் பகுதிக்கு மின் இணைப்பு வழங்கல்.**

வினா 1453—திரு. கு. ரமணி: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் தாலுக்கா, அம்பலமூலா-வட்டக்கொல்லி சாலைப் பகுதிக்கு மின் இணைப்பு கொடுக்கப்படாமலிருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு மின் இணைப்புகள் கொடுக்க என்ன நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது ?

விடை—

(அ) மின் இணைப்பு கோரும் விண்ணப்பங்கள் ஏதும் நிலுவையில் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

7—

**கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி மூலம் வழங்கப்பெற்ற கடன் தொகை.**

வினா 1462—திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நலிவடைந்தோர் நலனுக்கான குறைந்த வட்டியில் கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியால் வழங்கப்பெற்ற மொத்த கடன் தொகை எவ்வளவு ? நபர்கள் எத்தனை பேர் ?

(ஆ) கடந்த நான்கு ஆண்டுகளிலும் மேற்படி பிரிவிற்கு கடன் வழங்க அரசு அனுமதித்த தொகை எவ்வளவு ?

விடை—

(அ) கடந்த நான்கு ஆண்டுகளில் 1981-82 முதல் 1984-85 வரை கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி நலிவடைந்தோர் நலனுக்காக குறைந்த வட்டியில் தொழிற் கடன்கள் வழங்கிய மொத்தக் கடன் ரூ. 5.14 இலட்சம். இதனால் பயனடைந்தோர் எண்ணிக்கை 323.

(ஆ) இக் கடன்கள் மத்திய வங்கியின் சொந்த நிதியில் இருந்து வழங்கப்படுவதால், அரசு அனுமதிப்பது பற்றிய கேள்விக்கு இடமில்லை.



8—

**செங்குறிச்சியில் சத்துணவு மையம்.**

வினா 1663—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு சத்துணவுத்துறை அமைச்சர் கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சானார்ப்பட்டி யூனியன் செங்குறிச்சி கிராம தேவேந்திரபுரம் ஆதி திராவிட மக்கள் சத்துணவு பெற தங்களது குழந்தைகளை செங்குறிச்சிக்கு அனுப்பும் நிலை இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அக் காலனியிலேயே ஒரு சத்துணவுக் கூடம் நிறுவ அரசு முன் வருமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) செங்குறிச்சி கிராமத்தில் 2+ முதல் 4+ வயது வரையுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை 30-க்கும் குறைவாக உள்ளதால் தனி மையம் அமைப்பதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை.

9—

**ஆவளிப்பட்டி—திண்டுக்கல் பேருந்துப் பணி.**

வினா 1664—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, சானார்ப்பட்டி ஒன்றியம், ஆவளிப்பட்டிக்கும் திண்டுக்கல்லுக்கும் இடையே ஓடிக் கொண்டிருக்கும் பி. ஆர். சி. பேருந்தினை பள்ளிக் குழந்தைகள் — பொதுமக்கள் வசதிக்கேற்ப காலை 8-30 மணிக்கு ஒரு முறையும் இரவு 8-30 மணிக்கு ஒரு முறையும் அவசியமாக இயக்கச் செய்யும் உத்தேசம் உண்டா ?

விடை—

ஆவளிப்பட்டி கிராமத்திற்கும் திண்டுக்கல்லுக்கும் இடையே கூடுதல் பேருந்து வசதி செய்யப்பட்டு, பள்ளிக் குழந்தைகள் மற்றும் பொதுமக்கள் வசதிக்கேற்ப, காலை மற்றும் மாலை நேரங்களில் நகரப் பேருந்து 26—9—1985 தேதி முதல் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டு வருகிறது.

10—

**மதுரை மாவட்டத்தில் சிறு விவசாயிகளுக்கு விதைகள் வழங்கல்.**

வினா 2013—திரு. இரா. முத்தையா : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் சிறு விவசாயிகளுக்கு நிலக்கடலை மற்றும் பாசிப் பயிறு முதலான விதைகள் விநியோகம் செய்வதில் என்னென்ன சலுகைகள் வழங்கப்படுகின்றன ?

(ஆ) சென்ற ஆண்டில் (1984-ல்) எத்தனை பேருக்கு இலவசமாக வழங்கப்பட்டது ? எத்தனை பேருக்கு மானிய விலையில் வழங்கப்பட்டது ?

(இ) முறைகேடுகளைத் தடுக்க என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன ?

விடை—

அவையின் முன்பு ஒரு விவர அறிக்கை* வைக்கப்பட்டுள்ளது.

11—

**வேலை நீக்கம் செய்யப்பட்ட திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக மண்டல தொழிற்பட்டறை தொழிலாளர்கள்.**

வினா 2035—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக மண்டல தொழிற்பட்டறையில் பணியாற்றிய தொழிலாளர்களை 1983-ம் ஆண்டில் பணி நீக்கம் செய்தது உண்மையா ?

---

* 189-190-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



(ஆ) ஆம் எனில், பணி நீக்கம் செய்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) பணி நீக்கத்திற்கான காரணம் என்ன ?

(ஈ) மீண்டும் அவர்களை வேலைக்குச் சேர்த்துக் கொள்ளும் உத்தேசம் உண்டா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 198 தற்காலிக நபர்கள் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

(இ) திருச்சி மண்டல தொழிற் பட்டறையில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திற்குத் தேவையான பேருந்து கூடு கட்டும் பணியுடன், கேரள மாநில சாலைப் போக்குவரத்துக் கழகம், அரசுத் துறை மற்றும் இதர போக்குவரத்துக் கழக நிறுவனங்களின் தேவைகளையும் பெற்று வந்தது. கடந்த 1983-ம் ஆண்டு புதிய பேருந்துகள் மாற்றுவதிலும், பேருந்துகளை அதிக எண்ணிக்கையில் விடுவதிலும் எடுக்கப்பட்ட முடிவினால் பேருந்து கூடுகட்டும் பணி கணிசமாக குறைந்தது. மேலும் கேரள மாநில சாலை போக்குவரத்துக் கழகத்தின் ஒப்பந்தமும் கிடைக்கப் பெறவில்லை. எனவே இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த நபர்கள் தேவைக்கு அதிகமாக இருந்தனர். ஆகவே தற்காலிக அடிப்படையில் வேலை செய்து வந்த நபர்கள் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

(ஈ) முதலில் 42 நபர்களுக்கு அவர்களது தகுதியின் அடிப்படையில் பயிற்சி நடத்துனராக பணி வழங்கப்பட்டது — தூத்துக்குடி மற்றும் கரூர் ஆகிய இடங்களில் புதிதாக தொழிற்பட்டறை ஆரம்பிக்கப்பட்டதால் அக்டோபர் 1985-ல் மேலும் 32 நபர்களுக்கு தொழில் நுட்பப் பிரிவில் பயிற்சியாளராக பணி அளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 124 நபர்களுக்கு அவ்வப்போது ஏற்படும் தொழில் நுட்ப காலியிடங்களுக்கு அவரவர் தகுதியின் அடிப்படையில் இக்கழகத்திலும் மற்றும் உள்ள இதர போக்குவரத்துக் கழகங்களிலும் வேலையளிப்பது பற்றி பரிசீலனையில் உள்ளது.

[1986 மார்ச் 25

12—

வீரமங்கலம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்கல்.

வினா 2221—திரு. பூ. மு. நரசிம்மன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

செங்கை மாவட்டம், பள்ளிப்பட்டு தொகுதியில் வீரமங்கலம் நடுநிலைப் பள்ளியை அரசு உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

1985-86 ஆம் கல்வியாண்டில் புதிய உயர்நிலைப் பள்ளிகள் துவங்க அனுமதிக்கப்பட்டுள்ளன. அப்பள்ளிகளில் இப்பள்ளியும் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டு அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

13—

மேலூரில் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல்.

வினா 2303—திரு. க. வெ. வீராணம்பலம் : மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் தொகுதி மேலூரில் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

விடை—

(அ) மதுரை மாவட்டம் மேலூர் தொகுதி மேலூரில், தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. மேலும் இங்கு சங்கம் அமைக்கப் போதுமான சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.



1986 மார்ச் 25]

14—

மேலூர் தொகுதியில் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

வினா 2305—திரு. க. வெ. வீரானம்பலம்: மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், மேலூர் தொகுதி, மேலூர் மற்றும் கொட்டாம்பட்டியில் குடிசை பகுதி மேம்பாட்டுத் திட்டம் அமுல் நடத்தப்பட உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

15—

திருவாதவூரில் புதிய ஆரம்பச் சுகாதார நிலையம்.

வினா 2327—திரு. க. வெ. வீரானம்பலம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் சட்டமன்றத் தொகுதி திருவாதவூரில் ஒரு புதிய ஆரம்பச் சுகாதார நிலையம் ஏற்படுத்த அரசிடம் செயற் குறிப்பு ஏதும் உள்ளதா

விடை—

இல்லை.

[1986 மார்ச் 25

16—

திருபுவனம்-திருவிசநல்லூர் இணைப்புப் பாலம்.

வினா 2355—திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தொகுதியில் திருபுவனம் திருவிசநல்லூரை இணைக்கின்ற வகையில் காவிரி வீரசோழன் ஆற்றில் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம், எனில் அது எப்போது செயற்படுத்தப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

17—

கோவை மாவட்டத்தில் தேங்கியுள்ள மோட்டார் வாகன விபத்து நஷ்டஈடு வழக்குகள்.

வினா 2369—திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் தேங்கியுள்ள மோட்டார் வாகன விபத்து நஷ்ட ஈடு வழக்குகள் எவ்வளவு ?

(ஆ) அவற்றை விரைவில் முடிக்க தனி டிரிபியூனல் கோவையில் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) கோவை மாவட்டத்தில் தேங்கியுள்ள இயக்கூர்த்திகள் விபத்து இழப்பீடு வழக்குகள் 1,097 ஆகும். அவை கீழ்க்கண்டபடி பல்வேறு முறை மன்றங்களில் நிலுவையிலுள்ளன.



1986 மார்ச் 25]

வரிசை எண்ணும் முறை மன்றத்தின் பெயரும்.

| வரிசை எண்ணும் முறை மன்றத்தின் பெயரும். (1) | நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| **மாவட்ட முறை மன்றங்கள்—** | |
| 1. முதலாவது கூடுதல் மாவட்ட நடுவர் முறை மன்றம், கோவை. | 54 |
| 2. இரண்டாவது கூடுதல் மாவட்ட நடுவர் முறை மன்றம், கோவை. | 73 |
| **சார் நிலை முறை மன்றங்கள்—** | |
| 3. முதன்மை சார் நிலை நடுவர் முறை மன்றம். கோவை. | |
| 4. முதலாவது கூடுதல் சார்நிலை நடுவர் முறை மன்றம் கோவை. | 114 |
| 5. இரண்டாவது கூடுதல் சார்நிலை நடுவர் முறை மன்றம், கோவை. | 116 |
| 6. மூன்றாவது கூடுதல் சார்நிலை நடுவர் முறை மன்றம், கோவை. | 55 |
| 7. சார்நிலை நடுவர் முறை மன்றம், உடுமலைப் பேட்டை. | 157 |
| 8. சார்நிலை நடுவர் முறை மன்றம், திருப்பூர் | 94 |
| மொத்தம் | 1,097 |

[1986 மார்ச் 25

(ஆ) கோவையில் இயக்கூர்த்திகள் வழக்குகளைக் கவனிப்பதற்கு தனி தீர்ப்பாயம் அமைப்பதற்காக செயற்குறிப்பு ஏதும் உயர் முறை மன்றத்தில் நிலுவையில் இல்லை. இயக்கூர்திகள் வழக்குகளைத் தீர்ப்பதற்கும் தனி தீர்பாயம் தேவையென்று கருதப்படின் தேவையான கருத்துருவை உயர் முறை மன்றம் அரசுக்கு அனுப்பி வைக்கும்.

18—

### கபிஸ்தலம் பொதுப் பணித்துறை பயணியர் விடுதி.

வினா 2443—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் கபிஸ்தலத்தில் அமைந்திருக்கும் பொதுப்பணித் துறை பயணியர் விடுதி பழுதடைந்து இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதை சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) கபிஸ்தலத்திலுள்ள பொதுப் பணித்துறையினர் ஆய்வாளர் மாளிகை பழுதுபட்ட நிலையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

19—

### மாத்தூர் மேற்கு ஸ்ரீஔஷத பரமேஸ்வரர் ஆலயத் திருப்பணி.

வினா 2460—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை தாலுக்கா மாத்தூர் மேற்கு ஸ்ரீஔஷத பரமேஸ்வர் ஆலயத் திருப்பணி வேலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்பொழுது வேலை துவக்கப் பெறும்?



1986 மார்ச் 25]

விடை—

(அ) ஆம்.

(ஆ) மதிப்பீடு ரூ. 75,000.

(இ) திருப்பணி வேலைகள் உடனடியாக ஆரம்பிக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

20—

### முதியோர் ஓய்வூதியம் கேட்டு வரப்பெற்ற விண்ணப்பங்கள்.

வினா 2493—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதியில் 1977 முதல் 1984 முடிய (ஆண்டுகளில்) முதியோர் ஓய்வூதியம், உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியம், விதவைகள் ஓய்வூதியம் கேட்டு வரப் பெற்ற விண்ணப்பங்கள் எத்தனை?

(ஆ) அவைகளில் எத்தனை அனுமதிக்கப்பட்டு எத்தனை வரப்பெற்ற மனுக்கள், அனுமதிக்கப்பட்டவை முதலியன நிலுவையில் உள்ளது?

விடை—

(அ) மற்றும் (ஆ): திருவில்லிப்புத்தூர் தொகுதியில் 1977 முதல் 1984 முடிய முதியோர் உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் வரப்பெற்ற மனுக்கள், அனுமதிக்கப்பட்டவை முதலியன கீழ்வருமாறு:—

| | வரப் பெற்ற மனுக்கள். | அனுமதிக்கப் பட்டவை. | தள்ளுபடி செய்யப் பட்டவை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) .. | 3,089 | 966 | 2,123 |
| ஆதாரவற்ற உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை .. | 53 | 112 | 311 |

| (1) | வரப் பெற்ற மனுக்கள் (2) | அனுமதிக்கப் பட்டவை. (3) | தள்ளுபடி செய்யப் பட்டவை. (4) |
| --- | --- | --- | --- |
| ஆதரவற்ற விதவைகள் உதவித் தொகை .. | 1,509 | 389 | 1,120 |
| ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர்கள் உதவித் தொகை .. | 721 | 394 | 327 |
| மொத்தம் .. | 5,772 | 1,861 | 3,911 |

21—

## கரிம்பேடு கிராமத்தில் புதிய ஏரி அமைத்தல்

வினா 2498—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், கரிம்பேடு கிராமத்தில் புதிய ஏரி அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மதிப்பீடு எவ்வளவு ?

(இ) வேலை எப்பொழுது துவங்கி முடியும்.

விடை—

(அ) மற்றும் (ஆ): ரூ. 10.66 இலட்சம் மதிப்புள்ள இத் திட்டம் தலைமைப் பொறியாளரின் ஆய்வில் உள்ளது.

(இ) மதிப்பீடு ஆய்வு நிலையில் உள்ளதால் இக்கேள்விக்கு இடமில்லை.



22—

## தமிழ்நாட்டுக் காடுகளில் யானைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

வினா 2542—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள காடுகளில் யானை சுடுவதைத் தடுக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கை யாது ?

(ஆ) காடுகளில் யானையின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கை யாது ?

விடை—

(அ) தமிழ்நாட்டில் உள்ள காடுகளில் யானைகள் சுடப் படுவதைத் தடுக்க உள்ள பாதுகாப்புப் பணியாளர்களை அதிகரித்தும், விசேஷ பாதுகாப்புக் குழுக்கள் அமைத்தும் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாதுகாப்புக் குழுவும் ஒரு உதவி வனப் பாதுகாவலர் தலைமையில் தேவை யான ஆயுதங்கள் வழங்கப்பெற்று இயங்கி வருகின்றது. வேட் டைக்காரர்கள் பற்றி தகவல் தருவோருக்கு வெகுமதி அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சந்தனக் கட்டை திருட்டு மற்றும் வனவிலங்குக் குற்றங்களைத் தடுக்கவும் கண்டு பிடிக்கும் பொருட்டும், 24 ஜீப் வண்டிகளையும், 30 டெலிபோன் களையும், 50 துப்பாக்கிகளையும் பாதுகாப்புக் குழுக்களுக்கு வழங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. யானை வேட்டைக்கு அதிக வாய்ப்பு உள்ளதாகக் கருதப்படும் இடங்களில் தனி காவ லர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் ரோந்துச் சுற்றி வனச் சிப்பந்தி களுக்கு விலங்குகளைப் பாதுகாக்க உதவி புரிகின்றனர்.

(ஆ) யானைகளின் எண்ணிக்கை போதுமான அளவு உள்ளது. எனவே அவைகளுக்கு முறைப் பாதுகாப்பு அளிப்பது தவிர அவைகளைப் பெருக்கவென்று தனி நடவடிக்கையேதும் எடுக்கப்படவில்லை.

[1986 மார்ச் 25

23—

எழுதுபொருள் சேமிப்புக் கிடங்கில் உள்ள இருப்புகள்.

வினா 2600—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எழுதுபொருள் சேமிப்புக் கிடங்கில் ஆண்டுதோறும் இருப்புக்கள் சரிபார்க்கப்பட்டு வருகின்றதா ?

(ஆ) ஏதேனும் குறைகள் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றதா ?

விடை—

(அ) எழுதுபொருள் சேமிப்புக் கிடங்கில் உதவி இயக்குநர் (சரக்கு இருப்பு சரிபார்த்தல்) எழுதுபொருள் அச்சுத்துறை இயக்ககம் அவர்களால் ஆண்டுதோறும் இருப்புகள் சரிபார்க்கப்படுகின்றன.

(ஆ) 1983–84 ஆம் ஆண்டில் 47 ரீம்கள் ஸ்வீடன் காகிதத் தாள்கள் குறைவாக இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அதற்கான தொகையான ரூ. 5,664.44-ஐ சம்மந்தப்பட்டவரிடமிருந்து பிடித்தம் செய்து அரசுக்குச் செலுத்தப்பட்டது. 1984-85 ஆம் ஆண்டு இருப்பு சரிபார்ப்பில் குறைகள் ஏதும் சுட்டிக் காட்டப்படவில்லை.

24—

தாம்பரம் மருத்துவமனைக்கென வாங்கப்பட்ட மருந்துகளின் மதிப்பு

வினா 2737—திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தாம்பரம் மருத்துவ மனைக்கென 1983-84-ல் வாங்கப்பட்ட மருந்துகளின் மதிப்பு எவ்வளவு ?

விடை—

ரூ. 6,34,600.



1986 மார்ச் 25]

25—

கட்டண கழிப்பறைகளில் கட்டணம்.

வினா 2754—திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கட்டண கழிப்பறைகளில் சிறுநீர் கழிக்க கட்டணம் வாங்கக் கூடாது என்று அறிவிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

விடை—

இல்லை. கட்டண கழிப்பிடங்களில் சிறுநீர் கழிக்க கட்டணம் வசூலிப்பது, கழிப்பிடங்களை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்துக்கொள்ள உதவுகிறது.

26—

நிலக்கோட்டையில் புதிய கலைக் கல்லூரி.

வினா 2778—திரு. அ. பாலுசாமி : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டையில் கலைக் கல்லூரி ஆரம்பிக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

27—

ஓமலூரில் சார்பதிவகம் தொடங்கும் திட்டம்.

வினா 2783—திரு. கே. அன்பழகன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் ஓமலூரில் சார்பதிவகம் ( Sub-Registrar Office ) தொடங்க செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

சேலம் பதிவு மாவட்டம், ஓமலூரில் ஏற்கெனவே ஒரு சார் பதிவகம் செயல்பட்டு வருகிறது

[1986 மார்ச் 25

28—

### சத்துணவு கூடங்களில் பாதுகாப்புப் பெட்டிகள்.

வினா 2865—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவு கூடங்களில் கணக்குகளை வைத்துக் கொள்ள பாதுகாப்பான பெட்டிகள் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) காதி மற்றும் கிராமக் கைத்தொழில் வாரியத்துடன் தொடர்பு கொள்ளப்பட்டு தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

29—

### போக்குவரத்துக் கழகங்கள் கட்டும் பேருந்துக் கூண்டுகள்.

வினா 2891—திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்திலுள்ள அண்ணா போககுவரத்துக் கழகம் கட்டும் பஸ் கூண்டிக்கு ( Body ) என்ன செலவாகிறது?

(ஆ) இப்பிரிவின் உற்பத்தித் திறன் என்ன?

(இ) பெரியார் போக்குவரத்துக் கழகம் மாதம் ஒன்றுக்கு எத்தனை பஸ் கூண்டு கட்டுகிறது?

(ஈ) அதற்கு என்ன செலவாகிறது?

விடை—

(அ) அண்ணா போக்குவரத்துக் கழகத்தில் ஒரு பேருந்திற்கு கூண்டு கட்ட உதிரி பொருட்கள் மற்றும் கூலி உட்பட ஆகும் செலவு ரூ. 80,936.10.



1986 மார்ச் 25]

(ஆ) மாதம் ஒன்றுக்கு 16 கூண்டுகள்.

(இ) தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தில் மாதம் ஒன்றுக்கு 14 கூண்டுகள் கட்டப்படுகின்றன.

(ஈ) ஒரு பேருந்து கூண்டு கட்ட உதிரி பொருட்கள் மற்றும் கூலி உட்பட ரூ. 74,976. 14 செலவாகிறது.

30—

### மருதம்பள்ளம்—வாணகிரி—பூம்புகார் சாலை.

வினா 2926—திரு. என். விஜயபாலன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதியில் மருதம்பள்ளம்—வாணகிரி வழியாக பூம்புகாருக்கு தார் சாலை வசதி செய்து தர அரசிடம் செயற்குறிப்பு உண்டா?

விடை—

இல்லை. அரசின் குறுகிய நிதி ஒதுக்கீட்டின் காரணமாக இதுவரை இதை எடுத்துக்கொள்ள இயலவில்லை. இருப்பினும் இனிவரும் ஆண்டுகளில் அரசின் நிதி வளம் இடம் தரும்போது வேலையின் முக்கியத்துவத்திற்கேற்ப மேற்படி பணியினை எடுத்துச் செய்வது குறித்து பரிசீலனை செய்யப்படும்.

31—

### தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு மருந்து வாங்க ஒதுக்கப்பட்ட தொகை.

வினா 2986—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு 1982-83, 1983-84, 1984-85 ஆம் ஆண்டுகளில் மருந்து வாங்க ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) 1984-85 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகையில் ஒரு பகுதி திரும்ப அனுப்பப்பட்டதா?

[1986 மார்ச் 25

விடை—

(அ) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு மருந்து வாங்க ஒதுக்கப்பட்ட தொகை பின்வருமாறு :—

1982-83 ஆம் ஆண்டு ரூ. 19 லட்சம்.

1983-84 ஆம் ஆண்டு ரூ. 19 லட்சம்.

1984-85 ஆம் ஆண்டு ரூ. 23 லட்சம்.

(ஆ) இல்லை.

32—

ஏற்றுமதிக்கு அனுமதிக்கப்பட்ட செம்மரங்கள்.

வினா 3033—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்ற ஆண்டில் வெட்டப்பட்டச் செம்மரங்கள் எவ்வளவு ?

(ஆ) ஏற்றுமதிக்கு அனுமதிக்கப்பட்டவை எவ்வளவு ?

விடை—

(அ) சென்ற ஆண்டில் செம்மரங்கள் தமிழக வனப் பகுதியில் வெட்டப்படவில்லை.

(ஆ) மைய அரசின் ஏற்றுமதி துறைதான் மொத்தமாக ஏற்றுமதிக்கு அனுமதிக்கப்பட்டவை குறித்த விவரம் தர இயலும். 1984–85 ஆம் வருடத்தில் ஏற்றுமதி செய்வதற்கு 235 டன்கள் அளவுள்ள செம்மரப் பொருட்களுக்கு வனத் துறைத் தலைவரினால் மூலச் சான்று வழங்கப்பட்டுள்ளது. (தனியார் நிலங்களில் கிடைத்த செம்மரங்கள் மூலம் செய்யப்பட்டது).



1986 மார்ச் 25]

33—

திருவில்லிப்புத்தூர் தாலுக்காவில் முதியோர் உதவித் தொகை கோரி வரப்பெற்ற விண்ணப்பங்கள்.

வினா 3083—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தாலுக்கா அலுவலகத்தில் முதியோர் உதவித் தொகை கோரி பெறப்பட்டுள்ள விண்ணப்பங்கள் அதிகமாக நிலுவையிலுள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : 31-7-1985 நிலவரப்படி இரண்டு மாதங்களுக்கு மேல் 12 மனுக்களும், ஒரு மாதத்திற்குள் 29 மனுக்களும் வருவாய் ஆய்வாளர்களின் விசாரணைக்காக நிலுவையில் உள்ளன.

34—

கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகளுக்கு விதை, உரம், இயந்திரம் வழங்கல்.

வினா 3130—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு வங்கியிலிருந்து விவசாயிகளுக்கு கடனாக பணமாகக் கொடுக்காமல் விதை, உரம், இயந்திரம் போன்றவை கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிருந்து எழவில்லை. [illegible]

[1986 மார்ச் 25

35—

**தமிழகத்தில் போக்குவரத்துக் கழகங்கள் மூலம் உணவு விடுதிகள் நடத்தும் செயற்குறிப்பு.**

வினா 3347—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள முக்கியமான பேருந்து நிலையங்களில் போக்குவரத்துக் கழகங்கள் மூலம் உணவு விடுதிகள் நடத்தும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

36—

**உள்ளார்—கரிவலம்வந்தநல்லூர் சாலை**

வினா 3510—திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உள்ளார்—கரிவலம்வந்தநல்லூர் வரையுள்ள சாலையை சீர் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் வேலை எப்போது தொடங்கும்?

விடை—

(அ) மற்றும் (ஆ): வினாவில் குறிப்பிடப்படும் சாலையானது பின்வரும் இரண்டு சாலைகளை உள்ளடக்கியதாகும்:

1. கரிவலம் வந்தநல்லூர்—ராயகிரி சாலை.

2. உள்ளார்—ராயகிரி சாலை.

இவ்விரு சாலைகளிலும் சில பகுதிகள் நல்ல நிலைமையில் உள்ளன. சில பகுதிகள் மோசமாக உள்ளன. தற்போது போக்குவரத்து வசதிக்காக குண்டு குழிகள் சரிபார்க்கப்பட்டு வருகின்றன. நிதி வசதிக்கேற்ப இச்சாலை பகுதிகள் மேம்பாடு செய்யப்பட்டு நல்ல நிலைமைக்கு கொண்டு வரப்படும்.



1986 மார்ச் 25]

37—

**மதுரை மேற்கு தொகுதி குடிசைப் பகுதிகளில் மாடி வீடுகள் கட்டித் தரும் திட்டம்.**

வினா 3524—திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மேற்குத் தொகுதியில் கீழ்க்கண்ட குடிசைப் பகுதிகளில் குடிசை மாற்று வாரியத் திட்டத்தின்கீழ் மாடி வீடுகள் கட்டித் தரும் திட்டம் உண்டா?

1. வைகை வடகரைப் பகுதி.
2. கரும்பாலைப் பகுதி.
3. பந்தல் குடிப்பகுதி.
5. கோரிப்பாளையம் (இஸ்லாமியா தோப்புப் பகுதி).
5. தத்தனேரிப் பகுதி.
6. கருப்பையாத்தேவர் தோப்புப் பகுதி.
7. புட்டுத் தோப்புப் பகுதி.
8. பீபி குளம் அன்னா நகர் பகுதி.
9. மதிச்சியம் புளியந்தோப்பு.

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அத்திட்டம் நிறைவேற்றப்படும்?

விடை—

(ஆ) மற்றும் (ஆ): இல்லை.

38—

**தேனாடு கம்பை—சின்னகுன்னூர் பகுதியில் ஆரம்பச் சுகாதார நிலையம்.**

வினா 3566—திரு. கே. உச்சி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், தேனாடுகம்பை—சின்னகுன்னூர் இணைப்புப் பகுதியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

39—

மசினகுடியில் ஊரகத் தொழிற் கூட்டுறவுச் சங்கம் மூலம் செங்கல் சூளை அமைத்தல்.

வினா 3599—திரு. கே. உச்சி: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் மசினகுடி ஊராட்சியில், ஊரகத் தொழிற் துறை கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக செங்கல் சூளை அமைக்கும் உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது செயற்படுத்தப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ): 1983 ஆம் ஆண்டு மசினகுடியில் தொழிற் கூட்டுறவுச் சங்கம் மூலமாக செங்கல் சூளை அமைக்கும் திட்டம் ஒன்று இருந்தது. மசினகுடியிலுள்ள 42.47 ஏக்கர் நிலப் பரப்பில் இச்சங்கத்திற்காக 8 முதல் 10 ஏக்கர் வரை நில ஒதுக்கீடு செய்ய நீலகிரி மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் உறுதி யளித்திருந்தார்கள். மசினகுடியிலுள்ள களிமண் விருத்தாசலம் மட்கலப் பொருள் தொழில் நுணுக்க நிலையத்தில் பரிசோதனை செய்ததில் அந்த மண்ணில் மிருந்த அளவு சுண்ணாம்பும் சிறிதளவு மக்னீசியமும் இருப்பதாகத் தெரிய வந்தது. மொத்தத்தில் மசினகுடியிலுள்ள களிமண் செங்கல் தயாரிக்க தகுதியுள்ளதல்ல என்று முடிவெடுக்கப்பட்டதால் செங்கல் சூளை தொழிற் கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கான திட்டம் கைவிடப்பட்டது.



40—

பழையனூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தல்.

வினா 3689—திரு. க. பாரமலை: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மானாமதுரைத் தொகுதி பழையனூரில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக 1985-86 ஆம் ஆண்டு முதல் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

விடை—

1985–86 ஆம் கல்வியாண்டில் புதிய உயர்நிலைப் பள்ளிகள் துவக்க அனுமதிக்கப்பட்ட பொழுது இப்பள்ளியும் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டு அரசால் ஆணைகள் வெளியிடப் பட்டுள்ளன.

41—

இலவச மின்சாரம் பெறும் சிறு விவசாயிகள் எண்ணிக்கை.

வினா 3706—திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977-க்குப் பிறகு 1984 செப்டம்பர் வரை தமிழகத்தில் சிறு விவசாயிகளுக்கு யூனிட் 12 காசுகளுக்கு மின்சாரம் பெற்றவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) 1984 செப்டம்பர் 15-க்குப் பிறகு இலவச மின்சாரம் பெறும் சிறு விவசாயிகள் எத்தனை பேர் ?

விடை—

(அ) 1977-லிருந்து 1984 செப்டம்பர் 15 ஆம் தேதி வரை, ஒரு யூனிட்டுக்கு 12 காசுகள் வீதம் மின்சாரம் பெற்ற சிறு விவசாயிகள் 2,38,339 பேர்கள்.

(ஆ) 1984 செப்டம்பர் 15-க்குப் பிறகு இலவச மின்சாரம் பெறும் சிறு விவசாயிகள் 99,850 பேர்கள்.

[1986 மார்ச் 25

42—

### தரங்கம்பாடியில் இரண்டாம் நிலை நடுவர் நீதிமன்றம்.

வினா 3323-பி—திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தரங்கம்பாடியில் இரண்டாம் நிலை நடுவர் நீதிமன்றம் எப்போது அமைக்கப்படும்?

விடை—

தரங்கம்பாடியில் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் அமைப்பதற்கான செயற்குறிப்பு உயர்நீதி மன்றத்திடமிருந்தோ, தலைமை குற்றவியல் நீதிபதியிடமிருந்தோ, வழக்குரைஞர் சங்கத்திடமிருந்தோ, பொது மக்களிடமிருந்தோ வரவில்லை. இருப்பினும், சீர்காழியிலுள்ள இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிபதி, தனது முகாம் நீதிமன்றத்தை வாரத்தில் ஒரு நாள் தரங்கம்பாடியில் நடத்துகிறார்.

43—

### கிரமின் துறை—நீரோடிச் சாலை.

வினா 3836—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் கிரமின் துறை—நீரோடி சாலையை பழுது பார்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

வினாவில் குறிப்பிடப்படும் சாலையின் தற்போதைய நிலைமையை கருத்தில் கொண்டும், விலை விகிதத்தை கணக்கில் கொண்டும் இச்சாலையை பழுதுபார்த்து சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது. இப்பணிக்கு குறைந்த பட்சம் ரூ. 7.00 இலட்சம் தேவைப்படுவதால் பராமரிப்பு நிதி ஒதுக்கத்தில் இருந்து இத்தொகை முழுவதையும் ஒரு சேர செலவிட இயலாது, எனவே இப்பணியை நிதி வசதிக்கேற்ப சிறுகச் சிறுக எடுத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.



1986 மார்ச் 25]

44—

### அரசு உதவி பெற்று நடைபெறும் தனியார் பள்ளிகள்.

வினா 4059—திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு உதவி பெற்று நடைபெறும் தனியார் பள்ளிகள் எத்தனை?

விடை—

30—9—1984 தேதியில் உள்ளபடி, அரசு உதவி பெற்று நடைபெறும் தனியார் பள்ளிகளின் எண்ணிக்கை பின்வருமாறு :—

| | பள்ளிகளின் வகைகள். | | அரசு உதவி பெற்று நடைபெறும் பள்ளிகள் மொதத எண்ணிக்கை. | சிறுபான்மையினரால் நடத்தப்படும் பள்ளிகளின் எண்ணிக்கை. | சிறுபான்மையில்லாதவரால் நடத்தப்படும் பள்ளிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|
| | (1) | | (2) | (3) | (4) |
| 1. | மேல்நிலைப்பள்ளிகள் | .. | 582 | 278 | 304 |
| 2 | உயர்நிலைப்பள்ளிகள் | .. | 465 | 208 | 257 |
| 3. | நடுநிலைப்பள்ளிகள் | .. | 1,959 | 899 | 1,060 |
| 4. | ஆரம்பப்பள்ளிகள் | .. | 5,016 | 2,296 | 2,720 |
| | மொத்தம் | .. | 8,022 | 3,681 | 4,341 |

45—

### நாச்சியார் கோவிலில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி துவங்கும் திட்டம்.

வினா 4222—திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் ஒன்றியம் நாச்சியார் கோவிலில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி துவங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1986 மார்ச் 25

விடை—

1985-86 ஆம் கல்வியாண்டில் நாச்சியார் கோவிலில் ஒரு அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி துவங்க ஆணைகள் வெளியிடப் பட்டன.

46—

### புஞ்சைப் புளியம்பட்டி பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்கு சொந்தக் கட்டிடம்.

வினா 4312—திரு. வே. கு. சின்னசாமி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலந் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், புஞ்சைப்புளியம்பட்டியில் இயங்கி வரும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்கு சொந்தமாகக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(இ) எப்பொழுது வேலை துவங்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

47—

### வாழப்பாடி—சிங்கிலியன் கோம்பை வரை அண்ணா போக்குவரத்துக் கழகப் பேருந்து விடும் திட்டம்

வினா 4713—திரு. சீ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாழப்பாடி முதல் சிங்கிலியன் கோம்பை வரை புதியதாக அண்ணா போக்குவரத்துக் கழகப் பேருந்து விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படத் துவங்கும்?



1986 மார்ச் 25]

விடை—

(அ) மற்றும் (ஆ) வாழப்பாடியிலிருந்து சிங்கிலியன் கோம்பைக்கு சிங்கபுரம் மன்னார்பாளையம், விலாரி பாளையம் வழியாக ஒரு நகரப் பேருந்தை அண்ணா போக்குவரத்துக் கழகம் 9—4—1985 முதல் இயக்கி வருகிறது.

48—

### துறையூர்—சேலம் வரை அண்ணா, தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகப் பேருந்து விடும் திட்டம்.

வினா 4714—திரு. சீ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் முதல் சேலம் வரை புதியதாக அண்ணா, தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகங்களின் மூலம் தம்மம்பட்டி, உலிபுரம், நாரைகிணறு வழியாக பேருந்து விடும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விரைவாக செயலாக்க அரசு பரிசீலனை செய்யுமா?

விடை—

(அ) மற்றும் (ஆ): துறையூர் முதல் சேலம் வரையிலான (வழி) தம்மம்பட்டி, உலிபுரம், நாரைகிணறு வழித்தடத்தில் போதிய போக்குவரத்து வசதி உள்ளது. இவ்வழித் தடத்தில் புதியதாக ஒரு பேருந்து விட தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது. மேற்கண்ட வழித்தடத்தில் அண்ணா போக்குவரத்துக் கழகம் மேலும் பேருந்து விடுவது குறித்து தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்துடன் ஆலோசனை நடத்திய பின்னர் நடவடிக்கை எடுக்கும்.

49—

நேசமணி போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி.

வினா 4751—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நேசமணி போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியும் தொழிலாளர்களில் 1—5—1980-க்கு பிறகு நியமனம் செய்தவர்களுக்கு மருத்துவ வசதி அளிக்காமல் இருப்பது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு மருத்துவ வசதி அளிக்க நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) 1—5—1980-க்குப் பிறகு நியமனம் செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கும் நேசமணி போக்குவரத்துக் கழகத்தில் மருத்துவ வசதி அளிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

50—

கொல்லிமலையில் தொழிலாளர் தங்கும் விடுதி கட்டுதல்.

வினா 5235—திரு. சீ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் கொல்லிமலையில் தொழிலாளர் தங்கும் விடுதி கட்ட அரசு பரிசீலனை செய்யுமா?

விடை—

சேலம் மாவட்டம் கொல்லிமலையில் தொழிலாளர்களுக்காக தங்கும் விடுதி கட்டும் செயற்குறிப்பு தொழிலாளர் நல வாரியத்தின் பரிசீலனையில் இல்லை.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]



II. கவன ஈர்ப்பு.

கோவை மாவட்டத்திலுள்ள வார்ப்பட பட்டறைகளுக்குத் தேனிரும்பு வழங்குதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கு. சுப்பராயன், கு. ரமணி, மா. சின்னராசு ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டத்திலுள்ள சிறு பவுண்டரிகளுக்குத் தேவையான தேனிரும்பில் 4-ல் ஒரு பங்கு மட்டுமே சப்ளை செய்யப்படுவதால், 150 பவுண்டரிகள் மூடப்படும் நிலையிலுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் ப. கோ. ஜகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

சிறு தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் மூலப் பொருட்களை சிட்கோ நிறுவனம் வழங்கிக் கொண்டிருக்கிறது. குறிப்பாக எஃகு, நிலக்கரி மற்றும் கல்கரி, 'சிட்கோ' நிறுவனத்தின் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்தில் வார்ப்பட பட்டறைகளுக்குத் தேவைப்படும் தேனிரும்பு அடங்கவில்லை. இந்தத் தேனிரும்பு செயில் (SAIL) நிறுவனம் தான் வழங்கி வருகிறது.

தேனிரும்பு வழங்குவதில் செயில் (SAIL) நிறுவனம் ஒரு முறையை பின்பற்றி வருகிறது. அது என்னவென்றால் எந்தத் தொழிற்சாலையும் கடந்த ஒன்பது ஆண்டுகளில் எந்த ஆண்டில் கூடுதலாக தேனிரும்பை எடுத்துக் கொண்டிருக்கிறதோ, அந்த அடிப்படையில் தேனிரும்பு வழங்கப்படும். அதற்காக, தேனிரும்பு

தேவைப்படுகின்ற தொழிற்சாலைகள் தங்களுடைய தேவைகளை அதிகப்படுத்துமேயானால், கடந்த ஆண்டுகளில் எந்த அளவுக்கு தேனிரும்பு எடுத்திருக்கிறார்கள் என்பதை கல்கத்தாவிலுள்ள இரும்பு மற்றும் உருக்கு கட்டுப்பாட்டு அலுவலர் அவர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும். அந்த அடிப்படையில் 1—4—1985-க்கு முன்பாகவே செயல்பட்டு வரும் வார்ப்பட பட்டறைகளுக்கு தேவைப்படும் தேனிரும்பு நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. 1—4—1985 அன்று அல்லது அதற்குப் பிறகு, சில வார்ப்பட பட்டறைகள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்றும் சில பழைய பட்டறைகள் விரிவாக்கப்பட்டிருக்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் புதிய வார்ப்பட பட்டறைகளுக்குத் தேவைப்படும் தேனிரும்பின் அளவு நிர்ணயிக்கப்பட முடியவில்லை. எனவே, அவைகள் தங்கள் தேவைகளுக்கு கல்கத்தாவில் இருக்கும் இரும்பு மற்றும் உருக்கு கட்டுப்பாடு அலுவலருக்கு சமர்ப்பித்திருப்பதாக தெரியவில்லை.

போதுமான அளவுக்குத் தேனிரும்பு கிடைக்கவில்லை என்று கோயம்புத்தூரில் இருக்கும் ஏராளமான வார்ப்பட பட்டறைகள் இந்த அரசுக்குத் தெரிவித்து இந்தப் பிரச்சினையை மத்திய அரசைச் சேர்ந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த விண்ணப்பம் அரசுக்கு 1985 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் வந்துள்ளது. அதன்படி, செப்டம்பர் திங்களில் 'செயில்' நிறுவனத்தின் தலைவர் அவர்களுக்கு அரசு ஒரு கடிதம் அனுப்பியுள்ளது. இந்தக் கடிதத்தில் உடனடியாக கோயம்புத்தூர் "இருப்பு-முற்றத்திற்கு" (ஸ்டாக் யார்டு) குறைந்தளவு 10,000 டன் தேனிரும்பு அனுப்ப வேண்டும் என்றும் அதன் பிறகு, மாதம் ஒன்றுக்கு குறைந்தளவு 8,000 டன் அனுப்ப வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. இதற்கு, அக்டோபர் திங்களில் "செயில்" (SAIL) நிறுவனத்திடமிருந்து ஒரு பதில் வந்திருக்கிறது. இந்த பதிலில் கோயம்புத்தூருக்கு அருகிலுள்ள வார்ப்பட பட்டறைகளுக்குத் தேவைப்படும் தேனிரும்பு அளவு 5,000 மெட்ரிக் டன்தான் என்று கூறியுள்ளார்கள். 1982-83, 1983-84-ம், வருடங்களில் தேனிரும்பு ஒதுக்கீடு சுலபமாக இருந்தபோது, கோயம்புத்தூரிலுள்ள வார்ப்பட பட்டறைகளின் தேவை ஒட்டுமொத்தமாக மாதம் ஒன்றுக்கு 3,700 மெட்ரிக் டன்



அளவுக்கு மிறவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 1984-85 ஆம் ஆண்டில்தான் ஒரு மாதத்தில் தேனிரும்புத் தேவை 5,200 டன் அளவுக்குப் போயிருப்பதாக கூறப்பட்டுள்ளது.

1985 ஆம் வருடம் ஏப்ரல் திங்களிலிருந்து ஆகஸ்ட் திங்கள் வரை தேனிரும்பு வரவு, வார்ப்பட பட்டறைகளுக்கான தேவை கீழ்க்கண்டவாறு இருந்ததாக 'செயில்' நிறுவனம் தெரிவித்துள்ளது:

| மாதம். | | வரவு. | பட்டறைகள் எடுத்த அளவு (மெட்ரிக் டன்) |
|---|---|---|---|
| ஏப்ரல் | 1985 | 5649 | 2865 |
| மே | 1985 | 6832 | 5652 |
| ஜூன் | 1985 | 4982 | 6710 |
| ஜூலை | 1985 | 3639 | 5507 |
| ஆகஸ்ட் | 1985 | 3516 | 3359 |
| மொத்தம் | | 24618 | 24093 |

டிசம்பர் திங்களில் கோயம்புத்தூர் இருப்பு முற்றத்தில் (ஸ்டாக் யார்டு) 9,000 டன் தேனிரும்பு இருந்ததாகவும் அதில் வார்ப்பட பட்டறைகள் 6,000 டன் தான் எடுத்துக் கொண்டதாகவும் கூறப்பட்டுள்ளது. மேலே கூறப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில் ஒரு மாதத்திற்கு தேவைப்படும் அளவு 8,000 டன்கள் என்றும் சொல்வது சரியல்லவென்றும் 'செயில்' நிறுவனம் தெரிவித்திருக்கிறது.

சென்னைக்கு அருகிலுள்ள வார்ப்பட பட்டறைகளுக்குத் தேவைப்படும் தேனிரும்பு அளவு 1,000 டன்களாக மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த அளவுக்கு 'செயில்' நிறுவனம் தேனிரும்பு கையிருப்பில் எப்பொழுதும் வைத்திருக்கிறது. 1985 ஆம் வருடம் அக்டோபர் திங்களில் 'செயில்' நிறுவனம் சென்னைக்கு 1,600 டன்கள் தேனிரும்பு கொண்டு வந்ததாகவும், அந்தத் தேனிரும்பு தேவைப்படும் வார்ப்பட பட்டறைகளுக்கு அதனை ஒதுக்கீடு செய்துள்ளதாகவும், ஒதுக்கீடு செய்திருந்தாலும் 50-க்கும் மேற்பட்ட வார்ப்பட பட்டறைகள் அந்தத் தேனிரும்பை எடுத்துக் கொள்ளவில்லை என்றும் 'செயில்' நிறுவனம் கூறியுள்ளது.

தேனிரும்பு ஒதுக்கீடு சம்பந்தமாக அரசுக்குத் தகவல் வந்தவுடன் இந்த அரசு 'செயில்' நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் தேனிரும்பு கிடைக்க வேண்டும் என்று ஆர்வம் காட்டியுள்ளது. எனவே, மதிப்பீடு செய்திருக்கும் அளவுக்கு வார்ப்பட பட்டறைகளுக்கு 'செயில்' நிறுவனம் மூலமாக தேனிரும்பு கிடைக்கிறது என்று தெரிய வருகிறது. மதிப்பீட்டுக்கும் மேலாக தேனிரும்பு தேவைப்படுமேயானாலும், புதிதாக உருவாக்கப்பட்ட வார்பபட பட்டறைகளுக்கு ஒதுக்கீடு செய்வதற்கும் அந்தந்த தொழிற் சாலைகள் கல்கத்தாவில் இருக்கும் "இரும்பு மற்றும் உருக்கு கட்டுப்பாட்டு அலுவலர்" அவர்களுக்கு தம்முடைய தேவை களைத் தெரிவித்துக்கொள்ள வேண்டும். இந்தத் தேவைகளைத் தெரிவிக்காததனால், அந்தத் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய அளவுக்குத் தேனிரும்பு கிடைக்காமல் இருந்திருக்கலாம். சமீபத்தில் கோயம்புத்தூர் சில வார்ப்பட பட்டறைகள் கல்கத்தாவில் இருக்கும் இரும்பு மற்றும் உருக்குக் கட்டுப்பாட்டு அலுவலர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டதாகவும் ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் எந்த அளவுக்கு தேனிரும்பு தேவைப்படும் என்று மதிப்பீடு பரிசீலனை செய்யப்பட்டுள்ள தாகவும் அந்த முழு பரிசீலனையை எதிர்நோக்கி கல்கத்தாவி லுள்ள "இரும்பு மற்றும் உருக்குக் கட்டுப்பாட்டு அலுவலர்" அவர்கள் இந்த வார்ப்பட பட்டறைகளுக்கு மாதமொன்றுக்கு 5 மெட்ரிக் டன் அளவுக்கு தேனிரும்பு ஒதுக்கீடு செய்யலாமென்று 'செயில்' (SAIL)-க்கு பரிந்துரை செய்துள்ளதாக தெரிய வருகிறது. இந்தப் பரிந்துரையின் அடிப்படையில் கோயம்புத் தூர் சிறு வார்ப்பட பட்டறைகளின் இயக்ககம் தமது 14—3—1986 ஆம் தேதியிட்ட கடிதத்தில் கல்கத்தாவில் இருக்கும் "இரும்பு மற்றும் உருக்குக் கட்டுப்பாட்டு அலுவலர்" அவர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளதாக தெரிய வருகிறது. இந்தச் சூழ்நிலையில் தற்போது இருக்கின்ற பிரச்சினை ஓரளவுக்கு சமாளிக்கப் பட்டிருக்கிறது என்று அறியலாம். விரிவாக்கப்பட்ட வார்ப்பட பட்டறைகளுக்கும், புதிதாக உருவாக்கப்பட்ட வார்ப்பட பட்டறைகளுக்கும் தேவைப்படும் தேனிரும்பு மதிப்பீடு செய்த பிறகு அந்தத் தேவைகளுக்கு ஏற்ப 'செயில்' நிறுவனம் கூடுதலாக தேனிரும்பு கோயம்புத்தூர் இருப்பு முற்றத்திற்கு



(ஸ்டாக் யார்டு) அனுப்பி வைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. எனவே, இந்தப் பிரச்சினையில் அரசு கவனம் செலுத்தி தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொண்டுள்ளது.

**திரு. கு. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, எஸ்.ஏ.ஐ.எல். நிறுவனம் கோவை மாவட்டத்தின் மொத்த தேவையைப் பற்றி மதிப்பிட்டுள்ள மதிப்பீடு உண்மையான தேவைக்கு ¼ பங்குதான் என்று சிறு பவுண்டரி உரிமையாளர்கள் குறிப்பிட்டிருப்பதை அரசு அறியுமா? அதேபோல தேனிரும்பு வழங்குவதில் எஸ்.ஏ.ஐ.எல். நிறுவனம் விரிவுபடுத்தப்படும் சிறு சிறு பவுண்டரிகளை கணக்கில் எடுத்துக் கொள்ளாததால் நடைமுறைச் சிக்கல்களும் பற்றாக்குறைகளும் ஏற்பட்டு விட்டதை அரசு அறியுமா? அந்தச் சிக்கல்களை அகற்ற எதிர் காலத்தில் போதுமான அளவுக்குத் தேனிரும்பு சிறு பவுண்டரி தொழிற்சாலைகளுக்கு கிடைக்க, அதன் நடைமுறைகளை மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற ஆலோசனைகளை அரசு வழங்குமா? அதேபோல பிற மாநிலங்களிலிருந்து ஒட்டு மொத்தமான தேனிரும்புத் தேவை என்ன என்பதை மதிப்பிட அரசு முன்வருமா? மேலும் பிற மாநிலங்களின் தேவைகளை மதிப்பீடு செய்வதற்கு, மதிப்பீடு கட்டணமாக ரூ. 500 வசூலிக்கப்படுகிறதே, அப்படி வசூலிப்பதை அரசு கைவிட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** தலைவர் அவர்களே, செயில் நிறுவனத்தைப் பொறுத்தமட்டில், கோவையிலேயும், சென்னையிலேயும் அதனுடைய ஸ்டாக் யார்டில் வைத்திருக்கிறது. சென்னையைப் பொறுத்தமட்டில் ஏறக்குறைய ஆயிரம் டன் தேவை என்று மதிப்பீடு செய்துள்ளது. அதுமட்டும் அல்லாமல் தேவையான அளவுக்கு கூடுதலாக கையிருப்பு வைத்திருக்கிறது. ஆகவே சென்னையிலே எந்தப் பிரச்னையும் இல்லை.

கோவையைப் பொறுத்த மட்டில் ஏறக்குறைய 394 பட்டறை களுக்கு மேல் இருக்கிற காரணத்தால், அவர்கள் கூடுதலாக வேண்டும் என்று நினைத்தாலும் அல்லது அவர்களுடைய நிறுவ னத்தை விரிவுபடுத்தினாலும் முன்கூட்டியே தெரிவிக்கப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. அதன்படி அவர்கள்

அவர்களுக்குத் தேவையான இரும்பை பெற்றுக் கொள்ளவில்லையே தவிர அதில் எந்தவிதமான சிக்கல்களும் இல்லை. ஆனால் தமிழக அரசைப் பொறுத்த மட்டில் அவர்களுடைய தேவை மாதம் ஒன்றுக்கு 8 ஆயிரம் டன் இருக்கும் என்று முடிவு செய்து அதன்படி ஆண்டு ஒன்றுக்கு 96 ஆயிரம் டன் வழங்க வேண்டும் என்று செயில் நிறுவனத்தை தமிழக அரசு கேட்டுக் கொண்டது. ஆனால் 1985-86-இல் அவர்கள் வழங்கியது 66 ஆயிரம் டன். அதாவது அவர்களுடைய மதிப்பீடு மாதத்திற்கு 5 ஆயிரம் டன். அப்படி இருந்தால் போதுமானது என்று அந்த நிறுவனம் முடிவு செய்திருக்கிறது. அதற்கு அவர்கள் கூறும் காரணங்கள் 1982-83, 1983-84 ஆகிய இரு ஆண்டுகளிலே உதாரணமாக நமக்கு தேனிரும்புக் கொடுத்துக் கொண்டிருந்த காலத்திலே நம்முடைய தேவை மாதம் ஒன்றுக்கு 3,700 டன் என்றும் எந்த மாதத்தில் அது மீறப்படவில்லை என்றும் குறிப்பிட்டு, ஆகவே 1,300 டன் கூடுதலாகவே இருப்பதால், இந்த 5,000 டன் என்பதே போதுமானது என்று அந்த செயில் நிறுவனம் தெரிவித்திருக்கிறது.

(மாண்புமிகு போவைத் துணைத் தலைவர் தலைமை.)

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு போவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட விவரங்களில் 8 ஆயிரம் டன் தேவை என்று மத்திய அரசை நாம் கேட்டிருப்பதாகவும், ஆனால் அவர்களுடைய எஸ்.ஏ.ஐ.எல். நிறுவனத்தினுடைய கணக்கின் பிரகாரம், அவர்கள் இங்கே இருக்கிற தேவையை குறைத்து மதிப்பிட்டு இருப்பதால்தான் நமக்கு தேனிரும்பு வருவது குறைந்திருக்கிறது என்பதும் தெரிகிறது. ஆனால் கொடுத்திருக்கிற கணக்கு 1983 ஆம் வருடத்திற்கு. ஆனால் நாட்டில் இடைக்காலத்தில் பல புதிய தொழிற்சாலைகள், சிறு சிறு வார்ப்பட பட்டறைகள் உருவாகியிருக்கின்றன. சிறு தொழில்களை வளர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் அரசும் மற்றவர்களும் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம். பலருக்கு வேலையும் கிடைக்கிறது. அந்த நிலைமையில் அந்தச் சின்ன பட்டறைகள் தங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற கோட்டாவை லிப்ட் பண்ணமுடியாமல், வாங்க முடியாமல் விடப்பட்டுள்ளன என்ற குற்றச்சாட்டும் சொல்லப்படுகிறது. அதற்குக் காரணம் சிறு பட்டறைகள் பினான்ஷியல் உதவிகள் இல்லாமல் இருக்





கின்றன. மாநில அரசு இதிலே அக்கறை கொண்டிருக்குமானால், அவர்கள் அப்படி லிப்ட் பண்ணாமல் இருப்பதற்கு பினான்ஷியல் நெருக்கடி காரணமாக இருந்தால் அந்த உதவியைச் செய்வதற்கும், இவர்களுக்கு தேவை அதிகரித்துள்ளதை வற்புறுத்தி வாங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போதுதான் அந்தப் பட்டறைகள் மூடப்படாமல் இருக்கும். இப்போது 150 பட்டறைகள் மூடப்பட்டு பல நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்திருக்கிறார்கள். இந்த ஒரு வருடம், இரண்டு வருடத்திற்குள் 300 புதிய பட்டறைகள் வந்திருக்கின்றன. இதனை கணக்கில் கொண்டு நமது அரசு கடன் கொடுப்பதற்கும், ஸ்டாக்கை லிப்ட் பண்ணமுடியாத பட்டறைகளுக்கு உதவி ஏற்பாடு செய்வதற்கும் உரிய நடவடிக்கைகளை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏப்ரல் மாதத்திலிருந்து 1985-ஆம் ஆண்டு ஆகஸ்ட் வரையில் வரவு வந்தது, ஒதுக்கீடு செய்யப்பட்டது, மீதமுள்ளது ஆகியவை எவ்வளவு என்பதைப்பற்றி குறிப்பிட்டார்கள். உண்மையில் எடுக்க முடியவில்லையா என்றால் அவர்களுக்கு தேவையானதை எடுத்துக் கொண்டார்கள். அதுமட்டுமல்ல அந்த ஆண்டு டிசம்பர் இறுதியில் கணக்கு பார்க்கிறபோது ஒன்பதாயிரம் டன் கையிருப்பு இருந்தது. அதிலே ஆறாயிரம் டன் தான் எடுத்திருக்கிறார்கள். அதுதான் தேவையென்றும் கருதப்படுகிறது.

இந்த நிறுவனத்தைப் பொறுத்தவரையில் கடந்த ஒன்பது ஆண்டுகளில் ஒரு நிறுவனம் எந்த ஆண்டில் அதிகபட்சமாக எடுத்துள்ளதோ அதை அடிப்படையாக வைத்து அந்த நிறுவனத்துக்கு தேனிரும்பு தரவும் தயாராக இருக்கிறார்கள். 74 வார்ப்பட பட்டறைகள் இயங்கவே இல்லை. அவர்கள் தேனிரும்பு எடுப்பதுமில்லை. அதாவது ஒன்பது ஆண்டுகளாக சென்னையில் 50 வார்ப்பட பட்டறைகளும், கோவையில் 24 வார்ப்பட பட்டறைகளும் பதிவு செய்திருக்கிறார்கள். அவர்கள் பதிவு செய்திருக்கிறார்களே தவிர ஒரு டன் தேனிரும்பு கூட பெற முயற்சிக்கவில்லை. அந்தப் பட்டறைகள் இயங்கவே இல்லை. ஆகவே நிதிவசதி இல்லையென்பது சரியல்ல. நிதியுதவி தேவையென்று சொன்னால் அதனைப் பெறுவதற்கு

முறையான வழிமுறைகள் இருக்கின்றன. அந்த வழிமுறைகளைப் பின்பற்றினால் நிச்சயம் அரசு அவர்களுக்கு உதவும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து கட்டணமாக 500 ரூபாய் கட்டவேண்டுமென்று சொல்லப்படுகிறதென்று உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதுபற்றி எனக்கு தகவல் இல்லை. அந்தத் தகவலை சேகரித்து அரசாங்கம் என்ன உதவிகளைச் செய்ய முடியுமோ அதனைச் செய்ய தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மா. சின்னராசு :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்திருக்கிற விளக்கம் பெரும்பகுதி செயில் அதாரிட்டி கொடுத்த குறிப்பிலேயிருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். கோவை பகுதியில் இந்தத் தொழில் அதிகமாக இருக்கிறது. அந்தச் சிறுதொழில் அதிபர்கள் இந்தப் பிரச்னையையும் மற்றும் எக்சைஸ் வரி பிரச்னையையும் உள்ளடக்கி மிகப் பெரிய வேலை நிறுத்தத்தை சென்ற வாரத்தில் நடத்தினார்கள். தட்டுப்பாடு இல்லாமல் தொழில் அதிபர்கள் இந்தக் கோரிக்கையை வைத்து போராட்டம் நடத்தினார்கள் என்று சொல்ல முடியாது. செயில் நிறுவனம் தந்திருக்கிற குறிப்பிலே அவர்கள் தேவைக்கேற்ப அளித்திருக்கிறோம் என்று சொல்லியிருப்பது ஒரு தவறான அடிப்படையில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். காரணம் கடந்த இரண்டு மாதங்களில் பல வார்ப்பட பவுண்டரிகள் மூடப்பட்டிருக்கின்றன. காரணம் பிக் அயர்ன் கிடைக்காதது தான். அவர்கள் ஒதுக்கிய இரும்பு கூட குறித்த காலத்தில் யார்டிலே வந்து சேரவில்லை. பல நேரங்களில் வெளி மார்க்கெட்டை விட செயில் நிறுவனம் தருகிற இரும்பிற்கு விலை கூடுதலாக இருக்கிறது. ஸ்டீல் அத்தாரிட்டி ஒரு விலை நிர்ணயம் செய்வதற்கும் அங்கேயிருக்கிற பிரைவேட் ட்ரேடர்ஸ் இதிலே பிளாக் மார்க்கெட் செய்து விலையை கூட்டுவதற்கும் குறைப்பதற்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது என்பது தொழில் அதிபர்கள் வெளிக்கொண்டு வந்திருக்கிற உண்மையாகும். ஆகவே இதன் அடிப்படையில் மத்திய அரசுக்கு அதிலே இருக்கிற விலை வித்தியாசத்தை குறைப்பதற்கும், சீராக பவுண்டரிகளுக்கு எல்லா இடங்களிலும் நியாயமான விலையில் 'பிக் அயர்னை' கொடுப்பதற்கும் வழிமுறைகளை ஆராய வேண்டுமென்றும், நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும் நம்முடைய அரசு வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.





(முற்பகல் 10-10)

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் :** துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் தொடர்ந்து தேவை எவ்வளவு இருக்கிறதோ அந்த அளவிற்கு செயில் நிறுவனம் நமக்கு அளிக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறது. இதற்காக கோவை சிறு வார்ப்பட பட்டறைகள் இயக்கம் ஒவ்வொரு பட்டறைக்கும் ஐந்து டன்கள் குறைந்த பட்சம் தருகிற அந்த நடவடிக்கைக்கு நன்றி தெரிவித்து 14—3—1986 ஆம் தேதியில்கூட ஒரு கடிதத்தை செயில் நிறுவனத்திற்கு அனுப்பி இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், 19—3—1986-ல் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இது சம்பந்தமாக ஒரு கூட்டத்தைப் போட்டார்கள். அந்தக் கூட்டத்தில் சென்னையில் உள்ள இரும்பு மற்றும் உருக்கு கட்டுப்பாடு அதிகாரிகள், கோவை மாவட்டத்தைச் சேர்ந்த செயில் நிறுவனத்தின் கிளை மேலாளர், தொழிற்சாலையைச் சேர்ந்த அதிகாரிகள் வார்ப்படத் தொழில் சம்பந்தப்பட்ட பிரதிநிதிகள் எல்லாரும் கலந்து கொண்டார்கள். அந்தக் கூட்டத்தில் ஒவ்வொரு வார்ப்படப் பட்டறைக்கும் எவ்வளவு தேவை என்பதை துல்லியமாகக் கணக்கிட்டுச் சொல்லுங்கள் என்று கேட்டபோது, அவர்கள் சொல்ல மறுத்தது மட்டுமல்லாமல், சராசரியாக தேவைப்படுகிறதோ, இல்லையோ, மூடி வைத்திருக்கிறார்களோ, இல்லையோ, எல்லாவற்றுக்கும் சராசரியாக 15 டன் தேவை என்று கேட்கிறபோது, அதைச் செயில் நிறுவனம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்று சொல்லியிருக்கிறது. இருந்தாலும் கூட இந்தப் பிரச்சினை தொடர்பாக தமிழக அரசு கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### 3. அறிக்கைகள் அளித்தல்.

### (அ) பொதுக் கணக்குக் குழு.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன் :

(அ) தமிழ்நாடு அரசின் 1966-67 முதல் 1971-72 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்து பொதுக் கணக்குக் குழு தனது முந்தைய நான்காவது அறிக்கை (ஏழாவது பேரவை)-யில்

தெரிவித்துள்ள பரிந்துரைகள் மீது கூட்டுறவுத் துறை சம்பந்தமாக அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய பத்தொன்பதாவது அறிக்கை.

(ஆ) தமிழ்நாடு அரசின் 1964-65 முதல் 1969-70 ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்து பொதுக் கணக்குக் குழு தனது முந்தைய ஏழாவது பேரவையில் அளித்த நான்காவது அறிக்கைகளில் தெரிவித்துள்ள பரிந்துரைகள் மீது உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சம்பந்தமாக அரசு மேற்கொண்டும் எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய இருபதாவது அறிக்கை.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு.

திரு. கோ. இரகுபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கைகளை, தலைவரின் சார்பாக நான் பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1976–77 மற்றும் 1977-78 ஆம் ஆண்டுகளுக்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கைகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் (1980-82) பதினெட்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய இருபத்தி மூன்றாவது அறிக்கை.

(ஆ) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1978-79, 1979-80, 1980-81 ஆகிய ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கைகள் மீதான குழுவின் இருபத்தி நான்காவது அறிக்கை.

(இ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981-82-ஆம் ஆண்டிற்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கையில் உணவு நுகர்வோர் பாதுகாப்புத் துறை தொடர்பான பத்திகள் மீதான இருபத்தைந்தாவது அறிக்கை.



4. அரசினர் சட்ட முன்வடிவு.

ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு 1986.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

**திரு. ப. பொன்னுரங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் உள்ளாட்சி மன்றங்கள், அதாவது பஞ்சாயத்து யூனியன்களில் இருக்கிற 3 கேடர்களை அரசாங்கம் எடுத்துக் கொள்கிற சட்டமாக இருக்கிறது. அதற்காகத்தான் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. அந்த கேட்டகிரி யார் யார் என்றால்,
Health Assistant, Auxiliary Nurse-Midwife and Maternity Assistant இதை எப்போது எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால், 1—10—1982-ல், இருந்து எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். 1—10—1982-லே இருந்து இந்த பில் வருகிற இதுவரைக்கும், தனி அதிகாரிகளின்கீழ் இருந்து வந்திருக்கிறது, இப்போது பஞ்சாயத்து யூனியன்களிலே எலக்டட் பாடிகள் வந்துவிட்டன. அப்படி வந்த பிறகு திரும்பவும் அரசாங்கத்திலே இருக்க வேண்டும் என்ற எண்ணத்திலே இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள், நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. அரசுடைமையாக்கிவிட்டு இப்போது அரசாங்கம் கையாள்கிற முறை அச்சத்தை உருவாக்குகிறது. இப்போது மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று சொல்கிறோம் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்ட முன்வடிவு ஆய்வுக்கு வருகிறபோது விரிவாகப் பேசலாம். பாராளுமன்றத்திலேயும், இங்கேயும் சட்ட முன்வடிவுகள் அறிமுகம் செய்கிறபோது, இது அன்-கான்ஸ்டிட்யூசனல்-ஆக இருக்கிறது என்று தான் சொல்வார்கள். விரிவாக அறிமுக நிலையில் பேச மாட்டார்கள். (குறுக்கீடு) எனவே ஆய்வு நிலைக்கு வரும்போது விரிவாகப் பேசலாம்.

பேரவை முன்னுள்ள கேள்வி :

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

## 5. வரவு-செலவுத் திட்டம் 1986-87 பொது விவாதம் (தொடர்ச்சி).

**திரு. எஸ். இராசாராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் இரண்டொரு கருத்துக்களைச் சொல்லலாம் என்று ஆசைப் படுகிறேன். குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் காவிரியாறு பொய்த்துவிட்ட காரணத்தினாலும், இயற்கையின் கோளாறு காரணத்தினாலும், புயலாலும், மழையாலும் தஞ்சை மாவட்டம் இன்றைய தினம் வறட்சி மாவட்டமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. ஆதலால் உடனடியாக தஞ்சை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். காவிரியிலே தண்ணீர் வராத காரணத்தினால் நிலத்தடி நீரைக் கொண்டு ஆழ் குழாய் கிணறுகள் மூலமாக தண்ணீரை எடுத்து பாய்ச்சுவதற்கு, சிறு விவசாயிகள், பெரிய விவசாயிகள் விவசாயம் செய்வதற்குத் தயாராக இருந்தாலும், அவர்கள் விவாசயம் செய்வதற்கு ஆழ்குழாய் கிணறுகள் மூலமாக எடுக்கப்பட்ட தண்ணீரை மேலே கொண்டு வருவதற்கு இந்த அரசு மின்சார இணைப்புகளை ஒழுங்காக கொடுப்பது இல்லை. ஆதலால் உடனடியாக மின்சார இணைப்புகளை கொடுக்க **வேண்டுமென்று நான்** கேட்டுக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். விவசாய விளை பொருள்களுக்கு போதிய அளவில் விலையை உயர்த்தி கொடுப்பதில்லை என்கிற குற்றச்சாட்டையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள





கடமைப்பட்டிருக்கிறேன். நெல்லினுடைய விலை மிகக் குறைவாக இருக்கிறது. அதற்கு அளிக்கின்ற போனஸ் குறைவு. 35 ரூபாய்தான் அளிக்கிறார்கள். அதையும் ரூபாயாக அளிக்காமல் உரமாக அளித்துக் கொண்டிருக்கிறார்கள். அதை குறுவையிலே ஏற்றுக்கொண்டாலும், தாளடிக்கும் சம்பாவுக்கும் அளிக்கப்படுகிற போனஸ் உரமாக கொடுத்தால் அதை விவசாயப் பெருங்குடி மக்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. காரணம் அந்த உரத்தை அவர்கள் வாங்கி ஆறு மாத காலம் வைத்திருந்தால், அந்த உரம் வீணாகி விடுகிறது என்பதனை இந்த ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிறவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அதற்காகத்தான் உரத்திற்குப் பதிலாக பணமாக அளிக்க வேண்டுமென்றும் பணமாக அளிப்பதற்கு இந்த அரசு தயாராக இல்லையென்றால் விவசாய சேவை வங்கிகளில் வாங்கிய கடனுக்கு, விவசாய பெருங்குடி மக்களுடைய நன்மைக்காக ஈடு செய்துகொள்ள வேண்டுமென்றும் இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல தஞ்சை மாவட்டத்தில், பஞ்சு உற்பத்தி செய்கிறார்கள். அதற்கும் சரியான விலை நிர்ணயிக்காத காரணத்தால் ஏறத்தாழ சென்ற ஆண்டு 10 ஆயிரம் எக்கரிலே தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகள் பஞ்சு உற்பத்தி செய்தார்கள். அது 300-லிருந்து 350 ரூபாய்க்கு குறைந்த விலைக்கு சென்ற காரணத்தினால் இந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற விவசாயிகள் பஞ்சை உற்பத்தி செய்வதற்கு தயங்குகின்றனர். 10 ஆயிரம் எக்கர் உற்பத்தி செய்த அந்த இடத்தில் இன்றையதினம் 2 ஆயிரம் ஏக்கர்தான் உற்பத்தி செய்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டை நான் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல அந்தப் பகுதியிலே காவிரியாறு பொய்த்து விட்ட காரணத்தினால் நெல் சாகுபடி செய்வதற்கு மிக அதிகமாக செலவு செய்ய வேண்டியிருக்கிறது. அதன் பயனாக கரும்பு உற்பத்தி செய்கிறார்கள். எனவே கரும்புக்கும் இன்றைய தமிழக அரசு விலையை உயர்த்தித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எஸ். இராசாராமன்] [1986 மார்ச் 25

(முற்பகல் 10.20)

அதேபோல் திருவையாற்றில் பாரத பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களும், நம் தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களும் தென் மண்டல பண்பாட்டு மையத்தை துவக்கினார்கள். ஆனால் அந்த தென் மண்டல் மையத்தை இந்த தஞ்சையில் வைப்பார்களா? திருவையாற்றில் வைப்பார்களா என்ற ஐயப்பாடு மக்கள் இடையில் இருந்து கொண்டு இருக்கிற காரணத்தால் திருவையாற்றில் தென் மண்டல பண்பாட்டு மையத்தை ஆரம்பிக்க வேண்டும், அந்த இடத்திலயே நிறுவ வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல் நாகையில் நரிமணம் என்ற கிராமத்தில் மத்திய அரசால் பெட்ரோல் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது. அதன் சுத்திகரிப்பு ஆலையை தஞ்சையில் வைக்க வேண்டும். அதைச் சொல்வதற்கு காரணம் தஞ்சை மாவட்டத்தில் உள்ள நரிமணத்தில் கண்டுபிடிக்கப்பட்ட அந்த பெட்ரோல் ஆலை திருச்சி மாவட்டத்திற்குச் செல்வதாக கேள்விப்படுகிறோம். ஆகவே, தமிழக அரசு அதில் சற்று கவனம் செலுத்தி நாகையில் அந்த சுத்திகரிப்பு ஆலையை துவக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல் தஞ்சை மாவட்டத்திற்கு மேலும் ஒரு சர்க்கரை ஆலை வேண்டும் என்று தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிந்துரை செய்து அனுப்பியிருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்கு பதில் கொடுக்கிறபோது 30 சர்க்கரை ஆலைகளை தமிழகத்தில் திறக்க வேண்டும் என்பதற்காக மத்திய அரசுக்கு பரிந்துரை செய்து இருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். 30 ஆலைகளுக்கு பரிந்துரை செய்தால் அந்த 30 ஆலைகளுக்கும் அனுமதி கிடைத்தால் எப்படி நீங்கள் நடத்த முடியும் என்பதை நான் பணிவன்போடு தெரிந்துகொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், தஞ்சையில் இயங்கிக் கொண்டு இருக்கிற பேரறிஞர் அண்ணா பெயரால் இருக்கின்ற அந்த சர்க்கரை ஆலையில் இருந்து வருகின்ற அதிகப்படியான லாபத்தை வைத்து ஒரு மினி சர்க்கரை ஆலை பாபநாசத்தில் ஆரம்பிப்பதற்கு ஒரு பரிந்துரையை செய்து இங்கு



1986 மார்ச் 25] [திரு. எஸ். இராசாராமன்]

அனுப்பியிருக்கிறார்கள். அந்த பரிந்துரை இன்னும் தமிழக அரசினுடைய தலைமைச் செலகத்தில்தான் இருப்பதாக நான் நேற்று வரை கேள்விப்பட்டேன். ஆனால் நம்முடைய தொழில் துறை அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு கேள்விக்கு பதில் சொல்லும்போது 30 ஆலைகளுக்கு தமிழக அரசு பரிந்துரை செய்து மத்திய அரசுக்கு அனுப்பிவிட்டது என்ற ஒரு தவறான தகவலை இங்கே அளித்து இருக்கிறார்கள் என்று நான் எண்ணுகிறேன். ஆகவே, பாபநாசத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலையை உடனடியாக அமைக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாநிலத்தில் எத்தனை தனியார் ஆலைகளை துவக்க இருக்கிறீர்கள், எத்தனை கூட்டுறவு ஆலைகளை துவக்க இருக்கிறீர்கள் என்ற கேள்வியைக் கேட்க நான் ஆசைப்படுகிறேன்.

தற்போது தஞ்சை மாவட்டத்தில் கரும்பு 6 ஆயிரம் எக்கரில் சாகுபடி செய்து கொண்டு இருக்கிறார்கள். ஆனால் 4 ஆயிரம் ஏக்கரில் பயிராகும் கரும்பைத்தான் அங்கே பதிவு செய்கிறார்கள். மீதம் உள்ள 2 ஆயிரம் ஏக்கரில் பயிராகும் கரும்பை அங்கே பதிவு செய்வது இல்லை. அதை தனியார்கள் வெல்லமாகவும் சர்க்கரையாகவும் ஆக்கிக்கொள்கிறார்கள். ஆகவே பாபநாசம் பகுதியில் உடனடியாக ஒரு சர்க்கரை ஆலையை திறக்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையில் கல்வித் துறையைப் பற்றி கூறுகையில் கல்வித் துறையில் மாநில அரசின் சாதனைகள் கற்றறிந்தவர் பலராலும் பாராட்டத்தக்க வகையில் அமைந்துள்ளன என்று கூறியிருக்கிறீர்கள். ஆனால் பல்வேறு இடங்களில் பல்வேறு உயர்நிலைப் பள்ளிகள் இன்றையதினம்—தஞ்சை மாவட்டத்தில்— கட்டிடங்கள் இல்லாத நிலையில் இருக்கின்றன என்பதை பணிவன்போடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 1980 ஆம் ஆண்டு சட்டக் கல்லூரி திருச்சியிலும், கோவையிலும் துவங்கப் பட்டது. அந்தச் சட்டக் கல்லூரிகள் இப்போது வாடகைக் கட்டிடத்தில் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. அந்தச் சட்டக் கல்லூரிகளுக்கான விடுதிகளும் வாடகைக் கட்டிடங்களில்தான் இயங்கிக் கொண்டு இருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

அங்கே அவர்களுக்கு போதிய பேராசிரியர்கள் கிடையாது, நூலகங்கள் இல்லை என்ற குற்றச்சாட்டையும் நான் தெரிவிக்க கடமைப்பட்டு இருக்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் தமிழ் பல்கலைக் கழகம் தமிழக அரசால் புதிதாக நிறுவப்பட்டு இருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். இருந்தாலும், எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று சொல்லிக் கொண்டிருக்கிற நம்முடைய தமிழக அரசு மருத்துவக் கல்லூரியிலும் தமிழைக் கொண்டு வர வேண்டும். பொறியியல் கல்லூரியிலும் தமிழைக் கொண்டு வர வேண்டும். சட்டக் கல்லூரியிலும் தமிழைக் கொண்டு வர வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் 1986-87 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இந்திய ஒருமைப்பாட்டுக்கு உட்பட்டு, மாநில தன்னாட்சி அமையக் கூடிய வகையில் மத்திய-மாநில உறவைப் பரிசீலனை செய்ய சர்க்காரியா கமிஷனுக்கு தமிழக அரசு ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறது என்பதாக இருக்கிறது. அந்த சர்க்காரியாக் கமிஷனுக்கு கொடுத்த அறிக்கை இந்த அவையிலே இருக்கின்ற உறுப்பினர்களுக்கு இதுவரை வைக்கப்படவில்லை. சர்க்காரியாக் கமிஷனுக்காக அறிக்கையை தமிழக அரசு தயாரிக்கின்றபோது இந்த உறுப்பினர்களைக் கலந்தாலோசித்து, கருத்துக்களைக் கேட்கவில்லை என்ற குற்றச்சாட்டை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சர்க்காரியா கமிஷனிடம் அரசு தெரிவித்த. . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** துணைத் தலைவர் அவர்களே, என் பெயரைக் கொண்ட திரு. இராசாராமன்தான் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நான் தவறான அறிவிப்பை இந்தச் சபைக்குத் தந்தேன் என்று சொன்னார், சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையில், நான் சொன்னதில் தவறு இல்லை. டில்லிக்கு அனுப்பப்பட்டு விட்டதா, இல்லையா என்பதைத் தெரிந்து கொண்டுதான் அவர்கள் பேசியிருக்க வேண்டும். சர்க்கரை ஆலையைப் பற்றிய விண்ணப்பங்கள் டில்லிக்கு அனுப்பப்படவும் இல்லை. டில்லிக்கு போகவும் இல்லை, சபைக்குத் தவறான தகவலைத் தந்திருப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அது தவறு. சர்க்கரை ஆலைக்கான விண்ணப்பங்கள் ஏற்கனவே அனுப்பப்பட்டு



விட்டன. சர்க்கரைக் கொள்கை மத்திய சர்க்காராலே வகுக்கப்படுகிறது. அதையெல்லாம் தெரிந்து கொண்டு பேசுங்கள். அதற்குப் பிறகு நான் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

**திரு. எஸ். இராசாராமன்:** இங்கே ஒரு கேள்வியைக் கேட்கின்றபோது மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்கள், 30 சர்க்கரை ஆலைகளுக்காக பரிந்துரை செய்து, தமிழக அரசு மத்திய அரசுக்கு அனுப்பியிருப்பதாக பதில் அளித்தார்கள். 30 ஆலைகள் இங்கிருந்து மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டு சென்றிருந்தால், அவர்கள் அனுமதி அளித்தால், இவர்கள் எப்படி துவக்கப் போகிறார்கள் என்பதனை தெரிந்து கொள்வதோடு, நான் கேள்விப்பட்டதை. . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** துணைத் தலைவர் அவர்களே, துவக்குவது, துவக்காதது எங்களுடைய வேலை. அதைச் செய்து காட்டுகிறேன். அது வேறு விஷயம். தமிழ் நாட்டில் விவசாயிகள் நிறைந்திருக்கிறார்கள். விவசாயிகளின் பேரில் எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. கரும்பு இருக்கிறது. வேலை செய்ய ஆட்கள் இருக்கிறார்கள். தமிழகத்திலே பணம் இருக்கிறது. அதைப் பற்றி நீங்கள் கவலைப்படாதீர்கள். வேறு ஏதாவது இருந்தால் பேசுங்கள்.

**திரு. எஸ். இராசாராமன்:** துணைத் தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்த தகவல்படி, என்னுடைய தொகுதியான பாபநாசத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சென்ற ஆண்டே கூட்டுறவு மூலமாக ஒரு சர்க்கரை ஆலையை நிறுவ வேண்டும் என்ற ஒரு பரிந்துரையைச் செய்து, தமிழக அரசிற்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள் * *

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** * * என்று சொன்னால் பரவாயில்லை.

**திரு. வே. இரா. ஜெயராமன்:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலையைப் பற்றி ஒரு தகவலை தெரிந்துகொள்ள விரும்புகிறேன். தமிழகத்திலுள்ள அரசுத் துறை மூலமாக விண்ணப்பங்கள் அனுப்பப்படும்போது தாமதப்படுவதாக . . . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** * *

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[பேரவைத் துணைத் தலைவர்] [1986 மார்ச் 25

சொன்ன தகவலை எல்லாம் வைத்து இங்கே பேசக் கூடாது. அப்படிப் பேசுவதாக இருந்தால் நீங்கள் பொறுப்பேற்க வேண்டும். அந்தப் பகுதியை நீக்கி விடுகிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள்.

(முற்பகல் 10.30)

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 30 ஆலைகளுக்கு அனுமதி கேட்டிருக்கிறார்கள். 30 ஆலைகளுக்கு அனுமதி கொடுத்தால் நீங்கள் எப்படி அவைகளை ஆரம்பிக்கப் போகிறீர்கள் என்று கேட்கிறார்கள், அதே நேரத்திலே 30 ஆலைகளுக்கு பரிந்துரையைப் அரசிற்கு அனுப்பப்படவில்லை என்று தெரிகிறது என்றும் அவர்களே சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொல்வது முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது.

**திரு. எஸ். இராசாராமன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முன்னுக்குப் பின் முரணாகப் பேசவில்லை. 30 ஆலைகளுக்கு அனுமதி அளித்தால் இங்கே நிதி நிலைமை எப்படியிருக்கிறது, தமிழக அரசு நிதிநிலைமையை வைத்து நடத்த இருக்கிறீர்களா, அல்லது தனியார்கள் நிதியை வைத்து நடத்த இருக்கிறீர்களா என்பதைத் தெரிந்து கொள்ள நான் ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, அந்த ஆலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் விரும்புகிறார்களா இல்லையா ?

**திரு. எஸ். இராசாராமன் :** தமிழகம் சென்ற 20 ஆண்டுக் காலமாக தொழில் துறையிலே பின்தங்கியிருக்கிறது. அதை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்ற ஆர்வம் தமிழக அரசை விட எங்களுக்கு அதிகமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தொழில் துறையில் பின்தங்கியிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அதுவே தப்புதான் அப்படி ஒன்றும் நாம் பின்தங்கவில்லை. வளர வேண்டிய அளவுக்கு வளர்ந்து கொண்டிருக்கிறோம்.

**திரு. எஸ். இராசாராமன் :** சர்க்காரியா கமிஷனுடைய அறிக்கையை இந்த அவையிலே உடனடியாக வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். . . . .



1986 மார்ச் 25]

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது தமிழகம் எந்த அளவுக்கு வளர வேண்டுமோ அந்த அளவுக்கு தொழிற் துறையிலே வளர்ந்து கொண்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். உறுப்பினர் அவர்கள் அவர்களுடைய ஆசையைச் சொல்கிறார்கள். 1967 ஆம் ஆண்டுக்கு முன்னாலே தமிழகத்திலே தொழில் துறை பீடுநடை போட்டது. அதே போன்று இப்போது தமிழகம் வளர வேண்டுமென்று நாங்கள் ஆசைப்படுகிறோம். அதற்கான ஒத்துழைப்பைத் தரத் தயாராகவும் இருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** வளர்ச்சி என்பது உடனடியாக ஏற்பட்டுவிடாது, பெட்ரோலியத்திலே 1000 கோடி வந்தால் உடனடியாக வளர்ந்து விடும். ஆகவே நாம் முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். வளர்ச்சி என்பது ஒரு நாளிலே வந்துவிடாது. தமிழகம் தொழில் துறையிலே 4-வது இடத்திலே இருக்கிறது. அப்படியொன்றும் பின்தங்கி விடவில்லை. வளர வேண்டிய அளவுக்கு வளர்ந்து கொண்டிருக்கிறது. தொழில் மானிய விவாதம் வரும்போது நான் எல்லாவற்றையும் சொல்ல இருக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** திரு. சித்தன் அவர்கள் கூறுவதைப்போல்—1967-க்கு பிறகு தொழில் துறையில் தமிழகம் வளரவில்லை என்று தெரிவித்தார்கள்—அப்படி வளரவில்லை என்றால் அதற்கு முதற் காரணம் முக்கிய காரணம் மைய அரசு தான். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மைய அரசைப் பொறுத்த வரையில் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு எப்போதும் நடந்துகொள்ளவில்லை. இந்தியாவிலே எத்தனையோ மாநிலங்கள் இருக்கின்றன. நாம் தான் அதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும். நாம் எடுத்துக் கொள்கிற முயற்சி, அக்கறை, உத்வேகம் அத்தனையும் முறைப்படி இருந்தால் நிச்சயமாக தமிழகம் தொழில் துறையிலே முன்னேறி இருக்கும். 1967 ஆம் ஆண்டுக்கு முன்னாலே இருந்ததைப் போன்று இப்போது இல்லை. அதனால் வளர்ச்சி குறைந்து இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் ஒப்புக் கொள்வார்கள்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பின்தங்கிய மாவட்டங்கள் என்று இந்தியாவிலே கணக்கு எடுக்கிறபோது அந்த நிபந்தனையை ஒட்டி தமிழகம் வரவில்லை என்று மைய தொழில் துறை அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார். தமிழகம் புறக்கணிக்கப்படுகிற அளவுக்கு நிபந்தனையை மைய அரசு வகுத்துக் கொள்கிறது என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** துணைத் தலைவர் அவர்களே.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த நிலைமை நீடித்துக் கொண்டே போகுமானால் குறுக்கிடுகிற உறுப்பினருக்குத்தான் வாய்ப்பு கிடைத்து பேச முடியும் என்ற நிலைமை வந்துவிடும். இன்னும் பல உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. நீங்கள் சொல்லிவிட்டீர்கள். அமைச்சர் ஒரு பதிலைச் சொல்லிவிட்டார்கள். போதும். பேசிக் கொண்டிருக்கிற உறுப்பினருக்கு நாம் நியாயம் வழங்க வேண்டியிருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** இதே வேகத்தை, இதே விதியை நீங்கள் எல்லோரும் கடைப்பிடித்தால் நன்றாக இருக்கும். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தங்களைப் பொறுத்தவரையில் இந்த மன்றத்திலே இருக்கின்ற எல்லா உறுப்பினர்களையும் சமமாகப் பாவிக்க வேண்டும்; பாவிப்பீர்கள் என்றும் நம்புகிறேன். இப்படி எனக்குச் சொல்லக்கூடிய தடையை அமைச்சரவர்கள் பேசும்பொழுது சொல்லமாட்டேன் என்கிறீர்களே.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் இதில் பேசக்கூடாது. ஒரு குற்றச்சாட்டைச் சொல்லுகிறீர்கள். மத்திய அரசினுடைய விதியே தடையாக இருக்கிறது என்று அமைச்சரவர்கள் அதற்கு பதில் சொல்கிறார்கள். அது இல்லை என்று மறுபடியும் பதில் சொல்ல வேண்டுமென்றால் அவையை எப்படி நடத்திச் செல்ல முடியும்?

**திரு. என். எஸ். வி. சித்தன்:** துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் மாவட்ட ஸீரோ இன்டஸ்ட்ரியல் ஸோன் இல்லை என்று சொன்னார்கள். அதற்கு நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். மாவட்டத்தைப் பிரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். தமிழகத்திலே ஸீரோ இன்டஸ்ட்ரியல்



மாவட்டம் இல்லாத அளவிற்குச் செய்ததற்கு காங்கிரஸ் கட்சிக்கும் பங்கு உண்டு. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயே தொழில்களைத் தொடங்கியிருக்கிறோம்; முன்னேற்றம் கண்டிருக்கிறோம். அந்த முன்னேற்றம் இல்லை என்றோ அல்லது சுத்தமாக முன்னேற்றமே இல்லை என்றோ நாங்கள் சொல்லவில்லை. ஆனால் துவங்க இருக்கின்ற . . . .

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு முறையும் தமிழகத்திற்கு வர வேண்டிய பல தொழிற்சாலைகள் வேறு மாநிலத்திற்கு மாற்றப் படுகின்றன. அதற்கு என்ன காரணம்? யார் காரணம்? தமிழகம் தனக்குரிய உரிமைகளைக் கேட்கிறது? அந்த நேரத்தில் தமிழகத்தில் அந்தக் குரலைப் புறக்கணிக்கின்ற வகையில் விதிமுறைகளை வடபுலத்திற்கு ஏற்றவாறு ஏற்படுத்தி வருகிறது என்பது தமிழ்ப் பெருமக்களின் உணர்ச்சிக் குமுறல்; குற்றச்சாட்டு.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திசை திருப்புவது போலச் சொல்வது சரி அல்ல. தமிழகத்தைப் பொறுத்தவரையில், தொழில்களைத் துவங்க வேண்டுமென்றால் மைய அரசு விதிக்கின்ற நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும்; நிலம் கொடுக்க வேண்டும். அதையெல்லாம் நாம் செய்திருக்கிறோமா? எனவே, செய்ய வேண்டிய காரியங்களைச் செய்து, சலுகைகளைக் கொடுத்து விட்டுத் தயாராக இருந்தால் நாம் அவர்களைச் சொல்லலாம். இதே பிரச்னையை நாடாளுமன்றத்தில் எழுப்பியிருந்தால், இந்தந்தப் பிரச்னையில் இத்தனை ஆண்டுகளாகப் பதில் வரவில்லை என்று சொல்லுவார்கள். மத்தியத் தொழில் இணை அமைச்சர் மாண்புமிகு திரு. அருணாசலம் அவர்கள் கூட ஒரு பொது இடத்திலேயே குறிப்பிட்டே சொல்லியிருக்கிறார்கள். இப்படிப் பட்ட பிரச்னைகளிலே தமிழக அரசிடமிருந்து பதில் வரவில்லை என்று. அமைச்சரவர்களும் அதில் கலந்து கொண்டதாகக் கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இதுபற்றிய மானியக் கோரிக்கை வரும்பொழுது எல்லாவற்றிற்கும் சேர்த்து நானே பதில் சொல்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்றத்திலேயே நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள்; மைய அமைச்சரவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள், உத்தரப்பிரதேசம் மிகவும் பின்தங்கியிருக்கிறது. ஆகவே, உரிமம் வழங்க வேண்டிய நிலை இருக்கிறது என்று. எனவே, உத்தரப்பிரதேசம் தான் இந்தியா என்று கருதுகிறார்கள் என்பது வருத்தத்திற்குரியது.

**திரு. உ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் அமைச்சரவர்கள் சொல்லுகின்றபொழுது, தொழில் துறையில் தமிழகம் நான்காவது இடத்தைப் பெற்றிருக்கிறது என்று சொல்கிறார்கள். மைய அரசினுடைய உதவி இல்லாமல் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்க முடியாது. ஆகவே, இரண்டு அரசுகளும் சேர்ந்து இருந்து காரியங்களைச் செய்திருந்தால்தான் இப்படிப் பட்ட நிலைமை இருக்க முடியும். இப்படிப்பட்ட நிலையில் ஏன் னுக்குப் பின் முரணாக வாதங்கள் சொல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒரு வாதம், முன்னேறவில்லை என்றால், இன்னொரு வாதமாக மைய அரசு ஒத்துழைப்பு தரவில்லை என்பதாக இருக்கிறது. இப்படி அவையின் நேரம் எடுத்துக் கொள்ளப்பட்டு மற்றவர்கள் பேசுவதற்கு இடைஞ்சலாக இருக்கிறது. எனவே, துணைத் தலைவரவர்களின் மூலமாக அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், அவர்கள் மேலும் இதை விவாதமாக்க வேண்டாம். மாண்புமிகு தொழில் துறை அமைச்சரவர்கள் குறிப்பிட்டதைப்போல தொழில் மானியம் வருகின்றபொழுது விரிவாக எல்லாக் கட்சியினரும் பேசலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்டதைப் போல, மைய அரசு சமரசம் செய்யும் பொழுது அதை வரவேற்கத் தயாராக இருக்கிறோம்.

**திரு. எஸ். இராசாராமன்:** என்னுடைய நேரத்தையெல்லாம் எடுத்துக் கொண்டு விட்டார்கள்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர்கள் நேரத்தை எடுப்பதற்கு முன்பே நீங்கள் கூடுதல் நேரம் பேசி விட்டீர்கள். ஆகவே, சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. எஸ். இராசாராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சர்க்காரியா கமிஷனிடம் தாக்கல் செய்த தமிழக அரசினுடைய அறிக்கையை இந்த அவையிலே இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடருக்குள் வைக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். அதைப்போல. . . .

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசாராமன் அவர்கள் சர்க்கரை ஆலையிலே ஆரம்பித்து சர்க்காரியா கமிஷனுக்கு வந்துவிட்ட பிறகு,—சர்க்கரை என்பது இனிப்பான விஷயம், எனவே கசப்பான விஷயத்தை முடிவிற்கு கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குறுக்கீடுகள் வராமல் பேசினால் நேரம் கிடைக்கும்.

**திரு. எஸ். இராசாராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கிருஷ்ணா நதி பற்றி இந்த அறிக்கையில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். மைய அரசு இசைவு தருவதில் காலதாமதம் செய்திருப்பதாக குற்றச்சாட்டைச் சொல்கிறார்கள். தமிழக அரசும், ஆந்திர அரசும் தெலுங்கு கங்கை என்ற திட்டத்தைத் தீட்டினார்கள். அந்தத் திட்டத்திற்கும், மைய அரசுக்கும் சம்பந்தமில்லை என்பதை முதலிலே தமிழக அரசினுடைய அமைச்சர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10.40)

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசாராமன் அவர்கள் விவாதத்திற்குரிய பல பிரச்னைகளைப்

பேசுகிறார்கள். கிருஷ்ணா நதி நீர் திட்டம்—தெலுங்கு கங்கை திட்டம் கொண்டு வருவதற்கு அனுமதி தருவதில் மைய அரசு காலந்தாழ்த்துகிறது, அனுமதி தரவில்லை என்பது முழுக்க, முழுக்க முற்றிலும் உண்மை.

**திரு. எஸ். இராசாராமன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் தீட்டுவதற்கு முன்பு தமிழக அரசும் ஆந்திர அரசும் மைய அரசினுடைய அனுமதியைப் பெற்று, தீட்டியிருந்தால் மிக நன்றாக இருந்திருக்கும். அதற்கு மாறாக. . . .

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, தவறான கருத்து பத்திரிகையிலே வரக் கூடாது என்பதற்காக நான் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தத் திட்டத்தினுடைய தொடக்க விழாவே இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் முன்னிலையிலேதான் நடைபெற்றது. (கரவொலி).

**திரு. எஸ். இராசாராமன் :** துணைத் தலைவர் அவர்களே, 1983 ஆம் ஆண்டு மே மாதம் முன்னாள் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் தமிழக அரசினுடைய பணத்தைப் பெற்று ஆந்திர அரசிடம் அளித்தார்கள். நாங்கள் இல்லையென்று மறுக்கவில்லை. திட்டம் தீட்டுவதற்கு முன்பே மைய அரசினுடைய அனுமதியை ஆந்திர அரசும், தமிழக அரசும் பெறவில்லை என்ற குற்றச்சாட்டை நான் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். அப்படிப் பெற்றிருந்தால், இந்த அளவு காலதாமதம் ஏற்பட்டிருக்காது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திருமதி இந்திரா காந்தி அவர்களே பாராட்டினார்கள், முன் உதாரணமாக இரண்டு மாநிலங்களும் செயல்பட்டிருக்கின்றன என்று. என்னை, பதில் சொல்கிற மாதிரி வைக்காதீர்கள். கான்ட்ரவர்சி வருகிற மாதிரி பேசாதீர்கள். மைய அரசின் பிரதம அமைச்சர் அவர்களே பாராட்டினார்கள். கற்பனை செய்து இரண்டு பேருமே கன்சல்ட் செய்யவில்லையென்று சொல்வதுமாதிரி இங்கே எழுப்புவது வேண்டாம்.





**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, இன்னும் சொல்லப் போனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்டதற்குப் பிறகு, இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் சென்னை கடற்கரையில் பேசிய கூட்டத்தில், அவர்களே, இந்தத் திட்டத்தை அறிவித்தார்கள்.

**திரு. எஸ். இராசாராமன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்குக் காங்கிரஸ் கட்சி ஒன்றும் எதிர்ப்பாக இல்லை. பாரதத்தினுடைய பிரதமர் அவர்களை அழைத்தார்கள், தலைமை தாங்கச் செய்தார்கள். நாங்கள் எதையும் இல்லையென்று மறுக்கவில்லை. அதே நேரத்தில், இங்கே நிதிநிலை அறிக்கையிலே குற்றச்சாட்டு சொல்லியிருக்கிறார்கள். மைய அரசு காலதாமதம் செய்கிறது, அதன் பயனாக இன்றையதினம் எங்களுக்குப் பல வழிகளிலே நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று தமிழக அரசு குற்றம் சாட்டியிருக்கிறது மைய அரசை. ஆனால், நான் ஒன்றை வலியுறுத்துகிறேன், தமிழக அரசும், ஆந்திர அரசும் திட்டம் தீட்டுவதற்கு முன்பே, மைய அரசு அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும். அதுதான் முறை. அனுமதி பெற்று செய்திருந்தால், காலதாமதத்திற்கு இடம் ஏற்பட்டிருக்காது என்ற குற்றச்சாட்டை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதற்கு அமைச்சர் அவர்களும் பதில் சொல்லிவிட்டார்கள். ஆகவே, அதை விட்டுவிட்டு, வேறு பொருள் பற்றி பேசுங்கள்.

**திரு. எஸ். இராசாராமன் :** துணைத் தலைவர் அவர்களே, மின்சாரத்தைப் பொறுத்தவரை, வடசென்னை, தூத்துக்குடியில் தெர்மல் ஸ்டேஷன் அமைக்க இருப்பதாக நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதுபற்றி மதிப்பீடு செய்வதற்கு, ஆலோசனை சொல்வதற்கு, டாடா நிறுவனத்திற்கு ரூ. 1 கோடி கட்டணமாகக் கொடுத்திருக்கின்றார்கள். இந்தக் கட்டணத்தை டாடா நிறுவனத்திற்குக் கொடுத்ததை விட, பல்வேறு நிறுவனங்களிடமிருந்து டெண்டர் பெற்று, குறைந்த தொகையை யார் கோட் செய்திருந்தார்களோ,

அவர்களுக்கு அளித்திருக்கலாம்; அப்படிச் செய்யவில்லையென்ற குற்றச்சாட்டை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மதுவிலக்கைப் பொறுத்தவரையிலே, 1987-லே மதுவிலக்கு அமுல்படுத்தப்படும், சாராயக் கடைகள், கள்ளுக் கடைகளை எல்லாம் நாங்கள் மூட இருக்கிறோம் என்று இந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறீர்கள். என்னைப் பொறுத்தவரையில், விலையுயர்ந்த வெளிநாட்டு மது பானங்களை ஒரு பக்கத்திலே திறந்துவிட்டு, மறு பக்கத்திலே, கள்ளுக் கடைகளை, சாராயக் கடைகளை மூடிவிட்டு, மதுவிலக்கை அமுல்படுத்துவோம் என்று சொல்வது எந்தவிதத்திலே பொருத்தமானது என்பதை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழில் துறையைப் பொறுத்தவரையில் தமிழ் நாட்டிலே கடந்த 20 ஆண்டுகளாக முன்னேற்றம் எதுவும் இல்லை என்ற குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன். பல்வேறு துறைகளில் வளர்ச்சி இல்லாததுபோல தொழில் துறையிலும் வளர்ச்சி இல்லை. எத்தனையோ ஆலைகள் இன்றைக்கு மூடிக் கிடக்கின்றன. பல ஆலைகள் உடல் நலம் சரியில்லாதவர் முடங்கிக் கிடப்பதைப்போல காட்சியளிக்கின்றன. குறிப்பாக டான்சி நிறுவனத்தின் மூலம் தொடங்கப்பட்ட தொழில்கள் எல்லாம் பல மூடப்பட்டுள்ளன, பல மூடப்படும் நிலையில் உள்ளன. அதைப் போன்ற மிக நேர்த்தியான உயர்ந்த ரகத் துணி உற்பத்தியாகிற மேட்டூர் மில் மூடிக் கிடக்கிறது. இப்படிப்பட்ட பல்வேறு தொழிற்சாலைகள் தமிழ் நாட்டில் இன்றைக்கு மூடிக் கிடக்கின்றன. இந்த நிலை மேலும் நீடித்தால் தமிழ் நாட்டின் வளர்ச்சி பாதிக்கும். அதனால் பொருளாதார முடக்கம் ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, இதை எல்லாம் நீங்கள் கவனத்தில் கொண்டு நல்ல முறையில் செயல்பட வேண்டுமென்று கேட்டு, விடை பெறுகிறேன். வணக்கம்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** துணைத் தலைவரவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர். இந்தியாவின் மிகப் பெரிய பொறுப்பிலே இருக்கிற, பாரதப் பிரதமரையே தட்டிக்





கழிக்கின்ற வகையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பேச்சு அமைந்திருந்தது. கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தை தொடங்கி வைத்தவரே பாரதப் பிரதமர்தான். அப்படிப்பட்ட திட்டத்திற்கு அனுமதி இல்லை என்றும், முன் அனுமதியைப் பெற்றிருக்க வேண்டாமா என்றும் கேட்டார்கள். நிறைவேற்ற முடியாத ஒரு திட்டத்தை, மத்திய அரசில் அனுமதி கொடுக்க முடியாத ஒரு திட்டத்தை பாரதப் பிரதமர் எப்படி தொடங்கி வைத்தார்? எப்படி அந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டார்? பாரதப் பிரதமர் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டதே தவறு என்று சொல்கிறாரா? அவருடைய பேச்சு பாரதப் பிரதமரின் தலைசிறந்த நிர்வாகத் திறனை சந்தேகிக்கின்ற வகையில் அமைந்திருக்கிறது. . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்ல. அவர் சபையின் மரபுகளை மீறவில்லை, விதிகளை மீறவில்லை. அவருடைய கருத்தைச் சொன்னார், அதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்தார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் இப்படி குறுக்கிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை என்று சொல்லிவிட்டேன். தயவுசெய்து உட்காருங்கள்.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்:** சார், ஒரு கிளாரிஃபிகேஷன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரே பிரச்சனை பற்றி மீண்டும் மீண்டும் பேச வேண்டாம். உங்கள் கட்சியிலிருந்து பேசும்போது விளக்கம் சொல்லலாம்.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்:** நான் என்ன சொல்கிறேன் என்பதை தயவுசெய்து கேட்டுவிட்டு, உங்கள் முடிவைச் சொல்லுங்கள். எங்கள் கட்சியைச் சேர்ந்த நண்பர் இராசாராமன் அவர்கள் பேசும்போது கிருஷ்ணா நதி நீர் சம்பந்தமாக மத்திய சர்க்கார் அனுமதி வழங்கியும் அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட முடியாமல் இருப்பதற்கு மத்திய சர்க்கார் தான் காரணம் என்று ஆளும் கட்சி உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள்; அதற்கு பதில் சொன்னார்கள். பாரதப் பிரதமர் இந்தத் திட்டத்தை தொடங்கி வைத்ததை எல்லோரும் அறிவார்கள். ஆனால் இந்தத் திட்டம் தமிழ்நாடு சர்க்கார்—மத்திய சர்க்கார் மட்டும் சம்பந்தப்பட்டது அல்ல

மகாராஷ்டிரம், ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மூன்று மாநிலங்களும் சேர்ந்து நிறைவேற்ற வேண்டிய திட்டம் இது என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அந்த மாநிலங்கள் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டு நிறைவேற்றுவதில் சிக்கல் வந்திருக்கிறது; நடைமுறையில் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் தண்ணீர் என்பது பொதுப் பிரச்சனை. ஆகவே, மின்சாரத்தைப் போலவே தண்ணீர் பிரச்சனையையும் மத்திய சர்க்காரே ஏற்று நடத்த வேண்டும் என்று இந்த மாநில சர்க்கார் இந்த மாமன்றத்தில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றுமா என்று நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10.50)

*திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் அளித்திருக்கிற 1986-87 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை வரவேற்று ஒரு சில கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இறுதியாகத் தெரிவித்த கருத்து பற்றி ஒன்றை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அனைத்து நதிநீரையும் தேசியமயமாக்க வேண்டும் என்று சென்ற கூட்டத் தொடரிலே வலியுறுத்திச் சொன்ன அதே கருத்தை இந்த நேரத்திலும் வலியுறுத்த நான் விரும்புகிறேன். முன்னாள் பாரதப் பிரதமர் அன்னையார் இந்திரா காந்தி அவர்கள் கலந்து கொண்ட தெலுங்கு கங்கை துவக்க விழாவில் மகாராஷ்டிர முதலமைச்சரும், கர்நாடக முதலமைச்சரும், ஆந்திர முதலமைச்சரும் ஒருசேர இருந்துதான் கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தினைத் துவக்கினார்கள் என்பதை இந்த நேரத்தில் இந்த மன்றத்தின் கவனத்திற்கும் காங்கிரஸ் உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கும் நான் கொண்டுவர விரும்புகிறேன். ஆக நல்லதொரு திட்டம் நமக்கு வழங்கப்பட வேண்டும் என்பதில் அன்னையார் இந்திரா காந்தி அவர்கள் ஆர்வம் காட்டி நம்முடைய சென்னை மாநகரத்திற்கு வந்திருந்து அந்தத் திட்டத்தைத் துவக்கியதோடு மட்டுமல்லாமல் அந்தத் திட்டத்தைத் துவக்கக் காரணமாக இருந்த தமிழக





முதல்வரையும், ஆந்திர முதல்வரையும் பாராட்டி தேசிய ஒருமைப்பாட்டை நிலைநாட்டுவதற்குரிய ஒரு சிறந்த திட்டம் இது என்று பாராட்டுரையும் சொல்லியிருக்கிறார்கள். அவர்களால் பாராட்டப்பட்ட ஒரு திட்டம், தமிழக மக்களின் தாகத்தைத் தீர்க்கிற திட்டமாக சென்னை மாநகரத்தின் குடிநீர் தேவையை நிறைவேற்றுகிற திட்டமாக, ஆந்திராவில் உள்ள பல பகுதிகளை வளப்படுத்துகிற திட்டமாக இருக்கின்ற ஒரு திட்டம் ஏனோ தடைப்படுகிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்டுவதற்குத் தான் இந்த விவாதம் அமைந்து இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

இந்த நேரத்தில் காங்கிரஸ் பேரியக்கத்தில் இருக்கிற நண்பர்கள் மற்றும் டெல்லியிலே நாடாளுமன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் தொடர்ந்து இந்தத் திட்டம், காலதாமதப்படுத்தப்படாமல் விரைவில் நிறைவேற்றுவதற்குரிய வகையில் உரிய முயற்சிகளை எடுத்துக் கொண்டால் தான் சென்னை மக்கள் உங்கள் மீது கொண்டிருக்கிற நம்பிக்கை வீண் போகாமல் இருக்கும். அந்த அளவுக்குத்தான் உங்கள் எதிர்காலத்தினுடைய செயல்பாடும் இருக்கும் என்று நான் இந்த நேரத்தில் எதிர்பார்க்கிறேன்.

அதுமட்டுமல்ல. இந்தியாவினுடைய சுதந்திரத்திற்குப் பிறகு இந்திய நாடு அரசியல் சட்டத்தை வகுத்திருக்கிறது. அப்படி நாமே வகுத்துக் கொண்ட அரசியல் சட்டத்தின்படி கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கின்ற குறிக்கோள்களை நாம் எய்தி இருக்கிறோமா என்பதைப் பலரும் எண்ணிப் பார்க்க வேண்டியவர்களாகத் தான் இருக்கிறோம். நாம் மட்டுமல்ல. 35 ஆண்டுகளுக்குப் பிறகு, இன்றையதினம் பிரதம அமைச்சராக இருந்து வருகின்ற மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்கள் கூட 35 ஆண்டுகள் நாம் திட்டமிட்டபடி அதாவது நமது திட்டங்களின் மூலம் எதிர்பார்த்தபடி நாடு முன்னேறவில்லை என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இருக்கின்ற குறைபாடுகள் களையப்பட வேண்டும் என்றும் தொடர்ந்து இந்த நாடு முன்னேறுவதற்குரிய வகையில், நாட்டினுடைய நலிவையும் ஏழை எளிய மக்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்குகின்ற வகையில் நம்முடைய ஐந்தாண்டுத் திட்டங்கள் பயனுடையதாக அமைய வேண்டும்; அந்த வகையில் ஐந்தாண்டுத் திட்டங்கள்

அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்று அவர்கள் பேசி இருக்கிறார்கள். இப்படி அவர்களே ஒப்புக் கொண்டதற்குப் பின்னாலும் நாம் ஏதோ இந்தத் தமிழகத்தை—தமிழகத்தை மட்டுமல்ல, இந்தியா முழுவதையும் — வளமுடைய நாடாக ஆக்கிவிட்டோம் தொழில் வளத்திலே நாம் முன்னேறி விட்டோம், வறுமையை ஒழித்துவிட்டோம் என்று யாரும் தங்களைப் பாராட்டிக் கொள்வதற்குரிய வகையில் தகுதியைப் பெற்று விட்டோம் என்று நான் கருதவில்லை.

ஆனால், தமிழக அரசைப் பொறுத்தவரையில் நமக்கு இருக்கிற நிதியாதாரத்தை வைத்து,—மத்திய அரசு நமக்கு நிதி ஒதுக்குகிறதோ இல்லையோ, மானியங்களைக் கொடுக்கிறதோ இல்லையோ,—எவ்வளவு சிறப்பாக திட்டங்களை நிறைவேற்ற முடியுமோ அவ்வளவு சிறப்பாக நம்முடைய திட்டங்களை நாம் நிறைவேற்றிக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதற்கு இந்த நிதிநிலை அறிக்கை மட்டுமல்ல; கடந்த 7 ஆண்டுகளாக இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற நிதிநிலை அறிக்கைகளும் உதாரணங்களாக இருந்து கொண்டிருக்கின்றன. நாட்டுக்கு முன்னுதாரணமாக விளங்கிக் கொண்டு இருக்கின்றன. அந்த வகையில் நம்முடைய திட்டங்களின் வரையறைகளைப் பார்க்கிறபோது தமிழகம் எவ்வளவு சிறப்பாக நிதிநிலையிலேயும், மற்ற அரசின் திட்டங்களை நிறைவேற்றி செயல்படுத்துவதிலும் முன்னேறி இருக்கிறது என்பதைக் கண்கூடாகக் காண முடியும். அந்த வகையில் நாம் நம்முடைய திட்டச் செலவுகளை உயர்த்திக் கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு 1,200 கோடி என்ற அளவில் நம்முடைய ஆண்டுத் திட்டங்களைப் போட்டபோது மத்திய அரசில் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் அதைப் பாராட்டி இருக்கிறார்கள்.

கோவையிலே நேற்று முன்தினம் மத்திய அரசின் அமைச்சர் திரு. சிதம்பரம் அவர்கள், நாம் ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்ற மேற்கொண்டிருக்கிற கடமையைப் பாராட்டி பேசி இருக்கிறார்கள். நம்முடைய திட்டங்களைப் பொறுத்தவரையில் மத்திய அரசு அங்கீகரித்தது. 1,059 கோடி என்றிருந்தாலும் 1,200 கோடியாக தமிழக அரசு நிறைவேற்றியிருப்பது





பாராட்டுக்குரியதாக அமைந்து இருக்கிறது என்று சொல்லி யிருக்கிறார்கள். ஆனால் அதேநேரத்தில் தமிழக அரசு வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஆர். எல். இ. ஜி. பி. போன்ற திட்டங்களை நிறைவேற்றுவதைப் பொறுத்தவரையில் 35 விழுக்காடுதான் நிறைவேற்றி இருக்கிறோம், அந்த அளவுக்குத் தான் வெற்றி கண்டிருக்கிறோம் என்ற வகையில் ஒரு குறையாகச் சொல்லி யிருக்கிறார்கள். அதேநேரத்தில் அந்த செய்தி வந்த பத்திரிகையின் மறுபக்கத்திலே இந்தியாவினுடைய வறுமை ஒழிப்புத் திட்டம் பயனளித்திருப்பது 5 சதவீதம் என்று அறிக்கை வந்திருக்கிறது. எனவே நான் காங்கிரஸ் நண்பர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் தேசிய கட்சிக்காரர்கள், தேசத்திற்குச் சொந்தம் நீங்களே என்று உரிமை கொண்டாடக் கூடியவர்களாக இருக்கிறீர்கள். எனவே இந்தியாவினுடைய ஒட்டுமொத்த நன்மையைக் கருத்தில் கொண்டு தமிழகத்திற்கு வாருங்கள் என்று நான் கேட்கிறேன்.

அந்த அமைச்சருக்கும், மற்ற உறுப்பினர்களுக்கும் நான் வலியுறுத்திச் சொல்வது என்னவென்றால் இந்தியாவில் இருக்கிற நிதியாதாரம், இந்தியாவில் இருக்கிற ரிசோர்சஸ் அதாவது மூலப் பொருட்களின் வினியோகத்தை பொறுத்த வரையில் முறைப்படி தமிழகத்திற்கு உரிய பங்கை பிரித்துக் கொடுக்கவில்லை என்பதுதான். அதுதான் நிதிநிலை அறிக்கையில் நாம் கோடிட்டுக் காட்டியிருப்பதாகும். இது பல ஆண்டுகளாக எடுத்துக் காட்டியிருக்கின்ற ஒரு உண்மையாக இருக்கிறது. இந்திய அரசினுடைய நிதிநிலை அறிக்கை 45 ஆயிரம் கோடி ரூபாய் என்ற அளவுக்கு இருக்கிறது. இந்திய அரசின் மூலதனம் தொழில்களைப் பொறுத்தவரையில் 20 ஆயிரம் கோடியாகும். அதிலே பத்து சதவீதமாவது தமிழகத்திற்கு ஆண்டுக்காண்டு கொடுக்கப்பட வேண்டும். 20 ஆயிரம் கோடியில் 10 சதவீதம் என்கிறபோது குறைந்தது ஒரு ஆயிரம் கோடியாவது தமிழகத்தினுடைய திட்டத்தில் மத்திய அரசினுடைய மூலதனமாக நாம் பெற வேண்டும். ஆக, கடந்த காலங்களில் அதை 67-லிருந்து கணக்கு எடுத்துக் கொண்டாலும் சரி, 54-லிருந்து எடுத்துக் கொண்டாலும் சரி நிச்சயமாக நாம் பெற வேண்டிய விகிதாசாரத்தை நம்முடைய பங்காக நாம் பெறவில்லை என்பது யதார்த்தமான உண்மை. ஆனால் அந்த

[திரு. மா. சின்னராசு] [1986 மார்ச் 25

உண்மையை மறைத்து நாம் ஏதோ நிறைய பெற்று விட்டோம், 54 வரை பெற்றிருக்கிறோம், 67 வரை பெற்றிருந்தோம், ஆனால் மீண்டும் காங்கிரஸ் கட்சி பதவியில் வந்தால் அதை மீண்டும் பெறுவோம் என்று சொல்வது ஒரு சமயம், அது மக்களுக்கு சொல்கிற ஒரு சமாதானமாக இருக்கலாமே தவிர, அல்லது நாங்கள் இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்தால் அதை நிறைவேற்று வோம் என்று சொல்லுகிற ஒரு தேர்தல் வாக்குறுதியாக இருக்கலாமே தவிர, உண்மைக்கு ஏற்புடையதாக இருக்காது. ஆகவே, எந்தக் காலத்திலும் மத்திய அரசாங்கத்தின் 10 சதவீத மூலதனத்தைகூட தமிழகம் பெறவே இல்லை. அதைப் பெற வேண்டும் என்பதுதான் நம்முடைய கோரிக்கை. பெரிய நிறுவனங்களாக, பெரிய தொழிற்சாலைகளாக மத்திய அரசாங்கம் மூலதனம் போட்டு தொடங்கவில்லை என்றால், அதை ஒட்டி வளருகிற வளர வேண்டிய சிறு தொழில்களும் இங்கே வர முடியாது.

எவ்வளவதான் தமிழகத்தின் நிதியைப் போட்டே நாம் தொழிற்சாலைகளை துவக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தாலும் கூட, மத்திய அரசாங்கத்தினுடைய பொருளாதார ஏற்றத்தாழ்வினால், மத்திய அரசாங்கத்தினுடைய நிதிக் கொள்கையால், வரி முறைகளினால், அதனுடைய எக்ஸைஸ் டியூட்டி போன்றவற்றில் அடிக்கடி செய்கிற பல மாறுதல் களினால், ஏற்படுகிற அதிக விலையின் காரணமாக, அல்லது நிர்ணயம் செய்யப்படுகிறபோது ஏற்படுகிற விலை குறைவின் காரணமாக, உருவாகின்ற பொருளாதார விக்கத்தை, தமிழக அரசோ மேற்கு வங்க அரசோ அல்லது கேரள மாநில அரசோ தடுத்துவிட முடியாது. அந்த யதார்த்தமான உண்மையை நாவலர் அவர்கள் தன்னுடைய அறிக்கையிலேயே சுட்டிக் காட்டி யிருக்கிறார்கள். ஆக, இந்தியாவினுடைய பொருளாதார வீழ்ச்சிக்கும் இந்தியாவினுடைய பொருளாதார உயர்விற்கும் கட்டுப்பட்டதுதான் தமிழகம்.

75 கோடி மக்கள் வாழ்கின்ற இந்தியாவில் 5 கோடி மக்களை கொண்டிருக்கிற தமிழகம் இந்தியாவினுடைய ஏற்றத்தாழ்வு களில் பங்குகொள்ள வேண்டிய கட்டாய நிலைமையில்தான் இருக்கிறது என்பதை வருத்தத்தோடு சுட்டிக் காட்டிக் கொள் கிறேன். அண்மையில் ஏற்பட்ட விலை உயர்வு, உற்பத்திக்கு



1986 மார்ச் 25] [திரு. மா. சின்னராசு]

சம்பந்தம் இல்லாத விலை உயர்வு. ஆனால் பெட்ரோலின் விலையை உயர்த்தியிருக்கிறோம் என்ற சொன்னபோது மட்டும், எல்லோரும் கண்டித்தார்கள், தமிழக அரசு கண்டிக்கவில்லை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கண்டிக்கவில்லை என்ற குற்றச்சாட்டை சொன்னார்கள். நாவலர் அவர்கள் அளித்த நிதிநிலை அறிக்கையிலேயே கோடிட்டுக் காட்டியிருக்கிறோம்; இந்த விலை உயர்வு நம்முடைய பொருளாதாரத்தை பாதித்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறோம். நாடாளுமன்றத்திலே அதை சுட்டிக் காட்டி நம்முடைய உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். ஒரு சமயம், எதிர்ப்பு என்பது, வீதியிலே கூட்டம் போடுவதும், போராட்டம் நடத்துவதும் தான் ஜனநாயக ரீதியானது என்றால், நான் உள்ளபடியே வருந்துகிறேன். அது அல்ல. சொல்லவேண்டிய விஷயத்தை சொல்ல வேண்டிய விதத்தில், சொல்ல வேண்டிய நிலைமையில் நாம் சுட்டிக் காட்டியிருக் கிறோம்.

பாரதப் பிரதமர் அவர்கள் பெட்ரோலின் விலை உயர்வு இம்போர்ட் செய்கிற விலையின் உயர்வு காரணமாகத்தான் என்று சொல்லவில்லை. பெட்ரோலின் உபயோகத் தன்மையை குறைக்க வேண்டும். அதன்மூலம் பெட்ரோலின் கன்சம்ஷன் குறைக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இது உள்ளபடியே ஏற்பு உடையக் கொள்கை அல்ல என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பெட்ரோல் என்பது மிக லக்சுரியான அயிட்டம் அல்ல. மிகப் பெரிய பணக்காரர்கள் மட்டுமே உபயோகப்படுத்தக்கூடிய பொருள் அல்ல. சாதாரண தொழிலாளர்கள் கூட ஒரு ஆஸ்பத்திரிக்கு போக வேண்டு மானால் டாக்சி உபயோகப் படுத்துகிறார்கள். அதன் கட்டண உயர்வு எளியவர்களை, சாதாரண மக்களை, நடுத்தர மக்களை பாதிக்கின்ற ஒன்று என்ற காரணத்தாலும், அது எல்லா வகையிலும் தமிழகத்தினுடைய திட்டச் செலவை அதிகரித்திருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய எல்லையை அடைய முடியாது, இது தடைக் கல்லாக இருக்கிற காரணத்தினால்தான். இந்த விலை உயர்வு தேவையற்ற விலை உயர்வு என்று சொல்கிறேன். நம்முடைய பொருளாதாரத்தை சீர்குலைக்கிறது இது என்ற உண்மையையும் எடுத்துச் சொல்லி யிருக்கிறோம். ஆக அந்த வகையிலே இந்த விலை உயர்வு இருக்கிறது.

[திரு. மா. சின்னராசு] [1986 மார்ச் 25

நாம் காலையிலே கூட தேனிரும்பு பற்றியும், பிக் ஐயர்ன் பற்றியும் பேசினோம். ஆக அவைகள் எல்லாம் இந்த 10 ஆண்டுகளில் எவ்வளவு சதவீதம் விலை உயர்ந்திருக்கிறது என்று பார்க்கும்போது, இந்த உயர்வு தேவைதானா என்பதை மத்திய அரசாங்கம் பரிசீலித்துப் பார்க்க வேண்டும். தேவைக்கு ஏற்ற அவசியமான உயர்வுதானா, அல்லது தேவைக்கு மேலும் போடப்பட்டு, இன்னும் பொருளாதார சிக்கலை, விலை உயர்வை ஏற்படுத்தியிருக்கிறதா என்று மத்திய அரசு ஆராய்ந்து பார்க்க வேண்டியது அவசியமாகும். ஆக அந்த வகையிலே நாம் இன்று 1,200 கோடிக்கு திட்டம் போட்டிருக்கிறோம். அதேபோன்று அத்தியாவசிய பண்டங்களின் விலை உயர்வின் காரணமாக, அல்லது மூலப்பொருள் தட்டுப்பாட்டினால், அல்லது இறக்குமதி கொள்கையினால் ஏற்பட்ட விலை உயர்வு தானா என்பதையும் மத்திய அரசாங்கம் கவனிக்க வேண்டும். இருக்கின்ற மூலப் பொருள்களை முறையாக வழங்காவிட்டால், மூலப்பொருள்களின் தட்டுப்பாடு ஏற்படுகிறது. அந்த வகையில்தான் நிலக்கரி இரும்பு போன்றவை. மத்திய அரசாங்கத்தின் கீழ் கட்டுப் படுத்தப்படுகின்ற நிறுவனங்களின் மூலமாகத்தான் திட்டமிட்டு கொடுக்கப்படுகிறது. ஆகவே இப்படிப்பட்ட இனங்களின் விலை உயர்வு காரணமாக, அந்த விலை உயர்வின் மூலம் தமிழகத்தின் தொழில் வளர்ச்சி மின்சார உற்பத்தி பற்றாக்குறை நிலை தொடர்ந்து இருக்கக்கூடாது என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

தமிழகத்தினுடைய திட்டங்கள் ஆண்டுக்காண்டு வளர்ந்து வருகிறது. அதனால் திட்டத்தினுடைய மதிப்பீடும் வளர்ந்திருக்கிறது. சென்ற ஐந்தாண்டு திட்டங்கள் என்று பார்க்கிறபோது 1982-83-ல் 746 கோடியினை ஒதுக்கியிருந்தோம். 1983-84-ல் அது 825 கோடியாக உயர்ந்தது. அதே திட்டச் செலவு 1985-86-ல் 1,069 கோடியாக ஆகி, இன்று அது 1,200 கோடியாக உயர்ந்திருக்கிறது. இது நம்முடைய நிதி நிலைமை. எந்த ஆண்டும் கூடுதலான வரியை மக்கள் மீது சுமத்தாமல், பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைப் போல, வரியை குறைத்து வருமானத்தைப் பெருக்கி, மக்களுக்கான நல்ல காரியங்களைச் செய்வதற்கு திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றுகின்ற புரட்சித் தலைவர் அவர்கள்,



1986 மார்ச் 25] [திரு. மா. சின்னராசு]

இந்தியாவில் இருக்கிற பல அரசியல் தலைவர்களும் பாராட்டும் நிலையில் தமிழகத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் பல மத்திய அமைச்சர்கள் இங்கே பேசிய அல்லது டெல்லியில் நடந்த மாநாடுகளில் மற்றும் இது சம்பந்தப்பட்ட நிதித் துறைக் கூட்டங்களில் தெரிவித்த பாராட்டுக்களை இங்கே இருப்பவர்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அந்த அளவிற்கு இப்போது 1,200 கோடி ரூபாய் திட்டமிட்டு செலவிற்கு ஒதுக்கியிருக்கிறபோது தமிழகம் பொருளாதாரத்தில் நலிந்துவிட்டதென்றோ, அரசாங்கத்தினுடைய நிதிக் கொள்கை காரணமாக நாம் தாழ்ந்து விட்டோம் என்றோ சொல்வதற்கு ஆதாரமில்லை என்பதை முதலில் சொல்ல விரும்புகிறேன்.

(முற்பகல் 11.00)

அதைப்போல தான் ஒவ்வொரு துறைக்கும் ஒதுக்கியிருக்கிற பணமும் ஆண்டிற்காண்டு கூடியிருக்கிறது. 1982-83 ஆம் ஆண்டில் 340 கோடி அளவிற்கு கல்விக்கென்று நாம் ஒதுக்கியிருக்கிறோம். இன்றைக்கு 534 கோடியை அது அடைந்திருக்கிறது. ஆகவே இப்படி சீராக எல்லா துறைகளிலும் சமுதாய நலத்திற்காக போடுகிற திட்டமானாலும் சரி அல்லது ஒட்டுமொத்தமான வளர்ச்சிக்காக போடுகிற திட்டங்களானாலும் சரி, நாம் ஒதுக்கீட்டை அதிகரித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், மத்திய அரசிடமிருந்து நாம் பெறுகிற உதவி ஆண்டிற்காண்டு கணிசமாக உயரவில்லை. இன்னும் சொல்லப் போனால் இந்த ஆண்டு வரி இனங்களில் கிடைக்கிற வருவாய் சென்ற ஆண்டை விட குறைந்திருக்கிறது. அதையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே மத்திய அரசு வரிக் கொள்கை வகுத்திருப்பதை சர்க்காரியா கமிஷனில் நம்முடைய அரசு வலியுறுத்திப் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தத் திராவிட இயக்கத்தைத் துவக்கிய காலத்திலிருந்து நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிற அரசியல் அமைப்புச் சட்டத்தில் மாறுதலை ஏற்படுத்தி அதிக வருமானத்தை மாநிலங்கள் பெற்று அதிகக் கடமைகளை மக்களுக்காக மாநிலங்கள் ஏற்றுக்கொள்கிற அளவிற்கு நாம் சீரமைப்பு ஏற்படுத்தினால் தவிர இந்தப் பிரச்னைக்கு தீர்வு காண முடியாது என்கிற கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன். ஆகவே, அந்த வகையில் இன்றைக்கு இந்திய அரசாங்கம் நம்முடைய கான்ஸ்டிட்யூஷன் பிரிவுகளில் [illegible] யிருப்பதைப் போல

13645

[திரு. மா. சின்னராசு] [1986 மார்ச் 25

" We, the people of India, having solemnly resolved to constitute India into a sovereign socialist secular democratic Republic and to secure to all its citizens, social, economic and political justice.'

சமுதாய பொருளாதார அரசியல் சுதந்திரத்தைப் பெறுவதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும். ஆனால் இன்றைக்கு நான் வருத்தத்தோடு சொல்கிறேன். கடந்த ஆண்டு நம்முடைய மத்திய அரசு நமக்காக வகுத்திருக்கிற திட்டங்கள் அல்லது கொள்கைகள், Social, Economic and Political Justice, சாதாரண மக்களுக்கு வழங்குவதாக இல்லை என்பது ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மை. ஆகவே அந்த 'இன்ஈக்குவாலிட்டீஸ்கள்' எந்தவிதத்தில் இருந்தாலும் மாநிலங்களில் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதில் நமக்கிருக்கிற மாறுபாடுகள், வேறுபாடுகளானாலும் சரி, பொருளாதாரத்தை நாம் சரியாக பகிர்ந்து கொடுப்பதில் இருக்கிற குறைபாடுகள் ஆனாலும் சரி, அல்லது அரசியல் ரீதியிலே இந்தியாவினுடைய மொழிக் கொள்கைப் போன்று பிரச்னையாக இருந்தாலும், நாம் மெஜாரிட்டியாக இருக்கிறோம், அதிக எண்ணிக்கையில் இருக்கிறோம், அதிகம் பேர்கள் பேசுகிறோம் என்பதற்காக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கிற திணிப்பு முயற்சியில் ஈடுபடுகிற போதும் சரி, நாம் அரசியல் சட்டத்தில் வகுத்திருக்கிற நெறிக்கு முரணானது என்பதை தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே நாம் ஏற்றுக் கொண்ட அரசியல் அமைப்புக்கு விரோதமாக எந்தக் கொள்கைகள் நாட்டிலே நடைமுறைப்படுத்தப்பட்டாலும் நாம் அதை கண்டித்து வந்திருக்கிறோம். அதைத் தான் பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியில் வந்திருக்கிற இந்த அரசும் கண்டித்து வந்திருக்கிறது. புரட்சித் தலைவர் அவர்கள் எந்த நேரத்திலும் அதனைக் கண்டிக்க தவறவில்லை என்பதைக் கூறி மத்திய அரசைப் பார்த்து நீங்கள் கேட்க வேண்டியதை கேட்கவில்லை என்று குற்றம் சாட்டிய சில உறுப்பினர்கள் கருத்திற்கு நான் அதை பதிலாக வைக்க விரும்புகிறேன். அந்த வகையில் நம்முடைய நிதிநிலை அறிக்கை இந்தியாவில் இருக்கிற ஏற்றத்தாழ்விற்கேற்ப சில பாதிப்புகளுக்கு உட்பட்டிருந்தாலும் கூட மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகளை நாம் ஆற்றி வந்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் நினைவு கூர்ந்து கொள்கிறேன்.



1986 மார்ச் 25] [திரு. மா. சின்னராசு]

நம்மை அச்சுறுத்திக் கொண்டிருக்கிற மிகப் பெரிய பிரச்னை வேலையில்லாத் திண்டாட்டம் தான். வேலையில்லாத் திண்டாட்டத்தை நம்முடைய மாநில அரசாங்கத்தின் நிதியிலிருந்து நாம் எவ்வளவு தூரம் தீர்க்கப் போகிறோம் என்பது இன்றைக்கு எல்லோருக்கும் இருக்கிற அச்சம். நம்மால் இயலாது என்பதைக் கூட ஒப்புக்கொள்வதில் தவறில்லை. நமக்கு இருக்கிற நிதியாதாரத்தில் 50 சதவீதத்தை நாம் சம்பளமாக கொடுக்கிறோம். சம்பளமாக பெறுகிற அதிகாரிகள் கூட நமக்கு விரோதமாக இருக்கிறார்கள். இருந்தாலும் பரவாயில்லை. மீதமிருக்கிற 50 சதவீதத்தை வைத்து நாம் எவ்வளவு தூரம் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றி விட முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை சொன்னார்கள். இந்த நாட்டிலே வளர்ந்து வருகிற மிகப் பெரிய பிரச்னை வேலையில்லாத் திண்டாட்டம் தான். வேலையில்லாத் திண்டாட்டத்திலே அடிபட்டிருக்கிற, அதனை உணர்ந்து கொண்டிருக்கிற இளைஞர்கள் வளர வளர இந்த நாட்டின் ஜனநாயகத்திற்கே பெரும் தீங்கு ஏற்படும். அண்ணா அவர்கள் அந்தக் காலத்திலேயே நாடாளுமன்றத்தின் மேலவையில் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். அதைச் சொல்லும் போது,

'The frustrated masses are the most dangerous elements in a political system',

என்று சொன்னார்கள். ஆகவே இன்றைக்கு உணர்ந்து பார்க்க வேண்டும். வளர்ந்து வருகிற மக்கள் தொகையில் படித்து வேலைக்குத் தகுதியான இளைஞர்களுக்கு முழு அளவிற்கு நாம் வேலை வாய்ப்பு என்றைக்கு உருவாக்கப் போகிறோமோ அன்றைக்குத் தான் சுதந்திரம் அடைந்த நாடு என்பதற்கு உண்மையான பொருளை நாட்டு மக்கள் கொள்ள முடியும்.

ஆகவே அந்த அளவிற்கு இன்றைக்கு வளர்ந்து வருகிற வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கான திட்டத்தை மத்திய அரசாங்கத்தினுடைய நிதிநிலை அறிக்கையிலோ, அதனுடைய பொருளாதாரக் கொள்கையிலோ, திட்டங்களிலோ முழு அளவு செயல்படுத்தி இருக்கிறார்கள்

[திரு. மா. சின்னராசு] [1986 மார்ச் 25

என்றோ, அல்லது செயல்படுத்த முயன்று இருக்கிறார்கள் என்றோ நாம் கொள்ள முடியாது. ஆகவே இன்று நாம் வறுமையை ஒழிப்பதற்காக, வேலைவாய்ப்பை உருவாக்குவதற்காக, ஆர்.எல்.இ.ஜி.பி. என்.ஆர்.இ.பி. என்ற திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறோம். அதற்கு கூடுதல் நிதி ஒதுக்கி இருக்கிறோம் என்று சொன்னாலும் கூட, அவைகள் நிரந்தரமாக வேலைவாய்ப்பை உருவாக்குகிற திட்டங்கள் அல்ல. ஆகவே அந்த வகையிலே நிரந்தரமான வேலைவாய்ப்பை உருவாக்கி கொடுப்பதற்கு, கூடுதலான தொழிலை நாம் ஏற்படுத்துவதிலும், இருக்கிற வசதியைப் பகிர்ந்து கொடுப்பதிலும் நாம் முயல வேண்டும்.

இன்னும் சொல்லப் போனால், இங்கே இருக்கிற உறுப்பினர்கள் இதை ஏற்றுக்கொள்வார்களோ, இல்லையோ, நாம் இன்று பல கோரிக்கைகளை வைப்பவர்களுக்கு சம்பளத்தைக் கூட்டிக் கொடுக்கிறோம், வசதிகளை பெருக்கிக் கொடுக்கிறோம், சலுகைகளைக் கொடுக்கிறோம். ஆனால் அதே நேரத்திலே எம்.ஏ., எம்.எஸ்.சி. படித்துவிட்டு, மாதத்திற்கு 250 ரூபாய்க்குக் கூட வேலை செய்ய தயார் என்று, 35 வயதுக்குப் பின்னாலும் எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்சிலே இருக்கிற, வயது வரம்பை எல்லாம் தாண்டி, நடுத்தெருவிலே இருக்கிற இளைஞர்களுக்கு, இருக்கிற வசதியைப் பகிர்ந்து கொடுப்பதற்கு நாம் தயாராக இல்லை. சந்தா செலுத்துகிற, ஆர்கனைஸ்டு யூனியன் என்று ஊழியர்களை வைத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு அச்சப்பட்டு, அந்தச் சங்கத்தினுடைய ஆதரவை பெற வேண்டும் என்பதற்காக, அவர்களுடைய வசதியைக் கூட்டுகிற நேரத்திலே, இருக்கிற நிதி ஆதாரத்தில் நாம் கூட்டிக்கொடுக்கவேண்டும் என்று சொல்கிற நேரத்திலே, அரசியல் கட்சித் தலைவர்கள் கூட இதை வலியுறுத்துகிறார்களே தவிர, இளைஞர்கள் வேலை இல்லாமல் இருப்பவர்களுக்கு அந்தக் கூடுதலாக கொடுக்கிற சம்பளத்தை நிறுத்தி, இவர்களுக்கு பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் நம்முடைய அச்சத்தின் காரணமாக, நம்முடைய சுயநலத்தின் காரணமாக நமக்கு வரவில்லை. ஆகவே நமக்கு 1,000 கோடி ரூபாய் தான் என்றால், அந்த 1,000 கோடி ரூபாயை வைத்துத்தான் இந்த 5 கோடி மக்களைக் காக்க வேண்டும் என்கிறபோது, இந்த 5 கோடி மக்களுடைய நிலைமையையும் சீராக கருத்திலே கொண்டு, அதை



1986 மார்ச் 25] [திரு. மா. சின்னராசு]

இல்லாதவர்களுக்கு கூடுதலான வேலைவாய்ப்பை உருவாக்கி அவர்களுக்கு குறைந்தபட்ச சம்பளத்தையாவது நாம் கொடுப்போம் என்கிற எண்ணம் நமக்கு வர வேண்டும். ஆகவே அந்த வகையிலே நாம் நம்முடைய கொள்கையை நாட்டுக்காக நாட்டிலேயிருக்கிற வேலை இல்லாதவர்களுக்கு, 80 சதவீதம் வேலையில்லாத் திண்டாட்டத்திலே ஆழ்ந்திருக்கிற சாதாரண மக்களுக்காக இதை வகுத்துக் கொள்ளாத வரையில், நாம் எதிர்பார்க்கும் முன்னேற்றத்தை வறுமையை ஒழிக்க முடியாது என்று கருதுகிறேன். ஆகவே அந்த வகையிலே புரட்சித் தலைவருடைய அரசைப் பொறுத்தவரையிலும், 150 ரூபாய், 200 ரூபாயைக் கொடுத்து, ஆயிரக்கணக்கான விதவைகள், சாதாரண ஏழைத் தாய்மார்களுக்கு சத்துணவு மையங்களில் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து பலருக்கும் நாம் வேலைவாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறோம். நம்முடைய நிதி ஆதாரத்திலே இவ்வளவுதான் முடியும். ஆகவே இப்படி சொல்லத்தக்க அளவிற்கு லட்சக்கணக்கான இளைஞர்களை வேலையில் அமர்த்துவதற்கு, பெண்களுக்கான வேலைவாய்ப்பை உருவாக்கி வேலையில் அமர்த்துவதற்கான ஒரு திட்டத்தை, மத்திய அரசாங்கத்திலே இருந்து ஒரு மாசிவ் புரோகிராம் என்ற வகையிலே தகுந்த, விரிந்த ஒரு திட்டத்தை நம்மால் பெற முடியவில்லை. இது தொடர்ந்து நமக்கு ஏற்பட்டு இருக்கிற குறை. ஆக, நாம் சோசியலிசம் என்கிறோம், நம்முடைய அடிப்படை உரிமை என்கிறோம். அடிப்படை உரிமையோடு நம்முடைய மக்களுடைய கடமையை நாம் தந்திருக்கிறோம். ஆனால் வேலைவாய்ப்பு என்பது இந்த நாட்டினுடைய அடிப்படை உரிமையிலே ஒன்றாக கருதப்பட்டு, அதற்காக திட்டங்கள் என்றைக்கு நிறைவேற்றப்படுகிறதோ, Employment also a fundamental right என்று என்று வரையறுக்கப்படுகிறதோ, அன்றுதான் இந்த நாட்டினுடைய சுதந்திரத்திற்கு உண்மையான அர்த்தத்தை சாதாரண மக்கள் புரிந்துகொள்ள முடியும். அதுதான் உண்மையான சுதந்திரம். ஆகவே அந்த வகையிலே நம்முடைய எண்ணத்தை, நம்முடைய செயல்பாட்டை இன்னும் விரிவாக்கி, பொருளாதாரச் சுதந்திரத்தை, மொழி உரிமையை நமக்கென்று திட்டங்களை, நம் மாநிலத்திற்கு நிறைவேற்றுகிற உரிமையை, அரசியல் சட்ட ரீதியாக, வேலைவாய்ப்பு உரிமையை,

[திரு. மா. சின்னராசு] [1986 மார்ச் 25

அடிப்படை உரிமைகளில் ஒன்றாக ஆக்கி, நிறைவேற்ற வேண்டும் என்கிற முயற்சியை மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக நம்முடைய நாவலர் அவர்கள் தந்திருக்கிற நிதிநிலை அறிக்கையில், தமிழகம் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய மாவட்டமாக இருக்கிற கோவை மாவட்டம் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது. இன்றல்ல, தொடர்ந்து 2 ஆண்டு களாகவே வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டம் கோவை மாவட்டம். அதிலும் குறிப்பாக என்னுடைய தொகுதியாக உள்ள, மேட்டுப்பாளையம், ஒரு முழுமையான தாலுக்கா. அந்த மேட்டுப்பாளையம், அவிநாசி, மற்றும் பல்லடம் போன்ற தாலுக்காக்கள் மிகக் கடுமையான குடிநீர்ப் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. விவசாயிகள் பலர் தங்களுடைய கால்நடைகளை ஊரிலேயிருந்து வெளியேற்றி விட்டு, தாங்களும் வெளியேறுகிற நிலையில் இருக்கிறார்கள். எனவே அருள்கூர்ந்து இதைக் கருத்திலே கொண்டு, தமிழகத்திற்கு மொத்தமாக இருக்கிற மழை அளவு ஒருவேளை கூடுதலாக இருக்கலாம், ஆனால் கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கடந்த 10 ஆண்டுகளில் இந்த ஆண்டு மிகக் குறைந்த அளவில் மழை பெய்திருக்கிறது. குடிநீர்ப் பிரச்சனையைப் போக்குவதற்கும், அங்கேயிருக்கிற மக்களுக்கு வேலைவாய்ப்புக்கு நல்ல திட்டங்களை உடனடியாக அவசரகால நடவடிக்கையாக எடுத்து, நிவாரணத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக நம்முடைய தமிழ்நாடு தேர்வாணைக் குழு பற்றி ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். இது அட்டானமஸ் பாடிதான். நல்ல தகுதியானவர்களைத் தேர்ந்தெடுத்து வேலைக்கு அனுப்புகிற ஏற்பாட்டைச் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்பு. ஆகவே அந்த அமைப்பிலே டாக்டர்கள் போகிறார்கள். எஞ்சினியர்கள் போகிறார்கள். பட்டதாரி ஆசிரியர்கள் போகிறார்கள், பட்டப் படிப்பு படித்தவர்கள் போகிறார்கள். இரண்டு நிமிடம் அந்தக் கமிட்டியின் முன்னால் நின்றவுடன் அவர்களுடைய தகுதி



1986 மார்ச் 25] [திரு. மா. சின்னராசு]

நிர்ணயிக்கப்படுகிறது. நான் அட்டானமஸ் பாடி என்கிற அந்தத் தன்மையை குறை கூறுவதற்காகச் சொல்லவில்லை. நடக்கிற தேர்வு முறையைச் சொல்கிறேன். 5 ஆண்டுக் காலம் படித்து பட்டம் பெற்று, ஹவுஸ் சர்ஜனாக 2 ஆண்டுக் காலம், பயிற்சி எல்லாம் பெற்று, அனுபவம் பெற்ற டாக்டர்கள், 2 நிமிடத்திலே, அந்தக் கமிட்டியின் முன்னாலே நிற்கிறபோது, அவர்களுடைய தகுதி நிர்ணயிக்கப்படுகிறது. இது இன்-ஈக்குவாலிட்டி என்பதற்காகச் சொல்கிறேன். அவர்களுடைய தகுதியை உண்மையிலேயே நிர்ணயிப்பதற்கு இந்தக் கமிட்டி பயன்படுகிறதா? உண்மையாக, தகுதியானவர்களை நியமிக்கத் தேவையான மாறுதல்களை நாம் தமிழ்நாடு தேர்வாணைக் குழுவிலே ஏற்படுத்த வேண்டும். அங்கே டெக்னிக்கல் சப்ஜெக்ட்டுக்காக நியமிக்கப்பட்டிருக்கிற உறுப்பினர்களுக்கு மார்க் போடுகிற அதிகாரம் கிடையாது. அவர்கள் கேள்வியை மட்டும் கேட்பார்கள். மார்க் போடுவது அங்கே யிருக்கிற தேர்வாணைக் குழு அதிகாரிகளாக இருக்கும். ஆகவே அந்த முறையில் பலருக்கு அதிருப்தி ஏற்படுகிற நிலைமை இருக்கிறது. தகுதியானவர்களுக்கு வேலை கிடைக்காத நிலை இருக்கிறது, 2, 3 ஆண்டுகளுக்கு முன்னாலே பாஸ் செய்தவர்கள் தேர்வு பெறுவதும், 10 ஆண்டுகளுக்கு முன்னால் தேர்வு பெற்று, பிரமாதமாக பிராக்டிஸ் செய்து கொண்டிருக்கிற நல்ல டாக்டர்கள் தேர்வு பெறாததுமான நிலைமை இருக்கிறது. ஆகவே எப்போதோ ஒரு காலத்திலே ஏற்படுத்தப்பட்ட ஒரு தேர்வு முறை மூலமாக இன்று நிறைய பேர்களை நாம் ரெக்ரூட் செய்கிறபோது தகுதியானவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு அது உதவவில்லை என்கிறபோது, நாம் அந்த தேர்வாணைக் குழுவின் நடைமுறைகளை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கும் முயற்சியிலே ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11.10)

இன்னும் சொல்லப் போனால், இந்தத் தேர்வாணைக் குழுவினுடைய முடிவைப் பற்றி பலர் பலவிதமாக விமர்சிக்கிறார்கள். அண்மையில் வந்த நீதிபதிகள் தேர்வைப் பற்றி கூட வெளியிலே இருக்கிறவர்கள் தவறான கருத்துக்கள் எல்லாம் பேசக்கூடிய அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன. அதைத் தவிர்ப்பதற்கு தேர்வாணைக் குழு, அட்டானமஸ் பாடி

என்றாலும் கூட தேவைக்கு ஏற்ற மாறுதல்களை அந்தத் தேர்வாணைக் குழுவிலே நாம் புகுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். வேலை வாய்ப்பு நம்முடைய கல்வியின் மூலம் எல்லோருக்கும் கிடைக்கின்ற அளவுக்கு, வேலை வாய்ப்புக்குரிய கல்வியை வேலை வாய்ப்புக்குரிய அந்த பாடத் திட்டத்தை நாம் கொண்டு வருவதற்கு, இருக்கிற கல்வி திட்டத்தில் மாறுதல் செய்ய வேண்டும். ஆசிரியர்களுக்கு ஏறற பாட திட்டம் பிளஸ் 2-விலே வைக்கப்பட்டிருக்கிறது. வேலைவாய்ப்புக்குரிய பாட திட்டமாக இந்தத் திட்டங்கள் மாற்றப்பட்டு, பாட திட்டத்திற்கு ஏற்ற ஆசிரியர்களை நியமிக்கின்ற முறை வரவேண்டும். ஆசிரியர்களைப் பயன்படுத்துவதற்காக இருக்கிற காரணத்தால் பிளஸ் 2 படித்து வெளியே வருகிறவர்களை எந்த வேலைக்கு தகுதியானவர்கள் என்று நம்மால் சொல்ல முடியவில்லை. அவர்களாலும் சொல்ல முடியவில்லை. அவர்களை வேலைக்கு அமர்த்த விரும்புகிறவர்கள் கூட அவர்கள் கொடுக்கிற மார்க் பட்டியலை வைத்து இந்த வேலைக்கு தகுதி பெற்றிருக்கிறார்கள் என்று சொல்லக் கூடிய நிலை இல்லை. ஆகவே இதிலே தகுந்த மாற்றங்கள் வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவோடு கேட்டு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நான் நன்றி சொல்லி அமர்கிறேன்.

*திரு. ச. குமரகுருபராமநாதன்:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் பேச வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பட்ஜெட்டில் சாலை வசதிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 3.5 கோடி ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் நாடு முழுவதும் சாலைகள் நன்றாக பராமரிக்கப்பட்ட நிலையில் மிகவும் நல்ல நிலையில் இருப்பதாக, இங்கே நிதியமைச்சர் அவர்கள் தன்னுடைய நிதி நிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் நாட்டின் பல்வேறு பகுதிகளிலே சாலை வசதிகளைப்பற்றி இங்கே ஆளுகின்ற கட்சியைச் சேர்ந்த நண்பர்களும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர்களும் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நண்பர்களெல்லாம் சாலைகளுடைய நிலையைப் பற்றி மிகவும் தெளிவாக இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள்.





அதனுடைய அடிப்படையிலே என்னுடைய தொகுதியை பொறுத்தவரையில் விளாத்திக்குளம் தொகுதி நெல்லை மாவட்டத்தினுடைய கிழக்கு பகுதியிலே இருக்கின்ற மிகவும் பின்தங்கிய நிலையிலே, மிகவும் தாழ்த்தப்பட்ட நிலையிலே இருக்கின்ற ஒரு சூழ்நிலையை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். விளாத்திக்குளம், கோயில்பட்டியிலிருந்து, செல்கின்ற வேம்பார் சாலையாக இருந்தாலும், பிள்ளையார்நத்தத்திலிருந்து செல்கின்ற சாலையாக இருந்தாலும், எப்போதும்வென்றான் சாலையாக இருந்தாலும் விளாத்திக்குளத்திலேயிருந்து செல்கின்ற பெருநாழி சாலையாக இருந்தாலும் மற்றும் அருப்புக்கோட்டை, பாளையம்கோட்டை சாலைகளாக இருந்தாலும் நெடுஞ்சாலையைப் பொறுத்த அளவிலே சிறு சிறு பராமரிப்புப் பணிகளைத் தவிர வேறு எந்தவித பணியும் கடந்த 8, 10 ஆண்டுக் காலமாக செய்யப்படாத ஒரு சூழ்நிலையை உங்களுடைய மேலான கவனத்திற்கு கொண்டு வருகிறேன். நிதிகள் ஒதுக்கப்படவில்லை, நிதி ஆதாரங்கள் இல்லை என்று மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே அறிவிக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகின்றது. எங்கு பார்த்தாலும் குண்டும் குழியுமாக போக்குவரத்துக்கு லாயக்கற்ற சாலைகள் குண்டும் குழியுமாக போக்குவரத்துக்கு லாயக்கற்ற நிலையிலே மேடும் பள்ளமுமாக, பராமரிக்கப்படாத நிலையிலே பல்வேறு சாலைகள் காட்சியளிக்கின்ற கொடுமையைத்தான் நாம் அந்தப் பகுதியிலே காண முடிகிறது. அதே போன்று விளாத்திக்குளம் பகுதியிலே, கோட்டூர் குறுக்கு சாலை என்று ஒரு சாலை இருக்கிறது. இந்தச் சாலை ஆர். எல். ஈ. ஜி. பி. ஸ்கிமிலே எடுக்கப்பட்டு இப்போது ஆர். ஆர். ஸ்கிமிலே நடைபெறுகிறது. கடந்த 3, 4 ஆண்டுகளுக்கு முன்னாலே இந்தச் சாலை விடப்பட்டு இதுவரை எந்தப் பணியும் நடைபெறாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையிலே இந்தச் சாலையினுடைய வேலையை துரிதப்படுத்த வேண்டும். இதிலே கிட்டத்தட்ட 20-க்கும் மேற்பட்ட கிராமங்கள் நேரடியாக தொடர்பு கொண்டும், 40-க்கும் மேற்பட்ட கிராமங்கள் அடுத்தடுத்து இருக்கின்ற ஒரு சூழ்நிலையிலும் அமைந்துள்ள ஒரு சாலையாகும். இந்தச் சாலை விளாத்திக்குளம் தொகுதியினுடைய நடுவில் இருந்து அனைத்து மக்களும் சந்திக்கின்ற ஒரு சாலையாக இருக்கின்ற காரணத்தாலும், இது அனைத்து பகுதிகளுக்கும் மையமாக இருக்கின்ற சூழ்நிலையிலே இந்தச் சாலையைப் பற்றி நீங்கள் கவனம் செலுத்தி இதை

[திரு. ச. குமாரகுருபாராமநாதன்] [1986 மார்ச் 25

விரைவாக முடிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் இந்தச் சாலைகளைப் பொறுத்தவரையில் அதிகமான அளவுக்கு ஓடைகளும், பல குறுக்கீடுகளும் இருப்பதால் அந்தப் பகுதியில் பாலம் கட்டுவதற்கு அதிகமான நிதியை ஒதுக்கி ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் விளாத்திக்குளம், புதூர் ஒன்றியத்திலுள்ள புதூர்—புதலம்பட்டு ரோடு மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றது. ஆகவே அப்படிப்பட்ட அந்த நெடுஞ்சாலைக்கான ரோடு நல்ல முறையில் செப்பனிடப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது சம்பந்தமாக அனைத்துக் கட்சியினரும் உண்ணாவிரதம் இருந்து, ஆர்ப்பாட்டம் எல்லாம் நடத்தினார்கள். இது சம்பந்தமாக மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களிடம் தெரிவித்தும், மாவட்டத்திலுள்ள மற்ற அதிகாரிகளிடம் முறையிட்டும் எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மழைக் காலங்களில் 3, 4 ஆண்டுகளாக 40 நாட்களுக்கு மேலாக பஸ் போக்குவரத்து இல்லாத ஒரு சூழ்நிலையில் விளாத்திக்குளம் தொகுதியில் உள்ள பல சாலைகள் இருக்கின்றன என்பதை உங்கள் முன்னால் எடுத்து வைக்க விரும்புகிறேன். ஆகவே திருநெல்வேலி மாவட்டம் விளாத்திக்குளம் தொகுதியில் அதிகமான சாலைகள் பாதிக்கப்பட்டு இருப்பதால் அதற்கு நீங்கள் அதிகமான நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு ஆணை பிறப்பித்து வேலை விரைந்து நடப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் குடிநீர் வசதியைப் பொறுத்தவரையில், விளாத்திக்குளம் ஒன்றியத்தில் 26 திட்டங்கள் இருப்பதாக அறிகிறேன். அதேபோல் புதூர் ஒன்றியத்தில் 16-க்கும் மேற்பட்ட திட்டங்கள் இருக்கின்றன என்று அறிகிறேன். இவற்றில் பெரும்பான்மையான திட்டங்கள் செயல்படாதவைகளாக இருக்கின்றன. உப்பு நீராக இருப்பதை நல்ல நீராக வழங்குவதற்கு திட்டங்கள் அங்கே போடப்பட்டு இருக்கின்றன. ஓட்டப்பிடாரம் ஒன்றியத்தில் உள்ள பல கிராமங்களும் இதில் இணைந்து இருக்கின்றன. விளாத்திக்குளத்தைச் சேர்ந்த 40-க்கும் மேற்பட்ட கிராமங்கள் அதில் இணைந்து இருக்கின்றன. இந்தத் திட்டம் எல்லாம் முன்னாள் கவர்னர் திரு. சுகாதியா அவர்கள் காலத்தில் எமர்ஜென்சி காலத்தில் உருவாக்கப்பட்டவை. அப்படிப்பட்ட திட்டங்கள் எல்லாம்—பைப், டாங்க், மோட்டார் வசதிகள் இருந்தும் பல ஆண்டு காலமாக மக்களுக்கு பயன் அளிக்காத நிலையில் இருப்பதை உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.



1986 மார்ச் 25] [திரு. ச. குமாரகுருபாராமநாதன்]

விளாத்திக்குளத்தைப் பொறுத்தவரையில் அந்தப் பகுதி முழுவதும் விவசாயத்தை நம்பி நடைபெற்று வருகிறது. நிலத்தடி நீர் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. கிணறு பாசனம் அங்கே கிடையாது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் 7 ஆண்டு காலமாக கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்கள் அந்தக் கிராமத்தை விட்டு வெளியேறுகிற சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் அந்த மக்களுக்கு விவசாயம் நடைபெறுகிற இடங்களில் ஓரளவுக்கு நல்ல ஒரு வாய்ப்பை இந்த அரசு உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் ஒரே ஒரு நீர்ப்பாசனத் திட்டம் தான் அந்தப் பகுதியில் இருக்கிறது. அங்கே ஆற்றுக்கரை அணைக்கட்டுத் திட்டம் என்ற ஒரு திட்டம் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட திட்டம். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் பயன்பெறக்கூடிய அளவுக்கு 15, 16 கிராமங்களுக்கு நீர்ப்பாசன வசதி அளிக்கக்கூடிய திட்டமாக இந்தப் பகுதி விளங்கிக் கொண்டு இருக்கிறது. அவற்றிலிருந்து அந்த அந்த பகுதியில் புதிய குளங்கள் அமைப்பதற்கு வாய்ப்பு இல்லாவிட்டாலும், இந்த அரசால் புதிய அணைக்கட்டுகள் உருவாக்குவதற்கு வாய்ப்பு இல்லாத ஒரு சூழ்நிலை இருந்தாலும் அங்கே புதிய கால்வாய்களை உருவாக்குவதற்கு பக்கத்தில் உள்ள நெடுங்குளம், கண்ணிமார்குட்டம், சக்கனாபுரம், அரியநாயகிபுரம், மூத்தையபுரம், சூரங்குடி, கீழ விளாத்திக்குளம் போன்ற கிராமங்களுக்கு நீர்ப்பாசன வசதி அளிப்பதற்கு போதுமான வசதியும் நல்ல முறையில் வாய்ப்பும் இருப்பதால் அதை ஆய்வு செய்து விரைவில் அமைக்க வேண்டும் என்று உங்களை மிகுந்த அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தொடர்ந்து வறட்சிக்குரிய பகுதியாகவே இந்தப் பகுதி இருந்து வருகிறது. எனவே இந்த விளாத்திக்குளம் தொகுதியைப் பற்றி ஒரு முடிவு எடுத்து இந்தப் பகுதியை வறட்சிக்குரிய பகுதியாக மாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ச. குமாரகுருபராமநாதன்] [1986 மார்ச், 25

இந்தப் பகுதியில் விவசாயிகள் பெற்ற கூட்டுறவுக் கடனை வசூலிப்பதற்கு ஜப்தி நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அப்படிப்பட்ட கடுமையான நடவடிக்கையை உடனடியாக நிறுத்தி வைக்க ஆணையிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் வறட்சியால் பாதிக்கப்பட்ட இந்த பகுதியில் பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக இருப்பதால் அவர்களுக்கு சிறு தொழில் உருவாக்குவதற்கு அரசு மேலான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பால் பண்ணைத் தொழிலைப் பொறுத்தவரையில் பல்வேறு பண்ணைகள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் அவைகள் செயல்படாத சூழ்நிலையில் இருக்கின்றன. காரணம் அதிகாரிகளின் கவனக் குறைவால் இந்த நிலை ஏற்படுகிறது என்று நான் அறிகிறேன். அப்படிப்பட்ட இடங்களில் நடைபெறும் தவறுகளை விசாரணைச் செய்து இந்தப் பால் பண்ணைத் தொழில் மேலும் நல்ல முறையில் நடைபெறுவதற்கு வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று இந்த நல்ல நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

தீப்பெட்டித் தொழிற்சாலை உருவாவதற்கு நல்ல வாய்ப்பும் வசதியும் இருக்கிறது. சாத்தூர், சிவகாசி மற்றும் கோவில்பட்டி போன்ற பகுதிகளில் சிறு தொழிலாக இருந்த இந்தத் தீப்பெட்டித் தொழில் இன்று ஒரு பெரிய அளவில் உருவாகி அந்தப் பகுதிக்கு பொருளாதாரத் துறையில் ஒரு புதிய ஏற்றத்தையும் எழுச்சியையும் உருவாக்கி வருகிறது. அதேபோல் இந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு சிறு தொழிலில் நல்ல ஆர்வம் கொடுக்கப்பட்டால் இந்தப் பகுதி மக்கள் முன்னேறுவதற்கு வசதியாக இருக்கும். அதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. ஏற்கனவே விளாத்திக்குளத்தில் இருக்கிற சிறு தொழில் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கம் செயலற்ற முறையில் இருக்கிறது. இந்தச் சங்கத்தினுடைய நடவடிக்கைகளை நீங்கள் உடனடியாக நிறுத்தியோ, அல்லது புதிய சங்கங்களை அரசு சார்பில் உருவாக்கியோ, இந்த



1986 மார்ச் 25] [திரு. ச. குமாரகுருபராமநாதன்]

சிறு தொழில்களை ஊக்குவிக்க வேண்டுமென்ற முறையில் உங்களுடைய கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று நான் மீண்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல கடலோரத்தில் வேம்பாறிலிருந்து அருவிக்குளம் வரையில் 40-க்கும் மேற்பட்ட பகுதிகள் இருக்கின்றன. அந்தப் பகுதியில் உப்பளத் தொழில்களைத் துவக்குவதற்கான வாய்ப்பு வசதிகள் இருக்கின்றன. சிறுதொழிலில் உப்பளத் தொழிலுக்காக அரசு கடன் தந்து, அதற்கான வாய்ப்பு வசதிகளைப் பெருக்கும் உதவிகளைச் செய்து தரவேண்டுமென்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அந்தப் பகுதியிலிருக்கிற மற்றொரு பிரச்சினை. பஸ் போகும் பல சாலைகள் போக்குவரத்திற்கு சரியான முறையில் நிர்வகிக்கப்படவில்லை. பல்வேறு காரணங்களால் அந்தப் பகுதி புறக்கணிக்கப்படுகின்ற சூழ்நிலையில் இருக்கிறது. தூத்துக்குடியிலிருந்து சென்னைக்குச் செல்லும் திருவள்ளுர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை இந்தப் பகுதி வழியாகச் செல்வதற்குப் பலமுறை முயற்சித்தும், அது இன்னும் விடப்படாத சூழ்நிலையே இருக்கிறது.

அதுபோல் வேலையில்லாத் திண்டாட்டம். அந்தப் பகுதியிலுள்ள மக்கள், சிறு தொழில் இல்லாத காரணத்தால், விவசாயம் சரியான முறையில் நடைபெறாத காரணத்தால், சென்னை, மதுரை போன்ற பெருநகர்களுக்கு குடிபெயர்ந்து போகக் கூடிய அந்தச் சூழ்நிலை இருக்கிறது. செங்கல் மற்றும் சுண்ணாம்புத் தொழில் செய்யும் நிலை இருக்கிறது. அங்கிருக்கிற இளைஞர்களும், பெரியவர்களும், வேலைவாய்ப்பு பெறும் வகையில் ஏற்பாடுகள் செய்து, அவர்களை அங்கே குடியமர்த்தி, கிராமங்களிலேயே இருப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

விளாத்திக்குளம் பகுதியில் எந்தத் தொழிற்சாலையும் உருவாக்கப்படாத சூழ்நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், ஒரு பெரிய அளவிலே, பல ஆயிரக்கணக்கான மக்கள் வேலை செய்யக் கூடிய நிலையில், நூற்பாலை போன்ற பெரிய ஆலைகளை அமைத்து, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வித் துறையைப் பொறுத்வரையில் ரூ. 551 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. எங்கள் பகுதியிலிருக்கிற பல ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் எல்லாம் சீர்செய்யப்படாமல், பராமரிக்கப்படாமல் இருக்கின்றன. பல பள்ளிக்கூடங்கள் கட்டிடங்கள் இல்லாமல் இயங்கிக் கொண்டிருக்கின்றன. பல உயர்நிலைப் பள்ளிகளும், மேல்நிலைப் பள்ளிகளும், சாதாரண வசதிகள் கூட இல்லாமல், மிகவும் மோசமான சூழ்நிலையில் உள்ளன. இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டு, இந்தப் பிற்பட்ட பகுதி, கல்வித் துறையில் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், இந்தப் பகுதிக்கு முன்னுரிமை அளித்து, இந்தப் பகுதியை மேம்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பகுதியில் பாலிடெக்னிக் ஒன்றை அமைத்துக் கொடுத்து, அதன்மூலம் கல்வியை வளர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இலங்கைப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், என்னுடைய தொகுதி மிகவும் பாதகமான சூழ்நிலையை அடைந்திருக்கிறது. . . . . . (மணியடிக்கப் பெற்றது).

*திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களாலே வைக்கப்பட்டிருக்கின்ற நிதிநிலை அறிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கடந்த சில நாட்களாக நிதிநிலை அறிக்கையின் மீது பல்வேறு விவாதங்களை பல தரப்பிலேயிருந்தும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். உயரிய நிலையில், உன்னதமான விமர்சனங்களை எங்கள் தரப்பிலிருந்து எடுத்து வைத்திருந்த போதிலும், எதிர்த் தரப்பிலிருந்து பேசக்கூடியவர்கள் எப்படியெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றம் நன்றாக அறியும். ஏழை எளிய மக்களின் இன்னல்களைத் தீர்க்கின்ற, ஏழை எளியவர்களின் காலக் கண்ணாடியாக இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது. இது ஒரு சாதாரண பட்ஜெட் என்று மற்றவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்வது இது ஒரு சாதாரண பட்ஜெட் அல்ல. சாதாரண ஏழை எளிய





மக்களுக்காக, சாமான்ய மக்களுக்காக தயாரிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை என்று நான் அவர்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இது ஒரு காகிதப் பூ என்று சொன்னார்கள். அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, இது ஒரு காகிதப் பூ அல்ல, இது ஒரு மணக்கும் மனோரஞ்சிதப் பூ என்று அவர்களுக்கு நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கை ஏழை எளியவர்கள் வாழ்விலே ஏற்றம் ஏற்படுத்தும் வகையில், பல சலுகைகளை எல்லாம் அறிவித்திருக்கிறது. பல்வேறு பொருட்களுக்கு வரிச் சலுகையும், பல பொருள்கள்மீது வரிக் குறைப்பும் செய்யப்பட்டிருக்கிறது. புதிய வரிகள் எதுவும் போடாமல் வருவாய் இழப்பையும் பொருட்படுத்தாமல் 20 கோடி ரூபாய் அளவுக்கு வரிச் சலுகைகள் அளிக்கப்பட்டிருப்பது இந்த நிதிநிலை அறிக்கையின் சிறப்புக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது. தமிழகத்திலே கிடைக்கிற குறைந்த வருமானத்தை வைத்துக் கொண்டு மிகச் சிறந்த முறையிலே தயாரிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையாக இது இருக்கிறது.

மத்திய அரசைக் குறை கூறுவதையே ஆளுங்கட்சியினர் முறையாகக் கொண்டிருக்கிறார்கள் என்று நேற்றைக்குப் பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். எங்களைப் பொறுத்த வரையில் மைய அரசைக் குறை கூற வேண்டுமென்ற காரணத்தினால் அப்படிப் பேசவில்லை. மைய அரசு அளித்து இருக்கிற உதவிகளை நாங்கள் மறுக்கவும் இல்லை. மறக்கவும் இல்லை. அதே நேரத்திலே தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய நிதியை கேட்டுப் பெறுவதிலே எந்தவிதமான தவறும் இல்லை. அதைப்போலவே தவறுகளைச் சுட்டிக்காட்டுகிற போது அவர்களுக்கு எந்தவிதமான கோபமும் வரக்கூடாது. சில இனங்களிலே மைய அரசு அளிக்கின்ற நிதி உதவி பற்றி மகிழ்ச்சியை இந்த நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்திருக்கிறோம். அதேபோன்று திட்டக் குழுவினுடைய நிதியைப் பொறுத்தவரையிலும்கூட நாங்கள் பாராட்டுகிறோம். ஆனால் மைய அரசு அளிக்க வேண்டிய நிதி உதவிகளை தாராளமாக அளிக்க வேண்டுமென்று நாங்கள் கேட்பதிலே எந்தவிதமான குறையையும் மற்றவர்கள் காணக்கூடாது என்று நான் இந்த நேரத்திலே பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. தி. அன்பழகன்] [1986 மார்ச் 25

இந்த விவாதத்திலே பேசும்போது செயல்திறன் பெற்ற அரசாக இந்த அரசு மாற வேண்டுமென்றுச் சொன்னார்கள். இந்த அரசு எவ்வளவு சிறப்பாகச் செயல்படுகிறது. முதற்காலத்திலும் சரி, நிகழ்காலத்திலும் சரி என்பதை நாட்டு மக்கள் அறிவார்கள். 1982-83 ஆம் ஆண்டிலேயும் 1984-85 ஆம் ஆண்டிலேயும் இந்தியாவிலேயே 20 அம்சத் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திய மாநிலம் தமிழகம்தான் என்ற பெருமையை பெற்றிருக்கிறோம். 1985-86 ஆம் ஆண்டிலே நம்முடைய மாநிலம் இதிலே முதல் நிலை பெறும் என்று எதிர்பார்க்கிறோம்.

அது மட்டுமல்ல, குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தினை நிறைவேற்றுவதிலும்கூட இந்தியாவிலேயே சிறப்பாகச் செயல்பட்ட மாநிலம் நம்முடைய மாநிலம் என்ற பாராட்டை மத்திய அரசிடமிருந்து பெற்று அதற்கான பரிசுத் தொகை 2.5 கோடி ரூபாயைப் பெற்றிருக்கிறோம். இவைகளை யெல்லாம் பார்க்கிறபோது இந்த அரசை செயல் திறன் அற்ற அரசு என்று எப்படி கூறுகிறார்கள் என்று புரியவில்லை.

அடுத்ததாக, இந்த நிதிநிலை அறிக்கையிலே மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்ற கொள்கையும், இந்திய ஒருமைப்பாட்டிற்கு மாநிலங்கள் தன்னாட்சி உரிமை பெற வேண்டுமென்ற லட்சியமும் வலியுறுத்தப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். மாநிலங்கள் அதிக அளவில் அதிக அதிகாரம் பெறத்தக்க விதத்தில் இந்திய அரசியல் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்றும், இந்திய நிலப் பரப்பைக் காப்பாற்றுவதற்கு ஏற்ற வலிவான இந்தியாவும், மக்களை வாழ வைப்பதற்கு ஏற்ற வளமான மாநிலங்களும் அமைய வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் வலியுறுத்தி வந்துள்ள அந்த லட்சியங்களை நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நிதிநிலை அறிக்கையிலே கோடிட்டுக் காட்டியிருப்பதை நான் வரவேற்கிறேன். அப்படி மக்களை வாழ வைப்பதற்கு மாநில அரசுக்கு பெரும் பங்கு இருக்கிறது. ஆனால் அதை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பும் நிதியாதாரமும் மாநில அரசுக்கு மிகக் குறைவாக இருக்கிறது. மாநில அரசு அரிய திட்டங்களை நிறைவேற்ற முயற்சிகளை எடுத்தாலும்



1986 மார்ச் 25] [திரு. தி. அன்பழகன்]

அவைகளை நிறைவேற்றுவதற்குரிய பொருளாதார வாய்ப்பும் நிதியாதாரமும் மாநில அரசுக்குக் கிட்டுவதில்லை. மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்கிறோம். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்டவுடன் சிலருக்கு ஏனோ கோபம் வந்து அதைப் பொறுத்துக் கொள்ள முடியாத சூழ்நிலைக்கு வந்துவிடுகிறார்கள். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டால் சர்வாதிகாரப் பாதைக்குச் சென்றுவிடும் என்ற அச்சத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். நான் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன், அப்படிப்பட்ட அச்ச உணர்வு உங்களுக்கு இருக்குமானால் அதேபோன்று மைய அரசுக்கு அதிக அதிகாரங்கள் இருப்பதால் சர்வாதிகாரத்திற்கு அழைத்துச் செல்லும் என்ற நிலையும் ஏற்பட்டால் அந்த மனமாற்றத்தை என்ன செய்ய முடியும் என்பதையும் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த இரண்டு அரசியல் இயக்கங்களுக்கும் இடையே இருக்கிற தோழமை காரணமாக நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மைய அரசிடம் அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று மாநிலங்கள் கேட்பது எந்தவிதத்திலும் தவறாகாது. மைய அரசின் அதிகாரங்களைக் குறைக்க வேண்டுமென்று மாநில அரசு கேட்கவில்லை. மாநில அரசு அதிக அதிகாரங்களைப் பெற்று சர்வாதிகாரிபோல் ஆகிவிடும் என்ற எண்ணம் இருக்குமானால் அப்படிப்பட்ட ஐயப்பாட்டைத் தீர்ப்பதற்கு நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்.

(முற்பகல் 11.30.)

இன்றையதினம் மைய அரசு அதைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று நான் சொல்வதற்குக் காரணம் அந்த அரசு சர்வாதிகாரப் பாதையில் சென்றுவிடும் என்ற அடிப்படையில் சொல்லவில்லை. தேசீய அளவில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரத்தைத் தந்தால், அந்தந்த மாநில அரசுகள் செய்ய வேண்டிய பணிகளை, மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளை முழுமையாகச் செய்வதற்கு அது அடிப்படையாக அமையும். தேசீய அளவில் ஏற்படுகின்ற சில பிரச்னைகள் அல்லது பொருளாதார பிரச்சினைகள் அல்லது சமூகப் பிரச்சினைகள் என்று இருந்தாலும் மாநிலங்களைப் பாதிக்காத அளவிற்குத்

திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக மாநிலங்களுக்கு அதிக அதிகாரத்தை வழங்க வேண்டுமென்று மைய அரசை நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் அரசியல் சட்டத்தில் அதிக வருமானம் வரக் கூடிய வரி விதிப்புகளையெல்லாம் மைய அரசு எடுத்துக் கொண்டு, வருமானம் குறைவாக உள்ள வரி விதிப்புகளை மட்டுமே மாநில அரசுகளுக்குக் கொடுத்திருக்கிறது. மைய அரசு வைத்துக் கொண்டிருக்கின்ற வருமானம் வருகின்ற துறைகளிலிருந்து பெறக்கூடிய வருமானத்தில் நமக்கு எவ்வளவு கிடைக்கிறது, மைய அரசுக்கு எவ்வளவு கிடைக்கிறது என்பது பற்றி நான் உள்ளே செல்லாமல் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். மைய அரசு செலவழிக்கும் பணத்தில், மாநில அரசுகளுக்கும், யூனியன் பிரதேசங்களுக்கும் ஒரு ரூபாயில் நான்கு பைசாக்கள்தான் இன்றைக்குப் பிரித்தளிக்கப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழகத்திலே எந்தவிதமான தொழிற்சாலைகளும் வரவில்லை என்று குற்றச்சாட்டைச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசாராமன் அவர்கள் பேசும்பொழுது சொன்னார்கள். இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்த வரையில் தொழில் துறையில் பின்தங்கவில்லை, அது நான்காவது இடத்தில் இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள்கூட விளக்கத்தை இங்கே தந்திருக்கிறார்கள். ஒன்றை நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்குத் தொழில் துறை வளர்வதற்கு தொழில் உரிமங்களை வழங்கும் முழு அதிகாரத்தை யார் வைத்திருக்கிறார்கள்? லைசென்ஸ் அத்தாரிட்டியாக இருந்தாலும், இம்போர்ட் அன்ட் எக்ஸ்போர்ட்டாக இருந்தாலும், வெளிநாட்டுக் கடன்களாக இருந்தாலும் யார் அந்த அதிகாரங்களை வைத்திருக்கிறார்கள்? தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் யாருடைய கைகளில் இருக்கின்றன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இவைகளையெல்லாம் மைய அரசு வைத்திருப்பதால் இன்றைய தினம் மாநில அரசுகள் பெரிய அளவிற்கு அதிக முதலீட்டில் தொழில்களை ஆரம்பிக்க முடியாத ஒரு இக்கட்டான நிலைமை இருக்கிறது என்பதை உணர்ந்து பார்க்க வேண்டும். இவற்றிற்கெல்லாம் மேலாக 90 சதவீதத்திற்கும் அதிகமான தொழில்களுக்கு உரிமங்களை வழங்குகின்ற அதிகாரத்தை மைய அரசு பெற்றிருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், அரசியல் சட்டத்தைத் திருத்தாமலேயே மாநில அரசுகளுக்கு தொழில்களை அமைப்பதற்கு இருக்கின்ற உரிமைகளை மைய அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது என்று சட்ட வல்லுநர் திரு. பல்கிவாலா அவர்கள் ஒருமுறை சொல்லியிருக்கிறார்கள். மைய அரசின் தொழிற் கொள்கையின் காரணமாகத்தான் மாநில அரசுகள் தொழில்களை ஆரம்பிப்பதற்குப் பாதகம் ஏற்படுகிறது. எனவே, மைய அரசின் தொழில் கொள்கைதான் மாநில அரசுகள் புதிய தொழில்களைத் தொடங்குவதற்குத் தடையாக இருக்கிறது என்பதைத் தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும். தொழில்களே இல்லாத மாவட்டங்களுக்குத் தான் தொழில்கள் ஆரம்பிப்பதற்கு மைய அரசு உரிமம் வழங்கும் என்று சொல்லும்பொழுது அதன் மூலம் தமிழகம் எந்த அளவிற்குப் பாதிக்கப் பெறும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





1987-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தமிழகத்திலே மதுவிலக்கு அமுலாக்கப்படும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தி அறிவிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை வந்தால் தமிழகத்திற்கு ஒரு ஆண்டுக்கு சுமார் 250 கோடி ரூபாய் அளவிற்கு அதனுடைய வருமானத்தை இழக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அருமை காங்கிரஸ் நண்பர் ஒருவர் பேசும் பொழுதுகூட மதுவிலக்கை நீங்கள் அமல்படுத்தவில்லை என்றால் அதை நாங்கள் கடுமையாக எதிர்த்துப் போராடுவோம் என்று தெரிவித்தார்கள். நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன், நீங்கள் போராட்டம் நடத்தும் அளவிற்குத் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் வைக்க மாட்டார்கள், ஏற்கனவே புரட்சித் தலைவரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். எனவே, உங்கள் போராட்ட உணர்வுகளை மற்ற மாநிலங்களில் தெரிவித்தால் நாங்களும் அதற்கு உறுதுணையாக இருப்போம். அதேநேரத்தில், தமிழகத்திற்கு ஏற்படும் இழப்புத் தொகையை ஈட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல குறைகளைச் சொல்லும்பொழுது அதை எப்படியெல்லாம் நிவர்த்தி செய்ய வேண்டுமென்று அரசு விரும்புகிறதோ அதற்கு உறுதுணையாக இருந்தால்தான் எந்தவொரு பிரச்னையையும்

[திரு. தி. அன்பழகன்] [1986 மார்ச் 25

தீர்ப்பதற்கு ஏதுவாக இருக்கும். இந்த நிதிநிலை அறிக்கையில் பல பொருட்களுக்கு வரிச் சலுகைகளை அறிவித்திருக்கிறார்கள். வியாபாரத் துறையிலே உள்ள அனைவரும் பாராட்டுகின்ற வகையில் பலமுனை வரியை ஒருமுறை வரியாக மாற்றித் தந்திருக்கிறார்கள். இதன் மூலமாக வியாபாரிகளும் பயன் அடைகிறார்கள், பொதுமக்களும் பயன் அடைகிறார்கள். இப்படிப்பட்ட சலுகைகளை அளித்திருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையில் இன்னும் பல முக்கியமான பிரச்னைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன.

குடிநீர்ப் பிரச்னையைப் பொறுத்தவரையில், ஊரக குடிநீர் திட்டங்களுக்காக இந்த ஆண்டு 45 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டு இருக்கிறது. 1986-87 ஆம் ஆண்டுக்கு இந்த நிதி ஒதுக்கப் பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கின்றபொழுது நான் அந்தத் துறையைச் சார்ந்த மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு வட ஆற்காடு மாவட்டம் குடிநீர் பிரச்னையிலே தட்டுப்பாட்டினை சந்திக்கின்ற நிலையிலே இருக்கிறது. அதிலே ஒரு பகுதிதான் மழையின் மூலமாகப் பயன்பெற்றதே தவிர, எங்களுடைய திருப்பத்தூர், வாணியம்பாடி பகுதிகளில் எல்லாம், மழை இல்லாத காரணத்தால், குடிநீருக்கு அவதிப்படுகின்ற ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, நடப்பாண்டிலே ஒதுக்கப்படுகிற நிதியில், திருப்பத்தூர் வட்டத்திற்கும், வாணியம்பாடி வட்டத்திற்கும் முன்னுரிமை தந்து, அங்கே குழாய்க் கிணறுகள் அமைத்து குடிநீர்த் தட்டுப்பாடு வராத அளவிற்கு பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், கல்வித் துறைக்கும், அரசு ஆண்டுக்காண்டு நிதி ஒதுக்கத்தினை அதிகப்படுத்திக் கொண்டு வருகிறது. சென்ற ஆண்டு ரூ. 468 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது, இந்த ஆண்டு ரூ. 551 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அதிலே ஒரு முக்கியமான பிரச்னை, தமிழக அரசைப் பொறுத்தவரையில், கல்வித் துறையிலே தனி அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிற காரணத்தால், இன்றைக்குப் பயில்கின்ற மாணவர்களுடைய தொகை அதிகரித்துக் கொண்டே



1986 மார்ச் 25] [திரு. தி. அன்பழகன்]

இருக்கிறது. ஆனால், ஆசிரியர்களுடைய நியமனம் குறைவாக இருக்கிறது என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே, இந்த ஆண்டு அதிக அளவிற்கு ஆசிரியர்களை நியமிக்க வேண்டும்.

அதே நேரத்தில், பள்ளிக் கட்டிடங்களுக்குக் கூடுதலான தொகையை ஒதுக்கித் தரவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மின் சக்தியைப் பொறுத்தவரையில், இன்றைக்குத் தமிழக அரசு சிறப்பான நடவடிக்கைகளை எடுத்து வருவதை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். இதற்கு முன்பிருந்த அரசெல்லாம், திட்டமிடும்போது, வருங்காலத்திலே மின் உபயோகம் எப்படி இருக்கும் என்பதைக் கணக்கிடாமல், பணிகளைச் செய்து வந்தன. அன்றைய தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலே மட்டும் தான் மின் துறையைப் பொறுத்த வரையிலும் பணியாற்றி வந்தார்கள். அப்பொழுதே தொலைநோக்குப் பார்வையோடு பணிகளை மேற்கொண்டிருப்பார்களானால், இன்றைக்கு மின் பற்றாக்குறை வந்திருக்காது. ஆனால், தமிழக அரசைப் பொறுத்தவரையில், நடப்பு ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், மொத்த ஒதுக்கமான ரூ. 5,750 கோடியில், மின் துறைக்கு மட்டும் ரூ. 2,000 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு, ரூ 300 கோடிக்கு ஒதுக்கப்பட்ட தொகை, இந்த ஆண்டு ரூ. 395 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது. மின் துறை வளர்ச்சிக்கு, தமிழக அரசு, மைய அரசு அனுமதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற திட்டங்களுக்கு மைய அரசு உடனடியாக அனுமதியை வழங்க வேண்டுமென்று நான் பணிவோடு அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல், உள்ளாட்சித் தேர்தல்கள் முடிந்த இந்த நேரத்தில், வாக்காளர் பட்டியலில் பல குறைபாடுகள் இருந்ததால், நடைமுறைகளில் குறை இருந்ததால், அதை விசாரிக்க வேண்டு மென்ற ஒரு கோரிக்கை அனைத்துத் தரப்பிலும் இருக்கிறது. ஆகவே, அதிலே எழுந்திருக்கிற பிரச்னைகளை முழுமையாக விசாரிப்பதற்காக ஒரு குழுவினை அமைக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்,

[திரு. கி. அன்பழகன்] [1986 மார்ச் 25

ஊராட்சிமன்றத் தேர்தல்களைப் பற்றியும் ஒன்றியத் தேர்தல்களைப் பற்றியும் இங்கே பலதரப்பட்ட விமர்சனங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரை, தமிழகப் பெருமக்கள்—வாக்காளப் பெருமக்கள் எந்த முடிவு எடுக்கிறார்களோ, அந்த முடிவை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். தமிழக வாக்காளர் பெருமக்களைப் பொறுத்த வரை, யாருக்கு எந்த இடத்தில் வாக்கு அளிக்க வேண்டுமென்பதில் அவர்கள், எடுத்திருக்கின்ற முடிவை, உரிமையை மீறுகின்ற சக்தி யாருக்கும் இல்லை. நாடாளுமன்றத் தேர்லாக இருந்தால், இந்திரா காங்கிரசுக்கும், மாநில தேர்தலாக இருந்தால், புரட்சித் தலைவர் எம். ஜி. ஆருக்கும், மற்ற தேர்தல்களில் யாராவது இருக்கட்டும் என்ற நிலைமையிலேதான் தமிழக மக்கள் இருக்கிறார்களே தவிர, யாரையோ வீழ்த்த வேண்டுமென்ற எண்ணத்தில், அல்லது யாரையோ உயர்த்த வேண்டுமென்ற எண்ணத்தில் தமிழக மக்கள் இல்லையென்பதை இந்த நேரத்தில் நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

நடந்து முடிந்த பட்டதாரி தேர்தல்களிலும் பல பட்டதாரி அல்லாதவர்கள் எல்லாம் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப் பட்டதாக ஒரு குறை சொல்லப்படுகிறது. அது உண்மை என்றும் எடுத்துச் சொல்லப்படுகிறது. அது சம்பந்தமாக விசாரித்து நல்லதொரு முடிவினை எடுக்க வேண்டுமென்று அரசினை பணிவோடு கேட்டுக்கொண்டு, நாவலர் அவர்களால் வைக்கப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கை தமிழக அரசினுடைய சிறப்புக்கு ஒரு பெருமை தருகின்ற வகையிலே அமைந்திருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி, என்னுடைய நன்றியைத் தெரிவித்து, விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

(முற்பகல் 11.40)

*திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1986—87 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைமீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, ஜனதா கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களை எடுத்துவைக்க விரும்புகிறேன்.



1986 மார்ச் 25] [திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்]

பொதுவாக இந்த பட்ஜெட் மக்களுக்கு ஏமாற்றம் அளிப்பதாக இருக்கிறது. வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளுக்கு எந்தவிதமான நிவாரணமும் இதிலே சொல்லப் படவில்லை. விவசாயிகளுடைய கடனை ஒத்திவைப்பது பற்றியோ தீர்வையை தள்ளுபடி செய்வது பற்றியோ எதுவும் சொல்லப்படவில்லை. மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிற நெசவாளர்களுக்கு எந்தவிதமான சலுகையும் இதிலே காணப் படவில்லை.

அதைப்போன்று வெள்ளம் காரணமாக உடைப்பெடுத்த மதுராந்தகம் ஏரி இன்னும் செப்பனிடப்படவில்லை. மத்தியிலே ஜனதா ஆட்சி இருந்த போது தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்பட்ட 85 இலட்சம் ரூபாயை இந்த அரசாங்கம் கோட்டைவிட்டுவிட்டது. மூடிக்கிடக்கும் பஞ்சாலைகள் இன்னும் திறக்கப்படவில்லை. அதனால் தொழிலாளர்கள் கோட்டை நோக்கி ஊர்வலம் வருகிறார்கள். மூடிக்கிடக்கின்ற பஞ்சாலைகளைத் திறக்க வேண்டும் பஞ்சாலைகளை வணிக முறையில் அணுகாமல் அவைகளில் இலாபம் வருமா என்று கணக்குப் போட்டுப் பார்க்காமல், பஞ்சாலைகளை இந்த அரசாங்கம் திறக்க முன்வர வேண்டும். வருமானக் கணக்கைப் பார்க்காமல் மூடிக்கிடக்கின்ற பஞ்சாலைகளைத் திறந்து, அந்தத் தொழிலாளர்களை வாழவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லுக்கு 50 சதவீதம் லெவி வைத்து, ஏழை எளிய விவசாயிகளுக்கு நெல்லுக்கு போதுமான விலை கிடைக்காமல் செய்துவிட்டார்கள். இதிலே பல ஊழல்கள் நடக்க வழிவகை செய்துவிட்டார்கள். அதன் காரணமாக விலையேற்றம் ஏற்படுகிறது. ஆக, விலையேற்றத்திற்குக் காரணமாக இந்த அரசாங்கம் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேலும் நான் கீழே குறிப்பிடுகின்ற பல்வேறு காரணங்களால் எங்களால் இந்த பட்ஜெட்டை ஆதரிக்க முடியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆசிரியர் பிரச்சனை, மீனவர் பிரச்சனை, தமிழக அரசினுடைய ஊழியர் பிரச்சனை போன்ற இப்படிப்பட்ட பிரச்சனைகளில் எல்லாம் உரியமுறையில் நடந்துகொள்ள வில்லை, அவர்களுடைய பிரச்சனைகளைக் கவனிக்கவில்லை. கள், சாராயக் கடைகளை பெரும்பாலும் ஆளும் கட்சிக்காரர்களே நடத்த வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டு

[திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1986 மார்ச் 25

இருக்கிறது. தமிழக தலைமைச் செயலக ஊழியர் 33 பேர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு, வெளியே இருக்கிறார்கள். இன்னும் அந்த உத்தரவு வாபஸ் பெறப்படவில்லை.

அடுத்தபடியாக, காவலர்கள் பற்றி இந்த மன்றத்தில கேள்வியே வரவில்லை. கேள்வியே வரவில்லை என்றால் யாரும் கேட்கவில்லையா அல்லது கேட்கப்பட்ட கேள்விகள் எல்லாம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றனவா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். காவலர் பற்றி கேள்வி களுக்கு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கூட பதில் சொல்லலாம்.

** ** * * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாப் பட்டியலை சட்டப் பேரவைச் செயலகம் தயாரிக்கிற. பேரவைத் தலைவரின் அனுமதியோடு செய்யப்படுகின்ற பணி இது. ஆகவே, இப்போது நீங்கள் குறிப்பிட்டது பேரவைத் தலைவரின் பணியில் குறைசொல்வதுபோல் அமைந்திருப்பதால், அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்:** நான் அவைத் தலைவரை குறை சொல்லவில்லை. 3,000, 4,000 எண்ணுள்ள கேள்விகளுக்கு இன்னும் பதில் வரவில்லை. ஆனால் 8,000 எண்ணுள்ள கேள்விக்கு பதில் வருகிறது.

** ** * * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எந்த எந்த வினாக்களுக்கு துறைகளிடமிருந்து பதில் வருகிறதோ அந்த அடிப்படையில் வினாக்கள் எடுத்துக்கொள்ளப் படுகின்றன. அதனால் முன்பின் மாறி வரலாம்; தாமதப்படுத்த வேண்டு மென்று செய்யவில்லை.

**திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்:** அதைப்போன்று துணை முதல்வர் நியமிக்கப்படுவார் என்று தினமணி, Indian Express போன்ற பொறுப்பான பத்திரிகைகளிலே செய்தி வந்தது. பின்னால் முதலமைச்சர் அதை மறுத்திருக்கிறார்.

** ** * * *

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.



1986 மார்ச் 25] [திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்]

துணை முதல்வர் நியமிக்கப்படுவதில் ஆட்சேபணையில்லை; தவறு ஒன்றும் இல்லை. மறுப்பதற்கு அவருக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால், நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்திரிகையிலே வந்த செய்திக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களே, மறுப்பு தெரிவித்திருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் இங்கே பேசுவது முறையல்ல.

** ** * * *

அவை எல்லாம் அவைக்குறிப்பில் இருக்க வேண்டுமா என்பதுபற்றி தீர்ப்பளிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்தப் பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசின் செயலாளர்கள் அரசின் கொள்கை அறிவிப்புக்களைச் செய்யக்கூடாது. அமைச்சர்கள்தான் கொள்கை அறிவிப்புக்களைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசு டீசல், மண்ணெண்ணெய், பெட்ரோல் போன்றவற்றிற்கு விலையுயர்வு செய்திருக்கிறது. கிட்டத்தட்ட 1,800 கோடி ரூபாய் அளவுக்கு அவ்வாறு விலைகளை உயர்த்தி இருக்கிறார்கள். அதற்கு உடனடியாக மாநில அரசு கண்டனம் தெரிவித்திருக்கலாம். ஆனால் அவ்வாறு தெரிவிக்கவில்லை. பரவாயில்லை, அது உங்களுடைய கொள்கை. ஆனால் அதனை எதிர்த்துப் போராடிய மாநில ஜனதா தலைவர் திரு. இரா. செழியன் மற்றும் ஜனதா கட்சியினைச் சேர்ந்தவர்களைப் பிடித்து 15 நாள் காவலிலே வைத்திருக்கிறீர்கள். அப்படி என்றால் மத்திய அரசு அவ்வாறு விலையினை உயர்த்தி இருப்பதை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா, ஏற்றுக் கொள்கிறீர்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

அடுத்து ஆண்டுக்கு 10 இலட்சம் வீடுகளைக் கட்டப் போவதாக ஒரு விளம்பர எண்ணத்தோடு சொல்லியிருக் கிறீர்கள். இப்போது 26 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

கிறீர்கள். மற்ற வங்கிக்கடன் பற்றி எல்லாம் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் ஒதுக்கி இருக்கிற 26 கோடி ரூபாயில் என்னதான் நீங்கள் முயற்சி எடுத்தாலும் ஒரு இலட்சம் வீடுகளைத்தான் கட்ட முடியும் என்று நான் நம்புகிறேன். எனவே இது ஒரு விளம்பரம்தான் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு).

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, ஒரு உறுப்பினர் பேசுகிறபோது பின்னணி கொடுப்பது சரியா ?

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 77 நாட்கள் முதலமைச்சர் அவர்களுக்கு டெலிஃபோன் தொடர்பு இல்லை என்று சொன்னார்கள். நண்பர்கள் பலர் செலற்ற அரசு என்று சொன்னார்கள். நான் அப்படிச் சொல்லவில்லை. செயலற்ற அரசாக இது இல்லை. செயல்படுகின்ற அரசுதான். ஆசிரியர்களை எங்கே வைக்கவேண்டுமோ அங்கே வைத்தீர்கள். மீனவர்களுக்கு என்ன செய்யவேண்டுமா அதைச் செய்தீர்கள். (லைமைச் செயலக ஊழியர்களை எங்கே வைக்கவேண்டுமோ அங்கே வைத்தீர்கள். எனவே செயல்படுகிற அரசாகத்தான் இந்த அரசு இருக்கிறது. ஆனால் டெலிஃபோன் இணைப்பு இல்லாமல் போனதற்கான காரணம் என்ன? முதல்வரே இணைப்பை துண்டிக்கச் சொன்னாரா? சாதாரணமாக தனியார் ஒருவருக்கு டெலிஃபோன் துண்டிக்கப்படுகிறது என்று சொன்னாலே உடனடியாக மறுநாளே வந்து ரிப்பேர் செய்துவிட்டுப் போகிறார்கள். அப்படி இருக்கும்போது முதலமைச்சர் அவர்களுக்கு டெலிஃபோன் இணைப்பு துண்டிக்கப்பட்டதற்கான காரணம் என்ன என்பதை இந்த மன்றத்திலே தெரிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே மாநகராட்சித் தேர்தல் பற்றிய அறிவிப்பு இல்லை. உள்ளாட்சித் தேர்தல் முடிந்தவுடன் மாநகராட்சித் தேர்தல் நடத்துவதாகச் சொன்னீர்கள். ஆனால் இன்னும் அறிவிப்பு வரவில்லை. ஒருவேளை உள்ளாட்சித் தேர்தலில் உங்களுக்கு ஏற்பட்ட தோல்வியின் காரணமாக





மாநகராட்சித் தேர்தலை நீங்கள் அறிவிக்கவில்லை என்று நான் கருதுகிறேன். உடனடியாக மாநகராட்சிக்குத் தேர்தலை நடத்தவேண்டும். நேற்று முன்தினம் நடைபெற்ற எம். எல். சி. தேர்தலில் கூட ஆளும் கட்சி உறுப்பினர்கள் தோல்வி அடைந்திருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிக்கை விட்டும் கூட மூன்றாவது இடத்தைத்தான் பெற்று இருக்கிறீர்கள். ஆசிரியர்கள் மீது நீங்கள் காட்டிய அன்புதான் இதற்கெல்லாம் காரணம் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உள்ளாட்சித் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியால் அச்சத்தின் காரணமாகத்தான் இந்த பட்ஜெட் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதனால்தான் வரி விலக்கு, வரி குறைப்பு என்றெல்லாம் செய்திருக்கிறீர்கள். இதை எல்லாம் நாங்கள் சென்ற பட்ஜெட்டிலேயே, வணிகர்களுடன் வந்து சொன்னோம், அமைச்சர் அவர்களிடம் முறையிட்டோம், அப்போது செய்திருந்தால் இன்னும் கொஞ்சம் இந்த அரசுக்கு மரியாதை கிடைத்திருக்கும்.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரையில் 1,25,000 பேர்கள் வந்திருப்பதாகவும் அவர்களில் 32,000 பேர்கள் அரசின் பராமரிப்பில் இருப்பதாகவும் சொல்லியிருக்கிறீர்கள். அவர்களுக்காக இதுவரையில் மொத்தம் 45 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருப்பதாகச் சொல்கிறீர்கள். ஆனால் 1,25,000 பேர்களில் மீதி 93 ஆயிரம் பேர்கள் என்ன செய்கிறார்கள் என்பதற்கான விளக்கம் இதிலே கொடுக்கப்படவில்லை. இலங்கைத் தமிழர்களுக்காக நீங்கள் இரண்டு தடவை நிதி வசூல் செய்தீர்கள். அது என்ன ஆனது, அதை எப்படி செலவு செய்தீர்கள் என்பதற்கெல்லாம் எந்தவிதமான பதிலும் தரப்படவில்லை.

மதுராந்தகம் போன்ற இடங்களில் இலங்கைத் தமிழர்கள் குடியிருக்கின்ற பகுதிகளில் அவர்களுக்குச் சரியான பாதுகாப்பு இல்லை என்று புகார் வந்திருக்கிறது. இதையெல்லாம் கவனித்து அந்த இலங்கைத் தமிழர்கள் தமிழகத்தில் இருக்கும் காலம் வரையிலும் அவர்கள் நல்லமுறையில் வாழ வழி செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1986 மார்ச் 25

(முற்பகல் 11.50)

கடந்த காலத்தில் கடும் வெள்ளம், வறட்சி என்று மாறி மாறி வந்த போதும் கூட அவைகளை சமாளித்து கடுமையாக உழைத்து உணவு உற்பத்தி செய்துக் கொடுத்த விவசாயிகளுக்கு எந்தவிதமான சலுகையும் இல்லை என்று முதலிலேயே சொன்னேன். வெள்ள நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசிடம் நீங்கள் 120 கோடி ரூபாய் கேட்டீர்கள். ஆனால் மத்திய அரசு 66 கோடிக்கு மேல் கொடுத்திருக்கிறது. அதில் நீங்கள் செலவழித்தது 45 கோடி என்று கணக்கு கொடுத்திருக்கிறீர்கள். அப்படி என்றால் உங்களுடைய மதிப்பீடு தப்பா அல்லது இன்னும் வெள்ள நிவாரணப் பணிகள் சரியாக நடைபெறவில்லையா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

தஞ்சையிலேயிருந்தும், அறந்தாங்கியிலேயிருந்தும், மயிலாடுதுறையிலேயிருந்தும், அங்கேயெல்லாம் வெள்ள நிவாரணப் பணிகள் முறையாக நடக்கவில்லை என்றும் பல தவறுகள் நடந்திருப்பதாகவும் புகார்கள் வந்திருக்கின்றன. அவைகளையெல்லாம் கவனித்து சரி செய்ய வேண்டும்.

அடுத்து ஊரக வளர்ச்சித் திட்டம். இந்தத் திட்டத்தின் கீழ் எங்கள் பகுதியிலே மக்களுக்கு அடிப்படை வசதிகளான, அடிப்படைத் தேவைகளான குடிதண்ணீர் வசதி, சுகாதார வசதி, சாலை வசதி போன்றவை முறையாகச் செய்து தரப்படவில்லை. அதற்கு ஆவன செய்ய வேண்டும்.

அடுத்து, குழந்தைகள் சத்துணவுத் திட்டம். இந்தத் திட்டம் செயல்படுகிற விதம் பற்றி பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன. மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டிக்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து அவர்கள் சுற்றுப்பயணம் செய்தபோது இந்த சத்துணவுக் கூடங்களை சென்று பார்த்திருக்கிறார். குழந்தைகள் குறை சொல்லி இருக்கிறார்கள். அது குறித்து பத்திரிகையிலும் செய்தி வந்தது. பார்த்துவிட்டு அந்த உணவு எப்படி இருந்தது என்று அவரே நேரடியாகச் சொல்லியிருக்கிறார். இவற்றையெல்லாம் கவனித்து அரசு நல்ல முறையில் நடத்த வேண்டும். நல்ல உணவாக போடவும் ஏற்பாடு செய்ய வேண்டும். மாவட்டத்துக்கு 1 லட்சம் குழந்தைகளுக்கு மட்டும் போட்டால் கூட பரவாயில்லை. உண்மையான ஏழைக் குழந்தைகளுக்கு மட்டும் போட வேண்டும். இந்தத்



1986 மார்ச் 25] [திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்]

திட்டத்திற்காக நீங்கள் 169 கோடி ரூபாய் ஒதுக்கியிருந்தாலும் கூட, உண்மையான ஏழைக் குழந்தைகள் மட்டுமே இதில் பயனடையச் செய்தால், 45 கோடிதான் செலவு ஆகும். அதன் மூலம் நீங்கள் இப்போது ஏற்படும் பற்றாக்குறையைக் கூட சரிக்கட்டலாம் என்பது என்னுடைய கருத்து.

அதேபோல பள்ளிகளில் சீருடை கொடுக்கிறீர்கள். 27 கோடி ரூபாய் சீருடைகளுக்காகவும், புத்தகங்களுக்காகவும் ஒதுக்கியிருக்கிறீர்கள். அதில் சீருடை தைத்துக் கொடுத்ததற்கு இன்னும் பணம் வரவில்லை என்று சொல்லுகிறார்கள். நீங்கள் தையல் தைக்கும் பெண்களின் சொசைட்டிக்கு கொடுத்திருக்கிறீர்கள். அவர்கள் அதை காண்டிராக்ட் விட்டு செய்திருக்கிறார்கள். அதனால் இன்னும் பணம் வரவில்லை என்று சொல்கிறார்கள். அதேபோல சீருடைகளுக்கான துணி வாங்கிய ஜவுளிக் கடைகளுக்கும், இன்னும் பணம் செலுத்தப்படவில்லை என்று சொல்லுகிறார்கள். நிறைய புகார்கள் வந்திருக்கின்றன. இவைகள் எல்லாம் களையப்பட வேண்டும். அத்தோடு இதுபோன்ற தப்புகள் இனிமேல் நடக்காத அளவில் நீங்கள் இதை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கிருஷ்ணா நதி நீர் திட்டம். இதிலே ஏற்கெனவே ஒரு பகுதித் தொகையை கொடுத்திருக்கிறீர்கள். மீதி இருக்கிற தொகையையும் கொடுக்க இருக்கிறீர்கள். அதுபற்றி பரவாயில்லை. ஆனால் மத்திய அரசு இன்னும் அனுமதி தரவில்லை. தரவேண்டும் என்று சொல்லுகிறீர்களே, அதைக் கண்டிக்க ஏன் தயங்குகிறீர்கள்? ஒரு போராட்டம் நடத்துங்கள்; நாங்கள் எல்லோரும் ஒத்துழைக்கிறோம். அல்லது சட்டசபையிலேயே ஒரு தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றுங்கள். மத்திய அரசை இதில் கண்டிக்க என்ன தயக்கம் உங்களுக்கு? இதை கண்டிப்பாக கண்டித்தாக வேண்டும். ஏனென்றால் மறைந்த பிரதமர் இந்திரா காந்தி அம்மையாரே வந்து துவக்கிய திட்டம் இது. அதற்குக் கூட அனுமதி கிடைக்கவில்லை என்றால் எப்படி பொறுத்துக் கொண்டிருப்பது, இதேபோல நான் சொல்ல விரும்புவது, வீராணம் திட்டத்தை கிடப்பிலே போட்டார்கள். அதேபோன்ற நிலை இந்தத் திட்டத்திற்கும் வந்து, இதையும் கிடப்பிலே அரசு போட்டு விடுமோ என்று எனக்கு அச்சமாக இருக்கிறது. ஆகவே உடனடியாக இதில் கவனம் செலுத்தி செய்து முடியுங்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். (தண்ணீர் குடித்தார்.)

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** துணைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணா நதி நீர் பற்றி பேசும்போதே, கையில் தண்ணீர் வருகிற காரணத்தால், கண்டிப்பாக தண்ணீர் வரும் என்ற நம்பிக்கை இருக்கிறது. (சிரிப்பு).

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** அதற்கான முயற்சிகளை செய்யுங்கள். நாங்கள் அதற்கு உறுதுணையாக இருப்போம் என்றும் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, ஊரக குடிதண்ணீர் வழங்கும் திட்டம். இந்தத் திட்டத்தின் கீழ் பண ஒதுக்கீடு செய்யும்போது, அனைத்து ஒன்றியங்களுக்கும் சமமாக ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆனால் இந்தத் திட்டங்களுக்கான திறப்பு விழாக்களுக்கு அமைச்சர்கள் செல்லும்போது, ஒரே இடத்தில் பல திறப்பு விழாக்களைக் கூட நடத்திவிடுகிறார்கள். அமைச்சர்கள் பட்டனை தட்டி விட்டு வந்துவிடுகிறார்கள். ஆனால் அங்கே நடைபெற வேண்டிய பல வேலைகள் அதற்குப் பிறகு நடப்பதே இல்லை. ஆகவே அந்தந்தப் பகுதியில், அந்தந்த எம்.எல்.ஏ.-க்களை வைத்து சீரும் சிறப்புமாக நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மின் உற்பத்தி. மின் உற்பத்திக்காக 395 கோடியை ஒதுக்கியிருக்கிறீர்கள். அதனால் இன்னும் அதிகமான மின் நிலையங்கள் வர இருப்பதாகச் சொல்லிக் கொள்கிறார்கள். அதிக மின் உற்பத்திக்கு மத்திய அரசின் அனுமதியை எப்போது பெறப் போகிறீர்கள்? எப்போது ஆரம்பிக்கப்போகிறீர்கள்? நெய்வேலியி லிருந்து இன்னொரு பிரிவை எப்போது கொண்டு வரப் போகிறீர்கள்? இவைகள் எல்லாம் எப்போது நாட்டிற்கு பயன் தரப் போகின்றன? ஆகவே மின்சார உற்பத்தியை அதிகரிக்க சீராக, துரிதமாகச் செயல்பட வேண்டியது மிக மிக அவசியம். மின்சாரம் தான் நாட்டின் முதுகெலும்பு. அப்படிச் சொல்லப் படும் ஒன்றை உற்பத்தி செய்வதில் அதிக கவனம் செலுத்த வேண்டாமா? அத்தோடு அடுத்த மாநிலங்களுக்கெல்லாம் செல்லும் தொழிற்சாலைகளை தடுத்து நிறுத்தி, நம்முடைய மாநிலத்திலேயே துவக்க வேண்டும் என்றால், மின்சாரம் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டு, மின்சார வெட்டு இல்லாமல் செய்ய வேண்டும்.





அடுத்து, வணிக வரிகள். இந்த வணிக வரிகள் எல்லாம் வசூல் செய்வது செம்மையான முறையில் நல்ல முறையில் நடந்து வருகின்றன என்று சொல்லியிருக்கிறார்கள்.

அடுத்து, சிறு சேமிப்பு. சிறு சேமிப்பு பற்றி சொல்ல வேண்டும் என்றால் உங்களுக்கே தெரிந்திருக்கும். ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரும் அங்கே பலவிதமான கெடுபிடிகளை செய்கி றார்கள். உதாரணமாக காமராசர் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இரண்டு முறை சொல்லிவிட்டேன். அவர் சொல்கிறார் இதில் 75 சதவீதம் நமக்கு திரும்ப வருகிறது, இதனை ஊக்கப்படுத்த வேண்டுமென்று சொல்கிறாரே தவிர குறைத்துக் கொள்வதாக இல்லை. இதிலே வேடிக்கை என்ன வென்றால் 1,000 ரூபாய் கட்டுபவர்களுக்கு ரசீது கிடையாது. ரசீது கொடுக்கவில்லையென்றால் ரூபாயை எடுத்துக் கொள்கி றார்களோ என்று சந்தேகம் வருகிறது. ஆகவே சிறு சேமிப்புத் துறையிலே உள்ள குறைகளைக் களைய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல மதுவிலக்கு. மதுவிலக்கை தளர்த்தியதே 1981-ஆம் ஆண்டிலே தான். அப்படியிருக்கிறபோது வருவாய் குறைந்து போகிறது என்று அடிக்கடி பட்ஜெட்டிலே தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். ஆகவே மதுவிலக்கை மீண்டும் அமல் படுத்தினால் ஏழை எளிய மக்களுக்குத்தான் இத்தனை கோடி ரூபாய் மிச்சப்படப் போகிறது என்பதைப் பார்த்து திருப்தியடைய வேண்டும். அதே சமயத்தில் அன்னிய மதுபான வகைகளையும் தடைசெய்ய வேண்டும், கடைகளை மூட வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, லாட்டரி சீட்டுகளுக்கு 10 சதவீதம் தள்ளுபடி செய்து கொடுத்ததினால் முதல்வர் அவர்களின் படத்தை வெளியிட்டு பாராட்டுகிறார்கள். ஒரு லட்சம் ரூபாய்க்கு சத்துணவுத் திட்டத்திற்கு செக் வருகிறது. இதற்கு என்ன காரணமென்று தெரியாது. மொத்தத்தில் லாட்டரி சீட்டுகளை தடை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல 10 சதவீதம் சினிமாக்களுக்கு கேளிக்கை வரியைக் கூட்டியிருக்கிறீர்கள். ஏழை எளிய மக்கள் பார்க்கிற சினிமா என்று நீங்கள்தான் சொல்வீர்கள். இப்போது அதை யெல்லாம் விட்டுவிட்டார்கள் என்றே நினைக்கிறேன். மிக்க மகிழ்ச்சி.

அடுத்து, காவலர் நலனுக்காகவும், காவற் படையை நவீனப் படுத்துவதற்காகவும் பணம் ஒதுக்கி இருக்கிறீர்கள். அந்தத் திட்டங்களை நல்ல முறையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காமராசர் மாவட்டம் விருதுநகரில் காவலர்கள் பரேடு நடத்த அரசு மைதானம் இல்லை. சுதந்திர தினவிழா போன்ற தினங்களில் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் சிவகாசிக்குப் போய் வருகிறார். இதனை உடனடியாக மாற்றி விருதுநகரில் உரிய வசதிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உள்ளாட்சித் தேர்தலை ஒரே நாளில் நடத்தி முடித்த அரசைப் பாராட்டுகிறேன். அதைப்போல கடமையுணர்வுடன் தேர்தலை சுமுகமாக நடத்திக் கொடுத்த அரசு அதிகாரிகளையும் பாராட்டு கிறேன். அதேபோல உள்ளாட்சித் தேர்தல்களில் வெற்றி பெற்று தேர்ந்தெடுக்கப் பெற்ற மக்கள் பிரதிநிதிகளையும் பாராட்டுகிறேன். மக்களுக்குச் செய்யும் நல்ல காரியங்களுக்கு ஜனதா கட்சி அவர்களுக்குத் துணையாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராம ராஜ்யம் அடைய பாடுபட்ட தேசப்பிதா காந்திஜி, பெருந்தலைவர் காமராசர் ஆகியவர்களின் படங்களை உள்ளாட்சி மன்றங்களில் வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாநிலம் முழுவதும் உள்ள நகராட்சிகள், ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் அனைத்திலும் பணப் பஞ்சம் தாண்டவம் ஆடுகிறது. இதற்குக் காரணம் நிர்வாகக் கோளாறுகள்தான். இதைச் சரி செய்ய வேண்டுமானால் ஒரு வருடம் ஆகலாமென்று கருதுகிறேன். இந்த ஒரு வருடத்திற்கு அரசு உள்ளாட்சி நிறுவனங்களுக்கு மானியம் கொடுத்து மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சென்னையில் நடைபாதை வியாபாரிகளுக்கு அங்காடிகள் கட்டிக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் சென்னையில் பல இடங்களில் நடைபாதைக் கடைகளை அப்புறப்படுத்தி விட்டார்கள். குறிப்பாக சென்னை



38 வட்டத்தில் காந்தி நகர் பகுதியில் 15 கடைகளை இடித்து விட்டார்கள். மாணிக்கம் என்பவர் பலமுறை மனு கொடுத்தும், அதிகாரிகளைப் பார்த்தும் கூட அவர்களுக்கு பலன் கிடைக்க வில்லை. பாதிக்கப்பட்ட தாய்மார்கள் என்னை வந்து பார்த் தார்கள். அவர்களெல்லாம் பிழைப்பிற்காக தெற்கேயிருந்து வந்தவர்கள். ஆனால் 11-வது மட்டத்தில் அந்த இடத்தில் சாராயக் கடையை வைத்திருக்கிறார்கள். ஆகவே அந்த 15 கடை களை அரசு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல வேலைவாய்ப்பிற்கு உத்தரவாதம் செய்ய பட்டுள்ளது. இன்றைக்கு கிராமப்புறங்களில் பள்ளிக்கூடங் களில் பையன்கள் படிக்க மாட்டேன் என்கிறார்கள். ஆசிரியர் பயப்படுகிறார்கள். அந்த கிராமங்களில் எல்லாம் பள்ளிகள் களும் பள்ளிகளின் உள்ளே செல்ல மாட்டேன் என்கிறார்கள். காரணம் பள்ளிக் கட்டிடங்கள் இடிந்து விழுந்துவிடுமோ என்று மரத்தடிகளில்தான் நடைபெறுகின்றன. சில இடங்களில் பள்ளி களுக்கு ஆசிரியர்கள் வருவதே இல்லை. ஏனென்றால் அங்கே அவர்களுக்கு செல்வாக்கு அதிகம். ஆகவே மாணவர்கள் படிப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். அந்தக் கட்டடங் களை மராமத்து பார்ப்பதற்கு பல கோடி ரூபாய் செலவாகும். கட்டடங்கள் கட்டுவதற்கு ஒரு கோடி ரூபாய்தான் ஒதுக்கப் பட்டுள்ளது. ஆகவே பள்ளிக் கட்டடங்களை மராமத்து பார்ப்பதற்காக குறைந்தது 25 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல கல்விக்கு 551 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப் வேண்டும். இப்போது வேலைவாய்ப்பிற்கு எந்தவிதமான உத்தரவாதமும் இல்லை. வெளி மாநிலங்களில் சென்று பிழைத்துக் கொள்ளலாம் என்றால் இந்தி படிக்க வாய்ப்புத் தர மாட்டேன் என்கிறீர்கள். விருப்பப் பாடமாக வைத்தாலும்கூட படிப்பவர்கள் படித்துக் கொள்வார்கள். ஆகவே அந்த வகையில் வசதிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சாலைகள் பராமரிப்பிற்காக 3 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. எங்களுடைய மாவட்டத்திற்கே கிட்டத்தட்ட பத்து கோடி ரூபாய் சாலைகளைப் பராமரிக்க செலவாகும் அங்கேயுள்ள சாலைகள் மிகவும் மோசமாக இருக்கின்றன.

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1986 மார்ச் 25

குறிப்பாக பாலநத்தம்—மேலமடை, விருதுநகர்—எரிச்சநத்தம், சிவகாசி—எரிச்சநத்தம் இவைகள் எல்லாம் மிகவும் பழுதுபட்ட நிலையில் இருக்கின்றன. உள்ளே போய்விட்டால் திரும்ப வருவதற்குள் மிகவும் கஷ்டமாகப் போய் விடுகிறது. டிவிஷனல் என்ஜினியரைக் கேட்டால் ஒதுக்கீடு வரவில்லை என்று சொல்கிறார். எனவே இதை எல்லாம் நீங்கள் பார்த்து, இதற்கு அதிகமான நிதியை ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(நண்பகல் 12.00)

அதேமாதிரி போக்குவரத்துக் கழகங்கள். ஆதாயத்திலே இவைகள் ஓடுகின்றன என்று சொல்கிறீர்கள். மகிழ்ச்சி. ஆனால் இந்தத் துரித பஸ் செல்லுவதற்குக் காரணமாக இருந்தவர் பெருந்தலைவர் காமராஜர். அவர்களுடைய பெயரால் இன்னும் போக்குவரத்துக் கழகம் ஆரம்பிக்கப்படவில்லை. எனவே நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, இந்தத் திருவள்ளுவர் போக்கு வரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து, திருச்சியிலேயிருந்து தெற்கே செல்லக்கூடிய பஸ்களுக்கு பெருந்தலைவர் காமராஜர் பெயரை வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இந்திரா காந்தி அம்மையாருடைய பெயரை திண்டுக்கல்லுக்கு வைப்பதாகச் சொன்னீர்கள். அதுவும் நிராகரிக்கப்பட்டு இருக்கிறது. நான் முக்கியமாகக் கேட்டுக் கொள்ள விரும்புவது, பட்டிவீரன்பட்டி திரு. சௌந்திரபாண்டி அவர்கள் அந்த மாவட்டத்தைச் சார்ந்தவர், சுயமரியாதைச் சிங்கம் அவர் சுயமரியாதை மாநாட்டுக்குத் தலைமை தாங்கியவர் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் போராடியவர். எனவே அவருடைய பெயரை வைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், சுதந்திரப் போராட்ட வீரர், மேடைப் பேச்சில் தன்னுடைய திறமையைக் காட்டியவர், அசனுடைய தரத்தை உயர்த்திக் காட்டியவர், பெருந்தலைவர் காமராஜ் அவர்களுக்கு அரசியல் குருவாக இருந்தவர் திரு. சத்தியமூர்த்தி. எனவே



1986 மார்ச் 25] [திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்]

அவர்களுடைய பெயரால் ஒரு போக்குவரத்துக் கழகத்தை உரு வாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணி யடிக்கப்பட்டது).

அடுத்து, காமராஜ் மாவட்டத்தில் இன்னும் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் கூட்டப்படவில்லை. 15—5—1985-லே மாவட்டம் வந்தும்கூட இதுவரையில் டி.டி.சி. மீட்டிங் கூட்டப்படவில்லை. என்ன காரணம் என்று தெரியவில்லை. ஒரு வருஷமாகக் கிடையாது.

அதேபோல் 30 லட்ச ரூபாய் செலவில் விருதுநகர், சிவகங்கை மருத்துவமனைகள், நிறையப் படுக்கைகள் கொண்ட மருத்துவ மனைகளாக ஆக்கப்படும் என்று சென்ற பட்ஜெட்டிலே சொல்லப் பட்டது. ஆனால் சுகாதாரத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டால், பண வசதி இல்லை என்று சொல்கிறார்கள். மேலும் அங்கே உள்ள மருத்துவமனைகளில் படுக்கை வசதிகள் விஸ்தரிக்கப்படவில்லை. மாவட்ட நீதிமன்றம் வரவில்லை, மாவட்டத்திலே தொழில் மையம் வரவில்லை. நெடுஞ்சாலைத் துறை அலுவலகம் இன்னும் சாத்தூரிலே இருக்கிறது. இப்படி பல பிரச்சனைகள் இருக்கின்றன.

அதோடு தியாகிகள் பென்சன். பல இடங்களில் இருந்து தபால்கள் வந்துகொண்டு இருக்கின்றன. அவர்களுக்கு 150 ரூபாய் கொடுக்கிறார்கள். இந்த நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டு, இந்த நாட்டை சுதந்திர நாடாக ஆக்குவதற்கு தங்க ளுடைய வாழ்நாளை இழந்த தியாகிகளுக்கு அவசியமாக 300 ரூபாயாவது கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

அதேபோல், பூம்புகார் அரசு நிறுவனச் சங்கம். அந் நிறுவனத்தில் வேலை செய்கிறவர்களுக்கு முறையாக சம்பளம் கிடைக்கவில்லை என்று புகார் செய்திருக்கிறது. அதேபோல் திருக்கோயில்களில் வேலை பார்க்கக் கூடியவர்களுக்கும் சம்பளமும் முறையாகக் கிடைக்கவில்லை. அதேபோல் அம்பாசமுத்திரத்தில் உள்ள . . . . (மணி அடிக்கப் பெற்றது).

[1986 மார்ச் 25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு 25 நிமிடங்களுக்கு மேல் கொடுத்தாகிவிட்டது. இன்னும் நிறையப் பேர்கள் பேச வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு). இன்னும் பேச வேண்டியிருந்தால், மானியக் கோரிக்கைகள் வரும்போது பேசலாம். அலுவல் ஆய்வுக் குழுவிலே எடுத்துள்ள முடிவுகளின் படிதான் நாம் இங்கே பேச முடியும். சபையை நல்ல முறையில் நடத்தி, அதனுடைய உரிமையை நிலைநாட்ட எல்லோரும் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும். அதுதான் நல்லது. (குறுக்கீடு).

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** துணைத் தலைவர் அவர்களே, ஜனதா கட்சி எப்போதுமே அவையினுடைய உரிமையை நிலை நாட்டத் தயாராக இருக்கிறது. நாங்கள் எதிர்க்கட்சிகள்தானே தவிர, எதிரிக் கட்சிகள் அல்ல என்பதைத் தெரிவித்து, அமர்கிறேன். வணக்கம்.

**டாக்டர் த. முகம்மது சலீம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கின்ற 1986-87 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களை நான் பணிவன்புடன் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

தமிழகத்தில் சமீபகாலத்தில் இயற்கைச் சீற்றத்தால் வெள்ளம் ஏற்பட்டு, பல இடங்களில் சேதங்கள் ஏற்பட்டபோது, பட்ட காலிலே படும் என்று சொல்வார்களே அதைப்போன்ற ஒரு சூழ்நிலையில் ஒரு நல்ல நிதி நிலை அறிக்கையை, தமிழகத்திலே உள்ள கோடிக்கணக்கான மக்களை வாழ வைக்கின்ற வகையிலே, வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கின்ற மக்கள் பாராட்டுகின்ற வகையிலே, நம்முடைய நிதியமைச்சர் நாவலர் அவர்கள் இங்கே சமர்ப்பித்து இருக்கிறார்கள் என்பதை நான் முதலிலே சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.



1986 மார்ச் 25] [டாக்டர் த. முகம்மது சலீம்]

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இங்கே பேசிய சில எதிர்க்கட்சி உறுப்பினர்களும், மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர்களும், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும், இதிலே ஒன்றுமே இல்லை என்று குறை கூறி இருக்கிறார்கள். அவர்களுக்கு நான் சில குறிப்புகளை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டுவதற்காக முன் பணம் செலுத்தி, அப்போது அந்த அரசு ஊழியர்கள் இறந்துவிட்டால்-முன்பணம் பெற்ற அரசு ஊழியர்கள் அப்பணியில் இறக்க நேரிட்டால்-அவர்களுடைய கணக்கிலிருக்கும் பணத்தை வட்டியுடன் தள்ளுபடி செய்வது போன்ற முக்கிய நல்லதொரு திட்டத்தை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. செலவினங்களில் இயன்ற அளவில் சிக்கனக் கொள்கையை கடைபிடித்து அதன்மூலம் மூலதன முதலீட்டு நடவடிக்கையைப் பெருக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தொழில்களுக்கான ஊக்கத் திட்டங்கள், நெறிப்படுத்தப்பட்ட சில சலுகைகள் செய்து தொழில் நடத்துகிறவர்களின் வருவாய் பெருகத்தக்கவாறு வழிவகுக்க என்று சொல்லப்படாமல் பண்டங்களின் விலைகளைக் குறைப்பதற்கும், அல்லல்களைக் களைவதற்கும், வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும், உற்பத்தியைப் பெருக்குவதற்கான வழி முறைகளை இந்த நிதி நிலை அறிக்கை நன்றாகத் தெளிவுபடுத்துகிறது. இந்த அறிக்கையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கு பேசியபோது தொழில் வளர்ச்சிபற்றி எதுவும் கூறவில்லை என்று கூறினார்கள். இவர்கள் எதைத்தான் நல்ல திட்டம் என்று எப்போது ஏற்று இருக்கின்றார்கள்? இவர்கள் எதற்கெடுத்தாலும் மறுப்பதும், வெளிநடப்பு செய்வதும், போராட்டங்களிலே ஈடுபடுவதைத் தவிர நல்லதை நல்லது என்று என்றைக்காவது சொல்லி இருக்கின்றார்களா என கேட்கிறேன். எங்களின் முதல்வர், புரட்சித் தலைவர் சத்துணவுத் திட்டம் போட்டபோது இது எப்படி நடக்கும், இதை எப்படி நடத்தப் போகிறார்கள் என்றெல்லாம் கூறியவர்கள், இந்த சத்துணவுத் திட்டம் நல்ல முறையிலே நடக்கின்றபோது அதைப் பார்த்து மூக்கிலே கையை வைத்து பொறாமை உணர்ச்சியோடும், காழ்ப்பு உணர்ச்சியோடும் உள்ளார்கள். இந்த நல்ல

திட்டத்தை பாராட்டத் தெரியாதவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே உப்பும் இல்லை சப்பும் இல்லை, வெறும் காகிதப் பூ என்றெல்லாம் சொல்கின்றார்கள்.

இலங்கை வாழ் தமிழ் மக்கள் பிரச்சனைக்கு தீர்வு காணும் வகையில், இந்நிலை குறித்து இந்த நிதி நிலை அறிக்கையில் மிகவும் வருந்தி வருத்தம் தெரிவித்திருக்கிறார்கள். அதே போன்று தமிழக மக்களைக் காப்பதற்காக இந்த அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கூறினார்கள். ஆனால் நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் அவர்கள் மத்திய அரசை வற்புறுத்தி உடனடியாக இலங்கை வாழ் தமிழர்களுக்கு நல்லதொரு தீர்வு எடுக்கப்பட வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அதையும் போற்றத்தக்கதாக நான் இங்கே வரவேற்கிறேன். ஆதி திராவிடர், பழங்குடி மக்கள், நரிக்குறவர், வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள ஏழை மக்கள் எல்லோருக்கும் நல்ல முறையிலே அமையும்படி 30 இலட்சத்துக்கும் குறையாத வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவிருக்கிற திட்டத்தை நாவலர் அவர்கள் இங்கே அறிவித்திருக்கிறார்கள். ஆனால் ஒருசில நண்பர்கள் 30 இலட்சம் வீடுகளை எப்படி இப்போது கொடுத்திருக்கிற நிதியிலே கட்ட முடியும் என்று கேளிக்கையாக பேசுகின்றார்கள். அதைப்போன்றுதான் சத்துணவுத் திட்டம் போடப்பட்டபோது, அதை எப்படி நடத்தப்போகிறார்கள் என்று கூறினார்களோ அதேபோன்று நாங்கள் எங்களது புரட்சித் தலைவர் ஆட்சியிலே நிச்சயமாக கட்டித் தருவோம் என்பதை உறுதியுடன் கூறிக்கொள்கிறேன்.

முக்கியமான 10 பொருட்களின் மீதான வரியை அறவே நீக்கிவிட்டது, புரட்சித் தலைவர் ஆட்சி ஏழைபால் கொண்டுள்ள அன்பையும், பாசத்தையும் காட்டுகின்றது. இவைகளையெல்லாம் கூறும்போது மாற்றுக் கட்சி உறுப்பினர்கள், காயிலான் கடை பொருட்களுக்கு வரி விலக்கு கொடுத்திருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள்.

நீர்ப்பாசன வசதியை எடுத்துக்கொண்டால் மேலும் ஒரு இலட்சம் ஏக்கருக்கு நீர்ப்பாசன வசதி செய்யப்படும் என்று நிதி நிலை அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. அதேபோன்று, அதற்காக 45 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவும் போற்றுதற்குரியதாகும். குடிநீர் வடிகால் வாரியம், குடும்ப நலத் திட்டம், முன்னாள் படை வீரர்களுக்கு ஊதியம், விவசாயிகளுக்கு, எண்ணெய் வித்துக்களுக்கு ரூபாய் 15 கோடி ஒதுக்கீடு, இதுபோன்ற நல்ல நல்ல காரியங்கள் இங்கே, இந்த நிதி நிலை அறிக்கையில் எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன.





(பிற்பகல் 12.10)

எங்கள் புரட்சித் தலைவர் ஆட்சியில் ஒவ்வொரு ஆண்டும் புரட்சிகரமான திட்டங்களைத் தீட்டி ஏழை எளிய மக்களும் நடுத்தர மக்களும் இன்புறும் வண்ணம், பயன்படும் வண்ணம் நிதிநிலை அறிக்கை இங்கே வழங்கப்பட்டு இருக்கிறது. இதைப் பார்த்த பின்பும் கலங்கரை விளக்கை காணமுடியாத குருட்டு மாலுமியைப்போல இங்கே பேசிவருகிறார்கள்.

பொதுவாக இந்த அறிக்கை ஏழை எளிய மக்களின் நல்வாழ்விற்காக, ஏற்றத்திற்காக பற்றாக்குறையாக ரூ. 12.24 கோடியை காட்டியிருப்பது பாராட்டுதற்குரியது. இந்தப் பற்றாக்குறை குறைவாக இருப்பதால் இந்த அறிக்கையை முக்கியமான அறிக்கை என்று இங்கே நாங்கள் சொல்லிக் கொள்ள பெருமைப்படுகிறோம்.

கடைசியாக எனது தொகுதியைப் பற்றி கூறும்போது, மாண்புமிகு டாக்டர் நாவலர் நிதியமைச்சர் அவர்கள் இப்போது நடந்துவரும் பெரியகுளம்-சோத்துப்பாறை அணைக்கட்டு நீர்த் தேக்கத் திட்டத்திற்கும் புதிதாக அமைக்க இருக்கும் கொடைக்கானல் பேருந்து நிலையத் திட்டத்திற்கும், 100 ஆண்டுகளாக பழைய நிலையிலேயே, வறுமைக் கோட்டிற்கு உள் அடங்கியிருக்கின்ற பேரூராட்சியாக இருக்கின்ற பெரிய குளத்திற்கு இந்த ஆண்டிலே போதுமான நிதியை ஒதுக்கி அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தரும்படி இந்த அரசை பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் கொடைக்கானலில் அமைக்க இருக்கின்ற பஸ் நிலையத்திற்கும், பெரியகுளத்தில் உள்ள பஸ் நிலையத்திற்கும் போதுமான நிதியை ஒதுக்கி பெரியகுளத்தில் ஏற்பட்டு

இருக்கின்ற குடிநீர் பஞ்சத்தையும் தீர்த்து வைப்பதற்கு தகுந்த நிதியை ஒதுக்கி தருமாறு பணிவன்போடு கேட்டுக் கொண்டு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. பெ. செங்கோட்டையன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை கூற வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த ஆண்டு அறிக்கையானது வரி இல்லாத ஒரு அறிக்கை யாகவும், அதேபோல் சில இனங்களுக்கு வரி சலுகை அளித்தும், சில இனங்களுக்கு வரியை குறைத்தும், இன்னும் சில இனங்களுக்கு உள்ள பல முனை வரியை ஒரு முனை வரியாக மாற்றியும் அளிக்கப்பட்டு இருக்கிறது. அதை நாங்கள் வரவேற்கிறோம்.

குறிப்பாக கோழித் தீவனத்திற்கு 5 சதவீத விற்பனை வரியி லிருந்து 2 சதவீத விற்பனை வரியாக குறைத்து இருப்பதற்கு நாமக்கல் தாலுக்கா கோழிப் பண்ணையாளர்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வரிச் சலுகையால் வரும் இந்த 20 கோடி ரூபாய் மக்களுக்கு எந்த விதத்தில் போய்ச் சேருகிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். இவைகள் எல்லாம் வியாபார மக்களுக்கு பெரிதும் உபயோகம் அளிக்கக்கூடியதாக இருக்கிறது. வியாபார மக்கள் விற்பனை வரி அலுவலர்களிடமிருந்து தப்பித்துக்கொள்ளக்கூடிய வகையில் இந்த வரிச் சலுகைகள் அளிக்கப்பட்டு இருக்கின்றன. இதனால் பொதுமக்களுக்கு எந்தவித பலனும் இல்லை. பொது மக்கள் வாங்கக்கூடிய பொருட்களுக்கு எந்தவிதமான விலையும் குறைக்கப்படவில்லை. ஆகவே பொதுமக்களுக்கு குறைவான விலையில் இந்தப் பொருட்கள் கிடைக்கச் செய்வதற்கு அரசு கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த அறிக்கையில் இப்படி சில சலுகைகள் சொல்லி விட்டாலும் கூட விவசாய சமூகத்திற்கு எந்தவிதமான சலுகையும் கொடுக்காதது பெரிய ஏமாற்றமாக இருக்கிறது.





கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தாலும், வறட்சியாலும், காவேரியிலிருந்து தண்ணீர் கிடைக்காத காரணத்தால் பல கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள விவசாய பொருட்கள் நஷ்டம் அடைந்தன. அப்படி நஷ்டம் அடைந்த விவசாயி களுக்கு நஷ்டஈடு கொடுக்கின்ற வகையில் இந்த அறிக்கையில் எதுவும் இல்லை. அப்படி மகசூலில் நஷ்டம் அடைந்த விவசாயி களுக்கு, பருவ காலங்களில் பாதிக்கப்பட்டு மகசூலில் நஷ்டம் அடைந்த விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் கடன் தொகைகளை ரத்து செய்ய வேண்டும் அல்லது தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் தண்ணீர் தீர்வை, தண்டத் தீர்வை இவைகளை வஜா செய்வது விவசாயிகளுக்கு செய்யக் கூடிய நல்ல காரியமாக இருக்கும்.

இந்த நிதிநிலை அறிக்கையில் பிரதானம் வாய்ந்த ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன். ஆளுநர் உரையிலே பத்து இலட்சம் வீடுகளைக் கட்டுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆளுநருடைய உரையானது அரசினுடைய கொள்கையாக இருக்கும். அதை அமல்படுத்துவதற்காக இந்த நிதிநிலை அறிக்கையில் வழிவகைகள் இருக்க வேண்டும். ஆண்டிற்கு 10 இலட்சம் வீடுகள் வீதம், 3 ஆண்டுகளில் 30 இலட்சம் வீடுகள் கட்டப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. அவ்வாறு சொல்லப் பட்டதற்குத் தேவையான நிதியாதாரம் ஒதுக்கப்பட்டதற்கான முகாந்திரம் எதுவும் இல்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது இருக்கக்கூடிய நிலையில் ஒரு வீடு கட்டுவதற்கு ரூ. 6,000 செலவழிக்கலாம் என்று தாட்கோ நிறுவனம் கூறுகிறது. அது தற்போது ரூ. 10,000 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. ரூ. 6,000 என்று எடுத்துக் கொண்டாலும் கூட, 10 இலட்சம் வீடுகளைக் கட்டுவது என்றால், ரூ. 600 கோடி அளவில் வழிவகை செய்யப் பட்டிருக்க வேண்டும். ஆனால் செய்யப்படவில்லை. மக்கள் மத்தியிலே தங்களுக்கு ஒரு வீடு கிடைக்கும் என நம்பிக்கை இருக்கிறது, உங்களுக்குக் கிடைக்கும் என்று நீங்கள் சொல்லி யிருக்கிறீர்கள். ஏழை அரிசனங்களுக்கும், தாழ்த்தப்பட்டவர் களுக்கும் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கும்

[திரு. பெ. செங்கோட்டையன்] [1986 மார்ச் 25

விடுகளைக் கட்டிக் கொடுக்கப் போகிறோம், அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு காங்கிரஸ் கூட்டு இருந்தபோது நீங்கள் வாக்குறுதிகளாக சொல்லியிருக்கிறீர்கள். சொன்ன வாக்குகள் காப்பாற்றப் பட வேண்டுமென்பதில் எப்படியாவது நீங்கள் விடுகளைக் கட்டிக் கொடுத்து, நல்ல பெயரை வாங்கிக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

சர்க்கரை ஆலையைப் பற்றிய ஒரு பிரச்சினை இங்கே வந்தது. சாக்கரை ஆலையைப் பற்றி, ஏற்கனவே சென்ற ஆண்டு ஆளுநர் உரையில், 10 சர்க்கரை ஆலைகள் துவங்கப்படும் என்றும், பிறகு 20 ஆலைகளைக் கட்டப் போகிறோம் என்றும் சொன்னீர்கள். அதற்குப் பிறகு இதுகூட தவறு, 30 சர்க்கரை ஆலைகள் ஏழாவது திட்டக் காலத்தில் கட்டப் போகிறோம் என்று சொன்னீர்கள். அது வரவேற்கக்கூடிய அம்சம்தான். இந்த 30 ஆலைகளை இந்த அரசு எந்தத் துறையிலே அமைக்கப்போகிறது என்பது நிதி நிலை அறிக்கையில் தெளிவாக ஒரு இடத்தில்கூட குறிப்பிடப் படவில்லை. மத்திய அரசு மாநில அரசு இந்த சர்க்கரை ஆலைகளை அமைப்பதில், கவனம் செலுத்துகிறபோது, அந்த ஆலைகளை கூட்டுறவுத் துறையிலும் பொதுத் துறையிலும் நிறுவவேண்டும். அந்தத் துறைகளுக்கு முன்னுரிமை அளிப்பது கொள்கையாகும். ஆனால் இந்த 30 சர்க்கரை ஆலைகளை எந்தெந்த துறைகளில், அமைக்கப் போகிறார்கள் என்பதை தயவுசெய்து தெரிவித்தால், இந்த சட்டமன்றத்திற்கு நீங்கள் சரியான தகவலைக் கொடுத்ததாக அமையும் என்று கருதுகிறேன்.

முப்பது சர்க்கரை ஆலைகள் அமைப்பதற்கான பரிந்துரைகள் மத்திய அரசிற்குச் செல்லவில்லை என்பது எங்கள் கட்சியினுடைய உறுப்பினர் இராசாராம் அவர்களுடைய குற்றச்சாட்டு. அதை அமைச்சரவர்கள் மறுத்திருக்கிறார்கள். அதை மறுப்பதற்கு அவருக்கு அதிகாரமுண்டு. ஏனென்றால் அதற்கான சகலவிதமான புள்ளிவிவரமும் அவரிடம் இருக்கிறது. இருந்தாலும், நான் கேட்கிறேன்—சந்தேகம் வந்தபிறகு, அதாவது மத்திய அரசிற்கு சென்றதா, இல்லையா என்ற சந்தேகம் எழுப்பப்பட்ட பிறகு, அதை தெளிவாக்க வேண்டியது



1986 மார்ச் 25] [திரு. பெ. செங்கோட்டையன்]

அரசின் கடமை. தொழில் மானியக் கோரிகை வரும்போது இந்த 30 சர்க்கரை ஆலைகளை எந்தெந்த ஊரில் அமைக்க உத்தேசிக்கப் போகிறீர்கள், எந்தெந்த துறைகளிலே அந்த ஆலைகளை அமைக்க மத்திய அரசிற்கு பரிந்துரை செய்யப்பட்டு, அனுப்பப்பட்டிருககிறது என்பதை இந்த அவையிலே சொன்னால் உறுப்பினர்கள் அவற்றைத் தெரிந்து கொள்ள வாய்ப்பிருக்கும். தொழில் துறை மானியக் கோரிக்கை வரும்போது, இந்த 30 சர்க்கரை ஆலைகள் யார் யாருக்கு கொடுக்கப்படும் என்ற விவரத்தை அறிவிக்கவேண்டும்.

கடந்த காலங்களில் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, செங்கோட்டையன் அவர்கள் இங்கே கண்ணியமாக தெரிவித்த கருத்துக்களுக்கு, தொழில்துறை மானியக் கோரிக்கை வருகிறபோது, அதுபற்றிய விளக்கங்களைத் தரவேண்டுமென்று கேட்கிறார். ஆனால் ஒரு விளக்கத்தை கேள்வி நேரத்தில் கேள்வியாகக் கேட்டு பதில் பெறலாம். ஆனால் அரசாங்கத்தின்மீது குற்றச்சாட்டை சுமத்துவதும், அதற்கான விண்ணப்பங்கள் இங்கே தேங்கிக் கிடக்கின்றன என்று பொறுப்புள்ளவர்கள் சொல்வதும் சரிதானா என்பதைத்தான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12.20.)

**திரு. பெ. செங்கோட்டையன் :** தலைவர் அவர்களே, நான் நிச்சயமாக அரசாங்கத்தைக் குற்றஞ்சாட்டுகிற முறையிலே சொல்லவில்லை. இருந்தாலும் சந்தேகம் வந்துவிட்டது, நாம் எல்லாம் புராணம் படித்து இருக்கிறோம் . . .

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, நான் கேட்டிருப்பது மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையனை அல்ல. அது தொடர்பாக பல பிரச்சினைகள் பேசப்படுகின்றன. அதை வைத்துத்தான் கேட்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, எங்களுக்குப் பல்வேறு இடங்களிலிருந்து பல்வேறு நிறுவனங்களிலிருந்து செய்திகள், தமிழக அரசிடம் தொழில்

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1986 மார்ச் 25

துவங்குவதற்கு விண்ணப்பம் செய்தால் காலதாமதம் ஆகிறது என்ற விவரங்களை நாங்கள் கேட்டுப் பெற்று இங்கே சொல்கிறோம். அதிகாரப்பூர்வமான பதிலை அமைச்சர் அவர்கள். . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை):** தகவல்களைக் கேட்டுப் பெறலாம், குற்றச்சாட்டுச் சொல்லக்கூடிய முறையிலே அமையக் கூடாது என்று அமைச்சர் தெளிவாகச் சொல்லிவிட்டார், உட்காருங்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களிடம் அதிகாரப் பூர்வமான புள்ளிவிவரங்கள் இருந்தால் அதைத் தெரிவித்தால் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். நீங்கள் தான் அதைக் கொடுக்கமுடியும். வேறு எங்கே நாங்கள் கேட்க முடியும்?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, கேள்விகேட்டு பதில் பெறுவது என்பது வேறு, குற்றச்சாட்டு என்பது வேறு. நாமே பல்வேறு தொழில்களைத் துவக்குவதற்கு அனுமதி கேட்டு மைய அரசிடம் முறையிட்டுக் கொண்டிருக் கிறோம், இந்த நேரத்திலே வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவது போல் இங்கேயே பல விண்ணப்பங்கள் தேங்கிக் கிடக்கின்றன என்று மைய அரசை ஆளுகின்ற கட்சியின் சார்பாக பெருமக்கள் சொல்வதுதான் வேதனை அளிப்பதாக இருக்கிறது.

**திரு. பெ. செங்கோட்டையன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரைச் சந்தேகப் படுவதுபோல் சொல்லவில்லை. ஒரு பிரச்சினை சந்தேகத்திற் குரியதாக, சர்ச்சைக்குரியதாக வந்துவிட்டது. நாம் எல்லாம் புராணம் படித்திருக்கிறோம். இராமனுக்குத் தெரியும் சீதை களங்கமற்றவள் என்று. ஆனால் சலவைத் தொழிலாளி சொன்ன காரணத்தினால் சீதையை இராமன் நெருப்பிலே இறங்கச் சொன்னான். இதை நாம் படித்திருக்கிறோம், இதை யாரும் மறந்திருக்க மாட்டோம். எங்களுடைய உறுப்பினர் சொல்வது சரி என்றோ அமைச்சர் சொல்வது தவறு என்றோ நான் சொல்லவில்லை. இது எழுப்பப்பட்ட பிரச்சினைதானே தவிர, குற்றச்சாட்டல்ல. அதைப்பற்றி அறிந்து கொள்வதற்காகத் தான் சொல்கிறேன், **குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை.**



1986 மார்ச் 25] [திரு. பெ. செங்கோட்டையன்]

சென்ற ஆண்டு சில இடங்களிலே பெய்த பெருமழையாலும் ஏற்பட்ட கடும் வறட்சியாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண நிதி அதிகமாக கொடுக்கக்கூடிய முறையிலே இந்த நிதிநிலை அறிக்கையிலே இன்னும் அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

அடுத்து, நமக்கு இருக்கக்கூடிய பாசன ஆதாரங்கள் மிகக் குறைந்த அளவிலேதான் இருக்கின்றன. தண்ணீரை மிகச் சிக்கனப்படுத்தி—எபிஷியன்ட் மேனேஜ்மென்ட் ஆப் வாட்டர்—அதிகமான நிலங்களை அதன் மூலமாக பாசனத்திற்குக் கொண்டுவருவதுதான் அரசின் கொள்கை என்று கருதுகிறேன். எங்கள் பகுதியிலே ராஜ வாய்க்கால், பொய்யேரி வாய்க்கால், குமாரபாளையம் வாய்க்கால், மோகனூர் வாய்க்கால் மேட்டூரிலிருந்து முதல் வாய்க்கால்களாக வந்து கொண்டிருக்கின்றன. 300 ஆண்டுகளுக்கு முன்னாலே கட்டப் பட்டவை. ஆதலால் அவைகளிலே இதுவரையிலே எந்தவிதமான மராமத்தும் செய்யப்படாத காரணத்தினால் அவைகளை நவீனப்படுத்துவதற்கான திட்டங்களை அரசு தீட்ட வேண்டும். இன்றைக்கு பல பாசனத் திட்டங்களை எடுத்துக் கொண்டால் அவற்றின் மூலமாக பாசன ஆதாரங்களைப் பெருக்குவதற்காக அவைகளை நவீனப்படுத்துகின்ற பல்வேறு திட்டங்களை அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. அதைப்போல இந்த பொய்யேரி வாய்க்கால் பகுதியையும் நவீனப்படுத்துகின்ற திட்டத்தைப் போட்டு அதற்காக இந்த நிதி நிலை அறிக்கையிலே நிதியை ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதைப்போலவே மோகனூர் வாய்க்கால் பகுதியிலே ஒரு பெட் டேம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று கிணற்று நீரைப் பயன்படுத்தி பாசனம் செய்யக் கூடிய பகுதிகள் இருக்கின்றன. அங்கே விவசாயிகள் பெரும்பாலும் மின்சாரத்தைப் பயன்படுத்தி பம்புசெட்டுகள் மூலம் தண்ணீரை இறைக்கிறார்கள். இப்போது டீசல் விலை ஏறிவிட்டது. மின்சாரத்திற்கு சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் காரணங்களினால் ஒவ்வொரு விவசாயியும் மின்சார பம்புசெட் வைத்து தண்ணீர் இறைக்க வேண்டிய சூழ்நிலை

இருக்கிறது. ஆகவே விவசாயிகள் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பது போன்ற காரியங்களையும் மற்றக் காரியங்களையும் செய்து கொடுக்க வேண்டும். அந்தக் காரியங்களுக்காக விவசாயிகள் மின்சார இலாகாவை அணுக வேண்டுமென்றால் அவர்கள் நாமக்கல்லிலிருந்து வேலூர் போய் அங்கிருந்து சேலம் போய் சேலத்திலிருந்து மேட்டூருக்குப் போய்—அங்கே தான் கண்காணிப்பாளர் இருக்கிறார்—காரியம் செய்ய வேண்டியிருக்கிறது. சேலத்திலே ஒரு கண்காணிப்பாளர் இருக்கிறார், அதையும் தாண்டி மேட்டூர் செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. அதோடு பரமத்தி வேலூரிலே ஒரு கோட்டப் பொறியாளர் அலுவலகத்தையும் மின்சார இலாகா திறந்து அங்கே உள்ள விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு குதிரைத் திறன் கொண்ட மோட்டாருக்கு 75 ரூபாய் என்று நாம் நிர்ணயித்திருக்கிறோம். அப்படியென்றால் 5 ஹார்ஸ் பவர் கொண்ட மோட்டாருக்கு 375 ரூபாய் ஆகிறது. சென்ற ஆண்டு எங்கள் பகுதியிலே மழையே பெய்யாமல் பல கிணறுகள் காய்ந்து போய் விட்டன. அரசின் முடிவின் பிரகாரம் அந்தக் கிணறுகளில் உள்ள மோட்டாருக்கும் 375 ரூபாய் கட்ட வேண்டியிருக்கிறது. குடிக்கக் கூட அதிலே தண்ணீர் கிடைக்கவில்லை, ஆனால் மோட்டார் இருக்கிறது என்ற ஒரேயொரு காரணத்திற்காக 375 ரூபாய் கட்ட வேண்டும் என்று சொல்வது சரியல்ல. ஆகவே, அதில் தண்ணீர் இல்லை என்றால் ஒரு குறிப்பிட்ட அதிகாரி மூலம் அத்தாட்சி வாங்கிக் கொடுப்பதற்கு வாய்ப்பு கொடுத்து, அதன் மூலம் மின்சாரத்திற்கு உண்டான கட்டணத்திற்குக் கழிவு கொடுத்தால் அது விவசாயிகளுக்குச் செய்யும், நன்மையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

எங்கள் பகுதியிலே உள்ள குடிநீர்த் திட்டங்கள் எல்லாமே இப்பொழுது செயலற்று, செயல்பட முடியாத நிலையில் உள்ளன. எங்கள் பகுதியில் ஆழ்குழாய்க் கிணறுகள் 100 அடி, 120 அடி ஆழத்தில் தோண்டப்பட்டு தண்ணீர் எடுத்து வருகிறார்கள். ஆனால் எங்கள் பகுதியில் நிலவுகின்ற கடுமையான வறட்சியின் காரணமாக தண்ணீர் 300 அடிக்கும் கீழே போய்விட்டது. புதிதாக ஆழ் குழாய்கள் போட்டாலும்





கூட, 100 அடி, 120 அடி ஆழத்தில் ஹேண்ட் பம்பின் மூலமாகத் தண்ணீரைக் கொண்டு வர முடியாது என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். என்னுடைய தொகுதியில் உள்ள 62 கிராமங்களில் 40-க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள மக்கள் குடிக்கக்கூட தண்ணீர் இல்லாமல் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். குடிப்பதற்குத் தண்ணீர் கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு. ஆகவே, பக்கத்தில் ஓடுகின்ற காவிரி ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வருகின்ற கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பரமத்தி வட்டாரத்திற்கும், மோகனூர் வட்டாரத்திற்கும் கொண்டு வந்து அந்தப் பகுதியில் உள்ள ஏழை எளிய மக்களுக்கு, அதிலும் குறிப்பாக அருந்ததி மக்களுக்கு குடிதண்ணீர் கொடுத்தே ஆக வேண்டும். ஏனென்றால், அருந்ததி மக்கள் ஊர்க் கிணற்றிலே தண்ணீர் இல்லாவிட்டால் பக்கத்தில் உள்ள வயல்களில் இருக்கின்ற கிணறுகளில் தண்ணீர் எடுத்துச் செல்லும்பொழுது சண்டை போடுகிறார்கள், இப்படிச் செய்கிறாயா இல்லையா என்று கேட்கின்ற பிரச்னைகள் எல்லாம் வருகின்றன. எனவே, அந்த மக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். கிராமங்களில் உள்ள சாதாரண ஏழை எளிய மக்களுக்குக் குடிக்கத் தண்ணீர் இல்லாமல் போய்விட்டால் கிராம மக்கள் சங்கடமான நிலையில் இருப்பார்கள். எனவே, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்கும்படி அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மருத்துவத் துறையிலே எவ்வளவோ முன்னேறியிருந்தாலும் கூட, எங்கள் பகுதியில், கபிலர் மலை பகுதியில் மைய பகுதியாக வேலூர் இருக்கிறது. வேலூரில் அரசு மருத்துவமனை ஒன்று இருக்கிறது, பரமத்தியில் ஒன்று இருக்கிறது, மோகனூரில் ஒன்று இருக்கிறது. நான் சின்னப் பிள்ளையாக இருந்தபொழுது பள்ளியிலே நான்காவது படிக்கின்ற காலத்திலே அந்த அரசு மருத்துவமனைகளை எப்படிப் பார்த்தேனோ, அப்பொழுது எப்படி இருந்ததோ அதே நிலையில்தான் இப்பொழுதும் உள்ளன. இப்படி 30, 35 ஆண்டு காலமாக அந்த அரசு மருத்துவமனைகள் அப்படியே இருக்கின்றன. இப்படி இருந்தால் மக்களுக்கு எந்த விதமான முன்னேற்றமும் கிடைக்கப் போவதில்லை. ஆகவே, எப்படியாவது நிதிநிலை அறிக்கையில் பணத்தை ஒதுக்கி,

என்னுடைய தொகுதியில் உள்ள அரசு மருத்துவமனையில் நல்ல கட்டிடங்களை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மோகனூரில் உள்ள அரசு மருத்துவமனையிலே 3 டாக்டர்கள் இருக்க வேண்டும்; ஆனால் இரண்டு டாக்டர்கள் இல்லை, ஒரு டாக்டர் மட்டும்தான் இருக்கிறார். எனவே, பாக்கியுள்ள டாக்டர்களையும் போடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டு ஏராளமான பணத்தை ஒதுக்கியிருந்தாலும், கட்டிடம் கட்டுவதற்கு ஒரு கோடி ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறோம். பல்லாயிரக்கணக்கான பள்ளிகளைக் கொண்ட இந்தத் தமிழகத்திற்கு ஒரு கோடி ரூபாயில் கட்டிடங்களைப் பழுது பார்க்க முடியுமா? இந்தப் பணத்தைக் கொண்டு புதிய கட்டிடங்களைக் கட்டுவதா அல்லது இருக்கின்ற கட்டிடங்களைப் பழுது பார்ப்பதா என்ற பிரச்னை ஏற்படும். ஆகவே, இன்னும் கொஞ்சம் அதிகமாக நிதியை ஒதுக்கி பழைய கட்டிடங்களைப் பராமரிக்க வேண்டும்; அத்துடன் புதிய கட்டிடங்களையும் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கபிலர் மலை, வெள்ளிபாளையம் போன்ற இடங்களில் ஏற்கனவே உள்ள உயர்நிலைப்பள்ளிகள் தான் இருக்கின்றனவே தவிர புதிதாக எந்த உயர் நிலைப் பள்ளியும் துவங்கப்படவில்லை. இதற்கும் நிதி ஒதுக்கி, புதிய கட்டிடங்களைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சமூக நலத் திட்டங்களுக்கு என்று, ஐ.ஆர்.டி.பி., என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி., என்று ஏராளமாக பணத்தைச் செலவு செய்து நாட்டுக்கு அர்ப்பணம் செய்கிறீர்கள். இருந்தாலும்கூட, செய்யப்பட்ட செலவுகள் சரியாகப் போய்ச் சேர்ந்திருக்கிறதா என்பதை அறிய ஒரு குழுவைப் போட்டு விசாரித்தால் நல்லது. இதைப்பற்றி சென்ற ஆண்டே சொன்னேன். மானியம், கடன் ஆகியவைகளை அதிகாரிகள் வழங்கும்பொழுது பொதுமக்களின் பிரதிநிதிகள் யாராவது இருந்தால் பரவாயில்லை என்று சொன்னேன். சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளலாம் என்று சொல்லிவிட்டு இப்பொழுது அதிகாரிகளே கொடுத்தால்





போதும் என்று உத்தரவு வந்திருக்கிறது. ஆகவே, திட்டங்கள் எவ்வளவு நல்லவையாக இருந்தாலும் அவைகள் போய்ச் சேர வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேருகிறதா, கிராமங்களில் இருப்பவர்களுக்கு முழுப் பலனும் கிடைக்கிறதா, சரியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று ஆராய்வதற்காக ஒரு குழுவை அமைக்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12.30)

அதே போன்று, சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டங்களுக்காக நிறைய நிதியை ஒதுக்கியிருக்கிறோம். நான் குறை சொல்வதற்காகச் சொல்லவில்லை. நிச்சயமாக, இந்த நாடு முன்னேற வேண்டும், காடுகள் நிறைய வளர வேண்டும். காடுகள் உருவாக மரம் வளர்க்க, கன்றுகள் அளிக்கிறோம். ஒரு வருஷம் கன்றுகள் வளர்த்து விட்டு, அடுத்த வருஷம் தண்ணீர் விடவில்லையென்றால், அடுத்த ஆண்டு அந்தக் கன்று செத்துவிடும். பல கோடிக்கணக்கான ரூபாய்களை சமூகக் காடுகள் திட்டத்திற்காகச் செலவு செய்து, மரக் கன்றுகளை வைத்து, ஒரே ஒரு ஆண்டிற்கு மட்டும் தண்ணீர் விட்டு, அல்லது இரண்டு ஆண்டு களுக்குத் தண்ணீர் விட்டு நிறுத்தி விட்டால், அந்தக் கன்றுகள் செத்துவிடும் நிலை இருக்கிற காரணத்தால், அது சரியல்ல. 5 ஆண்டுகளுக்காவது தண்ணீர் விடக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில், சமூகக் காடுகள் திட்டத்திலே நிதி ஒதுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

**திரு. ஏ. பாலுச்சாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும்போது, ஏழை, எளிய மக்களின் அரசு புரட்சித் தலைவருடைய அரசு என்பதை நல்ல உள்ளங்கள் பாராட்டுகின்றன. வரியில்லாத பட்ஜெட்டை உருவாக்கி, பலதரப்பட்ட மக்களின் ஆதரவைப் பெறக் காரணமாக இருந்த டாக்டர் நாவலர் அவர்களையும் மற்றும் அவருக்குத் துணை நின்ற அரசுத் துறையைச் சேர்ந்தவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ஏ. பானுச்சாமி] [1986 மார்ச் 25

உள்ளாட்சித் தேர்தல்களை மனதிலே வைத்து தயாரிக்கப்பட்ட பட்ஜெட் என்று இங்கு பேசிய ஜனதா கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். உள்ளாட்சித் தேர்தல்களைப் பொறுத்த வரையில், ஊர்க் கட்டுப்பாடு, மற்றும் ஜாதிக் கட்டுப்பாடு போன்றவை அதிகம் ஆக்கிரமிப்பு செய்தன என்பதை யாரும் மறுக்க முடியாது.

வாக்காளர் பட்டியல்களைப் பொறுத்தவரையில் 1984 ஆம் ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலில் 3 கோடியே 80 இலட்சம் பேர்கள் வாக்களித்தார்கள். ஆனால், 18 வயதானவர்களுக்கு வாக்குரிமை தந்தும், 2 கோடியே 15 இலட்சம் பேர்கள்தான் வாக்காளர் பட்டியலிலே இடம் பெற்றிருந்தார்கள். மாநகராட்சி களைத் தள்ளி, கழித்துப் பார்த்தாலுங்கூட, வாக்காளர் பட்டியலில் தமிழகம் முழுவதும் பல இடங்களில், பல பகுதிகள் விடுபட்டுள்ளன என்பதை அரசு உணர்ந்து, அதை முழுமையாக விசாரித்து, தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, சமீபத்தில் நடந்த பட்டதாரிகள் தொகுதி தேர்தலில்கூட, வாக்காளர் சேர்ப்பதில் ஒரு குறிப்பிட்ட கட்சி, தில்லுமுல்லு செய்திருப்பதாக அறிகிறேன். பட்டதாரி அல்லாதவர்கள்கூட வாக்குகள் அளித்திருப்பதாக அறிகிறேன். அதையும் விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதிலே சட்டமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும்தான் பரிந்துரை செய்திருப்பதாகவும் கேள்விப்படுகிறேன். அதையும் விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1985 ஆம் ஆண்டில் தமிழகத்தில் ஒரு பகுதி வெள்ளத்தாலும் மற்ற பகுதி வறட்சியாலும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்று நிதிநிலை அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வெள்ள நிவாரணப் பணிச் செலவுக்காக ரூ. 66.8 கோடி மைய அரசால் அனுமதிக்கப்பட்டு, இதுவரை ரூ. 45 கோடி செலவு செய்யப்பட்டு, மீதித் தொகை இந்த நிதி ஆண்டில் செலவு செய்ய இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வறட்சியும் தமிழகத்தை விட்டுவில்லையென்று கூறிவிட்டு, அதற்கான பணி பற்றி, நிவாரண நிதி பற்றி நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடவில்லை என்று நாவலர் அவர்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.



1986 மார்ச் 25] [திரு. ஏ. பானுச்சாமி]

இராமநாதபுரம் மாவட்டம் கடும் வறட்சியால் கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் கடன், நில வரி, போன்றவற்றை வசூல் செய்வதை ரத்து செய்து விட்டு, வறட்சிப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக ரூ. 45 கோடி ஒதுக்கப் பட்டுள்ளதை வரவேற்கிறேன். எனது தொகுதியான பரமக் குடியில் குடிநீர் மேல்நிலைத் தொட்டிகள் பல இடங்களில் கட்டப் பட்டு, பல ஆண்டுகளாக குடிநீர் வழங்கப்படாமல் இருக்கிறது. சில நேரங்களில் செய்முறை தவறுகளினால் குடிநீர் வழங்க முடியாத நிலைமையிருக்கிறது. அவ்வாறுள்ள இடங்களுக்கு மாற்றுத் திட்டமும் வழங்கி, முடிகின்ற நிலையில் உள்ள இடங்களுக்கு காலதாமதம் இல்லாமல் குடிநீர் வழங்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

வளர்ச்சித் திட்டங்களுக்கு மின்சாரம் அவசியம் என்பதைக் கருத்தில்கொண்டு, மின்சாரத் துறையில் தமிழகம் தன்னிறைவு அடைய வேண்டுமென்ற முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே சமயம், என்னுடைய தொகுதியில், கிராமப்புறங்களில், பெரும்பாலும் 10 மணிக்கு மேல் தான் விளக்குகள் எரிகின்றன. அந்த அளவிற்கு மின் அழுத்தம் குறைவாகக் காணப்படுகிறது. அப்பகுதிகளை சர்வே செய்து, குறைகளைப் போக்க, டிரான்ஸ்பார்மர்களை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலுள்ள பல உயர்நிலைப் பள்ளிகளும் மேல் நிலைப் பள்ளிகளும் கட்டிடமே இல்லாமல் மரத்தடியில் மாணவர்கள் பயில்கின்ற நிலைமை இருக்கிறது. அவற்றை யெல்லாம் மாற்றி, வகுப்பறைகள் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்பணிக்கு, தமிழகம் முழுவதும் ஒதுக்கித் தந்துள்ள ரூ. 1 கோடி மிக மிகக் குறைவு. அந்தத் தொகையை அதிகப்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் மிக முக்கியமான புண்ணிய தலங்களாக இருக்கக் கூடிய நைனார்கோவில் — தேவிபட்டணம் சாலை பல ஆண்டுகளாகப் பராமரிக்கப்படாமல், அந்தச் சாலை மிக

போசமான நிலையில் காட்சியளிக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் பகுதி 2-ல் சேர்க்கப்படுகிறது; 10 ஆண்டுகளாக நிதி இல்லை யென்ற பதிலைத்தான் தந்து கொண்டிருக்கிறார்கள். 21 இலட்சத்தில் ஆரம்பிக்கப்பட்ட திட்ட மதிப்பீடு இன்று 1.15 கோடி ரூபாய்க்கு உயர்ந்துள்ளது. அதை முழுமையாகப் பரிசீலிக்க நிதிநிலை இடம் தரவில்லை என்றாலும் ஒவ்வொரு ஆண்டும் இவ்வளவு என்று பிரித்து, அந்தப் பணியினை முடித்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கிராமப்புறங்களில் வீடு கட்டித் தரும் திட்டத்தில் சென்ற ஆண்டில் எங்கள் பகுதியில் யாருக்கும் கடன் வழங்கப்படவில்லை. அந்தக் குறையைப் போக்கி, 6,000 ரூபாய் என்று இருப்பதை 10,000 ரூபாயாக உயர்த்தி, அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரிகின்றவர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் அமுலாக்கப்படாமல் இருக்கிறது. அவர்களுக்கு அந்த ஊதியம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வருவாய் இழப்பு ஏற்பட்டாலும் மதுவிலக்கை நடைமுறைக்குக் கொண்டுவருவதை வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன்.

அன்றாடம் மக்கள் உபயோகிக்கக்கூடிய பொருள்கள் மீது இருந்த பலமுனை வரியை ஒருமுனை வரியாக மாற்றியிருப்பதை வரவேற்கிறேன்.

தினசரி மக்கள் உபயோகப்படுத்தும் நாட்டுச் சர்க்கரை, துத்தநாகம் பூசிய வாளி, கரி, நிலக்கரி, மரத்தவிடு, உமி போன்றவற்றிற்கு விற்பனை வரி அறவே நீக்கப்பட்டிருப்பதை வரவேற்கிறேன்.

மக்கள் உயிர் காக்கும் 41 மருந்துகள்மீது இருந்த 8 சதவீதம் வரியை 4 சதவீத வரியாக குறைந்துள்ளதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தேவை என்று வலியுறுத்தி யிருப்பதை வரவேற்று, இலங்கையில் நடைபெறுகின்ற இனக் கலவரத்தை முடிவுக்குக் கொண்டுவர அங்கு நடந்து



கொண்டிருக்கின்ற தமிழர்கள் போராட்டத்திற்கு மத்திய அரசு அங்கீகாரம் அளிக்க வேண்டுமென்று கேட்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. எஸ். டேனியல்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது இந்திய தேசிய காங்கிரசின் சார்பாக என்னுடைய கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை பார்க்கும்போது ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்துகின்ற வகையில் எந்தத் திட்டமும் அறிவிக்கப்படவில்லை. இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தமட்டில் முழுக்க, முழுக்க மத்திய அரசின் நிதி உதவியை எதிர்பார்த்துத்தான் திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றனவே தவிர, மாநில அரசு தன்னிச்சையாகச் செயல்படுகின்ற விதத்தில் எந்தத் திட்டமும் அறிவிக்கப்படாததை பார்க்கும்போது "சுருதி சேராத இராகம்" போல இந்த பட்ஜெட் காட்சியளிக்கின்றது.

தொழில் வளர்ச்சி பற்றியோ, வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பது பற்றியோ, மின் உற்பத்தியைப் பெருக்குவது பற்றியோ, விவசாயிகளின் நலன் கருதியோ, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற மக்களின் வாழ்க்கையை வளப் படுத்தும் வகையிலோ எந்தத் திட்டமும் அறிவிக்கப்படாமல் வெறும் வார்த்தை ஜாலங்களால் அலங்கரிக்கப்பட்ட பட்ஜெட் எனக் கருதுகிறேன்.

சத்துணவுத் திட்டத்தை அறிவித்தீர்கள். அதை முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் என விளம்பரம் செய்தீர்கள். சத்துணவு மையங்களைக் கட்டினீர்கள். முதலமைச்சர் சத்துணவு மையம் என அறிவித்தீர்கள். இப்போது இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்த மத்திய அரசிடம் நிதி உதவி நாடுகிறீர்கள். எங்கள் அன்புத் தலைவர் இராஜீவ் காந்தி அவர்கள் நிதி உதவி செய்வதற்கு தயாராக இருக்கிறார்கள். நிதி உதவி கிடைத்த பிறகாவது இந்த சத்துணவுத் திட்டத்தை மத்திய-மாநில இணைப்புத் திட்டம் என்று அறிவிப்பீர்களா?

[திரு. எஸ். டேனியல்ராஜ்] [1986 மார்ச் 25

முப்பது இலட்சம் வீடுகள் இலவசமாகக் கட்டிக் கொடுக்கும் திட்டத்தை அறிவித்து உள்ளீர்கள். அதுவும் மூன்று ஆண்டுகளுக்குள் முடிக்கும் திட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது. வீடு ஒன்று கட்ட 10,000 ரூபாய் என்று வைத்துக்கொண்டால் இத்திட்டத்தை முடிக்க 3,000 கோடி ரூபாய் செலவாகும். ஆனால் நீங்கள் ஒதுக்கியுள்ள பணமோ 26 கோடி ரூபாய்தான். இந்தப் பணம் சில ஆர்ஜித வேலைக்குக்கூட போதாது என்று தெரிந்தும் இந்த முரண்பாடான திட்டத்தை அறிவித்திருக்கிறீர்கள்.

தமிழ்நாட்டில் மதுவிலக்கு அமுலாக்கப்பட்டால் 250 கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு மத்திய அரசு நிதி உதவி செய்ய வேண்டும் என கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. ஆனால், கள், சாராயக் கடைகளை மட்டும் மூடிவிட்டு, பிராந்திக் கடைகளை மூடுவது பற்றி தெளிவாக அறிவிக்கவில்லை. ஆகவே, பூரண மதுவிலக்கை அமுலாக்குகின்ற திட்டத்தை அறிவித்துவிட்டு, மத்திய அரசிடம் நிதி உதவி கேட்டால் மத்திய அரசு நிதி உதவ பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** துணைத் தலைவர் அவர்களே, பூரண மதுவிலக்குத் திட்டத்தைச் செயல்படுத்தினால் மத்திய அரசு நிதி உதவி அளிப்பதுபற்றி பரிசீலிக்கும் என்று சொல்கிறார்கள். இது காங்கிரஸ் கட்சியின் அதிகாரப்பூர்வமான கருத்தா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** துணைத் தலைவர் அவர்களே, பூரண மதுவிலக்கைக் கொண்டுவந்தால் ஒன்றிரண்டு ஆண்டுகளுக்கு ஏற்படுகிற நஷ்டத்திலே பாதித் தொகையை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும் என்று சொன்னதாக எனக்கு நினைவு.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, நினைவுகளை எல்லாம் உறுதிமொழியாக ஏற்றுக்கொள்ள முடியாது. அதை உறுதிமொழியாகச் சொல்ல முன்வருவார்களா?



1986 மார்ச் 25]

(பிற்பகல் 12.40.)

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்ன செய்வது, உறுதிமொழி சொல்கிற இடத்தில் நாங்கள் இல்லை. இருந்தால் சொல்லி இருப்போம்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** துணைத் தலைவர் அவர்களே, உங்கள் கட்சி மத்தியில் ஆட்சியில் இருக்கிறது. அந்தக் கட்சியின் சார்பாக நீங்கள் கருத்துச் சொல்கிறீர்கள். ஆகவே அதுபற்றி பரிசீலிக்கிறோம் என்று உங்கள் கட்சி உறுப்பினர் சொன்ன காரணத்தால்தான் நான் இதைக் கேட்டேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுவிலக்கைப் பொறுத்தவரையில் எங்களுக்குக் கருத்துத் தடுமாற்றம் இல்லை. தெளிவாகவே இருக்கிறோம். தமிழகத்தைப் பொறுத்தவரையில் மதுவிலக்கைக் கொண்டுவந்த கட்சி காங்கிரஸ் கட்சி என்ற முறையில், மதுவிலக்கைக் கொண்டு வந்து மக்கள் முன்னேற்றத்தைப் பார்த்து மகிழ்ந்த கட்சி என்ற முறையிலேதான் மதுவிலக்கை பூரணமாக அமல்படுத்த வேண்டும் என்று நாங்கள் சொல்கிறோம். இதனால் தமிழகத்திற்கு கடுமையான நிதி இழப்பு ஏற்படுகிறது என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அந்த இழப்பினை ஈடு செய்கின்ற வகையில் மத்திய அரசிடம் நிதி தர வேண்டும் என்று நீங்கள் கேட்டால் உங்களோடு சேர்ந்து குரல் கொடுக்க நாங்களும் தயாராக இருக்கிறோம்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. அரசின் சார்பிலே நன்றி.

**திரு. எஸ். டேனியல்ராஜ்:** தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி 20 ஆண்டுக்காலம் தமிழகத்தை ஆளும்போது மூதறிஞர் இராஜாஜி அவர்கள் விற்பனை வரியின் மூலம் கிடைக்கும் வருவாயை வைத்து மதுவிலக்கை அமல் ஆக்கினார். ஆனால் வரி இல்லாத பட்ஜெட்டை அறிவித்து, எதற்கெடுத்தாலும் மத்திய அரசைக் குறை கூறும் துர்பாக்கிய நிலையில் இருக்கிறீர்கள். ஆகவே மதுவிலக்கை அமல்படுத்த மாற்று திட்டத்தை அறிவிக்க வேண்டும் என்று இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ஐ.ஆர்.டி.பி., என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. போன்ற திட்டங்களை மத்திய அரசின் நிதி உதவி பெற்று கிராமப்புறங்களில் மாநில அரசு செயல்படுத்துகிறது. கிராமங்களில் இத்திட்டங்களின் மூலம் வேலைகள் நடக்கும் இடங்களில் மத்திய-மாநில நிதி உதவியோடு நடக்கின்ற திட்டம் என்ற விளம்பர போர்டுகள் வைப்பதன் மூலம் மத்திய—மாநில உறவு பலப்படுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என கருதுகிறேன்.

சுதந்திரப் போராட்ட விடுதலை வீரர்களுக்கு வழங்கும் பென்ஷன் தொகையை கேரளா, பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களில் ரூபாய் 300 ஆக உயர்த்தி இருக்கிறார்கள். தேசிய எண்ணம் கொண்ட தமிழக முதல்வர் அவர்கள் தமிழகத்தில் உள்ள தியாகிகளுக்கும் பென்ஷன் தொகையை ரூபாய் 300 ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவு மையங்களில் பணிபுரியும் அமைப்பாளர்கள், ஆயாக்கள் ஆகியோருடைய மாத வருமானத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுகிறேன். அத்தோடு விடுமுறையே இல்லாமல் பணியாற்றும் அவர்களுக்கு மாற்று விடுப்போ, அல்லது கூடுதல் பணி சம்பளமோ வழங்க வேண்டுகிறேன்.

எனது தொகுதியில் வாகைக்குளத்தில் விமான நிலையம் அமைக்க உடன் நடவடிக்கை எடுக்க மத்திய அரசை வற்புறுத்த கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் அடங்கியுள்ள கொற்கை கிராமத்தில் பழமை வாய்ந்த துறைமுகம் இருந்தது. இப்பொழுது அது செயலற்று, பாழ் அடைந்து கிடக்கிறது. ஆகவே அரசு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கொற்கை துறைமுகத்தை ஆய்வு செய்து, நிதி ஒதுக்கீடு செய்து சுற்றுலா மையமாக்க அரசு போர்க்கால நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன்.

தொழிற்சாலைகளே இல்லாத எனது தொகுதியில் நாசரேத் கூட்டுறவு நூற்பாலையின் கிளையை சிவகளையில் அமைக்கும்படியும், ஸ்ரீவைகுண்டத்தில் விரைவில் கட்டபொம்மன் போக்குவரத்து டிப்போவை அமைக்கும்படியும், சாயர்புரத்தில் காவல் நிலையம் ஒன்று விரைவில் அமைக்கும்படியும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.





உலக வங்கியின் உதவியுடன் எனது தொகுதியில் உள்ள தாமிரபரணியின் ஆற்றுப் பாசனத்தில் உள்ள அனைத்து குளங்களையும் ஆழப்படுத்தவும், கரைகளை பலப்படுத்தவும், வடிகால்களைச் சீரமைக்கவும் பாசன ஏற்பாட்டை நவீனப்படுத்தும் பெரும் திட்டம் ஒன்றை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இடையர்காடு, ஆறுமுகமங்கலம் ஆகிய கிராமத்து அருகில் உள்ள விவசாயக் குளங்களில் ஆகாய தாமரைகள், (அமளைச் செடிகள்) வளர்ந்துள்ளன. இதன் காரணமாக விவசாயிகளுக்குரிய பாசனம் மிகவும் பாதிக்கப்படுகிறது. மேலும் குடிதண்ணீரும் கெட்டுப் போய் விடுகிறது. ஆகவே அரசு உடனே ஆய்வு செய்து நிதி ஒதுக்கீடு செய்து அமளைச் செடிகளை அகற்ற உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

மேலும் தாமிரபரணி ஆற்றில் ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து வல்லநாட்டிலிருந்து புதுக்கோட்டை வரையில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் தட்டுப்பாடு இல்லாமல் குடிநீர் கிடைக்க, கிராமப்புற குடிநீர் வழங்கும் திட்டத்தில் இத்திட்டத்தைச் சேர்த்து நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை ஆகிய இலாக்காக்களில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக என். எம். ஆர். ஆக பணிபுரியும் ஊழியர்களை நிரந்தர ஊழியர்களாக்கி அரசு ஊழியர்களுக்கு வழங்கும் சலுகைகள் அனைத்தும அவர்களுக்கு வழங்க வேண்டுமென அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

*திரு. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய நிதிநிலை அறிக்கை மீது இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களை வழங்க வாய்ப்பு அளித்தமைக்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை பொதுவாக மக்கள் மீதான வரிச் சுமையை பெரும் அளவுக்கு குறைத்திருக்கிறது. மருந்துப் பொருட்கள், வீட்டு பொருட்கள், குழந்தைகளுடைய உணவுப் பொருட்கள் போன்ற இப்படிப்பட்ட அடிப்படை தேவையான பொருட்களின் மீது இருந்த வரிச் சுமையை

குறைத்திருப்பது மிகவும் மகிழ்ச்சியோடு வரவேற்கத் தகுந்தது ஆகும். சாதாரணத் தொழிலாளர்கள், கிராமப்புற மக்கள் வரவேற்கத் தகுந்த அளவிலே பெரும் அளவில் வரிச் சுமையை குறைத்திருப்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசுக்கு என்னுடைய மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இந்த அவையிலே உரை நிகழ்த்துகின்ற நேரத்திலே, ஆண்டுக்கு ஆதித்திராவிடர்களுக்கு 5 லட்சம் வீடுகள் கட்டித் தரப்படும் என்கிற ஒரு அறிவிப்பை அளித்தார்கள். ஆனால் நிதிநிலை அறிக்கையிலே அதற்குரிய நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் மிகுந்த ஏமாற்றம். 26 கோடி நிதியை ஒதுக்கி தாழ்த்தப்பட்ட மக்களுக்காக 5 லட்சம் வீடுகளை எப்படி கட்டி முடித்து தரப் போகிறார்கள் என்கிற நிலைமை எனக்கு புரியவே இல்லை. ஏதோ தேர்தல் காலத்திலே அப்படி ஒரு அறிவிப்பை தந்து, இப்போது அரசு அதிலிருந்து பின் வாங்கி விட்டதோ என்ற ஒரு சந்தேகம் கூட எனக்கு எழுகிறது. 26 கோடியிலே எப்படி 5 லட்சம் வீடுகளை கட்டி முடிக்கப்போகிறார்கள் என்று எனக்கு விளங்கவே இல்லை. 1 ½ கோடி தாழ்த்தப்பட்ட மக்கள் தமிழகத்திலே, 40 ஆண்டுக்கால சுதந்திரத்திற்கு பிறகும், இன்னமும் அடக்கப் பட்டவர்களாக, கொடுமைப்படுத்தப்பட்டவர்களாக, உண்ண உணவின்றி, உடுக்க உடை இன்றி, உறங்க வீடு இன்றி கிராமப் புறங்களிலே மேலும் மேலும் கொடுமைப்படுத்தப்பட்டு, அடிமைப்பட்டவர்களாக வாழ்ந்துக் கொண்டிருக்கிற நிலை மையை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

எட்டு சட்டமன்றப் பேரவைகள் கூடியிருக்கிறபோதும்? நாடாளுமன்றப் பேரவைகள் கூடியிருக்கிற போதும், பல்வேறு வகையான திட்டங்கள் தீட்டப்பட்டு, கோடிக்கணக்கில் பணம் அந்தந்த நிதிநிலை அறிக்கைகளிலே வந்துக் கொண்டிருக்கிற போதும், கிராமப் புறங்களிலே இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்கள் வீடுகள் இல்லாமல், நல்ல உணவு இல்லாமல், உறங்குவதற்கு வசதியான இடம் தேவையில்லை என்றாலும், ஒரு சாண் இடம் கூட சொந்தமாக இல்லாமல், செத்துப்போனால் சுடுகாட்டில் புதைப்பதற்கு கூட, இடம் இல்லாமல், அங்கே கூட சமத்துவம் இல்லாமல் வாழ்ந்துக்கொண்டிருக்கிற நிலைமை. இந்த 20 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலே இதை நாம் சிந்தித்துக் கொண்டிருப்பதற்கு வெட்கப்பட வேண்டும்.





தாழ்த்தப்பட்டவர்களின் வீட்டு மனைப் பிரச்னை இருக்கிறதே அது மிகப் பெரிய பூதாகாரமான பிரச்னையாக வளர்ந்து கொண்டிருக்கிறது. 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகள் கோர்ட்டிலே தேங்கிக் கிடக்கின்றன. வீட்டு மனை வேண்டும் என்று தாழ்த்தப்பட்டவர்கள் மனு போடுவார்கள். அரசு அதிகாரிகள் வந்து ஆய்வு செய்வார்கள். பிறகு ஒரு நிலத்தை ஒதுக்குவார்கள். அந்த நிலத்தின் சொந்தக்காரர்கள் கோர்ட்டுக்கு போய் விடுவார்கள். தடை வாங்கிவிடுவார்கள் அது அப்படியே நிறுத்தப்பட்டு விடும். கோர்ட்டிலே 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் வழக்குகள் தேங்கிக் கிடக்கும். அதற்குள் வேறு ஆட்சி, வேறு தலைமை வந்துவிடும். இப்படியே 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையாகவே இருந்து கொண்டிருக்கின்றன.

இந்த துறைக்கு இதற்கென்று ஒதுக்கப்படுகிற பணம் அப்படியே வங்கிகளில் தூங்கிக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு முறையும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு மனை கொடுக்க நில ஆர்ஜிதம் செய்வதற்காக இவ்வளவு தொகை என்று ஒதுக்குகிறோம். ஆனால் ஒதுக்குகின்ற தொகை முழுமையாகச் சென்று அந்த மக்களை அடைகிறதா என்று பார்த்தால், அது அப்படியே வங்கிகளில் தூங்கிக் கொண்டிருக்கின்ற நிலைமை தான் இருக்கிறது. இந்த மனைப் பிரச்னையும் கோர்ட்டுகளில் அப்படியே நிலுவையில்தான் இருந்துக் கொண்டிருக்கிறது. இந்த அரசு கடுமையான சட்டத்தின் மூலம் இந்த நிலைமையை மாற்றி அமைக்க வேண்டும்.

நெடுஞ்சாலைத் துறை எந்தக் கட்டிடத்தை வேண்டு மானாலும் இடித்து தள்ளிவிட்டு கையகப்படுத்திக் கொள்கிறது. மின்சாரத் துறைக்கு வேண்டுமானால் யாருடைய வீட்டு மரத்தையும் வெட்டி விட்டு, யார் வீட்டு நிலத்தில் வேண்டு மானாலும் மின் கம்பங்களை நட்டுக் கொள்கிறது. அந்த இடத்தை கையகப்படுத்திக் கொள்கிறது. ஆனால் தாழ்த்தப் பட்டவர்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்காக கையகப் படுத்தும்போது மட்டும், அந்த நிலத்தின் சொந்தக்காரர்கள் உடனேயே கோர்ட்டுக்கு போகிறார்கள். அங்கே 10 ஆண்டுகள் 15 ஆண்டுகள் வழக்கு நடக்கிறது. நெடுஞ்சாலைத் துறைக்கு பொருந்துகிற சட்டம், மின்சாரத் துறைக்கு பொருந்துகிற சட்டம் ஆதித் திராவிட நலத் துறைக்கு மட்டும் ஏனோ

பொருந்துவதில்லை. எனவே நான் அன்புகூர்ந்து கேட்டுக் கொள்கிறேன், ஆதித திராவிட நலத் துறைக்காக எடுக்கப்படும் நிலத்தை எதிர்த்து யாரும் கோர்ட்டுக்கு போகக் கூடாது என்ற நிலைமையை அரசு கொண்டு வர வேண்டும். பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் இருப்பதால், என்றைக்கு அவை முடியப் போகிறதோ என்று அந்த மக்கள் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே தனிக் கோர்ட் அமைத்து இந்த வழக்குகளை பைசல் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சொன்ன விஷயங்களையே திருப்பி திருப்பி சொல்ல வேண்டியிருக்கிறது. ஏனென்று சொன்னால், எத்தனையோ முறை இந்த அவையிலேயே தக்க சான்றுகள் மூலம் சொல்லிய போதும், துரிதமான நடவடிக்கைகள் எடுக்காத காரணத்தால், மீண்டும் மீண்டும் சொன்னவைகளையே சொல்ல வேண்டியிருக்கிறது. இன்றைக்கு போலி சான்றிதழ்கள் ஏராளமாக பரவிக் கொண்டிருக்கின்றன. பல அலுவலகங்களில் பணிபுரியும் பல முற்பட்டவர்கள், தாங்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லி போலிச் சான்றிதழ்கள் பெற்று அரசு அலுவலகங்களிலும், மற்றவைகளிலும் அதிகாரிகளாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இங்கே நான் ஒரு ஆதாரத்தோடு வந்திருக்கிறேன். நம்முடைய கோட்டைக்கு பக்கத்திலே இருக்கிற அலுவலகம் ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா. அந்த பாங்கிலே 14 பேர்கள் தாங்கள் கொண்டா ரெட்டி, காட்டு நாயக்கன் போன்ற இனத்தைச் சார்ந்தவர்கள் என போலிச் சான்றிதழ்கள் பெற்று பணிபுரிந்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த 14 பேர்கள் மீதும் நடவடிக்கை எடுத்து வேலை நீக்கம் செய்ய வேண்டும், என்று அங்கே இருக்கிற தாழ்த்தப்பட்டவர்களின் சங்கம் கோரியது. அங்கேயிருக்கிற மானேஜ்மெண்ட்

(பிற்பகல் 12-50)

அரசுக்கு எழுதியது இந்த 14 பேர்களுடைய சான்றிதழ் உண்மையானதா, பொய்யானதா என்று அரசு விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டது. அரசு அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு கடிதம் எழுதியது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். கேசவன் என்பவரைப் பற்றி விசாரிக்க அரசு பெரியார் மாவட்ட





ஆட்சித் தலைவருக்கு எழுதியது. பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் விசாரித்து அந்த நபர் கொண்டா ரெட்டி வகுப்பைச் சேர்ந்தவரல்ல; அவர் தவறான சான்றிதழைப் பெற்றிருக்கிறார் என்று 30—6—1984-ல் அரசுக்கு பதில் எழுதினார். அதற்கு பிறகு 13—2—1985-ல் அந்த நபர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் எழுதியிருக்கிறார்.. ஆனால் சமூக நலத் துறை செயலாளரும் மற்ற அலுவலர்களும் ஏனோ நடவடிக்கை எடுக்கவில்லை. ரிசர்வ் பேங்க் பலமுறை அரசுக்கு எழுதி கேட்டிருக்கிறது. அந்த 14 பேர்களைப் பற்றி விசாரித்து விட்டீர்களா? விசாரணை அறிக்கையை தயவுசெய்து அனுப்புங்கள் என்று அந்த நிர்வாகம் தபால் எழுதி கேட்டு உள்ளது. ஆனால் இங்கேயிருந்து ஒரு பதில் கூட கிடையாது. கடந்த பல ஆண்டுகளாக அந்த 14 பேர்களும் அங்கே பதவியில் இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களின் பெயரிலே அவர்களுடைய உரிமைகளை மோசடி செய்து கொண்டு இருந்து வருகிறார்கள். இப்படி அந்த மக்களுக்கு உரிய சலுகைகள் கூட ஒழுங்காகப் போய் சேராமல் இருக்கிறது. நம்முடைய அரசு அதிகாரிகள் இதில் மெத்தனப் போக்கிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான்கைந்து முறைகள் கடிதம் எழுதியும், நேரிலே மெசென்ஜர் அனுப்பியும் சமூக நலத் துறையிலிருந்து பதில் போய் சேரவில்லை. அப்படியே பதில் அனுப்புவதாக இருந்தாலும் நான்கு நாட்களுக்கு முன்னாலே அந்தக் குறிப்பிட்டவர்களுக்கு தகவல் போய் விடுகிறது. அவர்கள் வழக்கு மன்றத்திற்குப் போய் விடுகிறார்கள். அங்கே தடையும் வாங்கி விடுகிறார்கள். என்ன துரதிர்ஷ்டமோ தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்ன சலுகைகள் வந்தாலும் அவை கோர்ட்டிலே போய் நின்று கொண்டிருக்கின்றன. நீதிபதிகளும் எதற்கெடுத்தாலும் தாழ்த்தப்பட்ட மக்கள் என்றாலே தடையாணை வழங்கி விடுகிறார்கள். அது தேர்தலானாலும் சரி மற்ற வசதிகள் என்றாலும் சரி உடனே தடை ஆணை வழங்கி விடுகிறார்கள். இந்த நிலையை மாற்றுவதற்கு சமூக நலத் துறையிலிருந்து ஆதி திராவிடர் நலத் துறையை உடனடியாகப் பிரிக்க வேண்டும். இந்தக் கோரிக்கையை நாங்கள் வெகு காலமாக வற்புறுத்தி வருகிறோம். எதற்கெடுத்தாலும் சமூக நலத்

துறையோடு ஆதி திராவிடர் நலத் துறை கலந்தாலோசிக்க வேண்டியிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் துறைக்கு அமைச்சராக இருந்தாலும் கீழே இருக்கிற ஒரு தனித் தாசில்தாரைக்கூட அவரால் மாறுதல் செய்ய முடியாது. அப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால் மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது ரெவின்யூ அதிகாரிகள் தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படிப்பட்ட நிலைமை இருக்குமானால் எப்படி தாழ்த்தப்பட்டவர்களுக்கு உரிய சலுகைகள் வேகமாக போய் சேரும் என்று புரியவில்லை. எனவே நான் இந்த அரசை பணிவோடு வேண்டிக் கொள்கிறேன். கதர்த் துறைக்கு கூட தனியாக ஒரு துறையை அமைத்து விட்டீர்கள். ஆதி திராவிடர் நலத் துறை மிகப் பெரிய துறை 1½ கோடி மக்களுக்காக இருக்கிற துறை. இந்தத் துறையை சமூக நலத் துறையிலிருந்து பிரித்து, வருவாய்த் துறையிலிருந்து பிரித்து தனித் துறையாக அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்தப் போலிச் சான்றிதழ்களுக்கு உதவி புரிந்து கொண்டிருக்கிற அதிகாரிகள் பேரில் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் அவர்களை கைது செய்து கடுமையான நடவடிக்கையெடுத்து வேலை நீக்கம் செய்ய வேண்டும். இப்படி நான்கைந்து பேர்களை வேலை நீக்கம் செய்தால்தான் மற்றவர்கள் அஞ்சுவார்கள். இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் யார் உண்மையான தாழ்த்தப்பட்டவர் என்று எங்களாலேயே புரிந்து கொள்ள முடியவில்லை. அந்த அளவிற்கு போலிச் சான்றிதழ்கள் எங்கே பார்த்தாலும் பரவியிருக்கின்றன. இந்த நிலைமையை அரசு கட்டுப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆறு ஆண்டுகளாக ஆதி திராவிட நலத் துறையின் ஆலோசனைக் குழு போடப்படாமல் இருக்கிறது. இதற்கு முன்பு அமைச்சராக இருந்த விஜயசாரதி அவர்கள் பொறுப்பில் இருந்தபோதிலிருந்து இப்போது உள்ள அமைச்சர் அவர்களின் பொறுப்பில் இருக்கும் வரையிலும் ஆதி திராவிடர் நலத் துறையின் ஆலோசனைக் குழு போடப்படாமல் இருக்கிறது. மற்ற மாநிலங்களில் எல்லாம் ஆலோசனைக் குழுக்கள், தனிக் குழுக்கள் போடப்பட்டு 18 சதவீதம் பணி நியமனங்களிலும்,



பதவி உயர்வுகளிலும் வழங்கப்படுகின்றதா என்பதை ஆய்வு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இங்கே தொடர்ந்து இதுபற்றி கேட்கிறபோதெல்லாம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற போது அது அரசின் பரிசீலனையில் இருப்பதாகத் தெரிவிக்கிறார்கள். இந்த ஆலோசனைக் குழுவை எப்போது போடவிருக்கிறார்கள் என்பதே தெரியாமல் இருக்கிறது. ஆகவே ஆதி திராவிடர் நலத் துறையின் ஆலோசனைக் குழுவை உடனடியாக அமைத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாங்கள் நீண்ட காலமாக பேரறிஞர் அம்பேத்கார் அவர்களின் பெயரால் ஒரு மாவட்டம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வருகிறோம். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஈரோட்டில் "தினமலர்" நாளிதழ் விழாவில் கலந்து கொண்டு பேசுகிறபோது அம்பேத்கார் பெயரால் மாவட்டம் அமைப்போம் என்று உறுதி அளித்திருக்கிறார்கள். இந்தச் சட்டப் பேரவையிலே கூட சொல்லியிருக்கிறார்கள். எனவே இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். வருகிற ஏப்ரல் 14 ஆம் தேதி பேரறிஞர் அம்பேத்கார் அவர்களின் 96 ஆவது பிறந்த நாள் வருகிறது. அந்த நல்ல நாளில், அவருடைய பெயரால் — வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள ஒரு பகுதியையோ, அல்லது செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள ஒரு பகுதியையோ பிரித்து ஒரு மாவட்டத்தை ஏற்படுத்தி தர வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு தனியார் துறையால், ஏகப்பட்ட கல்வி நிறுவனங்கள் துவக்கப்பட்டு இருக்கின்றன. பாலிடெக்னிக்குகள் துவக்கப்பட்டு இருக்கின்றன. என்ஜினீயரிங் கல்லூரிகள் துவக்கப்பட்டு இருக்கின்றன. அங்கேயெல்லாம் மேனேஜ்மென்ட் கோட்டா என்று சொல்கிற அந்தக் கோட்டாவிலே, 18 விழுக்காடு தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தருவதில்லை. அரசுக்கு ஒதுக்குகிற பங்கிலேதான் 18 விழுக்காடு தருகிறார்கள். ஆனால் மேனேஜ்மென்ட் கோட்டாவிலே தருவதில்லை. மேலும் தாழ்த்தப்பட்ட மாணவர்களிடமிருந்து பயிற்சிக் கட்டணம் என்று வசூலிக்கிறார்கள். ஏன் என்று கேட்டால், ஸ்பெசல் கோச் என்று எழுதி வாங்குகிறார்கள். எனவே தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு பயிற்சிக் கட்டணம் என்று வசூலிப்பது முறைகேடானது.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு நிறுவனமானாலும், தனியார் சம்பந்தப்பட்ட மேனேஜ்மென்ட் துறையாக இருந்தாலும், 18 சதவிதம் தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள். ஆனால் எந்தத் துறையில், எங்கே கொடுக்கவில்லை என்று விளக்கமாக எழுதிக் கொடுத்தால், அதன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோல் தாழ்த்தப்பட்டவர்களுடைய வெல்பேர் கமிட்டியைப் பற்றிச் சொன்னார்கள். 8 மாவட்டத்திற்கு போட்டு கொடுக்கப்பட்டு இருக்கிறது. மீதி உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பெயர்கள் இன்னும் பரிந்துரை செய்யப்பட்டு நமக்கு வரவில்லை. அதன் மேல் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். எனவே மொத்தமாகச் சொல்லாமல், எதன் மேல் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று குறிப்பிட்டுச் சொன்னால், அதன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கு. தமிழரசன் :** தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டு வரவில்லை என்று ஓராண்டு காலமாகச் சொல்கிறார்கள். அவைகள் விரைவிலே வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தல்களில், 378 ஒன்றியங்களில் 6 ஒன்றியங்களில் மட்டும்தான் தாழ்த்தப்பட்டவர்கள் தலைவர்களாக வர முடிந்தது. அதேபோல், 97 நகராட்சிகளில் ஒரு நகராட்சியில்கூட தாழ்த்தப்பட்டவர்கள் தலைவாக வர முடியவில்லை. 1½ கோடி மக்களை உள்ளடக்கிய ஒரு சமுதாயம். இந்த மண்ணின் மைந்தர்களை உள்ளடக்கிய ஒரு சமுதாயம், இந்த மண்ணின் மிகப் பெரிய மக்கள் தொகையை உள்ளடக்கிய ஒரு சமுதாயம், காந்தியாரால் முன்னுக்கு வரவேண்டும், பேரறிஞர் அம்பேத்கார் அவர்களால் முன்னுக்கு வரவேண்டும் என்று சொல்லப்பட்ட ஒரு சமுதாயம், அப்படிப்பட்ட சமுதாயத்தில் இருந்து ஒருவர் கூட நகராட்சியில் தலைவராக வர முடியவில்லை. அதேபோல் 378 ஒன்றியங்களில்





6 பேர்கள்தான் வந்திருக்கிறார்கள். எனவே எல்லா அரசியல் கட்சிக்காரர்களும் சேர்ந்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மிகப் பெரிய துரோகத்தை இழைத்துக் கொண்டிருக்கிறார்கள். பல்வேறு கட்சிகள் இவர்களுக்கு இடங்களைக் கூட ஒதுக்கீடு செய்ய முன்வரவில்லை. எனவே இந்தப் பேரவையிலே நான் கேட்டுக் கொள்வது, இனி வரும் தேர்தல்களிலாவது இட ஒதுக்கீடு முறை வந்தாக வேண்டும். இல்லாவிட்டால், இந்த மக்கள் ஆட்சி அதிகாரத்திற்கு வர முடியாத ஒரு நிலை ஏற்படும்.

கிராமப்புறங்களில் இன்னும் சாதிக் கொடுமைகள் இருந்து கொண்டு இருக்கின்றன. எனவே அரசின் கொள்கைகளாலும், இப்படிப்பட்ட சலுகைகளாலும்தான் அந்த மக்களை முன்னுக்குக் கொண்டு வர முடியும், என்று எவ்வளவோ முறை சொன்னபோதும் அரசு ஏதோ ஒரு காரணத்திற்காக சாதி வெறியர்களுக்கு, அவர்களுடைய நிர்பந்தத்திற்குப் பணிந்து இந்தத் தேர்தலை நடத்தியது. எனவே, இந்த 1½ கோடி தாழ்த்தப்பட்ட மக்கள் உணர்ச்சிகளை பிரதிபலிக்கிற வகையில் சொல்கிறேன். இட ஒதுக்கீடு பிரச்சனையை மறு பரிசீலனை செய்யுங்கள், அடுத்த முறை உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடக்கும்போது, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு முறையைக் கொண்டு வாருங்கள் என்று வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு சாதிக் கொடுமைகள் கிராமப் புறங்களில் ஏராளமாக இருந்து கொண்டு இருக்கின்றன. தீண்டாமைக் கொடுமைகள் இருந்து கொண்டு இருக்கின்றன. இது சாதாரணக் கொடுமையல்ல. கிராமப்புறங்களிலேயிருந்து வந்தவர்களுக்கு இது தெரியும். இந்த மக்களை இப்படிப்பட்ட நேரத்திலே காப்பாற்ற வேண்டியது அரசினுடைய அதிகாரிகளே தவிர, சாதி வெறியர்கள் அவர்களைக் காப்பாற்றமாட்டார்கள். கடந்த ஓர் ஆண்டுக் காலத்தில், 4 இடங்களில் துப்பாக்கிச் சூடு நடந்தது. பெரம்பலூரிலே துப்பாக்கிச் சூடு நடந்தது, தாழ்த்தப்பட்டவன் பலியானான்; வியாசர்பாடியிலே துப்பாக்கிச் சூடு நடந்தது, தாழ்த்தப்பட்டவன் பலியானான்; தொட்டியத்திலே துப்பாக்கிச் சூடு நடந்தது, தாழ்த்தப்பட்டவன்

பலியானான்; காட்டுமன்னார்குடியிலே துப்பாக்கிச் சூடு நடந்தது, தாழ்த்தப்பட்டவன் பலியானான்; ஆக இன்றைக்கு ஓர் ஆண்டுக் காலத்திலே தொட்டியத்திலே, காட்டுமன்னார் குடியிலே, வியாசர்பாடியிலே, பெரம்பலூரிலே நடந்த துப்பாக்கிச் சூட்டிலெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்கள்தான் பலியானார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுடைய உயிர்கள், சாதாரண புழு பூச்சிகள் போல பறிபோனது. எனவே இந்தக் கொடுமைகள் மாற வேண்டும். அரசு அதிகாரிகள்தான், அரசு இயந்திரங்கள்தான் தாழ்த்தப்பட்டவர்களுக்கு பாதுகாப்புத் தர வேண்டும். இவர்களே, துப்பாக்கியை ஏந்துவார்களானால், அவர்களைக் காப்பாற்றுவதற்கு யார் இருக்கிறார்கள். எனவே இந்த அரசு இப்படிப்பட்ட நிலைமையைத் தவிர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சாதிக் கொடுமையிலிருந்து, தீண்டாமைக் கொடுமையிலிருந்து அந்த மக்களைக் காப்பாற்றுவதற்கு அரசு முனைந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

என்னுடைய பேர்ணாம்பட்டு தொகுதியிலே தோல் பதனிடும் தொழிலாளர்கள் நிறைய வசித்துக்கொண்டு இருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களுடைய கரங்களைப் பார்ப்போமேயானால் குஷ்டரோகிகளினுடைய கரங்களைப்போல் இருக்கும். குஷ்டரோகிகளைவிட மிக கேவலமான உருவத்தை அவர்கள் கொஞ்ச நாட்கள் பணிபுரிந்தால் பெற்று விடுகிறார்கள். அப்படி ஒரு கொடுமையான தொழிலை அங்கே, என்னுடைய தொகுதியிலே ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு ஒரு மருத்துவமனை கூட கிடையாது; வீட்டு வசதி கூட கிடையாது. அதுமட்டுமல்ல; என்னுடைய தொகுதி இருக்கிறதே அது கர்நாடகத்தின் எல்லையிலும், ஆந்திர மாநிலத்தின் எல்லையிலும், கிராமங்களும், மலைப்பகுதிகளும் சூழப்பட்ட ஒரு பகுதி. அங்கே அரசு ஒரு தொழிற்சாலையை கூட இதுவரை நிறுவவில்லை. எனவே அங்கே அரசு சார்பிலே ஒரு தொழிற்சாலை நிறுவி அங்கேயுள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதற்கு வழி செய்ய வேண்டுமென்று நான் கோருகிறேன்.

அதுமட்டுமல்ல, அங்கே தொழிற்சாலைகளிலே பணிபுரிகிற தோல் பதனிடும் தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்படுவது



இல்லை. வாரக் கணக்கில், மாதக் கணக்கில் சேர்க்கப்பட்டு, அவர்கள் மருத்துவ மனைகளுக்கு போகிற அளவுக்கு நோய் வாய்ப்பட்டவுடன் உடனே தள்ளி செட்டில்மெண்ட் செய்து விடுகிறார்கள். நிரந்தர தொழிலாளர்களாக அவர்களை மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன். தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அங்கே நிறைய இருப்பதனால் அங்கே தண்ணீரின் தரமே கெட்டுவிட்டது. 60 கிலோ மீட்டர் தொலைவுக்கு தண்ணீரே குடிக்க முடியாத அளவிற்கு உப்பு நிறைந்த தண்ணீராக மாறி இருக்கிறது. அங்கே வசிப்பவர்கள் குடிக்க நல்ல தண்ணீர்கூட இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே அரசு விரைந்து நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு நல்ல குடிதண்ணீர் வழங்குவதற்கு உதவ வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன்.

* திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கை மீது இந்திய கம்யூனிஸ்டு கட்சி சார்பாக சில யோசனைகளை வழங்க இருக்கிறேன். நமது தமிழகத்தினுடைய நிதி நிலை அறிக்கையை பாராட்ட வேண்டுமென்று எதிர்பார்க்கலாம். ஆனால் பாராட்டுவதற்கு முக்கியமான திட்டங்கள் ஏதும் கிடையாது. வளர்ச்சிக்கான திட்டங்கள், வேலை வாய்ப்புக்கான திட்டங்கள், தமிழகத்தினுடைய வளர்ச்சிக்காக புதிய திட்டங்கள் முக்கியமான திட்டங்கள், நிதிநிலை அறிக்கையில் இடம் பெறவில்லை என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன். அதைப் போலவே, மத்திய அரசுகூட 4 ஆயிரம் கோடி பற்றாக்குறைக்கு, 2 ஆயிரம் கோடி புதிய வரிகள் போட்டிருக்கிறதெல்லாம் சாதாரண மக்களுடைய தலையிலேதான் விழுகிறது. சமையல் எண்ணெய், டீசல், சிமெண்ட், உரம், பெட்ரோல், வரி உயர்வு மத்திய அரசு தமிழகத்துக்கு ஒதுக்கக்கூடிய நிதி, இந்த ஆண்டுகூட, முதலமைச்சர் அவர்கள் சென்று அதிகமாக நிதி பெற்று வந்துவிட்டார் என்று பெருமையாக பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதிகமான நிதி பெற்றிருந்தாலும், மத்திய அரசால் போடப்பட்ட இந்த வரியால் ஒதுக்கப்பட்ட பணம் முழுமையிலும் தமிழ்நாட்டு

[திரு. பொ. உத்திராபதி] [1986 மார்ச் 25

வளர்ச்சிக்காகத் தேவைப்படாமல், மீண்டும் மத்திய அரசுக்கு, திரும்பச் செலுத்தக் கூடிய நிலையில்தான் மத்திய அரசினுடைய கொள்கையை வகுத்திருக்கிறார்கள். அதற்குப் பின் செல்லக்கூடிய அளவுதான் தமிழகத்தினுடைய நிதிநிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். இதை நான் மட்டும் சொல்லவில்லை, நிதி நிலை அறிக்கையில் முதல் பக்கத்திலேயே நமது நிதி அமைச்சர் அவர்கள் மன புழுக்கத்தோடும், வேதனையோடும் குறிப்பிட்டு இருக்கிறார்கள், அந்த அடிப்படையில்தான் சொல்கிறேன்.

காவிரி நீர்ப் பிரச்சினை தமிழகத்தினுடைய மிக முக்கியமான பிரச்சினை. ஆனால் நிதிநிலை அறிக்கையில் போகிறபோக்கில் ஏதோ ஒன்று எழுதவேண்டுமென்று, அந்த அளவுதான் எழுதப் பட்டிருக்கிறதே தவிர, அது ஒரு முக்கிய இடம் பெறவில்லை. காரணம், தமிழகத்தில் 1974 ஆம் ஆண்டு காவிரி ஒப்பந்தம் புதுப்பித்து இருக்க வேண்டும். 1976 ஆம் ஆண்டு ஆளுநர் ஆட்சி அன்றைக்கு காங்கிரஸ் கட்சி; மேலேயும் காங்கிரஸ்; இங்கேயும் காங்கிரஸ். தீர்த்து இருக்கலாம். அவர்களும் தவறி விட்டார்கள். அடுத்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 1977-லிருந்து, இன்று வரையிலும். அன்றைக்குக்கூட ஒரு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், கம்யூனிஸ்டுகளுக்கு என்ன திட்டங்கள் சொல்லத் தெரியும், அவர்கள் இரண்டு பேர்கள்தானே என்று. ஆனால் நான் கேட்டுக்கொள்வது எல்லாம் யாருக்கு என்பது அல்ல, தமிழகத்தினுடைய முக்கியமான திட்டம், தஞ்சை மாவட்டம், திருச்சி, சேலம், தென் ஆற்காடு மாவட்டம், இப்படி தமிழகத்தினுடைய நெற்களஞ்சியங்களிலே முக்கியமான திட்டம், காவிரி நீர் திட்டம். இந்தப் பிரச்சனையை அன்றைக்கு முதலமைச்சராக இருந்த தேவராஜ் அர்ஸ் இருக்கும்போதே தீர்த்து இருக்கலாம். அப்போது அரசு கவனக் குறைவாக இருந்துவிட்டது. இப்போது கர்நாடக முதலமைச்சராக ஹெக்டே அவர்கள் இருக்கிறார்கள். இன்றைக்கு தமிழக அரசு முனைப்போடு கொஞ்சம் தீவிரமாக மத்திய அரசை தலையிட வைத்து, இரண்டு மாநிலங்களுக்கிடையே இருக்கிற உறவை நீடிக்கச் செய்ய முனைப்போடு செயல்பட வேண்டும். இல்லா விட்டால், உங்கள் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தின் நெற் களஞ்சியங்கள் சீரழிந்துவிட்டன. தஞ்சை மாவட்டம் பாலைவனம்



1986 மார்ச் 25] [திரு. பொ. உத்திராபதி]

ஆகிவிட்டது என்கிற அந்த நெடுங்கால கெட்ட பெயரை இந்த அரசு ஏற்படுத்திக் கொள்ளவேண்டாம். ஆகவே, உடனடியாக தீர்க்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் தெலுங்கு கங்கா திட்டம். இதில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. நாம் தான் 45 கோடி ரூபாய் கொடுத்து இருக் கிறோம். அதற்கு வட்டி இல்லை. ஆனால் ஆந்திரா அதற்கு பணம் ஒதுக்கவில்லை. ஆனால் சிறிதளவு கால்வாய் வெட்டப் பட்டு இருக்கிறது. ஆனால் மத்திய அரசு இதற்கு அனுமதியை வழங்குவதற்கு இன்னும் என் மறுத்து வருகிறார்கள். ஆனால் இந்தத் திட்டத்தை துவக்கி வைத்ததே முன்னாள் பாரத பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் தான். இப்போதும் அவர்கள் மகன் ராஜீவ் காந்தி தான் இந்தியப் பிரதமராக இருக்கிறார்கள். என் இந்தத் திட்டத்தை இன்றைக்கு முடக்கி வைத்து இருக்கிறார்கள்? நான் மாநில அரசை கேட்டுக் கொள்ளுவது எல்லாம் இன்றைக்கு நீங்கள் அவர்களோடு பல்வேறு வகையில் உடன்பாடு வைத்துக்கொண்டு இருக்கிறீர்கள். ஆகவே, இந்த தெலுங்கு கங்கா திட்டம் என்பது கிருஷ்ணா நதி நீர் தமிழகத்திற்கு, அதுவும் அதன் தலைநகருக்கு மிகவும் முக்கியமாக குடிநீர் தேவைப்படக்கூடிய திட்டம். ஆகவே நாம் தான் பணத்தை கொடுத்து இருக்கிறோமே தவிர ஆந்திர அரசு பணம் கொடுக்கவில்லை. மத்திய அரசு அனுமதி தர மறுத்து வருகிறது. ஆகவே, தமிழக அரசு இதை ஏனோ தானோ என்று பார்க்காமல் இதற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்து இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மத்திய அரசு இதற்கு அனுமதியை வழங்க வேண்டும். மத்திய அரசின் மூலமாக இருக்கக்கூடிய அந்த காட்டு இலாகா நிலங்களை உடனடியாக வழங்கி இந்த திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி கொடுக்க வேண்டும். அப்படி அனுமதி வழங்க மறுத்தால் எல்லா கட்சியினரையும் கலந்து இந்தத் திட்டத்தை உருவாக்குவதற்கு, ஆலோசனைப் பெறுவதற்கு தமிழக அரசு முற்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மூன்றாவதாக, வீடு கட்டும் திட்டம். உண்மையிலேயே நமது அரசு அறிவிப்பது எல்லாம் பெரும்பகுதி அறிவிப்ப ளவாகவே ஆகிவிடுகிறதே தவிர வேறு அல்ல. அந்த அறிவிப்பு

களை எந்த அளவுக்கு அமல்படுத்தியிருக்கிறீர்கள், அது எந்த அளவுக்கு மக்களைப் போய் சேருகிறது என்பதைப் பற்றி அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் 30 லட்சம் வீடுகள், ஆயிரம் கோடி செலவு செய்யப்போகிறோம், ஒரு ஆண்டுக்கு 10 லட்சம் வீடு என்று எல்லாம் அறிவித்தீர்கள். அடுத்த தேர்தலில் தமிழக அரசு மக்களிடமிருந்து அதிக வாக்குகளை பெறும் என்ற நம்பிக்கையில் ஒரே ஆண்டில் 10 லட்சம் வீடுகள், 3 ஆண்டில் 30 லட்சம் வீடுகள் என்று எல்லாம் அறிவித்தீர்கள். ஆனால் என்ன? பட்ஜெட்டில் 26 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். அது எந்த மூலைக்கு காணும்? கடலில் பெருங்காயம கரைத்தது போல்தான். ஆனால் நீங்கள் சொல்லுகிற திட்டப்படி ஒதுக்கி இருக்கக் கூடிய பணம் இந்த வீடுகள் கட்டவேண்டும் என்றால் 50 வருடங்கள் ஆகும். 50 வருடங்கள் வரை நீங்கள் ஆட்சியில் இருக்கப் போகிறீர்களா? இப்போதே மக்கள் எந்த அளவுக்கு வருங்காலத்தில் உங்களை அங்கீகரிக்கப் போகிறார்கள் என்பது அது எதிர்காலத்தில் தான் தெரியும். இந்தத் திட்டத்தை ஏன் அறிவிக்க வேண்டும்.

அதற்கு இப்போது பணம் ஒதுக்கப்பட்டு இருப்பது 26 கோடி தான். அப்போது 30 லட்சம் வீடுகள் என்று சொன்னால் பஞ்சாயத்து தேர்தலில் மக்கள் எல்லாம் வோட்டு போட்டு விடுவார்கள் என்று நினைத்து அறிவித்தீர்கள் என்று சொல்லுகிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தான் பதில் சொல்ல வேண்டும். பணம் இல்லாமல் ஒரு பட்ஜெட்டை உருவாக்குவது, பணம் இல்லாமல் திட்டத்தை அறிவிப்பது மக்களை ஏமாற்றக்கூடிய திட்டமாக அமைகிறதே தவிர, மக்களுக்கு உருப்படியான திட்டம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் நில சீர்திருத்தத் திட்டம். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் வந்தது, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வந்து 15 ஸ்டான்டேர்ட் ஏக்கர் என்று சொன்னார்கள். அதிலும் ஓட்டை தான். ஆனால் நீங்கள் நல்ல சட்டத்தை கொண்டு வருவோம் என்று சொன்னீர்கள். ஆனால் அதைப் பற்றி இதில் தொட்டுப் பார்க்கவில்லை. நிலச்சீர்திருத்தச் சட்டம் ஒன்றை உருவாக்கி மிச்ச நிலத்தை எடுத்து நிலம் இல்லாத விவசாயத்





தொழிலாளர்களுக்கு கொடுக்காமல் வறுமையை ஒழிக்க முடியாது என்று கம்யூனிஸ்ட்டு கட்சி சொல்கிறது. ஆக அதற்கான திட்டம் உண்டா? நிதியமைச்சர் அதுபற்றி சொல்லவில்லை. சொல்லுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கோவில் நிலங்களில் உள்ள குத்தகைதாரர்களுக்கே அந்த நிலம் சொந்தம் ஆக்கப்படும் என்பது எங்கள் கொள்கை என்று சொன்னார்கள். திட்டம் இல்லை. எப்படி செய்யப் போகிறீர்கள். பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குத்தகை விவாசாயிகளுக்கு சொந்தமாக்க வேண்டும்.

அடுத்து, பினாமி நிலம். எங்கள் மாவட்டத்தில் கும்பகோணம், பாபநாசம், வலங்கைமான் கபிஸ்தலம் போன்ற பலயிடங்களில் 4 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பதுக்கப்பட்டு இருக்கின்றன. அந்த நிலத்தை எடுக்க சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றினோம். அது மத்திய அரசின் அனுமதிக்கு போனது. அங்கே அது கிடப்பில் இருக்கிறது. ஏன் என்று நீங்கள் அதை கேட்கவில்லை. ஏன் பயப்படுகிறீர்கள். நான் இப்போதும் கேட்கிறேன்; நிதியமைச்சர் அவர்களே, இன்றைய சட்டசபை கூட்டத் தொடரிலே ஒரு சட்டம் கொண்டு வாருங்கள். தமிழகத்தில் 50 ஆயிரம் ஏக்கருக்கு மேலாக பினாமியாக மறைத்து வைக்கப்பட்டு இருக்கிறது. அந்த நிலத்தை எடுத்து நிலம் இல்லாத ஏழைகளுக்கு, விவசாயத் தொழிலாளிகளுக்கு கொடுக்க முடியும். அப்போதுதான் வறுமையை ஒழிக்க முடியும். அதற்கான திட்டம் எதுவும் இதில் இல்லை. ஆகவே இந்த நிதிநிலை அறிக்கையில் உருப்படியான திட்டம் எதுவும் இல்லை. ஆகவே எதிர்காலத்தில் உருப்படியான திட்டங்களை கொண்டு வாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாய தொழிலாளர்கள் ஒரு கோடி பேர் இருக்கிறார்கள், ஒன்றும் இல்லாதவர்கள். வெறும் மண்வெட்டியை நம்பி இருக்கிறார்கள். அவர்களுக்கு இதில் என்ன குறிப்பிட்டு இருக்கிறீர்கள். எதுவும் இல்லை. இதில் ஏதாவது இருந்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லட்டும். 4 வருடங்கள் ஆகிறது அவர்களுக்கு கூலி நிர்ணயம் செய்து, 10 ரூபாய், 8 ரூபாய் என்று நிர்ணயம் செய்து 4 வருடங்கள் ஆகிறது. இந்த 4 வருடங்களில் எத்தனையோ தொழிலில் இருப்பவர்களுக்கு எவ்வளவு சம்பளங்களை உயர்த்தியிருக்கிறோம். தமக்கும்,

[திரு. பொ. உத்திராபதி] [1986 மார்ச் 25

சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர்களுக்கும் சம்பளத்தை உயர்த்தியிருக்கிறோம். ஆனால் கிராமத்தில் உற்பத்தியைப் பெருக்குகிறவர்களுக்கு, அன்றாடம் வறுமையில் வாடக் கூடியவர்களுக்கு 4 வருடம் ஆகிறது கூலி நிர்ணயம் செய்து.

ஆகவே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையில் சொல்லாமல் இருந்தாலும் ஒரு கூலி நிர்ணயக் கமிஷன் அமைத்து அந்த கமிஷன் எல்லா மாவட்டங்களுக்கும் சென்று இன்றைக்கு ஏற்பட்டுள்ள விலைவாசிக்கு ஏற்றாற்போல் அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு கூலி உயர்வை கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1.10)

தஞ்சை மாவட்டத்தில் காவிரி படுகையிலே இன்றைக்கு எண்ணெய் வளம் அபரிமிதமாக கிடைக்கிறது. எனவே நம்முடைய நாட்டிற்கு உலக நாடுகள் கொடுக்கக் கூடிய எண்ணெயின் விலையைக் குறைத்திருக்கிறார்கள். அதற்கு என்ன காரணம்? இந்தியா முழுவதும் எண்ணெய் வளம் பெருகியிருக்கிறது. தமிழகத்திலே காவிரி படுகையில் எண்ணெய் வளம் பெருகியிருக்கிறது. அந்த எண்ணெய் வளத்தால் இந்தியா உயர்ந்துவிடும். இந்தியாவை அடிமைப்படுத்தவேண்டுமென் பதற்காக உலக வல்லரசு நாடுகள் இன்றைக்கு விலையைக் குறைத்திருக்கிறார்கள். எனவே தமிழக அரசு இதை கவனத்தில் கொண்டு, மத்திய சர்க்காரை வற்புறுத்தி, தமிழகத்தில் தஞ்சை மாவட்டத்தில் இந்த எண்ணெய் வளத்தை மேலும் வலுப்படுத்த வேண்டும். நரிமணத்தில் எண்ணெய் கிடைத்துக் கொண்டிருக்கிறது. களப்பாலில் தரமான எண்ணெய் கிடைக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் பல்வேறு இடங்களில் அதற்கான ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது.

தஞ்சை மாவட்டம் விவசாயத்தை நம்பி வாழ வேண்டியுள்ளது. எனவே அங்கே கிடைக்கக் கூடிய எண்ணெய் வளத்தை வைத்து, தஞ்சை மாவட்டத்தில் ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஒன்றை உருவாக்க, அமைச்சரவர்கள் மத்திய சர்க்காரை வற்புறுத்தி, ஆவனசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1986 மார்ச் 25] [திரு. பொ. உத்திராபதி]

அங்கே உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்றால், நாகப்பட்டினத்தில் அனல் மின்சார நிலையத்தை அமைப்பதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து இலவச பாடப்புத்தகம், இலவச சீருடை இந்தத் திட்டத்தை நான் வரவேற்கிறேன். ஆனால் எங்கே கொடுக்கப் பட்டிருக்கிறது? இன்னும் கூட பல பள்ளிக்கூடங்களில் சீருடைகளும் கொடுக்கப்படவில்லை. பாடப் புத்தகங்களும் கொடுக்கப்படவில்லை, எப்படி பிள்ளைகள் சரியாக பாஸ் பண்ண முடியும்? இப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்கின்றன. வருகிற ஆண்டிலாவது பள்ளிகள் துவக்கப்பட்டு, ஒரு மாதத்திற்குள்ளாகப் பாடப் புத்தகங்கள் கொடுக்கப்பட வேண்டும். உடைகள் கொடுக்கின்ற விஷயத்தில், 10 வயது பையனுக்கு 6 வயது பையன் உடுத்துகிற அளவிற்கு உடை கொடுக்கப்படுகிறது. அதை எப்படிப் போட முடியும்? உடைகள் சரியான அளவில் தைக்கப்பட்டு, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக குழந்தைகளுக்கு வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஊரகக் குடிநீர்த்திட்டம். இதற்காக ரூ. 45 கோடியை ஒதுக்கியிருக்கிறீர்கள். பல்வேறு இடங்களில் மேல்நிலைத் தொட்டிகள் சரியான முறையில் இல்லை. இரும்பிலான மேல்நிலைத் தொட்டிகளை அமைப்பதற்குப் பதிலாக சிமெண்டினால் கட்டப் போகிறார்கள் என்று சொல்கிறார்கள். கட்டுங்கள்—வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. தஞ்சை மாவட்டத்தில் 100-க்கு 65 சதவீதம் தொட்டிகள் பழுதடைந்து இருக்கின்றன. அதிலே இருந்த சாமான்கள் எல்லாம் போய் விட்டது. யாரை கலந்து கொண்டு கட்டினீர்கள் என்பது தெரியவில்லை. எஞ்சினீயர்களுக்குத் தெரியுமா, தெரியாதா என்பது தெரியவில்லை. இவ்வாறு தமிழ் நாட்டின் பொருளாதாரம், ஒதுக்கப்பட்ட பணம் ஒவ்வொரு துறையிலும் வீணாகப் போகிறது.

குடிநீர்ப் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை. முத்துப் பேட்டை திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம், தலைஞாயிறு ஆகிய பகுதிகளில் உப்பு நீரைக் குடித்துக்கொண்டிருக்கிறார்கள். ராஜாமடத்திலிருந்து கொண்டுவரப் போவதாகச் சொல்லி யிருக்கிறார்கள். கூட்டுக் குடிநீர்த்திட்டத்தின் மூலமாக எல்லா

[திரு. பொ. உத்திராபதி] 1986 மார்ச் 25]

மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட வேண்டும். அதிகமான பணத்தை ஒதுக்கி, அதிகாரிகள் மூலமாக ஒரு கமிட்டியைப் போட்டு இந்த வேலைகளை ஆரம்பித்து மக்களுக்குத் தரமான குடிநீர் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கைப் பம்புகள் சீரழிந்திருக்கின்றன. இதற்காக அதிகமான பணத்தை ஒதுக்கி, குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மின்சாரத் திட்டம். இதற்காக ரூ. 395 கோடி ஒதுக்கப்பட்டு, ரூ. 300 கோடி வரவு-செலவுத் திட்டத்தில் கொடுக்கப் போவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. மின்சாரம் என்பது ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சியை மேலும் மேலும் அதிகரிக்கக்கூடிய ஒரு திட்டம். அதன் மூலமாக ஆயிரக் கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். ஆனால் அப்பேற்பட்ட திட்டத்திற்காக ஒதுக்கக் கூடிய பணம் எப்படிப் போகிறது? விவசாயிகளுக்குப் பகலில் மின்சாரம் வழங்கப்படவில்லை. கிராமங்களில் மின்விளக்கு சரியாக இல்லை. ஆனால் மின் துறைக்கு அதிகமான பணம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. அந்த மின் பல்புகளை வழங்கக்கூடியவர் களுக்குத் தான், அந்தக் கம்பெனிகளுக்குத் தான் பணம் போய்ச் சேர்கிறது. அவர்கள் வழங்கக் கூடிய அந்த உபரி பொருட்கள் அத்தனையும் தரமானதாக இல்லை. எனவே தனியார்த் துறையிலிருந்து வழங்கப்படாமல், கூட்டுறவுத் துறை மூலமாக அரசாங்கத்தின் நேரடிப் பார்வைக்கு, நிதியமைச்சர் அவர்கள் பார்வைக்கு கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக விவசாயிகள் பற்றி நிறைய சொல்லியிருக் கிறார்கள். நான் கேட்டுக்கொள்வதெல்லாம், விவசாயிகள், தமிழகத்தில் தஞ்சை மாவட்டத்தில் 5 ஆண்டுகளாகப் பாதிக்கப் பட்டு வந்திருக்கிறார்கள். அதற்காக ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த உயர்மட்டக் குழுவின் சிபாரிசை இதுவரைக்கும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னால், எதற்காக இந்த உயர்மட்டக் குழு தேவைப்படு கிறது? நான் கேட்டுக்கொள்வதெல்லாம் இந்த உயர்மட்டக் குழுவை கலைத்துவிடுங்கள். அதற்கு அனாவசியமாகச் செலவிடு வதற்கு அவசியம் இல்லை. 5 ஆண்டுக்காலமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கடன் பத்தாயிரமாக இருந்தது இன்றைக்கு 25



1986 மார்ச் 25] [திரு. பொ. உத்திராபதி]

ஆயிரமாக ஆகியிருக்கிறது. வட்டி அந்த அளவுக்கு உயர்ந்திருக் கிறது. அதைப்போலவே நெல்லுக்கு 35 ரூபாய் கொடுத்தீர்கள். ஆனால் மத்திய அரசு உரத்தின் விலையை உயர்த்திவிட்ட காரணத்தினால் நீங்கள் கொடுக்கிற 35 ரூபாயும் உரக்கம்பெனிக் குப்போய்விடுகிறது. பணமாக கொடுக்க வேண்டுகிறேன். ஆகவே அந்த விவசாயிகளுக்கு வட்டி முழுவதையும் தள்ளுபடி செய்யவேண்டும். அவர்களுடைய கடன்களை 10 ஆண்டுகளில் திருப்பி வசூலிக்குமாறு ஏற்பாடு செய்ய வேண்டும். இன்றைக்கு கரும்பை உற்பத்தி செய்கிறவர்களுக்கு எந்த விதமான பலனும் கிட்டவில்லை, சர்க்கரை முதலாளிகள்தான் அதிகமான விலைக்கு விற்று கொள்ளையடிக்கிறார்கள். கரும்பு விவசாயிகளுக்கு கட்டுபடியாகக்கூடிய விலை கிடையாது. ஆகவே அவர்களுக்கும் கட்டுபடியாகக் கூடிய விலையைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டம் வடிகால் மூலமாகவும் மழையாலும் பாதிக் படுகிறது. தஞ்சை மாவட்டத்திலே செங்கிபட்டிக்கு அருகில் முத்துமுதலை வாரித் திட்டம், சோலன்வாரித் திட்டம் ஆகியவற்றிற்காக 50 கோடி ரூபாய் செலவாகும் என்று பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இது 40 ஆண்டுகளுக்கு முன்பு தயாரிக்கப்பட்ட திட்டம். ஆகவே பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இப்போது அதை நேரடியாகப் பார்வையிட்டு 1987-88 ஆம் ஆண்டு நிறைவேற்று வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும், காலத் தாழ்வு இல்லாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தலைமைச் செயலக ஊழியர்கள் 35 பேர்கள் பழிவாங்கப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும். வழக்குகளை வாபஸ் பெற்று, உடனடியாக அவர் களுக்கு வேலை கிடைப்பதற்கு ஆவன செய்யவேண்டும். முத்துப் பேட்டையிலே ஒரு பேருந்து நிலையமும், திருத்துறைப்பூண்டி யிலே ஒரு பேருந்து நிலையமும் கோட்டூரிலே ஒரு மருத்துவ மனையும், திருத்துறைப்பூண்டியிலே ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியும் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும்.

தஞ்சையில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அதையும் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு கடைசியாக மாநகராட்சித் தேர்தல்களை விரைவில் நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

THIRU G. K. FRANCIS: Hon. Deputy Speaker, Sir, in expressing thanks to the Hon. Finance Minister for presenting a 'Tax Free' Budget and at the same time for a skilfully presented 'Consumer Oriented' Budget in which major consumer items have been exempted from tax and many items for which tax rates have been slashed, I would like to make some few observations.

The Father of the Nation, Mahatma Gandhi, in his book 'India of my Dreams' wrote "I shall work for an India in which the poorest shall feel that in which there shall be no high class and low class of people; an India in which all communities shall live in perfect harmony. There can be no room, in such an India, for the curse of untouchability or the curse of intoxicating drinks and drugs. Women will enjoy equal rights as man".

When we apply these great and noble words, it is remarkably striking to find that the Government of Tamil Nadu, under the dynamic leadership of Dr. M. G. Ramachandran, is striving to do its utmost to achieve the great dreams of the Father of the Nation. In the first place, a major portion of the funds of the Budget is allotted for a host of Social Welfare Programmes. In doing so, the Government is doing its utmost to the best of its ability to remove the burden of poverty and in giving the poor an 'effective voice'. The most laudable of this social welfare thrust is the Chief Minister's Nutritious Noon Meal Scheme. This scheme has given a new dimension to the whole educational process and to the nutrition requirement of school going children. The efficacy of this programme has been echoed at many national and international forums. It has even attracted the attention of the centre who have now magnanimously come forward to allot funds for this outstanding scheme.

Coupled wtih this massive social welfare programme is another massive social welfare programme worth mentioning and which is very important; it is the ambitious Housing Programme for the Adi-Dravidars, Tribals and others who are below the poverty line. The Government has allotted huge amount for this massive scheme. Gandhi had a soft corner for these people and constantly reminded us that we should make them feel part of the Indian populace and this can only be achieved by improving their economic status and standards in life.

(பிற்பகல் 1-20)

In this connection let me impress upon this august House that nearly 60 per cent of the Anglo-Indian Community are struggling and are below the poverty line. I request our Hon. Finance Minister to give these unfortunate also a better economic status and as a first step I request for an allotment for atleast 1000 Anglo-Indians to be given homes under this massive housing programme. In undertaking this massive housing programme it is necessary not to utilise conventional means of construction. Cheaper buildings materials must be experimented upon; the costs of construction should be slashed so that the maximum output could be got with the limited resources.





Power is the backbone for industrial and agricultural progress. The Government's outlay of 395 crores for the year 1986-87 speaks of the importance for the power that the Government has given. The proposal of organising independent generation of power is the need of the hour. There is also the need to shift from conventional electric power generations to the use of solar power. Government should give greater importance to the development of this source of energy generation also.

A vital aspect of the Budget is that it has synchronised itself with the bold and fresh look on various issues of the Centre. Most noteworthy in this is the new Industrial Policy, new Educational Policy, and Long term fiscal Policy. These have had a strong impact on National Development and National growth. Taking full use of these liberalisation, the Government of Tamil Nadu has done well to fall in line with the thinking of the Centre. It is also remarkable, the Government of Tamil Nadu has achieved the first place in terms of performance in implementing the Twenty Point Programme.

An outstanding aspect of the Government of Tamil Nadu is that it has adopted and will be soon implementing the New Educational Policy announced by the Union Government. This New Educational Policy which gives importance to technocratic education must be given full priority. Every school in Tamil Nadu must be given full encouragement and incentives offered to students to opt for vocationalisation and technical education rather than traditional academic stream.

It is also noteworthy to find that the Centre is taking all measures and steps to assist the Government of Tamil Nadu. The Plan outlay of Rs. 5,750 crores by the Centre for Tamil Nadu speaks of the massive assistance. The Chief Minister has done well in making a plea to the Central Government to remove the imbalance of Central assistance to the State. This has resulted in increase share in tax revenue given to the State Government. In fact this assistance and term loans given to the Government of Tamil Nadu by the Government of India have helped to clear the loans, over-drafts by the State Government.

[Thiru G. K. Francis] [1986 மார்ச் 25

A remarkable statement of the State Government is the introduction of prohibition once again in Tamil Nadu. Despite the fact that it will mean a loss of about Rs. 60 crores to the State exchequer, it will do a lot of good for the moral progress of the people and for the State. Gandhiji wrote that he would rather have India reduced to a State of pauperism than have thousands of drunkards in our midst. In his book 'Key to Health' Gandhiji wrote 'alcohol makes a man forget himself and while its effect lasts he becomes utterly incapable of doing anything useful. Those who take to drinking ruin themselves and ruin their family. These people lose all sense of decency and property. There is a school which favours limited and regulated consumption of alcohol and believes it to be useful. I have not found any weight in this argument . . . We have still to face the fact that innumerable human beings cannot be kept under discipline. None of the public workers perhaps have the same bitter experience of the evils of drink as I have had. In South Africa, most of the Indians going there as indentured labourers were addicted to drinking...... Even women had fallen victims to this evil habit. I have seen them in a most pathetic condition. One who has seen these scenes near the public bars will never support drinking. African Negroes were not given to drinking originally. Liquor may be said to have simply ruined them. Large numbers of Negro workers are seen to have simply wasted all their earning in drinking so that their lives become devoid of any grace........ I have seen respectable Englishmen rolling in the gutters under the effect of alcohol. There is no exaggeration in this statement...... On my return from South Africa to India, I had a similar painful experience of the evils of drinking. Several Princes have been and are being ruined by liquor. What applies to them applies to many a rich youth. The condition of labour as a result of taking alcohol is also pitiable. That, as a result of such bitter experiences I have become a staunch opponent of alcohol, will not surprise the readers. In a nutshell, alcohol ruins one physically, morally, intellectually and economically." So the loss of 60 crores of rupees is nothing compared to the vast benefits of prohibition.

Coming to the various budget proposals mentioned by the Finance Minister I am delighted to find that ever since the noted economist Arthur Laffer pointed out that taxes become unproductive after a certain point, it is exemplary on the part of the State Government to follow what is becoming an international way of life, that is to cut down taxes and to stimulate business and industry by lowering taxes and thereby increasing the productivity. The ten items that the



1986 மார்ச் 25] [Thiru G. K. Francis]

Finance Minister has announced as exempted from Sales Tax will definitely benefit a large segment of the common man to a very large degree. These items totally exempted from sales tax are widely used. The most noteworthy among them are J.I. Buckets, charcoal, beds and pillows. The exemption of sports goods should stimulate the development of sport in the State of Tamil Nadu and the exemption of musical instruments would also stimulate this industry.

In the second category, the Government has done well to substantially lower the tax in 41 items of life saving drugs, in milk food and baby food. This measure indeed has far-reaching consequence and speaks about the social welfare commitment of the Government of Tamil Nadu. The decision of the Government to lower the tax for electronic industries would give further encouragement to local manufacturers and would also make these electronic goods cheaper for the consumer.

The desire of the Finance Minister to simplify the multi-point tax to a single point tax is amply borne out by large scale rationalisation and simplification which the Minister has spelt out in a number of areas.

I am sure that this would go a long way in lessening the burden of taxes on the people of Tamil Nadu and at the same time would lead to a desire on the tax payer to pay his taxes in time and to help the Government to achieve its various obligations. In conclusion let me say the budget of 1986-87 has all the ingredients of a social welfare oriented budget. The various provisions and the various programmes mentioned therein will help the State of Tamil Nadu to blossom into a premier State and at the same time in words of the 'Hindu' it could become a pace-setter for other States. I herewith give my full support to the budget of 1986-87 and thank the Finance Minister for the same. Thanks to the Chair.

* திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற 1986-87-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையைப் பற்றி, அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியினுடைய சார்பிலே என்னுடைய கருத்துக்களையும் இங்கே சொல்ல விழைகிறேன். சொல்வதற்கு முன்னாலே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய அலுவல் நேரத்தை நீட்டித்து, எனக்குச் சற்று நேரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்] [1986 மார்ச் 25

இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தமட்டிலே, அதிகமாக அதைப்பற்றி விமர்சிப்பதைக் காட்டிலும், எங்களுடைய பகுதியிலே இருக்கக்கூடிய பல குறைகளையும் கோரிக்கைகளையும், இந்த நிதிநிலை அறிக்கையை யொட்டிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே, குடிநீர்ப் பிரச்னையைப் பொறுத்தமட்டிலும், மிக முக்கியமாக, அதிக ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்ட போதிலும், ரூ. 5 கோடி அளவிலே தான் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. நிச்சயமாகச் சொல்கிறேன், என் பகுதியிலே இருக்கிற வறட்சியைப் பார்க்கின்றபொழுது, இந்த ரூ. 5 கோடி, எங்கள் உசிலை தாலுகாவுக்கு மட்டும் போதுமா என்ற நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தத் தொகை கூடுதலாக ஒதுக்கப்பட வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்திலே சில பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்தாலும்கூட, அங்கே கடுமையான வறட்சியின் காரணமாக, அந்தப் பகுதிகளில் உள்ள மக்கள், அந்தக் கிராமங்களை விட்டு வெளியே செல்கின்ற நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதே போல், அங்கே ஆடுமாடுகள், குளங்களில் தண்ணீர் இல்லாமல், விவசாயத்திற்கு நீர் இல்லாமல், வைக்கோல்கள் கூட இல்லாத நிலையில், மடிந்து போகக்கூடிய நிலை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. ஆனால், ஆளுநர் உரையின்போதும் சரி, நிதிநிலை அறிக்கையின்போதும் சரி, மதுரை மாவட்டத்திலே இருக்கிற கடுமையான வறட்சியைப் பற்றி, ஏற்கனவே, ஆட்சியாளர்களிடத்திலே எடுத்துச்சொல்லியும், நானும் தனிப்பட்ட முறையிலே முதல்வர் அவர்களிடத்திலே மனுக்களைக் கொடுத்திருந்தும் கூட, இரண்டு மாதங்களுக்குப் பின்னாலே, ஆய்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன என்று பதில்தான் வந்ததே தவிர. . . .

(பிற்பகல் 1.30)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

**திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் :** தலைவர் அவர்களே, எங்களுடைய உசிலம்பட்டி தொகுதியில் வறட்சி கடுமையாகப் பாதித்திருக்கிறது. அங்கே விவசாயிகள் இதுவரையில்



1986 மார்ச் 25] [திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்]

பட்டிருக்கிற கஷ்டத்தை நீக்க எந்தவிதமான அறிவிப்பும் இல்லை. அந்தத் தொகுதியிலே விவசாயத்திற்குத் தண்ணீர் இல்லை, குடி தண்ணீருக்கு கஷ்டம் இருக்கிறது என்பதால் அதுபற்றி பலமுறை எடுத்துச் சொல்லியும் பலனளிக்காததால் உசிலம்பட்டி தொகுதியில் செல்லம்பட்டி, திருமங்கலம் பகுதி மக்கள் போராட்டம் நடத்தினார்கள். தண்ணீர் பற்றாக்குறை காரணமாக போராட்டம் நடத்திய மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடந்தது. அதைப்பற்றி எல்லாம் அரசிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அந்தப் பகுதி மக்கள் எல்லாம் தங்களுடைய வாழ்க்கைக்குப் போராடுகிறார்கள். தங்களுடைய உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஏதாவது விளைபொருள்களை விளைவித்து, ஒரு நேரமாவது உணவு உட்கொள்ள வேண்டுமென்று போராடுகிறார்கள். அந்த அப்பாவி மக்கள் தங்களுடைய வாழ்க்கைப் பிரச்சனைக்காகத்தான் போராடினார்கள், வேறு காரணங்கள் எதுவும் இல்லை என்று எடுத்துச் சொல்லியும் அவர்கள் மீது போடப்பட்டிருக்கிற வழக்குகள் இன்னும் வாபஸ் ஆகவில்லை. அந்த வழக்குகளை எல்லாம் வாபஸ் வாங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று அங்கே இருக்கிற ஏழை எளிய விவசாய மக்கள் பெற்றிருக்கிற வங்கி, கூட்டுறவுக் கடன்களை ஒட்டு மொத்தமாக 18 அல்லது 20 மாதங்கள் கழித்து காலம் தாழ்த்தி பெறக்கூடிய முடிவினை எடுத்து, அந்த முடிவினை இந்த அரசு செயல்படுத்த வேண்டும். ஏனென்று சொன்னால் கடந்த 7, 8 ஆண்டு காலமாக கடுமையான வறட்சியினால் அந்தப் பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த அப்பாவி மக்கள் குடிதண்ணீருக்குக்கூட வழியில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, கடன்களை தள்ளி வைப்பதோடு வரி வஜாவும் செய்துகொடுக்க வேண்டும். இப்போது கடனை வசூல் செய்வதில் கெடுபிடி காட்டுகிறார்கள்; அதனால் அந்த மக்கள் அதிகமாக துன்புறும் நிலைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். ஆகையால் உடனடியாக கடன் வசூலை நிறுத்தி வங்கி, கூட்டுறவுக் கடன்களை எல்லாம் காலம் தாழ்த்தி பெற ஏற்பாடு செய்வதோடு வரி வஜாவும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று குடிதண்ணீர் பற்றாக்குறையைப் போக்க போர்க்கால நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சரிடம் சொல்லியிருக்கிறோம். குடிநீர் வழங்கலுக்காக நிதி ஒதுக்கீடும் செய்திருக்கிறார்கள். ஒதுக்கப்பட்டிருக்கிற நிதியிலிருந்து உசிலை தாலுகாவிற்கு அதிகமாக பகிர்ந்தளிக்க வேண்டும், குடிநீர்ப் பிரச்சனையைப் போக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்சனையைப் போக்குகின்ற நேரத்தில் அந்த மக்களுக்கு வாழ்வதில் ஒரு நம்பிக்கை ஏற்படும். அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், உசிலை தாலுகாவை வறண்ட பகுதி என்று அறிவிக்க வேண்டும். அதைப்போன்று அந்த மாவட்டத்தின் ஒரு பகுதியை வளமாக ஆக்கிக் கொண்டிருக்கிற வைகைப் பாசனத் திட்டத்திற்கு திருமங்கலம் பிரதான கால்வாய் இருக்கிறது. அந்தக் கால்வாய் செல்கின்ற பக்கத்தில் மட்டும்தான் சுமார் 10,000 ஏக்கர் நிலத்தில் விளைபொருள் விளைவிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அந்தப் பகுதியிலே டி.என்.டி. என்று சொல்லுகின்ற பிறமலைக் கள்ளர் (டீ நோட்டிஃபைடு ட்ரைப்ஸ்) அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் மிகவும் தாழ்த்தப்பட்ட நிலையில் இருக்கிறார்கள். சுதந்திரப் போராட்டக் காலத்தில் அவர்கள் தீவிர போராட்டத்தில் ஈடுபட்டதால் அந்த மக்களை ஆங்கிலேயர்கள் குற்றப் பரம்பரை என்று சொல்லி அடக்கி வைத்திருந்தார்கள். அப்படிச் சொல்வது தவறு என்று சொல்லி அவர்களுடைய அடிமை விலங்கை நீக்கியவர் தேவர் பெருமகனார். அப்படிப்பட்ட அந்த மக்களின் நன்மைக்காக வந்ததுதான் வைகை பாசன சீரமைப்புத் திட்டம். அதனால் பாதிக்கப்பட்ட 26 கிராம மக்கள் கொடைக்கானல் பகுதியில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். வைகை பாசனத் திட்டம் வருகிறது, அந்தத் திட்டம் நல்லமுறையில் நிறைவேற்றப்பட்டால் தங்களுடைய பகுதி மக்கள், சொந்தக்காரர்கள், நல்ல முறையில் வாழ்க்கை நடத்தலாம் என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு அந்தத் திட்டம் திண்டுக்கல்லுக்குக் கூட தண்ணீர் கொடுக்கிற திட்டமாக இருக்கிறதே தவிர பாதிக்கப்பட்ட அந்த மக்களுக்குப் பயன்படுவதாக இல்லை. எனவே இந்த நிதிநிலை





அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிற பெரியார்—வைகை சீரமைப்புத் திட்டத்தை நவீனப்படுத்துவதாக (மாடர்னைசேஷன்) சொல்லியிருக்கிறீர்கள்—இப்போதாவது அந்த மக்களுக்குப் பயன்படும் வகையில் நிறைவேற்ற வேண்டும்; இன்னும் பல கால்வாய்களை ஏற்படுத்திக் கொடுத்து அந்தப் பகுதி மக்களுக்கு நல்லதை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு தொழில் துறையைப் பொறுத்த மட்டில் அந்தப் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாக இருந்து கொண்டிருக்கிறது. அங்கே பெரிய தொழில் எதுவும் இல்லாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அங்கே விவசாயத்திற்குப் போதிய தண்ணீர் இல்லாத காரணத்தால் மக்கள் சக்தி மட்டும்தான் அங்கே இருக்கிறது. பெரிய தொழில்கள் என்ற முறையில் பஞ்சாலைகள், மற்றும் சர்க்கரையாலைகளை எல்லாம் நிறுவக் கூடிய வாய்ப்பு அங்கே இருக்கிறது. அதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. அதேபோல் நவீன சிறு தொழில்கள் எல்லாம் வளர்ந்து வருகிற நேரத்தில் அதிக முக்கியத்துவம் கொடுத்து அந்தப் பகுதியை எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த முறையில் அந்த மக்களின் உழைப்பை நாம் பயன்படுத்துகிறபோது தமிழகத்திற்கும் அதன் மூலமாக நல்லதொரு வளர்ச்சி ஏற்படுவதற்குரிய வாய்ப்பு இருக்கிறது. அங்கே தொழில்கள் அதிகமாக வருவதற்குரிய வகையில் இந்த அரசு ஒத்துழைப்பு தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு உள்ளாட்சித் தேர்தல்கள் எல்லாம் நடந்து முடிந்ததற்குப் பிறகு சிறப்பான முறையில் உள்ளாட்சிகள் எல்லாம் அமைந்திருக்கின்றன. இதைத் தொடர்ந்து மாநகராட்சிக்கும் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று எங்கள் கட்சியின் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கல்வித்துறையைப் பொறுத்தமட்டில் கட்டடங்கள் கட்டுவதற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். எங்கள் பகுதியில் உள்ள பள்ளிகளைப் பொறுத்தமட்டில் மிகவும் பழுதுபட்ட நிலையில், வெகு காலத்திற்கு முன்பு கட்டிய நிலைமையிலேயே பல கட்டடங்கள் இருக்கின்றன. உயர்நிலைப் பள்ளிக்கூடங்களைக் கூட கட்டிடங்கள்

[திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்] [1986 மார்ச் 25

இல்லாது சாலையோரத்தில் வைத்து நடத்த வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே எங்கள் பகுதிக்கு அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரத் துறையைப் பொறுத்தமட்டில் இன்றைக்கு மின் சக்தியில் எந்த அளவுக்குத் தன்னிறைவு ஏற்பட வேண்டும் என்று அரசின் தரப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த மின்சார சர்வீஸ் கனெக்ஷன் கொடுப்பதைப் பொறுத்தவரையில் சீனியாரிட்டி முறையைக் கடைப் பிடித்தால் எங்கே தண்ணீர் இருக்கிறதோ அங்கேயுள்ள கிணறுகளுக்குக் கூட மின்சார சர்வீஸ் இணைப்பைக் கொடுக்க முடியாத நிலைமைதான் ஏற்படும். எனவே அந்த முறையைத் தளர்த்தி எங்கெங்கே தண்ணீர் இருக்கிறதோ அதை அறிந்து மின்சார சர்வீஸ் தருகிற நிலையை நிச்சயமாக ஏற்படுத்தினால் அந்தத் தண்ணீரைப் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பு இருக்கும். ஏனென்றால் இன்றைக்கு அதிகமாகப் பொருள் செலவிட்டுத்தான் விவசாயப் பணியைச் செய்யக்கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது.

அடுத்து ஆதிதிராவிட பழங்குடி மக்களைப் பொறுத்தமட்டில் வீடு கட்டுகின்ற திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது வரவேற்கத்தக்கது. இதில் கூட அந்தத் தொகை 6,000 ரூபாய் என்பதை 10,000 ரூபாய் என்று உயர்த்தவேண்டும் என்று சென்ற கூட்டத் தொடரிலேகூட எங்களுடைய அகில இந்திய பார்வர்ட் ப்ளாக் கட்சியின் சார்பில் எடுத்துச் சொல்லி இருக்கிறோம். அதே போல் டினோட்டிஃபைட் ட்ரைப்ஸ் என்ற முறையில் இருக்கும் அந்த மக்களுக்கும் நீங்கள் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும். அவர்களுக்கு வழங்கப்படுகிற அந்தத் தொகையைக் கூடுதலாக்க வேண்டும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையைப் பொறுத்தமட்டில் எங்கள் இயக்கத்தின் சார்பிலே நாங்கள் ஒரு ஃபெடரல் செட்-அப் தான் இருக்க வேண்டும் என்று எடுத்துச் சொல்லி வருகிறோம். எனவே பேச்சுவார்த்தையின் மூலமாக ஒரு தீர்வு கண்டு விரைவில் நல்ல முறையில் இலங்கைத் தமிழ் மக்களுக்கு நல்ல நன்மை பயக்கக் கூடிய ஒரு முடிவுக்கு நாம் ஆதரிக்க வேண்டும். அதற்கு தமிழக அரசு நல்ல முறையில் குரல் எழுப்பிக் கொண்டிருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்பு நல்கிய துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.



1986 மார்ச் 25]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (26-3-1986) காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.38 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

44. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் 1983-84-ஆம் ஆண்டிற்கான முதலாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ்).

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

33. தமிழ்நாடு அரசின் 1966-67 முதல் 1971-72-ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்து பொதுக் கணக்குக் குழு தனது முந்தைய நான்காவது அறிக்கை (ஏழாவது பேரவையில் தெரிவித்துள்ள பரிந்துரைகள் மீது கூட்டுறவுத் துறை சம்பந்தமாக அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை. (தமிழ்).

34. தமிழ்நாடு அரசின் 1964-65 முதல் 1969-70-ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்து பொதுக் கணக்குக் குழு தனது முந்தைய அறிக்கைகளில் தெரிவித்துள்ள பரிந்துரைகள் மீது உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சம்பந்தமாக அரசு மேற்கொண்டும் எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் இருபதாவது அறிக்கை. (தமிழ்).

35. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1976-77 மற்றும் 1977-78-ஆம் ஆண்டுகளுக்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கைகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் (1980-82) பதினெட்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தி மூன்றாவது அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்).

36. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1978-79, 1979-80, 1980-81 ஆகிய ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கைகள் மீதான பொது கணக்குக் குழுவின் இருபத்தி நான்காவது அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்).

37. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981-82-ஆம் ஆண்டிற்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கையில் உணவு-நுகர்வோர் பாதுகாப்புத் துறை தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தைந்தாவது அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

38. 1986-87-ஆம் ஆண்டில் உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி கோரிக்கைகள் (தமிழ், ஆங்கிலம்).

39. 1986-87-ஆம் ஆண்டில் உடனடிச் செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்).

40. 1985-86-ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான துணை மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும் (தமிழ், ஆங்கிலம்).

41. 1985-86-ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்).

42. 1985-86-ஆம் ஆண்டு இறுதித் துணை மதிப்பீடுகள் பற்றிய மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் உரை (தமிழ், ஆங்கிலம்).

43. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (1 முதல் 50 வரை) (நான்காவது பட்டியல்).





## இணைப்பு I.

(..38ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 3(703)-க்கான விடையைக் காண்க.)

தமிழில் பட்டப் படிப்பு பயிலும் மாணவர்களுக்கு 1983-84, 1984-85 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட உதவிப்பணம் மாவட்ட வாரியாக கீழே இணைக்கப்பட்டுள்ளது. ஊக்கத் தொகை உயர்த்துவது குறித்து செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

| வரிசை எண்ணும் மாவட்டமும். | அரசு கல்லூரி. | | மானியம் பெறும் தனியார் கல்லூரி. | | மொத்தம். | |
|---|---|---|---|---|---|---|
| | 1983-84 | 1984-85 | 1983-84 | 1984-85 | 1983-84 | 1984-85 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. சென்னை .. .. | 2,927 | 2,842 | .. | .. | 2,927 | 2,842 |
| 2. செங்கற்பட்டு .. .. | 736 | 663 | 82 | 79 | 818 | 742 |
| 3. தென் ஆற்காடு .. .. | 1,836 | 1,907 | .. | .. | 1,836 | 1,907 |
| 4. வட ஆற்காடு .. .. | 2,181 | 2,354 | .. | .. | 2,181 | 2.354 |
| 5. சேலம் .. .. | 1,950 | 2,011 | .. | .. | 1,950 | 2,011 |
| 6. தஞ்சாவூர் .. .. | 3,158 | 3,059 | .. | .. | 3,158 | 3,059 |
| 7. தர்மபுரி .. .. | 692 | 693 | .. | .. | 692 | 693 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8. நீலகிரி | 536 | 478 | 23 | .. | 559 | 478 |
| 9. கோயமுத்தூர் | 1,291 | 1,217 | .. | .. | 1,291 | 1,217 |
| 10. திருச்சிராப்பள்ளி | 1,892 | 1,850 | .. | .. | 1,892 | 1,850 |
| 11. புதுக்கோட்டை | 934 | 930 | .. | .. | 934 | 930 |
| 12. மதுரை | 1,135 | 1,055 | 1,707 | 1,660 | 2,842 | 2,715 |
| 13. இராமநாதபுரம் | 223 | 211 | 325 | 381 | 548 | 592 |
| 14. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் | 182 | 187 | .. | .. | 182 | 187 |
| 15. திருநெல்வேலி | 145 | 189 | 839 | 955 | 984 | 1,144 |
| 16. கன்னியாகுமரி | .. | .. | 573 | 546 | 573 | 546 |



## இணைப்பு II

[42-ம் பக்கத்திலுள்ள நட்சத்திரக்குறியிடாத எண் 10 (2013)-க்கான விடையைக் காண்க.]

**நிலக்கடலை சிறுதளை அமைக்கும் விவசாயிகளுக்கு :**

0.2 ஹெக்டேர் பரப்பளவில் நிலக்கடலை சிறுதளைகள் அமைப்பதற்கு 36 கிலோ நிலக்கடலை விதையும், 100 கிராம் விதையுடன் கலக்கும் மருந்தையும் உரங்களில் டி.ஏ.பி. 15 கிலோவும், யூரியா 1 ½ கிலோவும், பொட்டாஷ் 13 கிலோவும் மற்றும் சிறுதளை அமைப்பதற்கான சாகுபடி குறிப்புள்ள அட்டையும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

பயறு வகை விதைகள் விநியோகத்தில் எந்தவித சலுகைகளும் வழங்கப்படுவதில்லை.

**காரிப் பருவம் (1984-85)-ல் பயன் அடைந்த சிறு விவசாயிகளின் எண்ணிக்கை.**

சென்ற ஆண்டில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு, நான்கு கிலோ பயறு விதை கொண்ட சிறுபைகள் (மினிகிட்), விளக்கப் பாத்திகள் அமைக்க மொத்தம் 3214 எண்கள் இலவசமாக வழங்கப் பட்டன. அவற்றில் பாசிப்பயறு மினிகிட் மட்டும் 2,300 ஆகும்.

இது தவிர சிறு மற்றும் குறு விவசாயிகள் உள்ளிட்ட எல்லாவித விவசாயிகளுக்கும் 2 கிலோ பயறு வகை விதை கொண்ட சிறு பைகள் (மினிகிட்) விளக்கப்பாத்திகள் அமைக்க 2,400 எண்கள் இலவசமாக வழங்கப்பட்டன. இவற்றில் பாசிப்பயறு சிறு பைகள் மட்டும் 1950 ஆகும்.

பயறு வகை விதைகள் மானிய விலையில் வழங்கப்படுவதில்லை.

**முறைகேடுகள் தடுக்க என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

நிலக்கடலையை பொறுத்தமட்டில் சிறு விவசாயிகளை தேர்ந்தெடுத்து அவர்களுக்கே இந்த சிறுதளைகளுக்கான இடுபொருள்கள், இரசாயன உரங்கள் வழங்கப்படுகின்றன. மேலும்

வயல் விளக்க அலுவலர்கள் கிராமங்களுக்குச் சென்று விசாரணை செய்து சிறு விவசாயிகளை முன் கூட்டியே தேர்வு செய்து அவர்களுக்கே இந்த சிறுதளைகளுக்கான சலுகைகள் வழங்கப்படுகின்றன.

மேலதிகாரிகளும் அவர்களின் சுற்றுப் பயணத்தின்போது அச்சிறுதளைகளைப் பார்வையிட்டு அரசு அளிக்கும் சலுகைகள் சிறுவிவசாயிகளுக்காக நல்ல முறையில் பயன் படுத்தப்படுகின்றனவா என்பதை ஆய்வு செய்து தக்க நடவடிக்கைகள் மேற்கொள்கின்றனர்.

பயறு வகைகளைப் பொறுத்த மட்டில், கிராம விரிவாக்க அலுவலர் தேர்ந்தெடுக்கும் சிறு மற்றும் குறு விவசாயிகள் அல்லது இதர விவசாயிகள் ஆகியோருக்கு பயிற்சி வழி தொடர்புத் திட்ட வேளாண்மை அலுவலர் பரிந்துரையின் பேரில் வேளாண்மைக் கிடங்கு பொறுப்பிலுள்ள வேளாண்மை அலுவலர் சிறுதளைகளுக்கான விதைப் பைகளை இலவசமாக வழங்க ஏற்பாடு செய்வார். இவ்வாறு விதை வழங்கப்படும். விதைப் பைகள் உரிய நபர் பயன்படுத்துகிறாரா என்பதனை பயிற்சிவழி தொடர்பு திட்ட உதவி வேளாண்மை இயக்குநர், துணை (உழவியல்) மற்றும் மாவட்ட இணை வேளாண்மை இயக்குநர் தங்கள் முகாம் நாட்களில் ஆய்வு செய்கின்றனர். வழங்கப்படும் மினிகிட் யாவற்றிற்கும் பதிவேடுகளில் எழுதி, விவசாயிகளின் ஒப்புதலும் வாங்கப்படுகின்றது. (முறைகேடுகள் எதுவும் நடைபெறா வண்ணம் திட்டவட்டமான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.) முறைகேடு நடைபெறாமல் கண்காணிக்க மூன்று நிலையிலுள்ள அலுவலர்கள் ஆய்வு செய்கிறார்கள். இது தவிர மைய அரசு அலுவலர்களும் மினிகிட் தளைகளை பார்வையிடுகின்றனர்.

V811,31 N86
ஆவணக்காப்பக
136456
சென்னை-600